# தொடத் தொட தங்கம்





இந்திரா
சௌந்தர்ராஜன்

www.pustaka.co.in

http://www.pustaka.co.in

# தொடத் தொட தங்கம்

# Thoda Thoda Thangam

Author :

இந்திரா சௌந்தர்ராஜன்

Indira Soundarrajan

For more books
http://www.pustaka.co.in/home/author/indira-soundarajan

Digital/Electronic Copyright © by Pustaka Digital Media Pvt. Ltd.

All other copyright © by Author.

All rights reserved. This book or any portion thereof may not be reproduced or used in any manner whatsoever without the express written permission of the publisher except for the use of brief quotations in a book review.

## பொருளடக்கம்

அத்தியாயம் 1

அத்தியாயம் 2

அத்தியாயம் 3

அத்தியாயம் 4

அத்தியாயம் 5

அத்தியாயம் 6

அத்தியாயம் 7

அத்தியாயம் 8

அத்தியாயம் 9

அத்தியாயம் 10

அத்தியாயம் 11

அத்தியாயம் 12

அத்தியாயம் 13

அத்தியாயம் 14

அத்தியாயம் 15

அத்தியாயம் 16

அத்தியாயம் 17

அத்தியாயம் 18

அத்தியாயம் 19

அத்தியாயம் 20

அத்தியாயம் 21

அத்தியாயம் 22

அத்தியாயம் 23

அத்தியாயம் 24

அத்தியாயம் 25

அத்தியாயம் 26

அத்தியாயம் 27

அத்தியாயம் 28

அத்தியாயம் 29

அத்தியாயம் 30

அத்தியாயம் 31

அத்தியாயம் 32

அத்தியாயம் 33

அத்தியாயம் 34

அத்தியாயம் 35

அத்தியாயம் 36

அத்தியாயம் 37

அத்தியாயம் 38

அத்தியாயம் 39

அத்தியாயம் 40

அத்தியாயம் 41

# 1

*கேளப்பா......*

*கோரக்ககன் உரைத்ததிந்ததி உண்மை!*

*கோளாறு பெற்ற வாலறிவாளர் கரம்*

*கோரைப் புல்லையும்*

*தங்கமாக்கும்.....*

*தங்கமாக்கும் அந்த மூல ரகசியத்தை*

*இதன் மூலம் உரைப்பேன்.*

*மூலமிது சொர்ணஜாலத் திரட்டாமே!'*

*சொர்ணஜாலத் திரட்டுக் குறிப்பு*

மீனா! 'நக்மாரம்பாசௌந்தர்யாக்களை மொத்தமாய் குழைத்து பிரம்மன் செய்த உருவம். இத்தனை அழகான பெண்ணுக்கு அப்பா

என்பதில் கமிஷனர் கருணாகரனுக்கு கர்வமும் மிகுதி.பயமும் மிகுதி.

இல்லாவிட்டால் மீனாஇச்சித்துக் கொண்டிருக்கும் ப்ரகாஷை ஒரு பிரைவேட் டிடெக்டிவ் ,கழுகுக்கு அண்ணனாக கவனித்துக் கொண்டிருப்பானா என்ன?அடடே,அந்த டிடெக்டிவிடம் செல்லுலரும் இருக்கிறது போலத் தெரிகிறதே... அதில் யாருடன் பேசுகிறான்? கருணாகரனோடா?

"ஹலோ சார்.. நான்தான் பேசுறேன்...உங்க பொண்ணு காதலிக்கிறது நிஜம்தான்னு தெரியுது.ஒருத்தனோட ரொம்ப நேரமா பேசிக்கிட்டிருக்காங்க.அவர் தோள்ளள்லாம் கைபோட்டு பேசுனா அது லவ்வா இல்லை,ஃப்ரெண்ட் ஷிப்பாங்கறத நீங்களே முடிவு செய்துக்குங்க. அடுத்த மெஸேஜ் நாளைக்கு இதே நேரம்.." செல்லுலர் போல ஒரு போட்டுவிடும் கருவி உலகிலேயே இருக்கமுடியாது. இது தெரியாமல் மீனா கூட இந்த இளைஞனிடம் லவ்விக் கொண்டிருக்கிறாள். That's Love or not? "மீனா எப்போ நம்ம கல்யாணம்?" ப்ரகாஷ் கேட்டுக் கொண்டிருக்கிறான்.

"கல்யாணமா.. பண்ணிக்கிட்டா போச்சு".

"இப்படிச் சொன்னா எப்படி?"

"வேற எப்படிச் சொல்லுணும் ,தாஸ்.."

"வெறும் ப்ரகாஷ்னு சொல்லு.."

"ஏன்?"

"ஓட்டல் ஞாபகம் வருது... அதான்!

'சரி,சரி பேசியது போதும் கிளம்புங்க' என்கிற மாதிரி அந்த கடற்கரை மணல்வெளி மேல் இயல்புக்கு மீறி காற்று வீசப் பார்த்தது. வானத்தில் ஒரு மூலையில் கருமகக் கூட்டம் போலீஸ் துரத்தும் திருடனாட்டம் ஓடி வந்து கொண்டிருந்தது.

"ஓகே ப்ரகாஷ்.மழை வரப் போகுது,கிளம்பலாம்"

"வரட்டும் மீனா,நனைவோம்."

"ஐய்ய... ஏற்கனவே ஜலதோஷம்."

"அதான் கிடையாது.லவ்வும் போது மழை வந்தா நனையணும். அப்பதான் எம்ஆர்க்கு பிடிக்கும்."

''யார் அந்த எம்ஆர்...?''

''மணி ரத்னம்மா கண்ணு...''

''ஓஹோ... அது சினிமா காதலர்களுக்கு.நமக்கில்லை கிளம்புங்க...''

சொன்ன ஜோரில் எழுந்துகொண்டு கார்டன் சாரியின் நீண்ட முந்தியை ஒரு உதறு உதறினாள்.மண் துகள் சிதறியது.

''ஆ...''

''என்ன?''

''கண்ணுல மண்ணு பட்டுச்சு'' அலறினான் ப்ரகாஷ்.

''ஊதி எடுத்துட்டா போச்சு.''

''சொல்லாதே... ஊது.''மீனா உடனேயே குனிந்து ஊத ஆரம்பித்தாள்.அதுதான் சாக்கு என்று இடுப்பை பிடித்து கொண்டான்.

''ஏய்... கைய எடு.''

''வசதியா இருக்க பிடிச்சுக்க..''

''இப்ப எடுக்கப் போறியா இல்லையா?''

''முடியாது''

அவன் சொன்னபடி அந்த இடுப்புத் திமிலை ஒரு பிசை பிசைந்தான்.ஆவளை அது என்னவோ செய்தது.ஏல்லாம் சொற்ப வினாடிதான்.சுதாரித்து அவனைப் பிடித்து கீழே தள்ளினாள்.விறு விறு என்று நடக்க ஆரம்பித்தாள்.இதுக்கு பேர்தான் பருவப்பெண் கோபம்!

ஷில்பாவும் வந்திருந்தாள்.நாய்க்குட்டிங்க அது.

அதுவரை எதற்கு காதலர்களுக்கு இடைஞ்சலாக என்று தனது ஒரு துணையாக மேய வந்திருந்த பாமரேனியன் ஒன்றுடன் குஷ்ஷித்துக் கொண்டிருந்த அது,மீனா கோபமாய் நடப்பதைப் பார்த்து பின்தொடர ஆரம்பித்தது.நெருங்கிவிட்ட ஷில்பாவை தொட்டுத்தூக்கிக் கொள்கிறாள்.

''ஏய்... ஏய்...'' ப்ராகாஷ் அலறுகிறான்.

''உம் மூச்... கூப்பிடாதே துஷ்டா!'' என்று அதட்டுகிற மாதிரி வந்தது மழை.நல்ல பருமனான துளிகள்.

*சடசடசடசட கூடவே ஒரு மின்னல் ஒன்று!நடுக்கடல் மேல் கோடி வாட்ஸ் ட்யூப்கோடாக...*

*ப்ரகாஷ் காதை பொத்திக் கண்ணையும் மூடும்முன் இமழை வலுத்து இடியோடு பெருகத் தொடங்கியது.நடந்து கொண்டிருக்கும் மீனாவும் நின்று கண்மூடி விதிர்க்க,ப்ரகாஷ் பார்த்துக் கொண்டிருக்கஇஒரு மின்னல் இடியோடு துணை சேர்ந்து மீனாவை நோக்கி இறங்கியது.*

*"ஐய்யோ மீனா...!" அலறிய ப்ரகாஷ் மயக்கமாகிறான்.*

*கரிக்கட்டையாகி விட்டிருந்தாள் ஷில்பா.தூக்கி எடுத்து குழியில் போட்ட கையெல்லாம் கரிப்பிசுக்கு.*

*"மறக்காம நாளைக்கு பாலை ஊத்திரு..." என்று மண்வெட்டியும் கையுமாய் நிற்கும் தோட்டக்காரனிடம் உத்தரவு பிறப்பிக்கிறார் கருணாகரன்.திரும்பியவ் விசும்பியபடி நிற்கும் மீனாவை பார்த்து சோகம் கசிய நடக்க ஆரம்பிக்கிறார்.*

*"நீயும் நட.. அமுதா ஷில்பா வந்துடப் போறாளா என்ன? எப்படியோ நீ தப்பிச்சியே..."*

*மீனா, கண்களைக் கசக்கியயபடி அந்தப் பரந்த தோட்டம் நீங்கி, பளபளப்பான பங்களாவின் போர்டிகோ நிழலில் போய் நிற்க, கருணாகரன் மகளை ஆழமாக ஒரு பார்வை பார்க்கிறார்.*

*"இனி காதலிக்கணும்னா கடற்கரைக்கெல்லாம் போகாதேம்மா..." என்கிறார்.*

*"அப்பா..."*

*"தெரியும்மா.ஆமா, யார் அந்தப் பையன்?"*

*"உங்களுக்கு எப்படித் தெரியும்?"*

*"நான் இந்த காலத்து ஆள். இன்டர்நெட் மனுஷம்மா..."*

*"அவர் பேர் தாசப்ரகாஷ்.டாஸ்மாக்ல கம்பெனி செகரட்ரியா இருக்கார்.ஸ்மார்ட் க்யூட் சி.ஏ.ல ரேங்க் ஹோல்டர்."*

*"சரி, வந்து பார்க்கச் சொல்லு..."*

*"டாடி... அப்பான்னா அப்பாதான்..."*

ப்ரகாஷ் வந்திருந்தான்.சுமாரான டிரெஸ்ஸில்...

"அந்த சஃபாரியை போட்டுகிட்டு வரலாம்ல..."

"சலவைக்கு போட்டிருக்கேன் மீனா..."

"ஒரு மாமனாரை பாக்கப் போறீங்க ...மாப்ளையா லட்சணமா வராம, இப்படியா சோணகிரி மாதிரி வருவீங்க..."

ப்ராகஷை மீனா விரட்டுவதை மாடியிலிருந்து இறங்கும்போதே ரசித்தபடி வருகிறார் கருணாகரன்."வெல்கம் ஜென்டில்மேன்..." என்றார்.வாயில் பைப் இருந்தது.ப்ரகாஷ் எழுந்து நின்றான்."உக்காருங்க இதென்ன பள்ளிக்கூடமா?" காதைக் கடிக்கிறாள் மீனா.

"உக்காருங்க.. உக்காருங்க..." என்கிறார் கருணாகரன்.அவன் உட்காருகிறான்."மீனாவை எல்லா விஷயத்தையும் சொன்னா. ஐ வான்ட் டு நோ அபௌட் யுவர் ஃபேமிலி."

"சொல்றேன் சார்.அப்பா குவைத்ல ஆயில் கன்ஸ்ட்ரக்ஷன்ல எரெக்ஷன் என்ஜீனியர்.அம்மா சாரதா காலேஜ் புரொபசர்."

"சப்ஜெக்ட்"

"கெமிஸ்ட்ரி."

"அப்பா! நான் ஏற்கனவே சொல்லிட்டேன்.எதுக்கு இந்த ஃபார்மாலிட்டி எல்லாம்."

"விடு மீனா.. இதுல என்ன தப்பு?"

"நோ... அர்த்தமில்லாம பேசக்கூடாது.சரி என்ன சாப்பிட்றீங்க?"

"புலிக்கால் சூப்."

"வாட்?..." மீனோவோடு கருணாகரனும் புருவத்தை வளைக்க, "நீ தானே சொன்னே,அர்த்தமில்லாம பேசக்கூடாதுன்னு."

"அதுக்கும் புலிக்கால் சூப்புக்கும் என்ன சம்பந்தம்?"

"பார்த்தியா... அர்த்தம் இருக்கவும்தானே தொட்டுத் தொட்டு; கேள்வி கேக்கறே?"

"நாட்டி... சாதாரண டீதான் இன்னிக்கு உனக்கு."

என்னம்மா மரியாதை இல்லாம உனக்கு எனக்குன்னுகிட்டு."

"சமத்துவம் மாமா.நாம தரத் தேவையில்லை, அவங்களே எடுத்துப்பாங்களாம், இல்லை மீனா?"

"என்ன மாமனாரும், மருமகனும் ஒரே கட்சியா? நறுக்கிடுவேன்."

சூழ்நிலை வழக்கமான கலகலப்போடு இயல்போடு இருக்கும்போதுதான் அந்த அதிசயம் நடந்தது.

சமையற்கட்டில் மைக்ரோவேவ் அடுப்புக்குள் இருகைகளாலும் தொட்டு உள்ளே பாத்திரத்தில் வெந்நீர் வைத்துக் கொண்டிருந்தாள் மீனா.

ஸ்க்ரூட்ரைவரும், கையுமாக சமையல் கட்டுக்குள் நுழைந்த எலெக்ட்ரீஷியன் அதைப் பார்த்து தன் முட்டை விழியை பந்து விழியாக்கிக் கொள்கிறான்.

"அம்மா... ஷாக் அடிக்கலை?;" கேட்கிறான்.

"எதுக்கு கேக்கறே...?"

"அந்த அடுப்புல ஷார்ட் சர்க்யூட் ஆவுதுன்னு ஐயா பாக்கச் சொல்லியிருந்தாரு. நானும் பார்த்தேன்.ஆகுது மெயினை ஆஃப் பண்லாம்னு போனேன்.அப்புறம் பாருன்னுட்டாரு ஐயா.அதான் வந்தேன்..."

"என்ன சொல்றே?இதோ பார் தண்ணி கொதிச்சுகிட்டிருக்கு.நான்சென்ஸ்" பேசிக் கொண்டே அதற்குள் கொதித்த தண்ணீர் பாத்திரத்தை இரும்புக்கிடுக்கியால் பற்றி வெளியே எடுத்து இன்ஸ்ட்ன்ட் டீ பேகை நனைக்கிறாள் அதில்.

அவன் மிரள மிரளப் பாத்தபடியே அவள் எதிரில் அடுப்பை தயங்கியபடியே தொட்டான்.ஆமெரிக்க அடுப்பு.

"ச்ருட்ட்ட்"

கையை உதறிக்கொண்டு பின்னால் போய் விழுந்து சமையல் கட்டின் பாத்திர அலமாரியையே சாமி ஆடவிட்டான்.

"என்னப்பா... என்ன ஆச்சு?"

"அம்மா ஷாக் அடிக்குது... தொடாதீங்க..." அவன் சொல்லும் முன் அடுப்பை சர்வசாதாரணமாக தொட்டு பாத்திரத்தை திரும்ப உள்

வைத்தாள்.

அவன் பத்து விழி.சைக்கிள் டயர் சைஸீக்கு விரியப் பார்த்து முடியாமல் போனது.

"எனக்கு அடிக்கலியே.. உளர்றியா?"

"இப்ப அடிச்சுதே.."

சப்தம் கேட்டு கருணாகரன் வந்திருந்தார்.

"என்ன சப்தம்..?"

"யாரப்பா அந்த ஆள்?ஷாக் அது இதுன்னு உளறிக்கிட்டு."

"சார்.. அடுப்புல கரண்ட் ஷார்ட்டாவுது.எனக்கு ஷாக் அடிச்சுச்சு.ஆனா அம்மாவுக்கு ஒண்ணும் ஆகலை...

"என்ன உளர்றே..." வேகமாக கேட்டுக் கொண்டு முன்வந்த கருணாகரன், மீனாவைத் தொட்ட நொடியில் தூக்கி எறியப்படுகிறார்.

"என்ன ஆச்சுப்பா?"

"அம்மாடி...! உன் உடம்புல ஷாக் இருக்கு உன்னை ஒண்ணும் செய்யலையா.."

கருணாகரன் கண்களும் விரிகின்றன.

"முதல்ல அடுப்பை விடு.வெளியே வா."

வந்தாள்.

தொடுகிறார்.

இந்த முறை ஷாக் இ;ல்லை!

அப்பாடா!

"என்னப்பா... ஷாக் அது இதுன்னுகிட்டு...?

"ஒன் மினிட் மிஸ்டர் ப்ரகாஷ்!

ப்ரகாஷ் தயங்கித் தயங்கி வந்தான்.

"போம்மா.. போய் அடுப்பைத் தொடு பாப்போம்."

*மீனா தொட்டு நின்றாள்.*

*"சார்! கொஞ்சம் அவளைத் தொடுங்க ஒரு நிமிஷம்."*

*"என்ன சார் இது விளையாட்டு?"*

*"விளையாட்டு இல்லை.. இட் இஸ் ஸோ சீரியல்."*

*தயங்கி தயங்கி மீனாவை நெருங்கி அவள் கையைத் தொடுகிறான் ப்ரகாஷ்.*

*அடுத்த நொடி, தூக்கி எறியப்பட்ட பண்டம் போல பாத்திரக் குவியலில் போய் விழுந்து எழுந்திருக்க முயலுகிறான்.*

*ப்ரகாஷை பார்த்து கருணாகரன் வாயைப் பிளக்கிறார்.*

*எலெகட்ரீஷியனை பார்த்து கண் ஜாடையிலேயே ,எங்க நீ. தொடு பார்க்கலாம்' என்று சொல்ல, அவன் புத்திசாலித்தனமாக மீனாவின் கைமேல் தயங்கித் தயங்கி டெஸ்ட்டரை வைக்க, உள்ளே விளக்கெரிந்தது!*

# 2

*'கேளப்பா....*

*சதை உடல் திசுவினில் ....*

*நீர் நெய் நடுவினில்,*

*அக்கினி வாயு ஆன்மம்*

*என ஐந்தின் கூட்டிந்த கூடு!*

*இப்பஞ்சமமும் ... மண்ணாகும்*

*அக்கினி பற்றிட அடைந்திடும் கேடு.*

*அடையாது கேடு ஒன்று மட்டும்.*

*சொர்ணமென்ற பேரு*

*அதற்கு எட்டு திக்கும்....'*

*சொர்ணஜாலத் திரட்டுக் குறிப்பு*

*வெங்கேப ராவ்! மருத்துவப்புலி. மீனாவை பரிசோதித்துவிட்டு வழுக்கைத் தலையை ஒன்றும் புரியாமல் தடவி விட்டுக்*

கொள்கிறார்.

"எல்லாம் நார்மலாத்தானே இருக்கு?" என்று முணுமுணுக்கிறார்.

"நார்மலா இருந்தா, இவ கரிக்கட்டையால்ல ஆகியிருக்கணும் வெங்கோபா" கருணாகரன் பேச்சில் நட்புக் கொடி பறக்கிறது.

"இல்ல கருணாகரா... நிஜமா சொல்றேன், என் செக்கப்ல எதுவும் தெரியலை."

"அப்ப நான் பொய் சொல்றேனா?"

"அப்படிச் சொல்லலை .... ... எதுக்கும் என் எதிரே ஒரு தடவ மின்சாரத்தை தொடட்டும். நம்பாம சொல்லலை. என்னால இந்த அதிசயத்தை ஜீரணிக்க முடியலை. அதனால சொன்னேன்."

"எப்படிச் சொன்னாலும் அர்த்தம் ஒண்ணுதானே வெங்கோபா?"

மீனா வெறுப்புடன்,கூடவே கொஞ்சம் கலக்கத்துடன் உட்கார்ந்து கொண்டிருந்தாள்.

"அம்மாடி... தப்பா எடுத்துக்காதே. அந்த பிளக் பாயிண்ட் கொஞ்சம் தொடேன். கருணாகரன்! நீ போய் மெயின் ஸ்விட்ச்கிட்ட நில. ஏதாவது விபரீதம்னா நான் சைகை காட்றேன். ஆஃப் பண்ணிடு, என்ன?"

அரைமனதாய் தலையை அசைத்தபடி அந்த டிஸ்பென்ஸரியின் காரிடாரில் இருக்கும் மெயின் ஸ்விட்ச் மேல் கருணாகரன் கை வைத்துக்கொண்டு நிற்க, உள்ளே மீனா பிளக் பாயிண்ட்டை கொஞ்சம் தொட்டாள்.

தொட்டபடியே போஸ் கொடுத்தாள்.எதுவும் ஆகவில்லை. ஆனால் வெங்கோப ராவ் முகத்தில் மட்டும் கசாமுசா என்று கலவர உணர்வு.

"என்ன ஆச்சரியம்..ஃபேன் சுத்தது.லைட் எரியுது.நீயும் பிளக் பாயிண்ட்டை தொட்டுகிட்டு நிக்கறே. என்ன மேஜிக் எழவுடா இது.." என்று பேச்சோடு எழுந்து நிற்கப் பார்க்கிறார்.மீனா திரும்பி டாக்டருடைய இரும்பு நாற்காலியை தெரியாத்தனமாய் லேசாகத் தொட..

'உய்ய்ய்..' என்று பற்கள் கிட்டிக் கொள்ள திருஷ்டி பொம்மை போல ஆகிறார் வெங்கோப ராவ் எனும் அந்த டாக்டர்.

மீனா சட்டென்று நாற்காலியில் இருந்த கையை எடுத்து "என்ன டாக்டர்?" என்று கேட்க, மின்சாரப் பிடியில் இருந்து தப்பினவர் "தாயே! ப்ளக் பாயிண்டை விடு.நான் நம்பறேன்; நம்பறேன்" என்று அலற..

வெங்கோப ராவ் தன் சுழல் நாற்காலியில் அதிதீரவ சிந்தனையில்.. எதிரில் கருணாகரன் மீனா.

"என்னப்பா உன் மூளைக்கே ஒண்ணும் உறைக்கலியா?"

"கருணா.. இது சவாலான கேஸ்.மீனாவுக்கு எப்படி இத்தனை ரெஸிஸ்டன்ஸ் சாத்யம்ங்கறது புரியல..."

"அதனாலதான் இடி தலை மேல விழுந்தும் தப்பிச்சிட்டாளோ?"

"என்ன சொல்றே நீ?"

"ஆமா வெங்கோபா.. நேத்து மழைல பீச்ல இடி விழுந்தது.அதுல இவ கைல இருந்த நாய் ஷில்பா, கருகிடிச்சு.ஆனா, இவளுக்கு ஒண்ணும் இல்லை..."

"ஐ ஸீ ... ஆமா இப்பதான் இந்த மாதரி."

"நீ என்ன கேக்கறே?"

"எத்தனை நாளா இந்த அபூர்வசக்தி? "

"எனக்கு தெரிஞ்சு சில மணி நேரமா...? "

"அம்மாடி உனக்கு தெரிஞ்சு...?"

எனக்குத் தெரிஞ்சும் சில மணி நேரமாத்தான். ஏன்ன டாக்டர் அபூர்வசக்தி ஆட்டுக்குட்டின்னு பயமுறுத்தறிங்க?"

"இல்லியா பின்னே?"

"அப்படீன்னா...?"

"நீ... ஒரு அபூர்வ பெண்.விஞ்ஞான உலகமே வியக்கப் போற பெண்."

"வெங்கோபா! உன் டெஸ்ட்டுல ஏதாவது தெரியுதா அதைச் சொல்லு முதல்ல."

"நத்திங்... இவளை என் மாதிரி டாக்டரெல்லாம் டெஸ்ட் பண்ணிப் பார்த்து அனலைஸ் பண்ணமுடியாது. இவளை ஒரு ஸயின்டிஸ்ட் டெஸ்ட் பண்ணணும்."

"ஐய்யையோ டாக்டர்.லேப்ல ஸயின்ட்டிஸ்ட் செய்பண்ண, நான் என்ன பொட்டாஸியம் பர்மாங்கனேட்டா... இல்லை மஞ்சள் பாஸ்வரமா?"

"தாயே… நீ அதை எல்லாம் கடந்தவை.இதை நான் அப்படியே விடப் போறதில்லை.இப்பவே எங்க டாக்டர்ஸ் அஸோஸியேஷன்ல் கலந்து பேசறேன்.பிறகு சொல்றேன்."

மீனா பரிதாபமாக முகத்தை வைத்துக் கொண்டு கருணாகரனை பார்க்க, அவரிடமும் குத்தகைக்கு எடுத்த மாதிரி ஒரு கலவர உணர்ச்சி.

காலண்டர் தாளைக் கிழத்தபோதுதான் தெரிந்தது கந்தசாமிக்கு… அன்று பௌர்ணமி! அடுத்த கணம் முகத்தில் கசங்கின ரேகைகள்.கிழமை வேறு, புதன்!.. இனி ஒரு வினாடி தாமதம் கூடாது என்கிற முடிவோடு கிணற்றடிக்கு ஓடுகிறார் அந்த ஒற்றை நாடி மனிதர்.

கிடுகிடுவென தண்ணீர் இறைத்துக் கொட்டிக்கொண்டு வேட்டியோடு நனைகிறார்.

மனதுக்குள்… 'வந்துட்டேன் சாமி … வந்துகிட்டே இருக்கேன்' என்கிற பதில்! யாருக்கு?

குளித்த கையோடு தெப்பமாகத் திரும்பினார்.ஏதிரில் காத்திருந்த மாதிரி துண்டை நீட்டுகிறாள் பூரணி.

"நானே ஒரு குரல் கொடுக்கணும்னு நினைச்சுக்கிட்டிருந்தேன்.நீயே வந்திட்டே.."

"காலண்டரை பார்க்கும்போதே கவனிச்சிட்டேனே…'

கந்தசாமியின் பார்வையில் துளி காதல் கசிகிறது.இப்படியல்லவா ஒரு மனைவி குறிப்பறிந்து நடக்க வேண்டும்?! சற்றுச் சிலையாக நி;ற்பவரை, பூரணி கலைக்கிறாள்.

"இது நூத்தி எட்டாவது பௌர்ணமி அது ஞாபகம் இருக்கட்டும் பாத்துப் போய்வாங்க…"

நூத்தி எட்டு என்கிறஅந்த எண், கந்தசாமியை சற்று பரவசப்படுத்துகிறது.'பரவாயில்லையே… நாம் கூட நூற்று ஏழு பௌர்ணமி வரை தவறாமல் அந்த மலைக்குப் போய் வந்துவிட்N;டாமே!' என்று ஒரு குட்டி பிரமிப்பு கூட உருவாகிறது.

தலையை துவட்டிக் கொண்டு, ஓட்டுக் கூரை வீட்டின் உள் கூம்பில் உள்ள கொடியில் தொங்கும் மடியான உத்தரீயத்தை எடுத்துக் கட்டிக் கொள்கிறார்.எலும்பு தெரியும் மார்பையும் துண்டால் மூடிவிட்டுக் கொள்கிறார்.துலையை வாரிக் கொள்ள கூட கொள்ளவில்லை.சம்புடத்து

விபூதி நெற்றியில் பந்தல் போட்டுக் கொள்கிறது.உதட்டில் 'மகாலிங்கம்!' என்கிற பக்திக்கசிவு.

"வரேன் பிள்ள..." கிளம்பக் காலெடுத்தவர் எதிரில் மின்னல் கொடியாட்டம் உள்நுழைகிறாள் இளைய மகள் மங்களா.

"எங்கம்மா போய்ட்டு வரே?"

"தாட்சாயிணிய பாத்து நோட்ஸ் எடுத்துகிட்டு வரேம்ப்பா.."

"அகிலா, பார்வதி, தேவி எல்லாம் எங்கே...?"

"எல்லாரும் கட்ட அடுக்க போய்ட்டாங்க.தீபாவளி வேலை..." இந்தப் பதில் பூரணியிடமிருந்து வருகிறது.

அடுத்த நொடியே அவர் கேட்ட, அவர் பெற்ற நான்கு பெண்களின் முகமும் அவரது மனத்திரையில் ஒரு ஓட்டம் ஓடுகிறது. விடும் மூச்சு பெருமூச்சாகி, அனல் மூச்சாகிறது.'மகாலிங்கம்' என்று மறுபடியும் குரலில் கசிவு.வீதியில் இறங்குகிறார் கந்தசாமி.

விறுவிறுவென்ற நடை!

"நூத்தி எட்டு பௌர்ணமிக்கு மகாலிங்க மலைக்குப் போ விடிஞ்சுடும்" குங்குமமாய்த் தெரிந்த ஒரு வெண்தாடி மனிதர் சொன்னது அவருக்குள் ஓடுகிறது.அந்த மனிதரின் முகம் அழையாமல் மனதில் நட்பு கொண்டு விட்டது. முகமா அது? எரியும் விளக்குச் சுடரில் கண்ணும் மூக்கும் முளைவிட்டுடெழுந்து முன்வந்து நின்று பேசினது போல...

அதனாலதான்.அந்தக் கட்டளையைப் புறந்தள்ள முடியவில்லையோ? புளியம்பழத்தைக் கூட பிளந்து பார்த்தபின் தான் நம்பும் மனது, சில சமயங்களில் சில விஷயங்களைச் சிக்கெனப் பிடித்துக் கொண்டுவிடுகிறது.யோசித்துப் பார்த்தால் சிரிப்பாகக்கூட வரும்.ஆனாலும் அந்த ஆழ்மனதின் நம்பிக்கை, துளிகூட அசையாது.

கந்தசாமி இப்படி நம்பித்தான் நடந்து கொண்டிருக்கிறார்.மேற்குத் தொடர்ச்சி மலைக் கூட்டத்தில் ஒரு மூலிகைக் காட்டுக்கு நடுவில் இருக்கிறது சதுரகிரி மலை.அங்குள்ள மகாலிங்கத்தின் மேல்தான் நம்பிக்கை. மகாலிங்கம் ஒன்றும் லேசுப்பட்டதில்லை. சுற்றி பனி மட்டும்தான் பெய்யவில்லை.பெய்தால் கைலாயம் தான் அது.

மகாலிங்கத்திற்கு இன்னொரு சிறப்பிருப்பதாகவும் பேச்சு. அந்த மலைக்காட்டில் ஆயிரத்துக்கும் மேல் சித்தபுருஷர்கள் இருப்பதாகவும்,

அவர்களின் பூஜாலிங்கம் அது என்றும் ஒரு நம்பிக்கை.

அவர்கள் எப்பொழுது வருவார்கள் ... எப்படி வருவார்கள் என்பதெல்லாம் விசித்திரமான கதைகள்... அதில் சத்யமும் உண்டு.கொஞ்சம் சாகசமும் உண்டு.

கந்தசாமிக்கு இந்தக் கதைகள் எதுவும் தெரியாது.

மகாலிங்கத்தை மட்டும்தான் தெரியும்.

அதுதான் கந்தசாமியை நம்பவைத்துக் கொண்டிருக்கிறது.வரிசையாக நான்கு பெண்களைக் கரை சேர்க்க., அதுதான் உதவ வேண்டும்.மகனுக்காக ஆசைப்பட்டு மகளில் முடிந்த பிரசவங்களால் இன்று கந்தசாமி ஒரு கஷ்டஜீவி.

புரோக்கர் தொழிலில் ஏதோ வருகிறது;வயிறு நிரம்புகிறது.ஆனால் பெண் மக்களை கரைசேர்க்க அது போதாதே!... சேமிப்பும் கிடையாது.

நினைக்க, நினைக்க பாரமாக இருக்கிறது.அறிவிருந்தும் தவறு செய்துவிட்டதாக ஒரு நெருடல் பூக்கிறது. 'ஹீம்! எல்லாம் விதி.சுமந்துதானே தீரணும்' என்று அறிவு ஒரு ஓரமாக தனக்குத் தெரிந்த சமாதானத்திலும் சஞ்சரிக்கிறது.

"மகாலிங்கத்துக்கு... அரோகரா...!"கந்தசாமியை அரோகரா சப்தம் கலைக்கிறது..

அவரைப் போலவே பாதசாரியாகப் போகும் ஜனக்கூட்டம் கொடுக்கும் குரல் அது.

அருகில் இருக்கிறது வத்திராயிருப்பு அங்கிருந்தே பார்க்க முடியும் மலையை... பார்க்கிறார்.கன்னத்திலும் போட்டுக் கொள்கிறார்.ராஜபாளையம், சிவகாசி, கல்லுப்பட்டி என்று சுற்று வட்டார ஜனக்கூட்டம், அமாவாசை பௌர்ணமியில் மகாலிங்க மலைக்குப் போய் கும்பிடு போட்டுத் திரும்புவது என்பது காலங்காலமாக நடக்கும் ஒரு விஷயம் தான்.

ஆனால் அது எத்தனை கஷ்டமான விஷயம் என்பது போய் வந்தவர்களுக்குதான் தெரியும்.மகாலிங்க மலைப்பாதை அத்தனை கடினமானது.அங்கே திரியும் மிருகங்கள் கொடூரமானவை.

ஆனால் கந்தசாமியை பொருத்தமட்டில் வாழ்க்கைக் கஷ்டங்களைவிட இது ஒன்று பெரியதாகவே இல்லை.

மூத்தபெண் அகிலாவை கரை சேர்க்க செய்த முயற்சி ஒரு ஐந்து பவுன் நகையால் அடிப்பட்டுப் போனது.

‘அஞ்சுபவுன் போடாட்டி எப்படிங்க...?’ என்று பிள்ளை வீட்டுக்காரர்கள் கேட்டது அடிக்கடி மனதில் தோன்றி அலைக்கழிக்கும்.

அதற்குக்கூட வக்கற்றுப் போய்விட்டதாக நினைத்துக் குமுறுவார். இப்படி சதுரகிரிக்கு நடந்த நடைக்குப் பதிலாக, வேறு நிமித்தம் நடந்திருந்தால் கூட கொஞ்சம் சம்பாதித்திருக்கலாமோ...?

இப்படியும்கூட புத்தி போகும்.. சோர்வு தட்டும். வெறும் கல்லை நம்பி முட்டாள்தனமாய்ச் செயல்படுவதாக எண்ணம் கிளை விரிக்கும்.

நடக்கும் போதுதான் எத்தனை விதமான எண்ணங்கள்?

தென்னைக் காட்டுக்கு இடையில் கிடக்கிறது பாதை.

மலையை வருடிக் கொண்டுவரும் காற்றுக்கு ஓடிவிளையாட ஏற்ற பாதை.அதன் மேல் நடக்கையில் பிடறிப்பக்கமாக ஜில்லிப்புதட்டி சுகம் தொற்றுகிறது.

ஆங்காங்கே தென்னைக்கூட்டம். நடுவில், பாதசாரி சாமிகள் சிலர் படுத்துக் கிடக்கிறார்கள்.

சிலர் வண்டிகட்டி வந்து சமைத்துக் கொண்டிருக்கிறார்கள்.இடையிடையே மலையாற்று நீரின் குறுக்கீடு.சின்ன வாய்க்காலாக கெண்டைக்கால் நனையுமளவு ஓடிக் கொண்டிருக்கிறது.

ஓரிடத்தில் அப்படி நின்று கால் நனைத்து முகம் கழுவி நிமிறும்போதுதான், திரும்பத் தெரிந்தது அந்த ஜோதி மனிதரின் முகம்!

"சாம் நீங்க...?"

"நானேதான்... நூத்தி எட்டாவது தரிசனம்தானே?"

"ஆமாம் சாமி"

"பரவால்ல. யாரோ ஒருத்தன் சொன்னதுன்னு சுணங்கிப் போகாம, நூத்தியேழு மலை ஏற மனசுல வைராக்யம் இருந்திருக்கே?"

"நடுவுல அது சிதறுனாலும் உங்க நினைப்பு சிதறவிடலைன்னுதான் சொல்லுவேன்.ஆமா, சாமி நீங்க...?"

"எனக்கு இது ஆயிரத்தெட்டவாது மலை." அவர் அப்படிச் சொன்ன நொடி மலைக்காற்றை மீறிவியர்க்கிறார் கந்தசாமி.

"ஆயிரத்தெட்டா...?

"மலைச்சிட்டா எப்படி... பத்தாயிரத்தெட்டு தரிசனம் பண்ண சாமிமாருங்க உண்டு இங்க".

"நம்ப முடியலையே... ஆயுசு பத்தாதே?;"

"அதைக் கொடுக்கறவன் அவனில்லையா?..சரி சரி எனக்கு ஒரு உதவி செய்யணுமே நீங்க..."

"என்ன பண்ணணும்?"

அடுத்த நொடி, தன் காவி இடுப்பு வேட்டியில் இருந்து ஒரு பொட்டலத்தை எடுக்கிறார் அவர்.போட்டலம் விடுபட, அதனுள் ஒரு தங்கச்சங்கிலி! அவரைப் போலவே ஜோதிப் பிரகாசமாய் மின்னுகிறது அது.

"என்ன சாமி இது?"

"தெரியல..தங்கச்சங்கிலிய்யா! இதை மேல மலைல சாமி உண்டியல்ல சேர்கணும்.நான் சேர்க்க மறந்துட்டேன்.நீங்க சேத்துடறீங்களா?"

"என்ன சாமி சொல்றீங்க?"

"சொர்ண காணிக்கை'ன்னு பேரு இதுக்கு... ஆயிரத்தெட்டு பூர்த்தி செய்கைல இப்படிக் காணிக்கை செலுத்தினா, மகாலிங்கம் மனசு குளிர்ந்து சொர்ணமா நம்ம வாழ்க்கையை வைக்கும்! அதுக்குத்தான்."

"அதை நீங்க செய்யாம என்னைச் செய்யச் சொல்றீங்களே?;

"அதான் சொன்னேனே... மறந்துட்டேன்! இப்ப என்ன கெட்டுப் போச்சு? இது உண்டியல்ல விழுந்தா தீர்ந்துச்சு பிரச்சினை.அதை நீங்க செய்துடுங்க..."

"ஆமா... எத்தனை பவுன் இது?"

"இருபத்தி ஏழு பவுன்"

"அது என்ன கணக்கு இருபத்தி ஏழு?"

"நட்சத்திரத்துக்கு ஒரு பவுன் மேனிக்கு இருபத்தி ஏழு நட்சத்திரத்துக்கு இருபத்தி ஏழு பவுன்.பிடிங்க, என்ன யோசனை?

"இல்ல... இப்படிப் பாதி வழியில பாக்கறவனை நம்பி, இவ்வளவு பெரிய விஷயத்தை ஒப்படைக்கிறீங்களே?"

"பாதி வழியில பார்த்தவன் சொன்னதை நம்பி, நீங்க நூத்தி எட்டு மலைக்கு நடக்கலையா?... அதைவிடவா இது பெரிசு?எல்லாம் ஒரு நம்பிக்கைதான்..."

அந்த மனிதர் நகையைக் கைகளில் திணித்துவிட்டு கிளம்ப ஆயத்தமாகிறார்.

"திரும்ப உங்கள் எங்க பார்க்கலாம்?பேர் என்னன்னு சொல்லயில்லையே...?

"என் பேர் தங்கசாமி. நானும் இந்தப் பக்கத்து ஆளு தான்.அடுத்த மலைக்கு சந்திக்கிறேன்.வரட்டா?" விறு விறு வென்று நடந்து மறைகிறார் அந்த மனிதர்.

கந்தசாமியின் கரங்களில் இப்பொழுது இருபத்தி ஏழு பவுனில் ஒரு தங்க மின்னல்!"

கிண்டி பூங்கா...

தர்ப்பூஸும், மசால் கடலையும், இந்திய தங்க வியாபரத்தை ஜெயிக்கும் மும்மரத்தில்... நிறைய விடலைகள் ஜீன்ஸ் அணிந்து ‘கேப்பையும் வேண்டுமென்றே மாற்றிப் போட்டுக் கொண்டு சுற்றுவந்து கொண்டிருக்கிறார்கள்.

சென்னைக்கு நேர் மேலே ஓஸோன் ஓட்டை விழுந்து விட்டதோ என்னவோ?... எண்ணெய்ப் பிசுக்காய் எழவெடுத்த வியர்வை சகலரையும் கசகசவென்று வைத்திருக்க, மரங்களை வெட்டிய பாவத்திற்கான சாபமாய் காற்றில் ஈரப்பதமே இல்லாத நிலை.எனவே அது வீசியும் பலனின்றி, வென்னீர்க் கொப்புளமாட்டம் எல்லோர் உடம்பிலும் வியர்வை பூத்துக் கொண்டிருந்தது.ஆனால் மீனா மட்டும் "ப்ரகாஷ் எனக்கு ரொம்ப குளிருது." ... என்றாள்!

# 3

‘கேளப்பா...

அணுவைத் துளைக்க அகப்படும் சக்தியும்

கருவைத் துளைத்து உருப்படும் சக்தியும்

விதைக்குள் வெடித்து வெளிவரும் சக்தியும்

ஒளிக்குள் ஒளியவே ஒல்கிப் பெருகுதாம்.

ஒளிதான் மூலம் ... அது ஆதித்த ஜாலம்.

ஆதித்தன் அணுவேறி அமர்ந்ததொரு உலோகம்

அருந்தங்கம் என்பது அதன் பேராகும்!"

சொர்ணஜாலத் திரட்டுக் குறிப்பு

'குளிருது' என்பவளைப் பார்த்து அதிருகிறான் ப்ரகாஷ்.'அனைவர்க்கும் வியர்க்கும்போது, இவளுக்க குளிருகிறதாமே...?'

"என்ன ப்ரகாஷ்? இப்படிப் பார்த்தா எப்படி?"

"பார்க்காம... குளிருதுங்கறீயே. ஆமா டாக்டர் என்ன சொன்னார்?"

"ஐய்யோ நீங்களுமா?" சலிக்கிறாள் மீனா. தொடர்கிறாள்.

"இன்னியோட என்னைப் பார்த்து இந்தக் கேள்வியை எழுபத்தியோரு பேர் கேட்டாச்சு."

பேச்சோடு கால்கள் பூங்காவின் ஆளரவமற்ற பக்கத்தைத் தேடி நகரத் தொடங்குகின்றன.அதை மான்கள் இரண்டு நின்று பார்க்கின்றன.

"மான்.அங்க பார் பொன்மான்"ப்ரகாஷ் லயமான காதல் மூடுடன் கைகாட்டுகிறான்.

"அது பொன்மானில்லை.சாதாமான், பொன்மானாம் பொன்மான்."

"பொன் கலர் மான்தான் பொன் மான்... நீ என்ன... அதோட உடம்புல தங்கம் இருந்தா தான் பொன்மான்னு ஒத்துப்பே போலிருக்கே...?" பேசிக் கொண்டே இருவரும் புல் தரையில் அமர்கிறார்கள்."உன்னை என்னால் புரிஞ்சுக்கவே முடியவில்லை" என்கிறான் ப்ரகாஷ்.

"என்ன சொல்ற ப்ரகாஷ்?"

"ஆமா, மீனா.உன்னைப் புரிஞ்சுக்க முடியல.நீஉன் பவர் இதெல்லாம் என்ன?"

"ப்ரகாஷ்... யூ ஆர் ஆல்ஸோ க்ரேஸி.எதை நினைச்சுக்கூட பார்க்கக்கூடாதுன்னு நினைச்சு இங்க வந்தேனோ, அதையே நினைச்சு பேசறியே..."

பேசிக் கொண்டிருந்த போது மீனாவின் கைக்கு அருகில் ஒரு ரப்பர் துண்டுக்கு உயிர் வந்த மாதிரி ஏதோ ஒன்றின் நெளிவு.மீனா அதை கவனிக்காமல் கூந்தலை ஒதுக்கி விட்டுக் கொண்டு, கச்சிதமாக அதன் மேலேயே கையை வைக்கிறாள்.

அடுத்த நொடி அந்த துண்டுப்பகுதி சிருட்டென்று நிமிர்ந்தது.அது, ஐந்தடிக்கு குறைவில்லாத நீளத்தில் உள்ள நல்லபாம்பு.புஸ்ஸ்...!சப்தம் இருவரையம் திருப்பியது.கைகளின் வழவழப்பை உணர்ந்து பதட்டத்தில் அதை எறிந்தாள் மீனா.ஆனால் அந்தப் பாம்பு அவள் காலடியிலேயே விழுந்து, ஒங்கி ஒரு போடு போட்டது.ப்ரகாஷ் ஒரு வினாடி சிலையாகிவிட்டான்.

பிரக்ஞை திரும்பியபோது பாம்பு நழுவியிருக்க ... மீனா அவன் தோள் மேலேயே பொத்தென்று விழுகிறாள்.

ஐய்யய்யோ...!

அவனது மூளை துரித கதிக்குத் தாவுகிறது.

அவளை அப்படியே குண்டுகட்டாக தூக்கிக் கொள்கிறான்.

வேகமாக நடக்க ஆரம்பிக்கிறான்.

"என்ன சார்... என்ன ஆச்சு?" இன்னொரு காதல் ஜோடி கேட்கிறது.

"பாம்பு கடிச்சிடுச்சு.."

"மை குட்நெஸ்... நல்ல பாம்பா?"

"என் வரைல எல்லா பாம்புமே கெட்ட பாம்புங்க தான்." அந்த நிலையிலும் ப்ரகாஷால் அப்படித்தான் பதில் கூற முடிந்தது.

"சார்... முதல்ல ‘ஃபர்ஸ்ட் எய்ட்’ கொடுங்க.பக்கத்துல ஸ்னேக் பார்க்குக்கு போங்க.அவங்க கிட்ட ப்ரவென்ட்டிவ் மெடிஸன்ஸ் இருக்கும்."

புத்திசாலித்தனமான ஐடியாதான்!

ப்ரகாஷின் கால்கள் ஸ்னேக் பார்க்கை நோக்கி திரும்புகின்றன.

பின்னாலேயே அந்த ஜோடியும் தொடருகிறது.

நடுவிலேயே கண் விழிக்கிறாள் மீனா.ப்ரகாஷ் தோளில் இருப்பது பார்த்து, இறங்கப் பார்க்கிறாள்.இறங்கியும் விடுகிறாள்.வாயில் நுரை

ததும்பவேண்டிய வினாடியில் ப்ரகாஷை வெறிக்கிறாள்...

"மீன்... கமான், என்ன பாக்கறே!எதுக்கு இறங்கினே? உன்னை பாம்பு கடிச்சிடுச்சு.உனக்கு முதலுதவி தர டாக்டர்கிட்ட கூட்டிக்கிட்டு போகணும்.கமான் க்விக்..."

'அவன் அவளை திரும்பப் பற்றி தோளேற்ற முயல, அவள் மறுத்து விட்டு அவனுடன் நடந்து வருகிறாள்.

ஸ்னேக் பார்க் வாசலில் ஒருவன் செய்தியறிந்து ஒரு கயிறு, கத்தியுடன் ஓடிவருகிறான்.

"வாட் நான்ஸென்ஸ்?கையை எடுங்க..."

"ஐயோ மீனா.அவங்க 'ஃபாஸ்ட் எய்ட்' பண்றாங்க.பாய்ஸன் பிளட்ல பாஸாயிடப் போகுது..."

"நோ.. கண்டவங்க வந்து... இது என்ன.. மேனர்ஸ் இல்லாம கைகாலை தொட்டுகிட்டு..."

"இப்ப கோ ஆப்ரேட் பண்ணப் போறியா, இல்லையா?" ... ப்ரகாஷ் அலற, வந்தவன் கத்தியால் கீறி ரத்தத்தை வெளியே எடுக்க, ஒருவர் ஊசி மருந்துடன் காத்திருந்த மாதிரி வந்து "ப்ளீஸ்!இதைப் போட்டுக்கங்க.முன் ஜாக்கிரதையா நாங்க இதை வெச்சுருக்கோம்" என்று ஊசியை செலுத்தினார்.

கூடவே ஒரு கருத்து.

"நல்ல பாம்பு கடிச்சு இப்படி நிலை மரமா நிக்கற ஒரே ஆள் இவங்கதான்.கடிச்ச இரண்டாவது நிமிஷம் மயக்கம் அஞ்சாவது நிமிஷம் உயிர் பிரியணும்கறதுதான் விதி.

ரொம்ப ஆச்சரியமா இருகN;க... நம்பவே முடியலை.எதுக்கும் தாமதிக்காம டாக்டரை பாருங்க..."

திரும்பவும் வெங்கோபராவ் தன் வழுக்கை தலை நீவி, வாய்பிளந்து, எதிரில் அமர்ந்திருக்கும் மீனாவை பார்க்கிறார்.டேபிள் மேல் பிளட் டெஸ்ட் ரிப்போர்ட்

'எவ்ரிதிங் நார்மல்' என்கிற ரிஸல்ட் மிச்சம்.

"ஆமா அந்தப் பாம்பு கடிச்சுதா...? இல்லை கடிக்கற மாதிரி பாவ்லாவா?" சந்தேகமாகக் கேட்கிறார்.

"என்ன சார் இது ஜோக்?" ப்ரகாஷின் குரலில் சுரத்தே இல்லை.

"இல்லப்பா, இதையும் என்னால நம்பமுடியலை."

"அதுக்கு நாங்க என்ன ஸார் பண்ண?"

"எனக்கு ஒண்ணுமே பிடிபட மாட்டேங்குது.மின்சாரத்துக்கு மட்டுமில்லாம விஷத்துக்கும் டாடா காட்டற கேஸா இருக்காளே இவ...?

"டாக்டர் ஸார், அதனால ஒண்ணும் தப்பில்லையே,"

"இல்ல, உடம்புல ஏதாவது விசேஷ சக்தி உண்டாகி, இந்த மாதிரி..."

"நீ என்ன சொல்றே? இந்த அருள் வருமே.. காளியாத்தா, மாரியாத்தா கோவில்கள்ள ...அந்த டைப்பான்னு கேக்கறியா?"

ப்ரகாஷ் தலையைசைக்கிறான்.

"அருள்வாக்கே எங்க மெடி வேர்ல்ட்ல ஒரு வீக்கான விஷயம் தெரியுமா? அது ஒரு மென்ட்டல் அப்ஸ்ட்ரக்ஷன்.அது ஒரு விதமான காம்ப்ளக்ஸ் மேனியா.மனநல டாக்டருங்க இன்னும் பளிச்சுன்னு சொல்லுவாங்க.சாமி, பூதம்லாம் சும்மா கப்ஸா..."

"அப்படின்னா மீனா விஷயம்...?"

"ஆராயணும், நிறையவே ஆராயணும் மனித உடம்போட சக்தி பத்தி ஒரு தீர்மானம் இருக்கு எங்களுக்குள்ள.அதை உடைக்கிறா மீனா.இது நான் ஒருத்தன் டிஸைட் பண்ற விஷயமில்லை.

விஷத்த ஜெயிச்ச உடம்புங்க நிறையவே உலகத்துல உண்டு.கேள்விப்பட்டிருக்கேன்.ஆனா எலெக்ட்ரிஸிடி விஷயமும் சேரும் போது என் ஆச்சரியம் அதிகமாகுது.மீனாவுக்குள்ள இன்னும் என்னென்ன அதிசய சக்தி இருக்கோ தெரியலை..."

மீனா அதைக் கேட்டு 'களுக்' என்று சிரிக்கிறாள்.

"என்னம்மா சிரிக்கிறே?"

"விட்டா, என்னை சாமியாக்கி, கைல சூலாயுதம் கொடுத்துடுவீங்க போல இருக்கே டாக்டர்?"

"வெச்சுக்கோ. தப்பு என்ன இருக்கு அதுல? ஒரு பவரும் இல்லாம காலட்சேபம் பண்றவங்க மத்தியில, இதுல என்ன தப்பிருக்கு?"

நடுவில் கத்திரிக்கிறாள் நர்ஸ் ஒருத்தி.

"டாக்டர்! ஒரு நிமோனியா கேஸ்..."

"நிமோனியாவா...?"

"ஆமாம்... இரண்டு வயசு குழந்தை.வெரி ஸீரியஸ். வெங்கோப ராவ் வினாடிகளை வீணாக்காமல் கிளம்புகிறார்.அறைக்கு வெளியே இரண்டு வயது குழந்தையோடு ஒரு தம்பதிகள் மலை புரண்டமாதிரி தவி;ப்போடு நின்று கொண்டிருக்கின்றனர். அந்தக் குழந்தை, தாயின் தோளில் தொங்கிப் போய் கிடக்கிறது.இதழ்ப் பிரிவில் எச்சிலும், ஈரமுமாய் ஒழுகல்.

"டாக்டர்... நீங்கதான் எப்படியாவது?"அந்தத் தாயின் புலம்பலை கையை உயர்த்தி தடை செய்தபடி தீவிரமாகிறார்.பரிசோதனைகள் ஆரம்பமாகின்றன.எட்டிப் பார்த்தாள் மீனா.அந்தக் காட்சி அவளுடைய இதயத்தை என்னவோ செய்தது.

"குழந்தையை இப்படிக் கீழே விடம்மா..."

அவள் கீழே விடுகிறாள். சாப்பிட்டு எறிந்த வாழைத்தோல் போல உயிர்ப்பின்றி, கிட்டத்தட்ட சடலமாய் கிடக்கிறது அந்தக் குழந்தை.

"ஆமா, இப்படித்தான் முத்தின நிலைல வர்றதா?"

"நான் அப்பவே சொன்னேன்.இவதான் கேக்காம, இவளா மெடிக்கல் ஷாப்ல மாத்திரை மருந்து வாங்கித் தந்தா..." அந்த தம்பதியரில் கணவன், மனைவியை இடிக்கிறான்.

"ஓ.. படிச்சு கூட்டமே இப்படி நடந்தா என்ன பண்றது நர்ஸ்! இம்மீடியட்டா பெட் அரேஞ்ஜ் பண்ணுங்க."

வெங்கோப ராவின் ஸ்டெத், அந்தக் குழந்தையின் இதயத்தை துடிப்பை கணிக்க ஆரம்பிக்கிறது.தாய்க்காரி கண்களில் அம்பாரமாய் நீர் பெருகிவிட்டது.

நெருங்கி வருகிறாள் மீனா.

ஆர்வத்தோடு குழந்தையை எட்டிப் பார்க்கிறாள்.

வெங்கோப ராவும் மீனாவை திரும்பிப் பார்க்கிறார்.

"நீ உக்காரும்மா, வந்துட்றேன்."

''இருக்கட்டும் டாக்டர்.ரொம்ப ஸீரியஸா...?''

''கிட்டத்தட்ட அப்படித்தான்.''

''ஐயோ டாக்டர், என் பையன் பிழைக்கமாட்டானா?''

''பதட்டப்படாதீங்க.நான் பொய் நம்பிக்கை தர்ற ஆள் இல்லை.அதே சமயம் இறுதிவரை விட்றவனும் இல்லை.''

வெங்கோப ராவ் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, மீனா மிக நெருங்கி அந்த குழந்தையின் தலையை வருடுகிறாள்.புசுபுசுவென்று சுருள்முடி உருளைக்கிழங்காய் மொழுக் கன்னம்.அள்ளிக் கொள்ள ஆசையாக இருக்கிறது.வாஞ்சையாக வருடல் தொடருகிறது. கூடவே வருத்தமும். வெங்கோப ராவும் அறைக்குள் நுழைந்து சிரிஞ்ஜில் மருந்தை நிரப்பிக் கொண்டு வருகிறார்.ப்ரகாஷ், மீனாவின் அந்த வாஞ்சையை ரசித்துக் கொண்டும் குழந்தைக்காக அனுதாபமும்படும்பொழுது, முதல் தடவையாய் மரக்கட்டை போல இருந்த அந்தக் குழந்தை ஏதோ புத்துணர்ச்சி நுழைந்த மாதிரி காலைச்சுண்டி அசைத்தது.நெருங்கிய வெங்கோபராவுக்குள் ஆச்சரியம் துளிர்விட்டது.இன்ஜெகஷ்னோடு நெருங்கிவிட்டவர், அதைப் போடாமல் மீனாவைப் பார்த்து, ''மீனா குழந்தையை அப்படியே வருடிக் கொடு கமான் விடாதே... என்றார்.

''ஏன் டாக்டர், நிஜமாகத்தான் சொல்றீங்களா?இல்லை கண்டிக்கிறீங்களா?''

''இட் இஸ் ஸீரியஸ்.அந்தக் குழந்தையை நீ எடுத்துக்கிட்டா கூட, தேவலை. கமான் ஹேவ் இட்...''

மீனா உற்சகாமாக குழந்தையை கையில் எடுத்துக் கொள்ள, அந்தக் தம்பதிகள் புரியமால் பார்க்க, பாதி புரிந்தும் மீதி புரி;யாமலும் ப்ரகாஷ் கவனிக்க.. அந்தக் குழந்தை இப்பொழுது நன்றாகவே அசைந்து கொடுத்தது.கை, காலெல்லாம்கூட அசைந்து உயர்ந்தது.

'';டாக்டர் என்ன இது? குழந்தை தெம்பா, கைகாலை அசைக்குதே''

''பொறுங்க... அவன் இப்ப மருந்தில்லாமலே குணமாகிக்கிட்டு இருக்கான்.''

''என்ன சொல்றீங்க?''

''கமான் மீனா... விடாதே... நல்லா கொஞ்சு. விடாதே.''

மீனாவும் கைகளில் அந்தப் பிஞ்சை தாலாட்டாத குறை.உச்சிமோந்து,

முத்தமும் தருகிறாள்.குழந்தை தூங்கி எழுந்த மாதிரி கண் திறக்கிறது.

"டாக்டர், என்ன இது அதிசயம்!" தம்பதியர்கள் சிலர்க்கின்றனர்.

"அதிசயம்தான்... சாதாரண அதிசயம்கூட இல்லை பேரதிசயம்.அம்மாடி! உன் உடம்புல இருந்து ஒரு அபரிமிதமான பாஸிடிவ் கதிர்கள் வெளிப்பட்டு இந்தக் குழந்தையை குணப்படுத்திக்கிட்டிருக்கறதை நீயே பாக்கறதானே?"

"டாக்டர்... இதெல்லாம் பாஸிடிவ் ரேஸாலையா?"

"அப்படித்தானேம்மா நினைக்கத் தோணுது.தோஈ கொண்டு வந்த ஊசி அப்படியே இருக்கு.ஆனா நீ தொட்டதாலேயே இந்தக் குழந்தை, வியாதிச் சுவடே இல்லாம உன்னைப் பாக்கறதை நீயே பார்".

மீனா குழந்தையை ஊன்றிப் பார்க்கிறாள்.சற்று முன்வரை சுணங்கிக் கிடந்த குழந்தை செத்து விட்டதாகவே நினைத்த குழந்தை. 'இது எப்படிச் சாத்யம்?" என்று கேட்கிற மாதிரி அவளைப் பார்த்து சிரிக்கிறது. விட்டால், இறங்கி ஓடும் போலத் தெரிகிறது.

வெங்கோப ராவ் மீனா எதிரே கை கூப்புகிறார்.

"தாயே...! நீ சாதாரணப் பெண்ணில்லை" என்கிறார்.ப்ரகாஷாலும் அந்தக் கருத்தை மறுக்க முடியவில்லை.

"உன்னை நான் கும்பிடறேன்.என்னை ஆசிர்வாதம் பண்ணும்மா".

"டாக்டர்! என்ன இது...?நீங்க எவ்வளவு பெரியவர்? நீங்க போய் என்னைக் கும்பிட்டுகிட்டு..."

"வயசுல பெரியவனா இருந்து என்னம்மா பிரயோஜனம்? காலத்தை ஜெயிக்க முடியலையே...!"

மீனா குழந்தையை அதன் தாயிடம் கொடுக்கிறாள்.ப்ரகாஷையும், டாக்டரையும் சற்று மிரண்டு பார்க்கிறாள்.குழந்தையின் தாய் யோசிக்காமல் குழந்தையுடன் அவள் காலில் விழுகிறாள்.

திடீரென்று தன்னை இப்படி அந்நியப்படுத்தி அவர்கள் கௌரவிப்பதில் வெறுப்பு தட்டுகிறது மீனாவுக்கு.

"டாக்டர்! நான் ஒரு சாதாரண பொண்ணு.என்னைப் போய்..."

"இல்லம்மா... நீ சக்தி அம்சம்.இனிமே உன்னை நீ தாழ்த்திக்கறதை நான் அனுமதிக்கமாட்டேன்."

"ப்ரகாஷ்! வாங்க போகலாம்.இனி இங்க இருந்தா, டாக்டர் எனக்கு கோயிலே கட்டிடுவார்."

மீனா முன் கிளம்ப, தயங்கிய படியே ப்ரகாஷ் பின்தொடருகிறான்.

# 4

கேளப்பா...

மண்ணனு தங்கமாய் மாறும் விதத்தினை

எண்ணிட வியப்பும் ஏமாறத் திகைப்பும்

கண்ணிடைத் தெரிக்குமே...

உண்ணி ஒரு கல்பம் மண்ணடியில் புழுக்கம்

நீரற்றும் வேரற்றும் நேத்திரமாய் இருக்க

சில மூத்திரங்கள் பினசேர

மூலத் துகள் இளகும்

அதன் முன்வினையால் இலங்குமே!

- சொர்ண்ஜாலத் திரட்டுக் குறிப்பு

'முதலில் விபூதி பிரசாதம், பின்னர் கொஞ்சம்' பிரண்டைச்செடி, கூடவே மகாலிங்கமலையின் மூலை முடுக்கெல்லாம் முளைவிட்டிருக்கும் விபூதிப் பச்சிலைகள் சில என்று வரிசையாக எடுத்து மனைவி பூரணியின் கைகளில் தரும் கந்தசாமி, கடைசியாகத் தந்த விஷயத்தைப் பார்த்து வாய் பிளக்கிறாள் அவள்.

"என்ன இது?"

"தெரியல? தங்கச் சங்கிலி, புள்ள! இருபத்தி ஏழு பவுன்..."

"ஏதுங்க?"

"அது உனக்கு எதுக்கு? போய் பத்ரமா உள்ளாற வை.அப்படியே அகிலாவை பாத்துட்டு போன மாப்பள வீட்டாளுகளுக்கும் தகவல் சொல்லிடு.நான் ஒரு மடையன், உன்கிட்ட சொல்றேன் பாரு.நானே சொல்லிடறேன். அஞ்சு பவுன் கேட்டாங்கல்ல?ஆறா

போட்ருவோம்.அகிலாவுக்கு மட்டுமில்ல புள்ள... மத்த மூணு புள்ளைகளுக்கும் கூட, இப்பவே ஆறு பவுனுல தங்கம் தயாராயிடிச்சு."

"எல்லாம் சரி, இது எது? எப்படி வந்திச்சு உங்ககிட்ட?"

"எல்லாம் மகாலிங்கம் தந்துச்சு புள்ள..."

"என்ன உளர்றீங்களா?"

"அடிப்பாவி மவளே...! நூத்தி எட்டு மலைக்குப் போயிருக்கேன். சாமி தந்திருக்கும்னு சொன்னா, நம்ப முடியலையா உன்னால?"

"லட்சம் மலைக்கும் போனாலும் சாமி இப்படி சங்கிலி எல்லாம் தராது.அது என்ன நகைபட்டறையா வெச்சிருக்கு?"

"தோ பாரு.... நின்னு இப்படிக் கிண்டாதே. கீழ கெடந்துச்சு."

"இதையும் நம்ப மாட்டியா நீ?"

"எந்த முட்டாளுங்க இருபத்தி ஏழு பவுனை கீழ போடுவான்? ஆமா இது இருபத்தி ஏழு பவுன்தாங்கறது எப்படிங்க தெரியும் உங்களுக்கு?"

"என்ன நீ... சந்தோஷப்பட வேண்டிய நேரத்துல, நொய் நொய்னு நோண்டிகிட்டு..."

கந்தசாமி கதைக்கிறார்.ஆனால் பொய் சொல்லும், அதிலும் முதல் பொய் சொல்லும் பயப் படபடப்பு பேச்சில் நன்றாகவே தெரிகிறது.ஆவிக்குள் ஆவியாய் கலந்து நான்கு பெண் பெற்றவளுக்காக அவர் பொய்யை உமிழ்வதா தெரியாது?

"நம்ம மக்க மேல சத்யம்... நிஜத்தைச் சொல்லுங்க..."

வேறு வழியில்லை கந்தசாமிக்கு.தயங்கித் தயங்கி நடந்ததைக் கூறுகிறார்.

"அப்ப இது உண்டி நகையா?"

"ஆமா."

"இதை உண்டியில போடாம ஏன் கொண்டு வந்தீங்க? சிவன் சொத்து, குல நாசமய்யா!..."

"என்ன புள்ள நீ.. திருடாமலேயே நம்ம குடும்பம், இப்ப அப்படித்தானே இருக்கு?தெரியாமதான் கேக்கறேன்... இந்த நகையை வாங்கி அந்த மகாலிங்கம்தான் என்ன பண்ணப்போகுது? அதுகிட்ட இல்லாத

செல்வமா?"

"என்ன கேள்விங்க இது? புரிஞ்சு தான் பேசறீங்களா? மகாலிங்மா கேட்டிச்சு, தங்கத்த? போடறேன்னு சொல்லிட்டுப் போடாம விட்றது, சொல் குற்றமாச்சே? 'ஐயா! தங்கத்த விடவும், உன் அருள் பெரிசு'ன்னு காட்டத்தானே இப்படி பிரார்த்தனைங்க பண்றோம்? அதுலயும் இது அடுத்தவர் தங்கம் வேற... அப்புறம் சொல்லுல நிக்காம போனா, எதுலங்க நம்ம வாழ்ககை நிக்கும்?"

"இந்த ஒரு தடைவ விட்றுபுள்ள... நம்ம பொண்ணுங்க கரை சேர்ந்துடட்டும்.ஆப்புறட் காலம் பூரா அந்த மகாலிங்கத்துக்கு நான் உடம்பை செருப்பா தெச்சு போட்டு இந்தக் கடனை அடைடிச்சிட்றேன்..."

"ஐயோ வேண்டாங்க... நம்ம பொன்னுகளுக்கு நிச்சயம் நல்ல வழி பொறக்கும்.இதை முதல்ல உணடியல்ல போட்டுட்டு விழுந்து கும்பிட்டுட்டு வாங்க..."

பூரணியின் கட்டளையை கந்தசாமி ஏற்கத் தயங்குகிறார்.

"சொன்னா கேளு, பூரணி" என்று தாஜா செய்யவே முயலுகிறார்.பொறுத்தப் பொறுத்தப் பார்த்த பூரணிக்கும் வேறுவழி தெரியிவல்லை.

'தானே போய் சேர்த்துவிடுவது தான் ஒரே வழி!"முடிவினுக்கு வந்த போது, பக்கத்து பிள்ளையார் கோயில் மணி ஆமோதிப்பாக இசைந்தது.

பத்திரிகையாளர்கள் வந்திருந்தார்கள்.தனியார் டிவியிலிருந்தும் கேமிராவும் கையுமாக ஒரு கூட்டம்.அவர்களிடம் திணறிக் கொண்டிருக்கிறார் கருணாகரன்.

"சார், எல்லாம் பூர்வஜென்ம புண்ணியமதான்.அதான் மகாசக்திN;ய உங்களுக்கு மகளா வந்து பொறந்துருக்கா..."

"எப்ப இருந்து சார், இவங்களுக்கு இந்த மாதிரி பவர்?"

"உத்தரபிரதேஷ்ல கூட ஒரு சாமியார் இப்படித்தான்.கையால தொட்டுக் குணப்படுத்துவார்னு கேள்விப்பட்டிருக்கேன்..."காதைப் பொத்திக் கொள்கிறார் கருணாகரன். இந்தச் சூழ்நிலையை சந்தோஷம் என்று மகிழ்ச்சியடைவதா, தர்மசங்கடம் என்று கருதி துக்கப்படுவதா என்பதிலேயே அவரிடம் குழப்பம் நிலவத் தொடங்கிவிட்டது.

ஆனால் மீனா தெளிவாகவே இருக்கிறாள்.

*‘யாரையும் பார்ககவோ, பேசவோ தயராய் இல்லை’ என்று தெளிவாகவே சொல்லிவிட்டாள்.*

*‘அபூர்வ பெண்... அமானுஷ்ய சக்தி’ என்று சில நாட்களிலேயே இமேஜ் மாறிவிட்டதில் அவறுக்குள் ஒரு பக்கம் துக்கம் பீறிடுகிறது; மறுபக்கம் அவளுக்கே அவளைப் பார்க்க ஆச்சரியமாயிருக்கிறது.*

*நிஜமாலுமே நம்மிடம் அபூர்வ சக்தி உள்ளதா?*

*"அம்மாடி, கொஞ்சம் வெளிய வாம்மா! பத்திரிகைகாரங்க பாக்கணும்ங்கறாங்க..."*

*"ஸாரிப்பா... எனக்கு யாரையும் பார்க்கறதுல, துளிகூட இஷ்டமில்லை."*

*"அப்படியெல்லாம் சொல்லாதேம்மா.ஒரு வகைல இது நமக்குப் பெருமைதானே?"*

*"இல்லப்பா... இதுல எனக்கு துளிகூடப் பெருமை இல்லை நான் ஒரு சாதாரண சராசரி மனுஷி. கடவுள் விஷயத்துலேயே நான் நாத்திகச் சிந்தனைதான் அதிகம் உடையவ.என்னையே கடவுளாக்கறதை என்னால் எப்படி ஒத்துக்க முடியும்?"*

*மீனா சொன்னதை, வார்தகை மாறாமல் கருணாகரன் பத்திரிகையாளர்களிடம் சொல்கிறார். அவர்களும் அப்படியே வெளியிடுகின்றனர்.*

*ஒரு பத்திரிகை ஒருபடி மேலே போய், ‘கடவுளே சொல்கிறது.கடவுள் இல்லையென்று..’ என்று தலைப்புச் செய்தியே போடுகிறது.*

*அந்தப் பத்திரிகையைப் படித்த பின் ஆழ்ந்த சிந்தனையில் இருந்தார் கிருஷ்ணமாச்சாரியார்.*

*ஜோதிட பூஷணம் சாம்ராட் சக்ரவர்த்திதிலகம் என்கிற ஏகப்பாட்ட பட்டங்களைப் பெற்றிருக்கும் நிஜமான் ஜோதிடர்.கோயிலை போன்ற தன் பூஜை அறையில் ஒரு மான தோலின் மேல் அமர்ந்திருந்தார்.முன்னே ஏகமாய் பஞ்சாங்கங்கள்.நடுவில் ஒரு சுவடிக்கட்டும் தென்படுகிறது.*

*அதை விரித்து, குறிப்பிட்ட ஒரு ஓலையை வாசிப்பவர், திரும்பத் திரும்ப அந்த வரிகளிலேயே தேங்குகிறார்.*

*‘ஈஸ்வர வருடமதில், பாஸ்வரமாய் கனல் பெருகும் ஓர் தினத்தில், அலையோரமாய் இடி ஒன்று இறங்கும்.*

மங்கல கிரங்களின் மகாசேர்க்கையாலே பிரபஞ்சம் காணும் அந்த மழையும், இடியும் மகாபிரசாதம். பட்டமரமும் மழையால் துளிர்க்க இடியோடு அது விழும் இடத்தில், அன்னை பராசக்தியின் அருள் விளங்க அன்னையின் திருமேனி கிட்டும்.

கலியின் துயரங்களை வலியின்றித் தாங்கும் வரங்களைத் தர அன்னை அங்கு எழுந்தருளவே, இடியும், மழையும் வந்தது என்பதை சுகர் நான் உரைத்தேன் சுகமாக!"

-வாசித்து முடித்தவரின் எதிரில் ஒரு இளைஞன் இப்போது மகாபணிவாக நிற்கிறான்.

"என்ன சுகுமார்,விசாரிச்சுட்டியா?" கிருஷ்ணமாச்சாரியாரின் கேள்விக்கு, அவன் சோகமாய் முகம் தூக்குகிறான்.

"என்ன முடியலையா?"

"ஆமாங்க.அந்தப் பொண்ணு பாக்கமாட்டேன்னுட்டா."

"அவங்கப்பாகிட்ட பேசிப் பார்த்தியா?"

"பேசினேன்.யார் கூடயும் அந்தப் பெண் பேசத் தயாரா இல்லை.தன்கிட்ட எந்தச் சக்தியும் இல்லைன்னு ஒரே புலம்பல் புலம்பிக் கிட்டிருக்குதாம்."

"நாராயணா... இதென்ன விளையாட்டு?"

"என்ன சாமி சொல்றீங்க?"

"என்னன்னு சொல்வேன் சுகுமார்? ஒண்ணு மட்டும் உறுதி.வருஷ பலன்களைச் சொல்ற இந்த சுகர்நாடி இதுவரை சொன்ன பலன்கள்லயே, இந்த ஈஸ்வரவருஷ விஷயம்தான் ரொம்ப மகத்தானது."

"எதை வெச்சு சொல்றீங்க?"

"நாடியில சொன்ன மாதிரியே, சித்திரையோட இந்த அக்கினி நட்சத்திர வேளையில் மழையும், காத்தும் கடலோரமா வந்திருக்கு; இடியும் விழுந்திருக்கு.ஏனோ தரைல விழுந்து அங்க இருந்து ஒரு சக்தி விக்ரகம் கிடைக்காம, இந்தப் பெண் மேல விழுந்திருக்கு.

இடிவிழுந்தா இரும்பே இளகிப் போகுமே?ஆனா இந்த பெண் பிழைச்சிருக்கான்னா சும்மாவா.

இருந்தும் பூமிக்கடியில் விழுந்து அங்கிருந்து விக்ரகம் கிடைக்காம, ஒரு

பெண் மேல விழுந்து நடமாடும் சக்தியாவே அவளை ஆக்கியருக்கறதாதான் நினைக்கறேன்.

அதனால்தான அந்தப் பெண் மின்சாரம், விஷம்னு அசுர கணங்களை ஜெயிச்சவளா இருக்கா.

எப்படியாவது அந்தப் பெண் பெருவிரல் ரேகை கிடைச்சா போதும்.அவளோட நாடியை எடுத்து இதுக்கான காரணங்ளைப் பார்க்கலாம்னு ஆசைப்பட்டேன்.முடியாது போல இருக்கே..."

"உங்களுக்கு தேவை அந்தப் பெண்ணோட பெருவிரல் ரேகை.அவ்வளவுதானே?"

"ஆமாம்!"

"கவலைப்படாதீங்க.எப்படியாவது எடுத்துக்கிட்டு வரேன்."

"சுகுமார்.தப்பான முறைகளைக் கையாளாதே.அவங்கப்பா மூலமாகவே ட்ரை பண்ணிப் பார்."

"அதைவிட சுலபமான வழி இருக்கு, சாமி!"

"என்னப்பா?"

"அந்தப் பெண்ணோட காதலன் ப்ரகாஷ் எனக்கு நல்ல பழக்கம்."

"ஓ... அவளுக்கு காதலன் வேறு இருக்கானா?"

"ஆமாம் சாமி.அவனோட பேசிட்டு திரும்பும் போதுதான் இடி விழுந்து, கைல இருந்த நாய் மட்டும் செத்து, இந்தப் பெண் தப்பிச்சுட்டா.'

"ரொம்ப சந்தோஷம்.எப்படியாவது பெருவிரல் ரேகையோட வா. இநத உலகத்துக்கே நாம ஒரு அதிசயத்தைக் காட்டினாலும் காட்டலாம்."

கிருஷ்ணமாச்சாரியரின் நம்பிக்கையும் பேச்சும், சுகுமார் என்னும் அந்த இளைஞனையே புரட்டி எடுக்கிறது.

அடுத்த நொடியே ப்ரகாஷை சந்திக்கத் தயாராகிறான், சுகுமார்.

# 5

கேளப்பா...

அங்கத்திலும் தங்கமுண்டு!

அதிரணைய வாயுவெப்பம் உடம்பில்

வாய்த்த விதத்ல், காயம் கொள்ளும்

என்பு நரம்பில் இலங்குமின்

கூடிப் பெருகிய கோடி உயிரில் ஓர் உயிர்

கோபுரத் தங்கம்! நவமர் கதிரில்

நல்லதே அந்த தேகம் இலங்கும்.

சொர்ணஜாலத் திரட்டுக் குறிப்பு

அண்ணா சாலையின் டாஸ்மாக் ஆபீசின் வழக்கமான பரபரப்பு. 'லிஃப்ட் இருந்து அது இயங்கக் கூடாது' என்கிற அரசாங்க சாபப்படி மூடிக்கிடக்க வளைவான படிகளில் ஏறும்போது மூச்சிரைத்தது சுகுமாருக்கு.

நடக்காமல், சைக்கிளும் ஓட்டாமல், டூ வீலரை கட்டிக்கொண்டு அழுவதால் முப்பது ரூபாய் தர்ப்பூஸ் சைஸ_க்குத் தொந்தி முன்விழுந்து, ஏறும்போது மூச்சிரைக்க வைத்து வயதாகிவிட்டதை ஞாபகப் படுத்தியது.

'அப்பாடா! என்று டாஸ்மாக் மூன்றாவது மாடியில் இங்கே இருக்கேன் என்று தெரிய ... ரிஸப்ஷனில் "உள்ளே போங்க சார் சார் கூப்பிட்றார்" என்கிற தன்மையான பதில்.

சுகுமார் ஒரு ப்ளைவுட் அறைமுன் நின்று கதவின் கண்ணாடி வழியாக உள்ளே பார்க்கிறான்.உள்ளே ப்ரகாஷ்!

முகம் தெரியவும் ப்ரகாஷே கூவுகிறான்.

"கமான் சுகுமார் ... எங்க இவ்ளோ தூரம்?"

"சும்மாதான்னு பொய் சொல்ல விரும்பலை ப்ரகாஷ் முக்கியமான விஷயமாத்தான் உன்னைப் பார்க்க வந்துருக்கேன்."

"முதல்ல உக்கார்.என்ன சாப்பிட்றே?"

"லெமன் ஜூஸ் கிடைக்குமா?"

"தப்புப்பா தப்பு. நல்லவேளை கிரேப் --மேங்கோன்னு போகாம விட்டியே"

என்றவன், "ஏழுமலை" என்கிறான் உரக்க.

ஏழுமலை என்னும் ஒயிட் பேண்ட் ஷர்ட் போட்ட பியூன் எட்டிப் பார்க்க... ‘இரண்டு காஃபி என்று ஆர்டர் செய்துவிட்டு "ஸாரி , லெமன் ஜூஸ்லாம் கிடைக்காது. காஃபி, இல்லேன்னா டீ தான். நீ காலேஜ்லயே காஃபி ப்ரியன்னு தெரியும்.ஸோ, காஃபி ஆடர்டர் பண்ணிட்டேன். ஓ.கே."

"ஓ.கே. ஆமா என்னப்பா உன் ஆள் விஷயம் பத்திரிகை பூரா அடிபட்டுக்கிட்டிருக்கே?..."

சுகுமார் எடுத்த எடுப்பில் மீனா பற்றி கேட்டதில் ப்ரகாஷ் கடுமையாகிறான்.

"ஏண்டா, ஏதாவது தப்பா?"

"N;டய்! நீ நூத்தி பத்தாவது ஆள்டா.யாரைப் பார்த்தாலும் என்கிட்ட மீனா பத்திதான் கே;கறாங்க. நீயுமா?"

"நான் காரணத்தோடதான் கேக்கறேன், ப்ரகாஷ்"

"என்ன காரணம்... உங்க வீட்ல யாராவது பேஷண்ட் இருக்காங்களா?"

"ப்ளீஸ்! ப்ரகா, முதல்ல டெம்ப்ட் ஆகாதே கவனமா நான் சொல்றதக் கேள்."

"ரொம்ப நேரமாகும்னா சொல், வெளிய வெச்சுப்போம்.நிறைய பேப்பர்ஸ் பாக்க வேண்டியிருக்கு.எம்.டியோட மீட்டிங் வேற இருக்கு."

"அமா, கொஞ்சம் பெரிய அளவுல பேசவேண்டிய விஷயம்தான்."

"அப்ப காஃபியை சாப்டுட்டு கிளம்பு.நைட் ஏழரைக்கு வா.ஜீப்ல வீட்டுக்குப் போகும்போது பேசுவோம்."

"அதுவும் கரெக்ட் அப்ப நான் கிளம்பறேன்."

"ஏய்! காஃபி?..."

"என் பேரைச் சொல்லி நீயே குடிச்சுக்கோ நைட்டாவது லெமன் ஜூஸ்வாங்கித்தா"

சுகுமார் கிளம்புகிறான்!

உத்யோகம் மட்டுமா புருஷ லட்சணம்.ப்ரீஃப்கேஸ_ம்தான்! ஆத்துடன் மாடிப்படி இறங்கும் ப்ரகாஷிற்கு சுகுமாரின் நினைவே அறுந்துபோய்

இருந்தது.

ஆனால் கீழே காத்திருந்து ஞாபகமூட்டி ஜூப்பிலும் தொற்றிக் கொள்கிறான் சுகுமார்.

அண்ணாசாலை என்னும், மெமரியில் ஆழப்பதிந்த மௌண்ட் ரோட்டில் ஆயிரமாயிரமாய் வாகனங்கள் ‘இத்தனை வாகனங்களுக்கும் பெட்ரோல், கிடைத்து அவை ஓடி... தினம் தினம் ஓடி...’ சுகுமாருக்குள் ஏனோ வித்தியாசமான எண்ணப் பெருக்கம்.

ஓவர் த நைட்டில் அரபுநாடு முழுக்க பெட்ரோல் கிணறு வற்றிப் போக, என்ன செய்வது என்றே புரியாமல் ஷேக்குகள் திகைக்க, இந்த வாகனமெல்லாம் என்ன ஆகும்?

காரெல்லாம்... கூரையோடு கூடிய நாற்காலியாகவும், வீலரெல்லாம்... நகரக்கூடிய ஒரு மரபெஞ்ச் போலவும்தானே ஆகும்?

விடை சிரிப்பைத் தருகிறது.

"சுகுமார்! என்ன சிரிப்பு? நீ முக்கியமான விஷயத்தை ஆரம்பிக்கவேயில்லை." கத்தரிக்கிறான் ப்ரகாஷ்.

நீயா கேக்கறியான்னு பாக்கத்தான்;ஒரு விபரிதக் கற்பனை செய்து பார்த்தேன். நீ வேணா பாரு இந்த மௌண்ட ரோடு, யாருமே வண்டி ஓட்டாம ஒரு சுடுகாடு மாதிரி வெறிச்சோடி போகப்போகுது. கோயில் மாடுங்க, நினைச்ச இடத்துல எல்லாம் படுத்து சாணி போடப் போகுது..."

"டேய்! கொல்லாம விஷயத்துக்கு வாடா..."

"வரேன். அதுக்கு முந்தி நாடி ஜோஸ்யம் பத்தி நீ என்ன நினைக்கறே ப்ரகாஷ்"

"மீனா பத்தி பேசப் போறதா சொல்லிவிட்டு, நாடி பத்தி என்ன நினைக்கறே?"

"நான் அதப் பத்தியெல்லாம் நினைச்சுப் பார்த்ததே இல்லியேடா..."

"பொய் சொல்லாதே.நாடி ஜோஸ்யம் பத்திப் பொறக்கற குழந்தைக்குகூட தெரிஞ்சிருக்கிற ஒலகத்துலதான் நீ இருக்கே..."

"இது என்னடா கூத்தா இருக்கு! பொறக்கற குழந்தைக்கு கூட தெரிஞ்சிருக்குங்கறதுக்காக எனக்கும் தெரிஞ்சிருக்கணும், நான் அதப் பத்தியெல்லாம் யோசிக்கனும்ங்கற அவசியம் கிடையாது. அத, முதல்ல நீ

தெரிஞ்சுக்கோ."

"ப்ரகாஷ்! நான் காரணமில்லாம கேக்கலை... நீ நிஜமாத்தான் சொல்றியா?"

"சத்யமா, நாடி பத்தி நினைச்சுப் பார்த்ததேயில்லை."

"சரி, இப்ப சொல்றேன் கேட்டுக்கோ நம்ம வாழ்க்கைல நடந்ததை, நடக்கப் போறதை அப்படியே சொல்ற ஒரு அதிசயம்."

"அப்படின்னா முதலமைச்சர்ல இருந்து பிரதமர் வரை அங்கதானே க்யூவுல நின்னுகிட்டிருக்கணும்?"

"யூ ஆர் ரைட் நேத்துக்கூட ப்ரைம் மினிஸ்டர் ஆஃபீஸ்ல இருந்து ஒருத்தன் வந்துட்டுப் போனான்"

"என்னடா, ரீல் விட்றியா?"

"கண்ணா... சினிமால ஒருத்தன் பத்து பேரை பந்தாடறதயெல்லாம் ஒத்துக்கறிங்க.இந்த மாதிரி பேசும்போது மட்டும் பெரிசா என்னமோ எங்களை ஏமாத்தவே முடியாதுங்கற மாதிரி பாவ்லா காட்றதெல்லாம் எதுக்கு?"

"டேய்! நான் சினிமா பாக்கறதே கிடையாதுடா. நீ விஷயத்துக்கு வர்றியா? நாடி ஜோஸ்யத்துல நிறுத்தினே..."

"அந்த நாடி ஜோஸ்யத்துல மீனா பத்தி முழுசா தெரிஞ்சுக்கணுமா நீ?"

சுகுமாரின் வளைப்பில் ப்ரகாஷ்! சுகர் நாடி பாக்கற ஜோதிடர் கிருஷ்ணமாச்சாரி எனக்கு நல்ல பழக்கம்.நானறிய நிஜமாலுமே அவர் பிரமாதமான ஜோதிடர். அவர் மீனாவை ஒரு மிகப் பெரிய சக்தியா நினைக்கறாரு.குறிப்பா அவ தலை விழுந்த இடியாலதான் அவளுக்கு இத்தனை சக்தியும் வந்திருக்கிறதா நம்பறார்.

அவளுக்கு இன்னும் என்ன கைவரும்கறத நாடி பார்த்தா சொல்லிடமுடியும்னு நினைக்கறார்."

"சரி பார்க்க வேண்டியதுதானே?"

"அதுக்கு நான் என்ன பண்ணணும்ங்கறே?"

"நான் அதுக்காகவே அவங்க வீட்டுக்குப் போனேன். விரட்டி அடிக்காத குறை.நீ முயற்சி செஞ்சா, நிச்சயம் வாங்கித்தர முடியும்டா..."

*ப்ரகாஷ் அந்த நொடியில் மீசை நிவி யோசிக்கத் தொடங்க, அவனது அரசாங்க ஜீப்பை அமைந்தகரை ஜீப் ஒன்று உரச, டிரைவர் 'கஸ்மாலம்' என்றபடி கியர் மாற்றும்போது எதிர்சாரி பெட்டிக்கடை ஒன்றின் வெளியில், தினசரி பேப்பர் ஒன்றின் விளம்பர போஸ்டரில் 'மீனா' பற்றிய செய்தி.*

*'கன்னித் தெய்வம் மீனா!' என்கிற தலைப்பே கொஞ்சம் காயப்படுத்தியது.*

*ராஜஸ்தானத்து அபுமலை பக்கமாய் தேனிலவைக் கொண்டாடப் போகும் கனவை, காலம் இரு கை கொண்டு கலைத்து மீனா கையில் திரிசூலம் தருவதாகக் கற்பனை விரிகிறது அவனுக்குள்.*

*"டேய், கேட்டேன்ல?கொஞ்சம் வாங்கித் தாடா.. மீனாவோட எதிர்காலம் பத்தி துல்லியமா தெரிஞ்சுக்கலாம்."*

*"இஸ் இட் பாஸிபிள்?"*

*"ஹன்ட்ரட் பெர்ஸென்ட்!"*

# 6

*துடிவிசை ஒளி மின்னல்*

*நெடுங்கு ன்றமிரங்கி*

*அடித்தளமிசை நீரதன்*

*அணுவிலே உறங்கி*

*இடிக்குழி நீரென்றே*

*வனத்தவர் விலக்கிடும் ஒரு*

*படிக்குழி நீருடன் பிடிபசுஞ்செம்பு சேர்ந்திட*

*விடிகதிர் ஒளி வர்ணம் போலுமே*

*செம்பு கொள்ளுமே சொர்ணம்!*

*தோற்றும் கரம் தோற்றம் கண்ட*

*மானிடப் பிறப்பெனில்!"*

*சொர்ணஜாலத் திரட்டுக் குறிப்பு*

மழை வரும் போலத் தெரிந்தது.சதுரகிரி மலைக் கூட்டம் மேல்,தாய் மடிமுட்டும் கன்றுகளைப் போல முகடு முட்டும் மேகங்கள். தாணிப்பாறை கடந்து மலை ஏறும் பாதை வழியே நடந்துகொண்டிருக்கிறாள் பூரணி, இலஞ்சி, வாகை, ஈட்டி, மருதை, தோதகத்தி என்று ரகவாரியாக மரக்கூட்டம் அருகில் சப்தமிட்டபடி பாய்ந்து கொண்டிருக்கிறது மலையருவி நடைபாதை வெறிச்சோடிக் கிடந்தது.

அமாவாசை, பௌர்ணமி தினங்களில்கூட மலை ஏறும் கூட்டம் அஞ்சித்தான் செல்லும்.மற்ற நாளில் காற்றுகூடவீச அச்சப்படுகிற மாதிரி ஒரு அமைதி தவழும் பிரதேசம் அது.

இவை எவற்றையுமே பூரணி முதலில் யோசிக்கவில்லை.

ஏதோ ஒரு வேகத்தில் கிளம்பி வந்துவிட இப்பொழுதுதான் உறைக்கிறது.

எப்படி ஏறி கடக்கப் போகிறோம்…? மனசு ஒருபுறம் மருகினாலும், மறுபுறம் 'மகாலிங்கம்' என்று சொல்லிப் பலம் பெறப் பார்க்கிறது.

இடுப்பில் சுறுக்குப் பையில் தொங்கிக் கொண்டிருக்கிறது.அந்த 27 பவுன் சங்கிலி. தொட்டுப் பார்த்துக் கொண்டு ஏற ஆரம்பிக்கிறாள்.

'எது வந்தாலும் சரி, போய் முதலில் மகாலிங்கத்திடம் சேர்ப்பித்து விடவேண்டும். இந்த மனிதர் புத்திஏன் இப்படி ஆகிவிட்டது?" நடுவில் கந்தசாமியை பற்றி நினைத்தும் கவலைப்படுகிறாள்.'சிவன் சொத்து குலநாசமல்லவா? ஹூம்ம்.

'அவர் என்ன செய்வார்? நான்கு பெண்கள்,அவரை அப்படி நினைக்கச் செய்து விட்டார்கள்…' மனதில் மையம் கொண்ட கவலையோடு நடை, தொடர்ந்து கொண்டிருக்கிறது.

"ஆரு தாயி அது, ஒத்தைல மலை ஏறிகிட்டு?..." அருகிலிருந்து ஒரு குரல் திரும்பிப் பார்த்தாள்.தோள் மேல் ஆட்டுக்குட்டியோடு பளிங்கன் ஒருவன்.கரடி முதுகு போன்ற பாறை மேல்.

"என்ன பாக்கறே, நாளும் இல்ல, கிழமையும் இல்லை இப்ப போய் ஏறிக்கிட்டிருக்கிறே?..."

"என்னமோ தோணிச்சுய்யா?... அதான்!"

"சரிதான். வேங்கப்புலி ஒண்ணு விளையாடிக்கிட்டு திரியுது. தனியா போறியே… துணையோட வரவேண்டாம்?"

"அந்த மகாலிங்கம் தான் துணை"

"அது சரி.. சரி வா, குறுக்குப்பாதை வழியாக நான் மேலதான் போறேன். எட்டி நடையப் போடு."

அவன் அவளுக்கு முன் செல்ல ஆரம்பிக்கிறான். அவள் தொடருகிறாள். மூலப்பாதையை விட்டுப் பிரிந்து எங்கெங்கோ போகிறது தடம்.

"ஆட்ட இறக்கிவிட்டு இழுத்து கிட்டு போக வேண்டியதுதானே?" என்றாள்அவள்.

"போலாம்... கழுத இதுபாட்டும் குறுக்கால ஓடி, இடிக்குழி தண்ணிய குடிச்சுதுன்னா?..."

"இடிக்குழி தண்ணியா! அப்படின்னா?"

"மின்னலும் இடியும் விழற இடத்துல ஊத்து இருந்தா அது பெருக ஆரம்பிச்சிடும்.அந்த தண்ணிய சொன்னேன்."

"அந்தத் தண்ணிக்கென்ன?"

"நல்லா கேட்டே போ..." அவன் சொன்ன நொடிப்போதில் ஒரு இடிக்குழி அருகே ஒரு மனிதன் விரைப்பாகக் கிடந்தான்.முனகிக் கொண்டிருந்தான்.

பளிங்கன் அவனை நோக்கி ஓடுகிறான்.

"எலேய்! என்ன ஆச்சு? இந்தத் தண்ணிய குடிச்சுப்பிட்டியா?"

"ஆமாய்யா...இரண்டு நாள் முன்ன, சாமி கும்பிட வந்தேன்.இறங்கைல தெரியாம இந்தப் பக்கம் வந்து இதக்குடிச்சுபிட்டேன்.வயிறு பாறையாப் போச்சு. மூச்சுவிட முடியல.." அவன் செருமிக் செருமிக் சொல்கிறான்.

"அட விதி கெட்ட மனுஷா... சாமியாருங்க யாரும் கண்ணுல படலையா?"

இல்லியே, ஒத்தையாளா உசுர் போகாம துடிச்சுகிட்டு கிடக்கேன்..."

"மகாலிங்கம், மகாலிங்கம்னு கத்துய்யா.நிச்சயம் சாமியாருங்க யாராவது வருவாங்க.அவர்களால்தான் உனக்கு மருந்து தந்து காப்பாத்த முடியும் நல்ல ஆளய்யா,இந்த உலோகக் கஞ்சிய குடிச்சு, குடிச்சு எத்தனை பேர்தான் சாகப் போறாங்களோ?எதுக்குய்யா நீங்கள்ளாம சுருக்கப் பாதை வழியா வர்றீங்க...?"

பளிங்கன் பேசிக் கொண்டே திரும்ப மலை ஏற ஆரம்பிக்கிறா பூரணியை

வியப்பு பிடுங்குகிறது.

"உலோகக் கஞ்சியா?"

ஆமாந்தாயி எங்க ஆளுங்க அப்படித்தான் சொல்வோம். இந்தத் தண்ணிய ஒரு காக்கா, குருவி குடிக்காது.மலைக்குரங்களும் ரொம்ப விவரம் எட்டிக்கூட பாக்காது.ஆடு, மாடுங்கதான் சமயம் தெரியாம அருவித் தண்ணின்னு குடிச்சுபுடும்.வயிறு பெருத்து செத்தும் போகும். அதுல ஒரு கல்லு விழுந்தா ஒரு மாசத்துல இரும்பாயிரும் தாயி அப்புடி ஒரு பவரு..."

பளிங்கன் நடந்தபடியே ஓரிரு ஆங்கில வார்த்தைகளும் பேசுகிறான்.மகாலிங்கமலை பற்றி பூரணி நிறைய கேள்விப்பட்டிருக்கிறாள்.புதிர்களின் பொக்கிஷ பூமி அது.இன்று ஒரு சாம்ப்பிளும் கண்ணில் பட்டுவிட்டது.

"இந்த மலைல நிறைய சாமியாருங்க இருக்காங்களா?"

"நல்லா கேட்டே போ... சில ஜனங்ககிட்ட இதுக்கு பேரே சாமியர்மலைதானே? எனக்கு தெரிஞ்சு, ஒரு சாமியார் என் கொள்ளு தாத்தா காலத்துல இருந்து இருக்கு. இன்னிக்கு பாக்கவும் அப்படியே தான் இருக்கு! ஒரு சாமி, ஆறு மாசம் தண்ணிகூட குடிக்கறதில்லை... ஒரு சாமிக்கு வெறும் பச்சிலதான் சோறு."

அவன் விஸ்தாரமாக தனக்குத் தெரிந்த மலைச்சாமியார் புராணத்தைப் படித்துக் கொண்டே நடக்கிறான்.சில இடங்களைக் கடப்பது பெரும்பாடாக இருக்கிறது.

பூரணிக்கு ஒருபக்கம் பயமாக இருந்தாலும் மறுபக்கம் அவனது விடுவிடுப் பேச்சு நம்பிக்கை தந்தது.நடுவில் சடசடவென மழை புகப் பார்க்கிறது.

"ஒதுங்கு தாயி... ஒதுங்கு, ஒதுங்கு..." என்று மருத மரத்தடியில் போய் அவன் நிற்க, வினாடி நேர வேகத்தில் மழை வலுவாகவே விழ ஆரம்பித்துவிட்டது.வானம் கொள்ளாத கருமேகம்.ஊடுருவுகிறது மின்னல் சாட்டை அடேயப்பா! இயற்கைதான் எத்தனை வலுவானது? பூரணியும் அவனுடன் அந்த மரத்தடியில் ஒதுங்கி நின்று, சேலைத் தலைப்பால் முட்டாக்கு போட்டுக் கொண்டு, முகத்தில் வழியும் நீரை கைகளால் வழித்தபடி வானம் பார்க்கிறாள்.அண்ணாந்தவளுக்கு தூக்கி வாரிப் போட்டது.எதிரில் மலைப்பாறை ஒன்றின் மேல் அதீதமான உயரத்தில் ஒரு மனிதர் மங்கலாய், புகை உருவம் போலத் தோற்றமளிக்கிறார்.பெய்யும் மழை நீரைக் கைகளால் ஏந்திப் பிடித்தபடி குடித்துக் கொண்டிருக்கிறார்.

"இந்தாப்பா… அது பூரணி பளியங்களை அழைத்து காட்டுகிறாள்.

"அவரா... அட அமாம்! தங்கசாமி! மழைத தண்ணிய மட்டுமே குடிச்ச வாழுற சாமி.இவர பல வருஷமா பாக்கணும்னு ரொம்ப பேர் வந்து போனாங்க.இவர் இங்க இருக்காராக்கும் சரிதான்."

"தங்கசாமியா?"

"ஆமாம் தாயி. இரும்பைத் தங்கமாக்கற வித்தை தெரிஞ்ச சாமி அது. சாமியோவ்வ்வ்…' பளிங்கன் உற்சகமாய் சொல்லிக் கொண்டே கத்துகிறான்.

சப்தம் மலை ஏறி பாறை மீது நிற்கும் அவர் காதுகளைத் தாக்கவில்லை.அவர், இருகை நீட்டி மழைநீர் பிடித்துக் குடித்துக் கொண்டேயிருக்கிறார்.

பூரணியை அந்தக் காட்சி என்னவெல்லாமோ செய்கிறது.

"இந்தாங்க சாமி அந்தப் பெண்ணோட பெருவிரல் ரேகை!"சுகுமார் மிகுந்த பரபரப்புடன் கிருஷ்ணமாச்சாரியார் எதிரில் ஒரு தாளை தூக்கிப் போடுகிறான் கூடவே ப்ரகாஷ்!

"இவர்தான் அந்தப் பெண்ணோட வருங்காலக் கணவர் பேர் ப்ரகாஷ்" அறிமுகத்தையும் முடிக்கிறான்.

கிருஷ்ணமாச்சாரியார் பெரிதாக வணங்குகிறார்.பார்க்க பரப்ரம்ம ஸ்வரூபம்.நெற்றி கொள்ளாத திருமண் சூரணம்.நடுவில் அதென்ன செந்ர்தூரமா?வகிட்டுப் பரப்பில் கருப்பாய் மைப்பொட்டும் கூட.

ப்ரகாஷ் அவரை விழுங்கியபடி பதில் வணக்கம் சொல்கிறான்.

"ரொம்ப சந்தோஷம்..." என்று பேச்சை ஆரம்பிக்கிறார் கிருஷ்ணமாச்சாரியார்.ரேகையை உற்றுப் பார்க்கிறார்.

"எப்படி வாங்கின...?"

"ஏதோ பொய் சொல்லி உல்டால்லாம் பண்ணிதான் ப்ரகாஷ் வாங்கியிருக்கான். ஏடு எடுத்திட முடியும்தானே சாமி?"

"பாக்கறேன்" சொல்லிக் கொண்டே எழுந்திருக்கிறார்.

'க்ரீச்ச...' அந்த வீட்டின் இருண்ட ஒரு அறைக்கதவு திறந்துகொள்ள உள்ளே நுழைகிறார்.மின்விளக்கு சுவிட்சை தட்டிவிடுகிறார்.அறைக்குள்

பிறை, பிறையாக சுவடிக்கட்டுகள்.

சிலது சீராக அடுக்கப்பட்டு சிலது கட்டாகக் கட்டப்பட்டு, சிலது மூங்கில் கூடையில் குவிக்கப்பட்டு... என்று லட்சங்களில் இருக்கிறது.

பரண் மீதும் கட்டுக்கள்!

தேடத் தொடங்கியது அவர் கைகள்.

வெளியே...

"ஆமாம,; இவருக்கு எப்படி கிடைச்சது இந்த ஏடுகள்லாம்?" சுகுமாரை நிமிண்டி விடுகிறான் ப்ரகாஷ்.

"அஞ்சாறு தலைமுறையா இருக்காம் அவ்வளவுதான் எனக்குத் தெரியும்.சரபோஜி ராஜா காலத்து தஞ்சாவூர் குடும்பம் நம்ம கிருஷ்ணமாச்சாரியார் குடும்பம்."

"எப்படி செல்லரிக்காம பாதுகாக்கறாரு?"

"அதுக்கு ஏதோ மருந்தெல்லாம் இருக்கு ப்ரகாஷ் ஒரு விதத்துல கிரேட் மேன் இந்த சாரி.நினைச்சா லட்சக் கணக்குல சம்பாதிக்கலாம்.ஆனா பாரு, யாரா இருந்தாலும் உண்டியல்ல போட்றது போதுங்கறவர்..." சுகுமார் எதிரில் ஒரு உண்டியலைக் காட்டுகிறான்.சுமாரான சைஸில் மஞ்சள் துணியோடு...

பூஜை அறை போல இருக்கிறது, அவர் அமர்ந்து ஏடுபடிக்கும் இடம்.வெளியே பலர் காத்திருக்கின்றனர்.ப்ரகாஷ் அவர்களைப் பார்க்கிறான்.அதில்... அட பாண்டுரங்கன்! மும்பை கவர்னரின் பி.ஏ.பாண்டுரங்கனும் ப்ரகாஷை பார்த்து அந்த நொடியில்தான் யார் என்று தெரியவந்த மாதிரி 'ஹாய் ப்ரகாஷ்!' என்கிறார்.ப்ரகாஷ் எழுந்து அவரை நெருங்கிச் சென்று...

"என்ன பாண்டுரங்கன்... உங்களுக்கும் நாடில எல்லாம் நம்பிக்கை வந்துடுச்சா?"

"நம்பிக்கை இல்லாமலா 2000 கிலோமீட்டர் கடந்து வந்துருக்கேன்.ஆமா உங்களுக்கு?"

"அது நடக்கப் போற பலனைவெச்சு.இப்பதானே வந்துருக்கேன்..."

"டோன்ட் வொரி.என்வரைல, சாரி கடவுளோட ரெப்ரஸன்டேட்டிவ்.அவர் ஏடு பாத்து சொன்னா சொன்னதுதான்."

"அததான் மும்பைல இருந்து வந்துருக்கீங்களா?... என்னவெல்லாம் சொன்னார் சாரி?"

"எல்லாம் சொன்னார் ப்ரகாஷ்! குண்டுவெடிப்பு, இனக்கலவரம், அரசியல் மாற்றம்...!

'நிஜமாகவா.... எப்படி பாண்டுரங்கன் சாத்தியம்?"

"எப்படின்னா... அதான் ஏடுகளோட மகிமை முனிவர்கள் ஞானதிருஷ்டியில எழுதினதுன்னா சும்மாவா?"

"இந்த முனிவர்களுக்கெதுக்கு இந்த வேலை? நம்ப முடியலியே... லாஜிகலா யோசிச்சா உதைக்குதே பாண்டுரங்கன்.உலகத்துல கோடி, கோடி ஜீவன்கள்அவ்வளவு பேருக்கும் ஏடு எழுதறதுன்னா, அதுவும் துல்லியமா எழுதறதுன்னா, நினைச்சுப் பாருங்களேன்."

ப்ரகாஷ் கேள்வியைக் கத்திரிக்கிறது கிருஷ்ணமாச் சாரியாரின் பதில்.துண்டை உதறியபடி பேசுகிறார்.

"எல்லோருக்கும் ஏடு இல்லை மிஸ்டர் ப்ரகாஷ் இங்க வரணும்னு விதி இருக்கணும், அவங்களுக்கு தான் இருக்கும்.குறிப்பா நீங்ககொண்டு வந்த மீனாவோட ரேகைக்கு, ஏடு இல்லை."

ப்ரகாஷ் லேசாக அதிருகிறான்.

"நான் ரொம்ப எதிர்பார்த்தேன். அவங்க நிச்சயமா ஒரு அதிசயப்பிறவி.அவங்க பூர்வஜென்மம்-எதிர்காலம் எல்லாத்தையும் தெரிஞ்சுக்க நான் ரொம்ப ஆசைப்பட்டுட்டேன் போல... அதான் ஏடு இல்லாமல் போயிடுச்சு."

சுகுமார், ப்ரகாஷை ஏமாற்றமுடன் பார்க்கிறான்.மிகப் பெரிய எதிர்பார்ப்பு ஒன்று, காற்று போன பலூன் ஆகிவிட்டது.

"ஓ.கே. மிஸ்டர் சாரி!... அப்ப நான் கிளம்பறேன்."

ப்ரகாஷ் கிளம்பும் ஆயுத்தம் கொள்ள, பாண்டுரங்கன் ஒன்றும் புரியாமல் பார்க்கிறார்.

"நீங்க உங்களுக்குப் பார்க்கலையா ப்ரகாஷ்?" என்று கேட்டுகிறார்.

"இல்ல, என் 'உட்பி'க்காக வந்தேன்.ஸாரி... வரவழைக்கப்பட்டேன்.ஒண்ணும், 'வொர்க்அவுட் ஆகல பரவாயில்லை. நான் வரேன்."

*கிளம்ப கால் எடுத்தவனின் கரங்களைப் பிடித்துத் தடுக்கிறான் சுகுமார்.*

*"என்ன சுகுமார்?"*

*"ஒன் மினிட் வந்ததுக்கு உனக்காவது பார்த்துட்டுப் போ."*

*எனக்கா? வேண்டாம்.இந்த நாடி ஜோசியம் இதெல்லாம் எனக்கு நம்பும்படி இல்ல.மீனா விஷயத்துலயே, உன் நிர்ப்பந்தம் காரணமாதான் வந்தேன்."*

*"ஏய்... இப்ப நீ கட்டை விரலை நீட்டப் போறியா, இல்லையா?"*

*"வேண்டாம் சுகுமார்.விட்று.அவர் போகட்டும்." கிருஷ்ணமாச்சாரி இங்கிதம் காட்டுகிறார்.*

*"இல்ல குருவே... அந்த மீனா பற்றி நேரா தெரிஞ்சுக்க முடியலைனனாலும், இவன் ஜாதக ஏடு மூலமா தெரிஞ்சுக்கலாம் இல்லியா? ஏன்னா, அவ இவனோட வருங்கால மனைவியாச்சே!..."*

*கிருஷ்ணமாச்சாரியார் அதை ஒப்புக்கொண்ட மாதிரி மௌனித்துவிட்டு சுகுமாரை பார்க்க... அவன் இங்க்பேடில் ப்ரகாஷின் ரேகையை உருட்டி எடுத்துப் பதித்து கொண்டிருந்தான்!*

*அதிக தேடலின்றி ப்ரகாஷின் ஏடு அகப்பட்டுவிட்டது.ஏட்டை ஒரு சிமிட்டுய படி வாசிக்க ஆரம்பித்த கிருஷ்ணமாச்சாரியாரின் முகத்தில், வியப்பு பெரிய அளவில் வந்து சங்கமிக்க ஆரம்பித்தது.*

*குறிப்பாக ஏட்டின் குறிப்பிட்ட ஒரு வரியில் நிலைத்த அவர் விழி, நகர மறுத்தது.*

*'ஆகாசப் பிரகாசன் இவன், அரை பாக கிழத்தி ஒரு ரஸவாதச் சிறுக்கி; மண்ணைப் பொன்னாக்கும் அபூர்வமிடுக்கி!'*

# 7

*கேளப்பா...*

*மண்ணகத்தே பொன் அகப்பட*

*விணணகத்து துணை வேண்டும்*

*விழுமலையோடு விழும் இடி நிலம்*

*கழித்திறங்கிடத் தோண்டும்*

*கெழுமிய மணல் வெளியினில்*

*கொழு பயரி என சொர்ணகந்தி பூக்கும்!*

*கந்தி ஒரு மூலரசம்*

*அதை முதலில் கொள்ளவேண்டும்.*

*சொர்ணஜாலத் திரட்டுக் குறிப்பு*

*மண்ணைப் பொன்னாக்கும் அபூர்வ மிடுக்கி!' ஏட்டின் பாடல் கருத்தில் சிலிர்த்து நிமிர்கிறார் கிருஷ்ணமாச்சாரியார்.*

*ப்ரகாஷின் திருமண காண்ட ஏடு அவரை ஒரு பிடி பிடிக்கிறது. ஏடுடன் அறையைவிட்டு வெளியே வருபவர் முகத்தில் தெரியும் உணர்ச்சிக் கலவையைப் பார்த்து சுகுமார் கேட்கிறான்.*

*"குரு... என்ன இவனுக்கும் கிடைக்கலையா?"*

*"இல்ல சுகுமார்... கிடைச்சிருக்கு செய்திதான் பலமான ஆச்சரியத்த தருது."*

*பாண்டுரஙகனும் இப்பொழுது முழுவிவரம் தெரிந்தவராக, கிருஷ்ணமாச்சாரியார் சொல்வதில் நிலை கொள்ள ஆரம்பிபக்கிறார்.*

*"என்ன ஆச்சரியம குரு.மீனா நீங்க கணிச்சமாதிரியே சக்தி அம்சம்தானே? இடி விழுந்த இடத்துல வெளிவரவேண்டிய தெய்வம் இப்ப மீனாவா உயிரோடயே நடமாட ஆரம்பிச்சுருக்கு அப்படித்தானே?"*

*சுகுமமார் ஆலாய் பறப்பது ப்ரகாஷிற்கே ஆச்சரியமாக இருக்கிறது.*

*"பொறு சுகுமார்... முதல்ல முழு ஏட்டையும் படிக்கிறேன்.பிறகு பேசலாம்."*

*கிருஷ்ணமாச்சாரியார் தனியாக ஒதுங்கி உட்கார்ந்தார்.கதவடைக்கப்படுகிறது.ஒரு சிறுவன் ஊதுபத்தி ஏற்றி, அவர் அமர்ந்த இடத்திற்கு அருகில் உள்ள ஆஞ்சநேயர் படத்தின் அருகே செருகுகிறான்.*

*தாழம்பூ கமகமப்பு. அங்கே பாண்டுரங்கனை வெளியே போகச் சொல்ல ப்ரகாஷிற்கோ, சுகுமாருக்கோ தோன்றவில்லை.*

*ஆனால் கிருஷ்ணமாச்சாரியார் வெளியே போகச் சொல்கிறார்.பாண்டுரங்கன் தனது இங்கிதத் குறைவை நொந்துகொண்டு*

வெளியேறுகிறார்.

"உம்ம்ம்... ஆண்டு பலவான போதிலும் மாண்டிடாத முனி சுகரை வேண்டிக் காண்பேனே ஒரு காலக் கணக்கினைவோணம் பூண்ட ஒரு வல்லி புரி விரதபலத்தினாலும் காணும் பாண்டித் தலத்தினில் ஆண்டியப்பன் மகனாய் மீனராசி கொண்டிருங்கு நயனம் திறந்தமகன் பேரு, பொங்கு பிரகாசமென்றே கூறு"

கிருஷ்ணமாச்சாரியாரின் பாடல் வரிகளில் தெரியவந்த நிஜங்கள் ப்ரகாஷை ஈர்த்து வளைக்கத் தொடங்குகின்றன.பாடலுக்கு விளக்கம் தருகிறார் கிருஷ்ணமாச்சாரியார்.

"திருவோண விரதம் இருந்த பெண் பேர்ல வல்லி இருக்கணும்.கோமளவல்லி, அனந்தவல்லின்னு..."

"யெஸ்... அம்மா பேர் கோமளவல்லி."

"நல்லது.அப்பா பேர் ஆண்டியப்பன்னு வந்திருக்கு.அதுலேயும் பேர் இருக்கலாம்.இல்லேன்னா ஆண்டியான முருகனோட அப்பாவான சிவன் பேராவும் இருக்கலாம்."

"கரெக்ட்... அப்பா பேர் பரமேஸ்வரன்."

"மீனா ராசிதானே?உத்திரட்டாதி நட்சத்திரமாகவும் இருக்கலாம்."

"ஆமாம் மிஸ்டர் சாரி. யூ ஆர் எக்ஸாட்லி கரெக்ட்."

"நானில்ல மிஸ்டர் ப்ரகாஷ்.""ரியலி ஒண்டர்ஃபுல்.என்னால நம்பவே முடியல..."

"ஒரு திவலைதான் இது... நம்பமுடியாத விஷயங்கள் இந்த இந்தியாவுல வானளவு இருக்கு ப்ரகாஷ்... இருங்க மற்றதையும் பார்க்கலாம்."

கிருஷ்ணமாச்சாரியார் தொடருகிறார்.மற்ற விஷயங்கள் வரிசையாக அவிழ ஆரம்பிக்கின்றன.மணநாளைத் தொட்டு வந்து நின்றன வரிகள்.

"ஆகாசப் பிரகாசன் இவன் அரை பாகக் கிழத்தி

ஒரு ரசவாதச் சிறுக்கி... மண்ணைப் பொன்னாக்கும்

அபூர்வ மிடுக்கி பெயரதுவும் கொண்ட திரு ஆலவாய் அரசி!

பேராசைப் பெருமாந்தர் நடுவில் ஓராசையுமில்லாத

பாராளும் ஆதிசக்திப் பெருக்கி!"

கிருஷ்ணமாச்சாரியார் வாசிப்பை நிறுத்தி ப்ரகாஷையும், சுகுமாரையும் புருவம் சுருக்கிப் பார்க்கிறார்.அவர்கள் புரிந்தும் புரியாத பாவனைகளோடு பதிலுக்கு அவரைப் பார்க்கின்றனர்.

"என்னன்னு புரியதா?"

"சரியாப் புரியல..."

"மண்ணைப் பொன்னாக்கும் ரசவாதம் தெரிஞ்சவங்கன்னு அவர் சொல்றார்.கூடவே ஆசையே இல்லாத பெண்ணுன்னும் சொல்றார்... ஆவலாய் அரசி பேர்னும் சொல்றார். ஆவலாய் அரசி எப்பவுமே மீனாட்சி தானே?"

ப்ரகாஷ் அரை உதடு சுழித்து சிரிக்கிறான்.

"இந்தச் சிரிப்புக்கு அர்த்தம்...?"

"மண்ணு, பொண்ணு, ரசவாதம்னு என்னென்னவோ சொல்றீங்களே... அதான் அடுத்து மீனாவுக்கு ஆசையே கிடையாதுன்னு வேற சொன்னீங்களா? அதான் சிரிப்பு வந்துடிச்சு.அவளுக்கு என் மேல ஆசைகல்யாணத்துக்கு பிறகு ஸ்விஸ் போகணும்னு ஆசை;கராத்தே கத்துக்கணும்னு ஆசை; மியூஸிக் கிளாஸ் நடத்தணும்னு ஆசை; அடேயப்பா எவ்வளவு ஆசைகள்...?

"நீ இரு ப்ரகாஷ்... குரு நீங்க தொடர்ந்து படிங்க."சுகுமார் பரபரத்தான்.

ஆதிசக்தி இவளோடு பாலகனாம் பிரகாசன்

இருபானைந்திலே இனிதே மணம் காண

காணும் முன்னமாய் கடிதாய் பயணமும்

நெடிதாய் கட்படாடும் நிறைவாய் உண்டு

திருவாய் திறக்காமல் ஒரு குருவால் உபதேசம்

................ ......

........................

சாரியின் பாடல்வரி உபதேசத்தில் தேங்குகிறது. அதற்கு மேல் அந்த ஏட்டில் எழுத்துகளும் இல்லை! சின்ன திடுக் உணர்வுடன் ஏட்டை மடிக்கிறார்

கிருஷ்ணமாச்சாரி.

"இதுக்கு மேல செய்தி இல்லை" என்கிறார்.

"என்ன சொல்றீங்க குரு."

"இருபத்தைந்துலதான் கல்யாணம் அதுக்கு முன்ன நிறைய பயணம் கடமைகள் இருக்குன்னு சொல்றார்.யாரோ ஒரு குருவோட உபதேசமும் இருக்காம். அதுக்கு மேல என்னன்னு தெரியல."

"மொத்தத்துல..."

"மொத்தத்துல மீனா ஒரு அபூர்வப் பெண். சுருக்கமா புரியறமாதிரி சொல்லுணும்னா தங்கப்பெண்."

"ஆமா ரசவாதம் அது, இதுன்னீங்களே..."

"ரசவாதம் மட்டும்தான்சொன்னேன்.அது, இதுன்னு எதையும் சொல்லலையே"

"ஒரு உலோகத்தை அல்லது பொருளை... ஏன் மண்ணையேன்னு கூட வெச்சுக்குங்க;அதைப் பொன்னாக்கறதுதான் ரசவாதம்."

"அது சாத்யமா?"

"சாத்யமில்லமலா அவர் வாக்கு கொடுத்துருக்கார்...?"

"அது எப்படி...? அது சாத்யம்னா விஞ்ஞானிகள் இவ்வளவு நேரம் கண்டுபிடிச்சிருக்க மாட்டாங்களா,"

"அது எனக்குத் தெரியாது.ஆனா இது மெய்ஞானிகள் சம்பந்தப்பட்ட விஷயம் ப்ரகாஷ்."

"இது க்ளோனிங் காலம் மிஸ்டர் சாரி.ஒருத்தரைப் போலவே ஆயிரம் பேரை உருவாக்கற காலம்.அப்படி உருவாக்கற அவங்களவிட இந்த மெய்ஞானிகள் என்ன பெரிய ஒசத்தி?"

சாரி சிரிக்கிறார்.வெற்றிலை காவிப்பல் தெரிய கலக்கலாய் ஒரு சிரிப்பு.அது ப்ரகாஷ் கேள்வியை எடுத்தெறிகிறது.

"என்ன நான் தப்பா கேட்டுட்டேன்...?

"இல்ல க்ளோனிங் அது, இதுன்னீங்களேக்ளோனிங் மூலமா ஒரே மாதிரி உருவத்தை உருவாக்கலாம்னு சொன்னீங்களே? அதை செய்யற அந்த

விஞ்ஞானியோ, இல்ல டாக்டரோ உயிரில்லாத ஒரு விஷயத்துக்கு உயிர் கொடுக்க முடிஞ்சவங்களா?"

"என்ன கேக்கறீங்க நீங்க?"

"இல்ல செத்தவனைப் பிழைக்க வைப்பாங்களான்னு கேட்டேன்."

"இன்னிக்கு வரை இல்லை. ஆனா நாளைக்கு அது நடக்கலாம்."

"நாளைக்குத்தானே அது நடக்கலாம். ஆனா இங்க அது நேத்தே நடந்துருக்கு தெரியுமா?"

"ஆதாரம்..."

"ஆதாரம் காட்டி நிரூபிச்சு இந்த உலகத்தோட வியப்பையும், பார்வையையும் சந்திக்க வேண்டிய அவசியம் அவங்களுக்கு இல்ல... அதனால இதை வாய்ப்பு நேரும்போது தான் உணரலாம்.மற்றபடி நிரூபிக்க முடியாது..."

"இது சாமர்த்தியமான பேச்சு... இப்படி எல்லா விஷயங்களையும் சொல்லலாம்."

"இல்ல ப்ரகாஷ்... பராசக்தி வந்து வதம்செய்த மகிஷாசுரன் ஒரு குளோனிங் உதாரணம்தான். தெரிஞ்சுக்கோங்க.அவன் உடம்புல இருநத்து சொட்டின ஒவ்வொரு துளி ரத்தத்துல இருந்தும் அவனைப் போலவே மகிஷாசுரர்கள் வந்தாங்களாம்.

கர்ணன் கூட கிட்டத்தட்ட ஒரு டெஸ்ட் டயூப் பேபி மாதிரிதான்.சஞ்சயன் ஒரு டெலிவிஷன், ரேடியோ... நிறைய உதாரணங்கள் கடந்த காலத்துலயே இருக்கு.

இந்து மதத்துக்ககு விஞ்ஞானம் ஒரு பெரிய விஷயமே இல்லை..."

"அப்படின்னா ரசவாதம் சாத்யம்.... அதை மீனா செய்வான்னு அவர் சொல்றாரா?"

"நிச்சயமா..."

"ஆமா இந்த சுகர் யாரு?"

"வியாசமுனிவரோட பிள்ளை.முக்காலக் கணக்கை சிறுபிழையும் இன்றி போட்டுக் காட்டிய ஒரு ஞானி."

"இவர் எதற்கு என்னைப் பற்றி எழுதிவெச்சிருக்கணும்? இது எப்படி உங்ககிட்ட வந்தது?"

"எல்லா கேள்விகளுக்கும் விடை நிச்சயம் போகக் போகக் கிடைக்கும்."

"இதுவும் ஒரு சாமர்த்தியமான பதில்."

"இப்போதைக்கு அப்படியே நினைக்கலாம் நீங்க...."

விட்டால் பேச்சு வளர்ந்து கொண்டே போய் ஒரு பெரிய வாதப் பிரதிவாதத்துக்குள் நுழையலாம் என்று யூகிக்கும் சுகுமார் நறுக்கென்று கத்தரிக்கிறான்.

"ப்ரகாஷ்... மிச்சத்த பிறகு பேசிக்கலாம்.இப்ப குருஜியை பார்க்க நிறைய பேர் காத்திருக்காங்க பார்..."

ப்ரகாஷை இழுத்துக் கொண்டு வெளியே வருகிறான்.அறைக்கு வெளியில் பாண்டுரங்கன் வருபவர்களைப் பார்த்து கண்கள் பற்றி எரியக் கேட்டுகிறார்.

"என்ன ப்ரகாஷ்... சாரி ஏடு படிச்சாரா. எல்லாம் சரியா இருந்ததா?"

ப்ரகாஷ் பதில் கூறாமல் சிரிக்கிறான்!

குறுக்கும், நெடுக்குமாய் நடந்து கொண்டருக்கிறார் கந்தசாமி.சுற்றிலும் அவர் மக்கள்."அப்பா கவலைப்படாதீங்க அம்மா வந்துடுவாங்க!"

"ஆமாப்பா.... அம்மா, வழியில யாரையாவது பாத்துரப்பாங்க.ருக்கமணியம்மா விடு வத்றாயிருப்புல தானே இருக்கு? ஒருவேளை அங்க போயிருக்கலாம்..."

மகள்களின் பேச்சு அவரை சமாதனப்படுத்தவில்லை.பூரணி இப்படி ஒரே வீம்பாக மகாலிங்க மலை போனது,

அவர் மனதுக்கு பிடிக்கவில்லை.

'இருபத்தி ஏழு பவுனுடன் போனவளை யாராவது வழிமறித்து ஏதாவது செய்துவிட்டார்களா?"

மகள்களிடம் இந்தப் பவுன் சமாச்சாரம் பற்றி எல்லாம் எதுவும்பேசவில்லை.பேசத் தைரியமில்லை.

'நம்பி, உண்டியலில் போடச் சொன்னதையா வீட்டுக்கு எடுத்துக் கொண்டு

வந்துவிட்டீர்கள்?’ என்று அவர்கள் கேட்கக்கூட வேண்டாம், நினைத்தாலே போதும்.... அது அப்பா ஸ்தானத்தையே ஒரு ஆட்டு ஆட்டிப் பார்த்துவிடும்.

நினைப்பும், கொதிப்புமாக எவ்வளவு நேரம்தான் நடப்பது....? ஒரு நடை மலை வரை போய்விட்டு வருவது தான் சரி... துண்டை உதறிப் போட்டுக் கொண்டு கிளம்புகிறார்.

"எங்கப்பா...?"

"போய் பாத்துட்டு வந்துடறேம்மா.... நீங்க ஜாக்கிரதையா வீட்ட பார்த்துக்கிட்டிருங்க..."

தென்னந் தோப்புக்குள் நடக்கும்போது சற்று பயமாய் இருந்தது. ஆங்காங்கே சிலர் மட்டை வெட்டிக் கொண்டு ... தேங்கமாய் இறக்கிக் கொண்டிருக்கின்றனர்.

அவர்களில் சிலர் அந்த தங்கசாமி போல கந்தசாமி கண்களுக்கு தெரிகின்றனர்.

இன்ன இடம் என்றில்லாமல் திடீரென்று தோன்றி நலம் விசாரிப்பதும், மர்மமாய் சிரிப்பதும்தான் அந்த மனிதருக்கு வாடிக்கையாயிற்றே...?குற்ற மனது குறுகுறுத்துக்கொஒ;ஒ தாணிப்பாறையை எட்டுகிறார்.அங்கிருந்து மலைக்கூட்டம், அசுரன் ஒருவன் பிடித்துப் பிடித்து வைத்த கல் உருண்டையாய் தெரிகிறது.

ஏறி நடக்க வேண்டும்.போகக் போகக் காட்டாறு, கடினமான பள்ளம், மேடு என்று பல வரும்.பார்வைக்கு ஒரு மனிதன் கூடத் தென்படாதபடி வெறிச்சோடிக் கிடக்கிறது.

"பூரணி.... இந்த மலைக்காட்டில் எங்கிருக்கிறாய் நீ? உனக்கு ஆனாலும் இந்த ஆவேசமும், பிடிவாதமும் கூடாது."

பாறைகளி;ல் கால் பதிக்கிறார்.ஒரு பக்கம் கூச்சமாகக் கூட இருக்கிறது.

நூற்றி எட்டு மலைக்கு நேர்மைத் திறமுடன் வந்துவிட்டு இப்பொழுது திருட்டு உணர்ச்சியுடன் கால்வைக்க கூசாதா என்ன...?

மகாலிங்கம் முன் மார் நிமிர்த்தி வரம் கேட்க வக்கும், வகையும் போய்விட்ட மாதிரி இருக்கிறது.

இதுதானோ தன்னெஞ்சறிவது?

மெல்லத்தான் நடக்க முடிகிறது. காற்று பலமாக வீசி, ‘எங்கே வருகிறாய்? என்று கேட்கிற மாதிரி கூட தோன்றுகிறது.

‘பூரணி... பூரணி...’ மனம் பினாத்தியபடி சுற்றிச் சுற்றிப் பார்க்கிறது. பிரண்டையும், ஆடு தின்னாப்பாளையும், கோரையும், கொடிமாணிக்கமும் பாறை அடியில் பொசிந்து கிடக்க பாறைமேல் ஒரு கரிச்சான் குருவி.

‘விசுக்! முசுக்’ என்று மூக்கு உரசி விட்டு விர்ரென்று வானம் ஏறிப் பறக்கிறது அது.

எங்கோ நிறைய கரிச்சான்கள் கூடிக் கத்திக் கொண்டிருக்கின்றன.

எங்கே...?

காதில் சப்தம் பாய நடுவழித் தடமாய் கிடக்கும் மண்பாதையில் நெடுந்தொலைவு நடக்கிறார் கந்தசாமி.

"நல்லவேளை எதிரில் வருகிறாள் ஒரு விறகுக்காரி.

"ஆத்தி... எங்க இருந்து வரே...?’

"மேலே இருந்துதான்..."

"வழியில எங்கிட்டாச்சும் என் சம்சாரத்தப் பாத்தியா? சிவப்பு புடவைல ஒத்த நாடியா, ஒசரமா இருப்பா. கொஞ்சம் கருப்பு..."

"ஆமா... அவுகள நேத்தே மேல கோயிலாண்ட பாத்தேன..."

"அப்ப இப்ப?"

"அந்தம்மா பேசமுடியாம அவதியோட கோயிலாண்டையே இருந்தாங்க.ஒரே அழுகை! பேசமுடியலைன்னு ஜாடைலையே சொன்னாங்க..."

"பேசமுடியலையா...? நல்லா பேசுவாளேம்மா!"

"அப்படின்னா தங்கசாமி தான் எதாச்சும் செஞ்சிருக்கும்!"

நெஞ்சை அடைத்து கந்தசாமிக்கு.

"தங்கசாமியா... யார் அது?"

"அது ஒரு சாமியார். வாய்க்கட்டு, வாதக்கட்டு, பார்வைக்கட்டு, பாடைக்கட்டுன்னு அதுக்குதான் பலகட்டு போடத் தெரியும்..."

"ஐயோ என்னவெல்லாமோ சொல்றியே...?இப்ப என் பூரணி எங்க?"

"மேல கோயில்கிட்டதான் இருக்கணும்.போய்ப் பாருங்க..."

விறகுக்காரி கீழிறங்க, கந்தசாமி திரும்ப படபடப்புடன் மேலேற, கரிச்சான் குருவிகள் சப்தம் கூடுதலாக கேட்டது.

"ஐயா... கரிச்சான்குருவி கத்தது... வெரசா போங்க இடியும் மழையும் பிடிச்சுகிட்டு வரப் போவுது!"

அவள் சொல்வது சரிதான்... தென்மேற்கு லையில் ஒரு கரி உருண்டையாக, திமு திமு என்று வந்து கொண்டிருந்தது கார்மேகம்!

# 8

"கந்தியுடன் அந்திமழை நீரைச் சேர்த்து

மந்தி வளர் சோலைபடர் தாதுவளை கோர்த்து

கந்தகமண் சல்லியுடன் கந்தவேளின்

கார்திகைச் சுடர் கனலும் சேர அந்தகனும் அறியும் வண்ணம்

தத்தகதக, தத்தகதகவென தங்கம் தோன்றும்

தோற்றும் கரம் தேற்றம் கண்ட மானிடப் பிறபெ;பெனில்..."

சொர்ணஜாலத் திரட்டுக் குறிப்பு

திரண்டுவரும் மேகக் கூட்டம் கந்தசாமியை கலக்கியடிக்கிறது.மழை கொட்டத் தொடங்கிவிட்டால் மலையில் பயணிப்பது மிகக் கடினம் கால்வைக்கும் இடமெல்லாம் சரிந்து, ஆளைக் குப்புறத் தள்ளும்.வழுக்கிச் சரிவில் விழுந்தாலோ, செந்தட்டி இலைபட்டாலோ தோலே பிய்ந்து போகும்.சமயங்களில் பாறை இடுக்கில் இருந்து நீர்ப்பெருக்கு தாளாது மண்ணுளிப்பாம்புகள் வெளிவந்து, கிடைப்பதை சுற்றிக் கொண்டு வழவழப்பாக மிரட்டும்.

ஐயோ...!

பதைத்துப் போய் நடையை கூட்டிப் போடுகிறார் கந்தசாமி.

உதட்டில், ‘மகாலிங்கம்’ என்கிற ஹீன முனங்கல். அவரது முனங்கலைப் புறந்தள்ளியபடி மண் இறங்குகிறது.மழைத்துளிகள்.பருமனான துளிகள்.

பிடறியில் பட்டு கோலி குண்டு போலவும் உருளுகிறது.உற்றுப் பார்க்கையில்தான் தெரிகிறது, அவ்வளவும் ஆலங்கட்டிகள்.

மேகக் கூட்டத்தின் திட சொரூபம் நொறுங்கிச் சிதறின மாதிரி.அருகிலேயே ஐந்தாறு கிளைச்சரத்தோடு வாகை மரம்.ஓடிச் சென்று அடியில் ஒளிகிறார் கந்தசாமி.

தோள் துண்டெடுத்து தலை மேல் பரத்திவிட்டுக் கொண்டு, இரு கரத்தாலும் முகம்வழித்துப் போட்ட போதுதான் அவருக்கும் அந்தக் காட்சி தெரிந்தது.

எதிரில் திண்டு திண்டாக மலைப்பாறைகள் ஒன்றன் உச்சியில் விழும் மழையின் ஆலம் கட்டிகளை ஏந்திப் பிடித்த வண்ணம் ஒரு மனிதர் நின்றுகொண்டிருக்கிறார்.

யார் அவர்?

தொலைதூரப் பார்வைக்கு துல்லியம் போதவில்லை.

ஆயினும் யாரோ ஒரு சாமியாராகத்தான் இருக்கவேண்டும்.கந்தசாமி பார்த்துக் கொண்டிருக்க, மழை மிக வலுக்க, வானில் மின்னல் பூச்சி காலெடுத்து ஓட, இடி, சப்தம் நடுக்கியது.கண்களை மூடிக் காதைப்பொத்திக் கொண்டுவிட்டு திரும்பத் திறந்தபோது, அந்த மனிதர் அந்தப் பாறை உச்சியில் இல்லை!

"மகாலிங்கம்... தப்பு செஞ்சுட்டேன்; தவிக்க விடாம காப்பாத்துயா... பூரணி..." உதடு நடுங்கப் புலம்புகிறார்.

மழை மெல்ல மட்டுப்பட ஆரம்பிக்கிறது.வாகை மரத்தைவிட்டு வெளியே வருகிறார்.யானை ஒன்று, பிளிறும் சப்தம் கேட்கிறது.பயம் நெஞ்சைக் கட்டுகிறது.

மகாலிங்கம் சன்னதியோ ஏகதூரத்தில் இருக்கிறது.ஒரு மூச்சில் ஓடிய தூரம்.இன்று நூறு அடிக்கு ஒருமுறை மிரட்டுகிறது.

வருவது வரட்டும்... நெஞ்சில் திடம் திடுமென்று தலைகாட்ட, நடக்க ஆரம்பிக்கிறார். சொத, சொதவென சகதி.பார்த்துப் பார்த்து நடக்க வேண்டியிருக்கிறது.இருந்தும், ஓரிடத்தில் கால் பதித்த போது பதிந்த இடம் பெயர்ந்தது, கந்தசாமியை பக்கவாட்டுப் பள்ளத்தில் தள்ளியது.

உடம்பு உருண்டு அந்த மலைச்சரிவின் புதர்பரப்பில் போய்ச் சேருகிறது.வெளி உலகமே தெரியாதபடி மலைச்செடி கொடிகளின்

மூழ்கலில் கந்தசாமி... ஒருகூஷணம் துடித்துப் போகிறார்.

''மகாலிங்கம்...'' குரல் மட்டும் பீறிட்டு மலைவெளிகளில் எகிறுகிறது. கூடவே மயக்கமும்!

மயக்கம் நீங்கி எழுந்திருக்க முனைந்தபோதுதான் அருகிலேயே தன்னைப் போலவே யாரோ விழுந்து கிடப்பது தெரிந்தது.

,என்ன அது? ஓ! முகமா... யாருடையது?...ஏய்..யார்...யார் நீ?||

கந்தசாமி பரபரப்பாக கொடிக்கரங்களைப் பிய்த்து எறிந்து கொண்டே நிமிரவும், ஒளி பட்டு அவர் பதற்றத்துக்கு காரணமான உருவத்தைக் காட்டுகிறது.

உயிர் போய்விட்ட சடலக்கூடு அது!

உடம்பில் கோட்டும், சூட்டும் நைந்து தெரிய, அதன் காதிலிருந்து ... எறும்பு ஊர்வலத்தின் கலைவு!

ஓ!

சுரீர் என்கிற உணர்வுடன் தள்ளிப் போய் விழுகிறார் கந்தசாமி.ஆகண்டுபோன விழியிரண்டும் அந்தச் சடல மனிதனையே வெறிக்க, உடம்பில் வீணை நரம்பின் அதிர்வு.

,யார் இந்த மனிதன்...? பார்க்கப் பணக்கார தோரணை.இப்படியா செத்து நாட்கணக்காக விரைத்துக் கிடப்பான்...?

கேள்விகள் உள்ளோடுகின்றன.யாரும் பார்க்கும்முன் எழுந்து ஓடி விடச் சொல்கிறது உள்ளுணர்வு. நிமிந்தால் மலைச்சரிவு... ஏற வழி தெரியவில்லை.அங்கேயே இருக்கவும் உதறலெக்கிறது.மழைவேறு திரும்ப நீர்ச்சரத்தைத் தொடுத்து சடசடக்க ஆரம்பிக்கிறது.

கத்தலாமா?

யாரையாவது உதவிக்கு அழைக்கலாமா?

கேள்வி திரும்பிய வேகத்தில் உள்ளடங்கிப் போகிறது.பொல்லாத உலகம் இது.,இறந்து கிடக்கும் நபரைக் கொன்றதே நான்தான்| என்று கதை கட்டிவிட்டாலும் விட்டுவிடும்... வேண்டாம் வேண்டாம்.

பார்வை, திரும்ப அந்தச் சடல மினதன் மேல் செல்கிறது. விழித்துக் கொண்டே இறந்து போயிருக்கிறான் உறைந்து போன மணி விழி,

கந்தசாமியை நேருக்கு நேர் பார்ப்பது போல இருக்கிறது.

கோட் பாக்கெட்டில் இருந்து ஏதோ துருத்தலாகத் தெரிகிறது என்ன அது?

கந்தசாமி நடுங்கியபடியே அந்தச் சவத்தை நெருங்க முயலுகிறார்.காலை வளைத்து இழுக்கிறது முற்றிய ஆடுதின்னாப்பாளை! கூடவே யாரோ வரும் அரவம்.அண்ணாந்த போது காதில் குரல் முட்டியது.

"பாத்து வா, தாயி... பாத்து வா... தாணிப்பாறைகிட்ட விட்டுடறேன்.அப்பாலே நீயே பாத்துப் போய்க்க

யார்யாரிடம் கூறுகின்றனர்?... பதற்றத்தோடு கீழே அமர்ந்து கொண்டு கொடிகளை இழுத்து மேலே போட்டுக் கொள்கிறார்.அப்படியே பிணத்தின் அருகில் போய் அதையும் மறைத்துக் கொண்டு படுத்துக் கொள்ள, ஐம்பது அறுபது அடி சரிவின் உச்சியில் ஒர பளிங்கனும், அவன் பின்னே பூரணியும் நடந்து கொண்டிருந்தனர்.

,பூரணி நீயா?' பரவசமாகி ,பூரணி!' என்று கூப்பிடப் பார்த்து, முடியாதபடிக்கு அசைந்த அந்தப் பிணத்தின் கரங்கள் கச்சிதமாக அவரது வாய் மேல் விழுந்து தடுக்கின்றன!

பூரணியும் தோன்றிய வேகத்தில் மறைந்துவிட்டாள்.பிணத்தின் கரத்தை வேகமாகத் தள்ளிவிட்டு எழுந்து நிற்க முயல, பிணம் புரள்கிறது.அந்தக் கோட்டுத் துருத்தலில் இருந்து அந்த காகித மடிப்பு வெளிவந்து விழுகிறது.

கந்தசாமி கைகளை நீட்டி, இழுத்து, தயங்கிக் தயங்கி அந்தக் காகித மடிப்பை எடுக்கிறார். மழை ஈரம், சகதி என்று நமுத்த அந்தக் காகிதத்தின் மேல், மழைச்சொட்டுகளின் தாக்கம்.

மறைத்துக் கொண்டு விரிக்கிறார்.

"அம்மா...அம்மா..." பிள்ளைகள் பாய்ந்து வருகிகறார்கள். பூரணி போருக்குப் போய்வந்த மாதிரி களைத்த, கலைந்த கோலமாகத்தான் உள் நுழைகிறாள்.

"அப்பா வரலியாம்மா? உன்னை தேடிக்கிட்டு காலையிலேயே புறப்பட்டு போனாரே...?"

"ஏம்மா ஒரு மாதிரி இருக்கே?... பேசு.எங்க போய்ட்டே நீ?"

மகள்களின் கேள்வி அவளை அழுகையில் அமுக்கிறது.சேலைத்தலைப்பால் வாய்பொத்தி அழுகிறாள்.

"என்னம்மா ஆச்சு... ஏன் அழறே?" மூத்தவள் முதல் தடவையாக ஏதோ விபரீதம் என்று பூரணியை நெருங்கி மோவாயைப் பிடிக்க, அடுத்தவள் அவள் தொடை தொட்டு மண்டியிட்டு அமர, பூரணியின் முகம் அவர்களைப் பார்க்கிறது.

கையால் சமிக்ஞை பாஷை பேச முயல்கிறது.

"என்ன சொல்றே...? வாய்த் திறந்து பேசேன்."

"பேசும்மா என்ன ஆச்சு?"

"என்னம்மா நடந்தது? பயமா இருக்கும்மா, நீ நடந்துக்கறதப் பார்த்தா."

பூரணி, பேச முடியவில்லை என்பதை உணர்த்த எவ்வளவோ முயல்கிறாள்.

"பேச முடியலையா?"

அவள் தலை ஆமோதிக்கிறது.

"என்னம்மா குண்டத் தூக்கி போட்றே... நல்லாதானே பேசிகிட்டிருந்தே...?

பூரணி எழுந்து நேரே அந்த வீட்டின் சிறிய பூஜை மாட சன்னதியை நெருங்கி, மாடத்தில் உள்ள மகாலிங்கம் உருவப் படத்தைப் பார்த்துப் பிழியப் பிழிய அழ ஆரம்பிக்கிறாள்.

வாசல் பக்கமாக யாரோ வரும் சப்தம் கேட்டு அனைவரும் ஒட்டு மொத்தமாக பார்க்க, அழுக்கு மனிதராக உள்நுழைகிறார் கந்தசாமி.

நுழையும்போதே பூரணியை நோக்கிப் பாய்ச்சல்.

"பூரணி...! என்ன புள்ள இப்படி பண்ணிட்டே? இப்படியா மனுஷனை அல்லாட விடுவே? உன்னைத் தேடி அந்த மலைக்காட்டுக்குப் போய் நான் பட்ட பாடு ஒரு நாய் படாது!

ஆமா உனக்கு ஏதோ பேச்சு போச்சுது; தங்கசாமியோட வேலை; அப்படி, இப்படின்னு ஒரு மலைப்பொட்டாச்சி சொன்னாளே... நிசமா?"

பூரணி கந்தசாமியை நெருங்கி வந்து, ஆமோதிக்கும் தோரணையில் அழுகிறாள்.

"எப்படி புள்ள பேச்சு போச்சு...? என்னால நம்ப முடியலை, புள்ள..."

கந்தசாமி ,எப்படி'பில் உள்ள ,ப்'பில் ஒரு அசாத்ய அழுத்தம் வைக்கிறார்.

பூரணி, ஜாடையில் பதில் சொல்கிறாள்; ,தயவு செய்து எதையும் கேக்காதீங்க!"

# 9

திசை நான்கில் மிசை வடக்கின்

இசைவான திசைத் தேவன் ஒருவன் அவன்

திருவாசகத் திருமாலின் மணம் கூர்ந்த குபேரன்.

ஒரு பார்வை அவன் பார்க்க

ஒன்பதிலே குரு நிற்க கற்பத்

தரு கூட கொல்லையிலே முளைக்கும் உருக்கது

தங்கமாக வடக்கின் விசை வேண்டுமே...

ரசவாதி வடக்காகி நேர் நிற்க திறம் கூடுமே.

சொர்ணஜாலத் திரட்டுக் குறிப்பு

சு சுகியை அமைதிப்படுத்தி விட்டு கீழ் இறங்குகிறான் ப்ரகாஷ்.எதிரில் மீனாவின் வீடு. புல்வெளியில், ஊஞ்சலில் மீனா. நிமிருகிறாள்.

"ஹாய்".

"வாங்க."

"என்ன மீன் மரியாதையெல்லாம் பலமா இருக்கு?"

"ஏய்... உன்னைத்தான் ... மூட் அவுட்டா?"

"மூட் அவுட் மட்டுமா... டோட்டலி ஐ ஆம் அவுட்!"

"என்ன சொல்றே மீனா...?"

"ஆமா... நீ ஏதாவது ஜோசியம், கீசியம் பார்த்தியா?"

"ஜோசியமா?"

"யெஸ். நாடி ஜோசியம், குச்சி ஜோசியம்னுதான் ஒரு கூட்டமே இருக்கே. இவங்கள்ள யாரையாவது போய் பார்த்தியா?"

"எதுக்கு கேக்கற மீனா?"

"பார்த்தியா... அதை மொதல்ல சொல்லு ப்ரகாஷ்ஃ"

"ஆமா... பார்த்தேன்." மீனா முகம் அடுத்த நொடி ரத்தம் பூசிக் குளிக்கிறது.வார்த்தைகள் வெடிக்கின்றன.

"மண்ணாங்கட்டி... அங்க என்னைப் பத்தி என்ன சொன்னங்க...?"

"சொல்றேன்... எதுக்கு கோபப்படுற மீனா?"

"கோபப்படாம... எனக்கு ஜோசியம் பார்க்க நீ யார்?" ஒரு வினாடி நடுப்பொட்டில் அடிபட்ட மாதிரி தடுமாற்றம் கொள்கிறான் ப்ரகாஷ்.தடுமாற்றம் கலையாமல் சொல்கிறான்.

"ஸாரி... வெரி ஸாரி..."

"என்ன ஸாரி...? ஜோசியமாம் ஜோசியம்.எல்லாமே அண்டப் புளுகு, ஆகாசப் புளுகு.இந்த இந்தியாவுலதான் இந்த மாதிரி கூத்தெல்லாம்.நீ உனக்குப் பார்த்துக்கறதையே வெறுக்கறவ நான்.இதுல எனக்குப் பார்த்தா என்ன அர்த்தம்?நாமெல்லாம் படிச்ச பகுத்தறிவுள்ளவங்க ப்ரகாஷ்."

காதோரம் வியர்வை பாத்திக் கட்டிக் கொண்டு ஓட, நுனி மூக்கில் தக்காளிச் சிவப்பு தெரிய மீனா படபடக்க பேசுவது, ப்ரகாஷை வதைக்கிறது. அவனும் கோபம் கொள்கிறான்.

"அதான் ஸாரி சொல்லிட்டேன்ல..." பெரிதாகக் கத்தினான்.

"ஸாரி சொல்லிட்டா சரியாப்போச்சா...?" ஏற்கனவே என்னை ஆதிபராசக்தி ஆக்கிட்டாங்க.இப்போ நான் இரும்பைத் தொட்டா தங்கமாகுமாம்! புதுசா ஒரு கதை உங்க ஜோசியத்தால கிளம்பியிருக்கு.என்ன ப்ரகாஷ் இதெல்லாம்?கதை விடறதுக்கும் ஒரு அளவு இல்லையா...?"

"ஆமா நான் ஜோசியம் பார்த்து உனக்கு எப்படித் தெரியும்?"

... பதிலை நான் சொல்கிறேன் என்கிற மாதிரி சிணுங்குகிறது செல்லுலர்.ஊஞ்சல் திண்டில் கிடப்பதை கைகளில் எடுத்து காதைக் கொடுக்கிறாள்.

"ஹலோ... மிஸ். மீனா இருக்காங்களா...?"

"யெஸ்."

"நமஸ்காரம் மேடம்.என் பேர் சந்தானம். வரப் போற பார்லிமென்ட் எலக்ஷன்ல நிக்கப் போறேன்.ஜெயிக்க உங்க அருளாசி வேணும். உங்க ஸ்வெஷல் பவர் பத்தி பேப்பர்ல பார்த்தேன்..." மீனா முகம் சிவக்கிறது.செல்லுலரை அப்படியே ப்ரகாஷ் வசம் தருகிறாள்.அவன் காதில் சொச்சம் பாய்கிறது.

"ஆமாம் மேடம்... நீங்க தொட்டா இரும்பே தங்கமாகும்போது, எனக்கு வெற்றி கிடைக்காதா என்ன...?"

செல்லுலரை கட் செய்தபடி மீனவை தயக்கத்துடன் பார்க்கிறான்.திரும்பவும் செல்லுலரிம் ஜூரம் வந்தது மாதிரி சிணு சிணு.

"காத்தால இருந்து பதில் சொல்லி மாள முடியலை ப்ரகாஷ். இரும்பாம், தங்கமாம். முதல்ல சுத்த தங்கத்துக்கு இந்த ஊர்ல வழியிருக்கா? நான்சென்ஸ்."

"ஸாரி மீனா... எல்லாம் இந்த சுகுமாரால வந்த வினை.நான் அவன் பேச்சைக் கேட்டிருக்கக்கூடாது.எப்படியோ நாடி பார்த்த விஷயமும் கசிஞ்சு பத்திரிகை காது வரை போயிக்கு. ஸாரி, வெரி ஸாரி."

ப்ரகாஷ் ,ஸாரி'க்கும்போது, குலுங்கியபடி நுழைகிறது கருணாகரனின் ஜூப்.இறங்கி வருகிறார் கருணாகரன். நடையில் எப்பொழுதும் இல்லாத வேகம்.

"ஹலோ அங்கிள்"

"ஹலோ ப்ரகாஷ். எப்ப வந்தீங்க?"

"ஒரு அஞ்சு நிமிஷமாச்சு அங்கிள்."

"உக்காருங்க... அம்மா மீனா ஒரு முக்கியமான விஷயம்."

"என்னப்பா?"

"யார்னு தெரியலை.ஒரு அனாமதேய ஃபோன்கால் வந்தது.,மீனாவுக்கு என் ஆசிகள்.ஆவளை ஜாக்ரதையா பார்த்துங்குங்க கருணாகரன்.அவ உங்களை விட்டுப் பிரியற நேரம் வந்துடுச்சு'ன்னு சொல்லிட்டு அந்தஃபோன் கால் கட் ஆயிடுச்சு."

அடுத்த நொடி ஒரு ,களுக்' சிரிப்பு மீனா உதட்டில்.,

"என்னம்மா சிரிக்கிறே?"

"சிரிக்காம...? அனாமதேய ஃபோன்காலுக்கெல்லாம் இப்படிக் கவலைப்பட ஆரம்பிச்சுட்டீங்களேப்பா..."

"இல்லைம்மா... அப்படி ஒரு குரலை நான் இதுவரை கேட்டதேயில்லை.

"யார் கண்டா? என் திடீர் பக்த கோடிகள் தொல்லை தாங்காம நான் ஓடினாலும் ஓடிடுவேன்னுதான் தோணுது."

... சிரித்துக்கொண்டே சொன்னாலும் அதன் பொருள், கருணாகரனை கவலைப்பட வைக்கிறது.

"நோ" என்கிறார் கருணாகரன் தீர்மானமாக...

நடுவில் மெயின் கேட் சலசலப்பு காதுகளைத் தாக்க., அனைவர் பார்வையும் அங்கு செல்ல. சென்ட்ரி ஒரு பிச்சைக்காரனை விரட்டிக் கொண்டிருக்கிறான்.

அவன் போக மாட்டாமல் சண்டித்தனம் செய்து கொண்டு நிற்கிறான்.

"போய்யா, இது போலீஸ் கமிஷனர் வீடுய்யா... ஐயா பார்த்தா பிடிச்சு உள்ளே போட்ருவாரு."

"போறேங்க... இந்த ஊட்டு அம்மணி கையால பிடி அரிசி போடச் சொல்லுங்க."

"அதெல்லாம் முடியாது.போ! போ!"

"சென்ட்ரி..அங்க என்ன பிரச்சினை..."

"சார் ஒரு பிச்சைக்காரன்..."

"ஐயா கமிஷனரைய்யா! நான் பிச்சைக்காரன் இல்லீங்க.நேர்த்தி கடனுக்கு பிச்சை எடுக்கறவன்.உங்க பெண் கையால பிடி அரிசி போட்டா சந்தோஷமா போயிடுவேங்க.."

"அப்படிச் சொல்லாதீங்க... மகராசி கையால ஒரு பிடி அரிசி."

தர்க்கத்தை கேட்டுக் கொண்டே நிற்கும் மீனா சைகையால் அவனை நிற்கச் சொல்லிவிட்டு, வீட்டுக்குள் நுழைந்து பிடி அரிசியுடன் திரும்புகிறாள்.

அந்தப் பிச்சைக்காரனைப் போன்றவனை நெருங்கி அரிசியையும் அவனது திருவோட்டில் போடுகிறாள்.

அவன் சிரிக்கிறான்.

நடுவில் செல்லுலர் அழைப்பு.

எடுத்து காது கொடுக்கிறார் கருணாகரன்.முன்பு பேசிய அதே குரல்.

"வணக்கம் கமிஷனர்! மகள் கையால் யார் எது கேட்டாலும் கொடுக்காதீங்க.அது பெரிய ஆபத்துல போய்முடியும் ஜாக்ரதை..."

... செல்லுலரில் செய்தி முடிந்த நொடியில் அந்தப் பிச்சைக்காரனும் திரும்பிக் கொண்டிருந்தான்.

கருணாவின் முகத்தில் கலவரத்தின் கூடாரம்!

வத்தராயிருப்பு.

ராஜபாளையத்து பஸ் ஒன்று பிதுங்கி வழியும் கூட்டத்துடன் ஊருக்குள் நுழைந்து நிற்கிறது.நூல் பையுடன் இறங்குகிறான் வடிவேல். ஏளிமையான பேண்ட், சர்ட் முடி வெட்டிக் கொண்டிருப்பதில் சற்று நாகரீக பாவனை.

ஒரு வளர்ந்த கிராமத்துக்கு, அருகாமை நகரத்து நாகரீகத்தை அழைத்து வருகின்றவனைப் போலத் தெரிகிறான்.

"வடிவேலு..." குரல் ஒன்று அவனை அழைக்கிறது. பஸ் நிற்குமிடத்தை ஒட்டி நிறைய டீக்கடைகள். அதில் ஒன்றிலிவருந்து அழைப்பவர் கந்தசாமி.

"யாரு மாமாவா?" பாசக்குரலுடன் நெருங்குகிறான்.

"உனக்காகதான் வடிவேலு காத்திகிட்டிருக்கேன்.எங்கே... ராஜபாளையம் போய்ட்டு வர்றியா?"

"ஆமாம் மாமா.சீஸன் நல்லா இருக்கு. விதை வாங்கணும்.கையில் காசு இல்ல. அதான கழுத்துச் சங்கிலியை ராசபளையத்துல பேங்குல வெச்சு பணம் வாங்கிட்டு வரேன்.ஆமாம், அத்தை எப்படி இருக்காங்க? ஏதாச்சும் பேசறாங்களா?"

"எங்கேப்பா... எப்பப்பாரு அழுதுகிட்டே இருக்கா. அடிக்கடி பயந்த மாதிரி மிரண்டு முழிக்கிறா. ஓண்ணும் புரியல."

"டர்கடர் கிட்ட காட்றதுக்கென்ன?"

"வர மாட்டேங்கறாளே? அக்கம்பக்கமும ,சாமியார் சமாச்சாரம் இது.உங்க அத்தைதான் ஏதாச்சும் தப்பு பண்ணியிரு;ககும்'ங்கறாங்க.எனக்கு ஒண்ணும் புரியலப்பா.."

மருமகன் தோள் மேல் கையிட்டுக் கொண்டு நடந்தபடியே பேசுகிறார் கந்தசாமி.

"ஒரே புதிராால்ல இருக்கு? எந்த மலச்சாமி இப்படி செஞ்சிருக்கும்?"

"நானும் வெளில யார்கிட்டேயும் பெரிசா சொல்லிக்கல, வடிவேலு."

"நீங்க சொல்லுங்க, செல்லாமப் போங்க. நீங்க அந்த சாமிக்காக நடந்த நடைக்கு. இப்படிவரக்கூடாதே மாமா."

"அத விடு வடிவேலு உனக்கு இங்கிலீஸ் படிக்கத் தெரியும்தானே?"

"நல்லா... எம்.ஏ. படிச்சிருக்கேன். என்ன கேள்வி மாமா இது?"

கந்தசாமி சற்று சிக்கு விழுந்த மாதிரி தயங்கி நிற்கிறார்.உரசிச் செல்கிறது ஒரு மேய்ச்சல ஆடு.

"என்ன நின்னுட்டீங்க? எதுக்கு இங்கிலீசு தெரியுமான்னு கேட்டீங்க?"

கந்தசாமி வடிவேலுடன் எதிரில் தெரியும் தென்னந்தோப்பு ஒன்றுள் பிரவேசிக்கிறார்.

உள்ளே குயில் ஒன்றின் சுகமான கச்சேரி.

சுற்றிச் சுற்றிப் பார்க்கிறார்.

யாரும் இல்லை.

கைகள், வேட்டிக்குள் அடங்கிக் கிடக்கும் கோடு போட்ட,அன்டர் வேரு'க்குள் நுழைந்து ஒரு காகிதத்தை வெளியே எடுக்கிறது.

"இதப் பார்த்து, என்னன்னு கொஞ்சம் சொல்லேன்."

வடிவேலு வாங்கி விரிக்கிறான்.வாசிக்க ஆரம்பிக்கிறான்.கண்ணிரண்டிலும் வியப்பின் அலைகள்.முகத்தில் அபரிதமாய் அதிர்ச்சியின் வெளிப்பாடுகள்!

# 10

'கேளப்பா...!

பொன்னைந்தில் முதலொன்று தாமிரம்

அரிமணல் படுகையிதன் பாத்திரம்!

பொன்னைந்தில் இரண்டது வெண்கலம்

பேணுமிது கொள் பொருள் பெருநலம்!

பொன்னைந்தில் மூன்றது பித்தளைத் தாது

துலக்கிடத் துலங்குவதில் இது பொது மாது!

பொன்னைந்தில் நான்கது சந்திரவெள்ளி

மண்ணீந்த மகத்தான விடமுறிக் கொல்லி!

பொன்னைந்தில் ஐந்ததே அரும்பெரும் தங்கம்

நாற்பொருளும் இதனடியில் நலித்தே இலங்கும்.

சொர்ணஜாலத் திரட்டுக் குறிப்பு

கண்ணில் மின்னலுடன் நிமிருகிறான் வடிவேலு."என்னா வடிவேலு... என்ன எழுதியிருக்கு?" கந்தசாமி மிடறு விழுங்கக் கேட்டுகிறார்.

"மாமா... இது பயங்கரமான விஷயம்..."

"என்னவே சொல்றே... என்ன பயங்கரம்?"

"நம்ம மலைல எங்கயோ தங்கம் இருக்கு.அதைப்பத்திதான் இந்தக் காகிதத்துல எழுதியிருக்காங்க..."

"மலைல தங்கமா...? களவாணிப்பசங்க யாரும் திருடி வெச்சிருக்காங்களா?"

"இல்ல மாமா, இது சாமியாருங்க சமாச்சாரம். நாம கூட அரசல்புரசலா கேள்விப்பட்டிருக்கோம்."

"என்ன சொல்றே வடிவேலு?"

"ஆமாம் மாமா, ,மலைல ஒரு சாமியாருக்கு தங்கம் பண்ற ரகசியம் தெரியும்னு' பேசிக்குவாங்களே... சமீபமா அந்தச் சாமி பத்தி பேச்சே வந்ததில்லையே..."

"நீ சொல்ற விஷயம் நம்ம அப்பன், பாட்டன் காலத்து பேச்சாச்சே..."

"எது எப்படியோ, அந்தச் சாமி இருக்கற இடத்தைஇதுல யாரோ எழுதியிருக்காங்க.அது மட்டுமில்ல, அந்தச் சாமி தங்கம் பண்றதையும் பார்த்துருக்காங்க.ஆமா இது எப்படி கிடைச்சது உனக்கு? யார் கொடுத்தது?"

கந்தசாமி முகம், அடுத்த நொடி கரி அப்பிக்கொள்கிறது.தடுமாறுகிறது; திணறுகிறது.

"சொல்லு மாமா... இது லேசுப்பட்ட விஷயமில்ல.இதுல அந்த இடத்துக்குப் போற பாதை பத்தியும் கூட சொல்லியிருக்கு."

"யார், யாருக்கு சொல்லியிருக்காங்க...?"

,மாறன்' என்கிற நபர், பாபாங்கறவருக்கு சொல்லியிருக்கார். அந்தச் சாமியோராட இருப்பிடத்தைப் பத்தி விலாவாரியா எழுதியிருக்கார்... இந்த மாறனை உனக்குத் தெரியுமா?"

மீண்டும் கந்தசாமி மௌள அவஸ்தைப்படுகிறார்.

"சொல்லு மாமா, இல்ல யாராச்சும் உன்னை ஏப்ரல்ஃபூல் ஆக்க, இப்படி எதுனா கடுதாசியைக் கொடுத்து காபரா பண்றாங்களா?"

"இல்ல வடிவேலு... இது, இது..."

"சொல்லு..."

"இது அந்த மலைல ஒரு பொணத்துகிட்ட கிடைச்சிச்சு..."

"பொணத்துகிட்டயா?!"

"ஆமா... உன் அத்தைய தேடிப்போனப்ப, வழியில ஒரு பள்ளத்துல விழுந்துட்டேன்.அங்க கோட்டும், சூட்டுமா ஒரு பொணம்.அதோட பாக்கெட்டுல இது இருந்துச்சு..."

"நெசமாவா?"

"நம்பாட்டி வா காட்றேன்..."

"சரி வா... அதையும் பாத்துடுவோம்."

"வடிவேலு! என்னவே விஷயம் எங்கெங்கயோ போகுது.பயமா இருக்குதுப்பா..."

"பயப்படாம வா... முதல்ல அந்தப் பொணத்தைக்காட்டு. யாரும் அடிச்சு போட்டுட்டாங்களா, இல்ல மிருகம், ஏதாச்சும் அடிச்சுப்புட்டுச்சா...?"

"பதட்டத்துல நான் என்னத்தக் கண்டேன்.ஆனா படிச்ச, செல்வாக்கான ஆளு மாதிரி தான் தெரிஞ்சிச்சு..."

"வா மாமா, முதல்ல ஆள காட்டு..."

கந்தசாமி தயங்கித் தயங்கி நடக்க... வேகமாக முன்செல்கிறான் வடிவேலு.

வழக்கம்போலவே ஆளரவமற்ற மலைப்பிராந்தியம். பாம்பு ஊர்கிற மாதிரி ஒற்றையடிப் பாதை.

"வா மாமா... சும்மா வா... பயப்படமா வா..." என்று தைரியமூட்டி, தைரியமூட்டி கந்தசாமியோடு நடக்கிறான் வடிவேலு கந்தசாமி சரிந்து விழுந்த இடம் வரும்வரை ஓட்டமும், நடையுமாகத்தான் போனார்கள்.

கந்தசாமி, சரிவின் உச்சியில் நின்று கீழே கைகாட்ட, வடிவேலு சுற்றுமுற்றும் பார்த்துவிட்டுக் கீழே இறங்குகிறான்.

"பாத்து வடிவேலு.. பாத்து, பாத்து" கந்தசாமி எச்சரிக்கையுடன் கூவ, கீழே இறங்கிவிட்டான் வடிவேலு. விதம் விதமான செடி, கொடி, புதர்க்கூட்டம்... அதன்மேல் சடசடக்கும் குட்டை வண்ணத்துப் பூச்சிகள்.

வடிவேலு வேகமாகச் சரிந்து இறங்குவது பார்த்து, ஊதிவிட்ட காகிதத் துண்டுகள் போல அந்தப் பூச்சிகள் மேலெழும்பிப் பறக்கின்றன.

"இங்கயா மாமா?" சரிவில் நின்றபடி கேட்கிறான்.

"அங்கதான்... அந்தப் புதருக்குள்ளதான்..."

"ஒண்ணுத்தையும் காணோமே மாமா?..." கை, கால்களால் இலை தழை விலக்கித் தேடியபடியே செல்கிறான்.

அங்கதான் பாத்தேன்.நல்லா பாரு." கந்தசாமி படபடக்க, அவன் ஏதோ தொலைந்த பொருளைத் தேடுவதைப் போல தேடிவிட்டு"இல்ல மாமா... நீயே வந்துபாரு..." என்கிறான்.

கந்தசாமியும் கீழே இறங்குகிறார்.

துழாவுகிறார்.

பிணத்தைக் காணவில்லை! எங்கே போயிற்று? எப்படிப் போயிற்று?

அவருக்கு மயக்கம் வராத குறை...

"என்ன மாமா, ஏதாவது கனவு கண்டியா?" வடிவேலு கிண்டலடிக்கிறான்.

"இல்ல வடிவேலு... சத்யமா சொல்றேன், நான் பாத்தேன்."

"பாத்தேன்னா... எங்க?" வடிவேலு சற்று கடுமையாகக் கேட்கும்போது, அவன் கண்ணில் படுகிறது ரிஸ்ட்வாட்ச்!

புதரின் ஒரு முனையில் பளபளப்பாக...

குனிந்து எடுக்கிறான்.

"மாமா வாட்ச்...!"

"பாத்தியா... நம்பமாட்டேன்னியே?இது அந்த பொணம் கைலதான் இருந்திச்சு..."

வாட்ச,; பணக்காரத்தனமாக ஜொலிப்போடு மின்னுகிறது.

வடிவேலு அதை ஊன்றிப் பார்க்கும் போது பாதைமேல் யாரோ வரும் சப்தம் கேட்டுகிறது.

"வடிவேலு யாரோ வர்றாங்க... ஒளிடா... ஒளி..."

"அட, பயப்படாத மாமா... ,தூதுவளை தேடிவந்தோம்'னு சொல்லிக்கலாம். தைரியமா இரு..."

சொல்லிக் கொண்டே அண்ணாந்தபோது, பாதைமேல் புடவைத் தலைப்பால் முட்டாக்கு போட்டபடி விரைப்பாக நடந்து கொண்டிருந்தாள் பூரணி!

எங்கே போகிறாள்?

பெட்டி படுக்கை என்று மீனாவிடம் ஆயத்தங்கள்

"எந்த ஊருக்கு?"

"டாட்! நான் ஷில்லாங் போறது யாருக்கும் தெரியக்கூடாது.தெரிஞ்சது... உங்களை உண்டு, இல்லைன்னு பண்ணிடுவேன்."

கருணகாரன் பதிலே சொல்லவில்லை.ஒரு விதத்தில் அவள் கிளம்புவது அவருக்கும் நல்லது என்றுதான் படுகிறது.முதல் அமைச்சரிலிருந்து யாரைப் பார்த்தாலும் மீனா பற்றியே கேட்பதால் வரும் எரிச்சலில், அவருக்கு முகத்தில் பழைய பளபளப்பே போய்விட்டது.

"ஆமாம்... ப்ரகாஷ் கேட்டா?" தாடையைத் தடவியபடி அவர் கேட்கும் கேள்விக்கு எரிச்சலான பதில் வருகிறது மீனாவிடம்: தெரியாதுன்னு சொல்லுங்க. கொஞ்ச நாள் காத்திருக்கட்டும்.காத்திருக்க முடியலைன்னா

எவளையாவது கல்யாணமும் பண்ணிக்கட்டும்."

"ஏம்மா அப்படிச் சொல்றே... பாவம்மா ப்ரகாஷ்."

"பெரிய்ய பாவம்? அவர் போய் ,நாடி ஜோசியம் பாக்கறேன்', வைக்கறேன்'னு சொன்னதால்தான் இவ்வளவு குழப்பமே... சரி, சரி, ஃப்ளைட் டைம் என்னப்பா.."

"கிளம்பு சரியா இருக்கும்..."

அவர் நிமிர, லக்கேஜ் காரை நோக்கி உருளுகிறது. சுமையல்கார பத்மா மட்டும் ஏதோ சொல்ல ஆசைப்பட்டு, பின் அடக்கிக் கொள்வது நன்றாகத் தெரிகிறது.

வாசலைக் தொட்டு இறங்கும் போது எதிரில் அகிலா!

கந்தசாமியின் மூத்த மகள்.

அவளைப் பாத்ததும் கருணாகரனுக்கு சற்று உதைக்கிறது. மீனாவும் பார்க்கிறாள்.அகிலாவிடம் நேராக ஊரில் இருந்து வந்திருக்கும் தோரணை.

இருதரப்பிலும் வினாடிகள் கழிகின்றன.ஆனால் துடிப்பான பேச்சோ, வரவேற்போ இல்லை.

மீனா, அந்த அமைதியை ஒதுக்கி அகிலாவை நெருங்குகிறாள்.

,வா அகிலா .. இப்பதான் வர்றியா? அத்தை, மாமால்லாம் நல்லா இருக்காங்களா?"

அகிலாவிடம் தலையசைப்பு.

"உள்ளே வா..."

"இருக்கட்டும.நீங்க எங்கயோ வெளியே கிளம்பிட்ட மாதிரி தெரியுதே..."

"ஆமா.. நீ வா.வராதவ வந்திருக்கே. என்ன விஷயம்" ஆதரவாகத் தோள்மேல் கைபோட்டு உள்ளே அழைத்துச் செல்கிறாள்.கருணாகரன் பார்த்துக் கொண்டே நிற்கிறார்.

தயங்கித் தயங்கி உள்நுழையும் அகிலா, திரும்பித் திரும்பி கருணாகரனை பார்க்கிறாள்.

"மாமாவை கொஞ்சம் உள்ளே வரச் சொல்லேன்..."

வருவாரு டாட். கம் இன் ஸைட்"

இறுக்கமான முகமுடன் கருணாரன் திரும்பி வருகிறார்.

"வாட் டாட் அகிலாகிட்ட பேசுங்க அவ என்ன யாரோவா? உங்க தங்கை மகதானே?"

# 11

கேளப்பா...!

புலவனம் பதினான்கு! புல் பூண்டதில் கோடி

ஜனனம் ஒன்றிலொன்று பஞ்சமர் கூடி...

நயனம் விளைப்பதிதில் நல்லொளித் தேட்டி

சயனமிலா சூரிய சந்திரா துணைக் கூட்டில்

வயணமாய் இலங்குவது உடம்பதில் உயிரும்

கவனமாய் கேள் உலோகத்தில் சொர்ணமுமே!

சொர்ணஜாலத் திரட்டுக் குறிப்பு

களையான ஹால்.திண்டுகளுடன் சோஃபாக்கள்.தடவித் தடவி அதில் அமருகிறாள் அகிலா.

"நல்லா உக்காரு அகிலா..."மீனா நிமிர்ந்து கருணாகரனை பார்க்க, அவரும் அமர்ந்து கொண்டு ஹீனக் குரலி;ல்,"என்னம்மா எல்லோரும் சௌக்கியமா?" என்று அரைமனதாக கேட்க,அகிலாவிடம் ஆமோதிப்பது போல தயைசைப்பு கூடவே ,இல்லை' என்கிற ரகமாயும்... கருணாகரன் சலிப்புடன் கைகெடிகாரம் பார்க்கிறார்.

"என்ன சொல்ற அகிலா...? நீ வந்திருக்கிற விதத்தைப் பார்த்தா, ஏதோ பிரச்சினை மாதிரி தெரியுது."

"மீன்... எதுவா இருந்தாலும் பின்னால பேசிக்கலாம். உனக்கு டயமாச்சு.நீ கிளம்பு... நீ இரும்மா.வந்து பேசறேன்..." என்று கருணாகரன் எழுந்து கொண்டு வாசல் பக்கம் நடையிட மீனாவுக்கு ஒப்புதல் வராதபடி அகிலா முகத்தில் ஷணத்தில் புரளும் கண்ணீர்த்துளிகள் பதற்றத்தைப் பெருக்குகின்றன.

"ஏய்... ஏன் அழறே...? என்ன விஷயம்? கமான்... தைரியமா சொல்லு?" மீனா, அகிலாவை நெருங்கி அமர்ந்து அவளை வாஞ்சையாகப் பற்றிக் கொள்கிறாள்.அகிலா அவள் தோளில் சாய்ந்து கொண்டு விசும்பி, விசும்பி, அழ ஆரம்பிக்கிறாள்.

"கமான் யா... விஷயத்த சொல்லு..."

"நீஊருக்கு கிளம்பு மீனா.உனக்கு எதுக்கு இடைஞ்சலா..."

,ஸ்டுப்பிட் நீ விஷயத்தச் சொல்லு.எனக்கு ஊருக்குப் போகத் தெரியும்..."

"வந்து..."

"என்னம்மா வந்து... கமான்"வெடிக்கிறார் கருணாகரன். தன் காதல் திருமணத்தை ஒப்புக்கொள்ளாது விலக்கி வைத்த ஒரே சகோதரியின் மகளாயிற்றே...? கோபம் கசியாதா என்ன?"ஊர்ல அம்மாவுக்கு திடீர்னு பேச முடியாம போயிடிச்சு. வைத்தியம் பார்க்க வசதியில்ல.அப்பாவும் இப்ப சரியில்ல.ஏதோ தப்பு செய்துட்ட மாதிரி பம்மிகிட்டே திரியறாரு. வீட்டுக் காரியமெல்லாம் நான்தான் செய்வேன்.

நேத்துகூட அரிசி பானைல கை விட்டப்போ இந்தச் சாவிக் கொத்து அதுல இருந்துச்சு.இது வீட்டோட சாவிக் கொத்து.கருப்பா துப்பும் துருவுமா இருக்கும்.இப்பப் பார்த்தா தங்கமாட்டம் ஜொலிக்குது.வழக்கமா சாவிக் கொத்து, காலண்டர் மாட்டியிருக்கற ஆணிக்காதுலதான் தொங்கும். ஆரிசிப் பானைக்குள்ள ஏன் போச்சுன்னும் தெரியல.

நிறைய விஷயங்கள் ஒரே புதிரா இருக்கு. ஒண்ணுமே புரியல.அப்பதான் மீனா உன்னைப் பத்தி பத்திரிகைல படிச்சேன்.,அபூர்வ சக்தி இருக்கற உன்னைப் பார்த்தாலாவது அம்மா பேச மாட்டாங்களா...? இந்தப் புதிருக்கு விடை கிடைக்காதா?'ன்னுதான் தங்கச்சிக்கிட்ட மட்டும் சொல்லிட்டு இங்க கிளம்பி வந்தேன்..." அகிலா மிடறு விழுங்கியபடி கோபக் கருணாகரனை பார்க்க, அவர் முகத்தைத் திருப்பிக் கொள்கிறார்.

"நம்ம குடும்ப பகை எனக்குத் தெரியாம இல்லை.அதை நினைச்சுக்கிட்டிருந்தா விஷயம் ரொம்ப விபரீதமாயிடும்னு தோணுது... அதான்..." அகிலா சொல்லி விட்டு வறண்ட கண்களால் எதிர்பார்ப்போடு மீனாவையும், கருணாகரனையும் மாறி மாறிப் பார்க்கிறாள்.

இருவர் முகத்திலும் வியப்பின் முகாம்.

"என்னம்மா இது... ,பேச்சு போச்சு'; ,சாவி தங்கமாட்டம் இருக்கு'ன்னு

சம்பந்தமில்லாம எதை, எதையோ சொல்றே? ஒரே குழப்பமா இருக்கே...? கருணாகரன் ஆயாசிக்கும்போது மீனா சாவிக்கொத்தை கையில் எடுத்துப் பார்க்கிறாள்.மஞ்சள் ஒளி கூத்தாடுகிறது.சாவிக்குண்டான எடையும் இல்லாத மாதிரி தோன்றுகிறது.

"கொண்டா அதை.. முதல்ல தங்கமா பித்தளையான்னு பார்ப்போம்..." வாங்கிப் பார்க்கிறார் பார்த்தபடியே கேட்கிறார்:

"சரி என்னம்மா பண்ணணும்கறே...? இங்க யார்கிட்டேயாவதுடாக்டர்கள்கிட்ட காட்டணும்கிறியா...?"

"தெரியல மாமா... நீங்க எப்படிச் சொன்னாலும் சரி, அங்க அம்மாவை விட்டுவைக்கறதும் நல்லதா படலை..."

"ஏன்மா... எதனால அப்படிச் சொல்ற?"

"அடிக்கடி சதுரகிரி மலைப் பக்கம் போறாங்க; திரும்பி வராங்க.அப்படி போனப்பதான் பேச்சு போயிடுச்சு.பேச்சு போனதுக்குகூட அந்த மலைல இருக்கற ஒரு சாமியார்தான் காரணம்னு பேசிக்கிறாங்க..."

"மை குட்நெஸ்... என்னம்மா சொல்றே?"கருணாகரன் கூர்மையாகிறார்.

"ஆமாம் மாமா. அங்க நிறைய சாமியாருங்க இருக்காங்க.ஒவ்வொருத்தர், ஒவ்வொரு மாதிரி.அதுல ஒரு சாமியாருக்கு இரும்பைத் தங்கமாக்கற சக்தி உண்டாம்..."

கருணாகரன் முகத்தில் முத்து முத்தாக வியர்கிறது.

"நிஜமாவா?"

"கேள்விப்பட்டதைதான் நான் சொல்றேன்.உண்மை, பொய் தெரியாது."

மீனா உடனே இடை நறுக்குகிறாள்.

"டாட், நான் போக வேண்டிய இடம் ஷில்லாங் இல்ல; அத்தை வீட்டுக்கு எனி வே, யார் தொந்தரவும் இல்லாம இருந்தா, அதுவே போதும். கவலைப்படாத அகிலா.இப்படியே கார்ல உங்க ஊருக்குப் போறோம். என்னன்னு பாத்துடுவோம்... இந்த இரும்பு, தங்கம், சாமியார் சமாச்சாரத்தையெல்லாம் நம்பாதே.நம்ப தேசத்தில் இந்த மாதிரி புருடா நிறைய இருக்கு.எனக்கே ,அபூர்வ சக்தி இருக்குங்கறாங்க.

"மீனா, நிஜமா நீ அபூர்வ சக்தி உள்ளவதான்.எப்படிச் சொல்றேன்னு பாக்கறியா? பஸ்ல கடைசி சீட்ல தான் இடம் கிடைச்சது.தூக்கித் தூக்கிப்

போட்டு ஒரே உடம்பு வலி.இப்ப நீ தொட்டுப் பேசினதுல கங்கைல குளிச்ச மாதிரி ஒரு புத்துணர்ச்சி."

மீனா அலுப்புடன் தலையில் கை வைத்துக்கொள்கிறாள்.

"போச்சுடா... நீயும் ஆரம்பிச்சிட்டியா?நான் உன்னோட வரப்போறது அத்தையை பார்க்க.கொஞ்சநாள் இந்த மெட்ராஸ்ல இல்லாம இருக்கத்தான்.அபூர்வ சக்தியக் காட்ட இல்ல... அப்படி ஒண்ணு என்கிட்ட இருக்கறதாகவும் நான் நினைக்கல... போ! உடனே குளிச்சிட்டு வா.சாப்பிட்டு ஜில்லுன்னு கிளம்பலாம்.எனக்கு இந்த ஊரை விட்டுப் போகணும்.டாடி, நீங்களும் வரலாமே..." மீனாவின் அழைப்பை சட்டென்று ஒப்புக் கொண்டு அவளைப் போல துள்ளிக்கொண்டு கிளம்ப மனசு வரவில்லை அவருக்கு...

"நீ போய் ஃபோன் பண்ணு.பாத்துக்கிட்டு வரேன்..." என்கிறார்.

மீனாவும், அகிலாவுடன் சில மணிகளில் கிளம்பிச் செல்ல கருணாகரன் ட்யூட்டி டிரஸ்ஸ_டன் ஆஃபீஸீக்கு கிளம்ப ஆயத்தமான போதுதான் தொலைபேசி சிணுங்கி அவரைக் கூப்பிட்டது.

மீனாவும், அகிலாவுடன் சில மணிகளில் கிளம்பிச் செல்ல கருணாகரன் ட்யூட்டி டிரஸ்ஸீடன் ஆஃபீஸீக்கு கிளம்ப ஆயத்தமான போதுதான் தொலைபேசி சிணுங்கி அவரைக் கூப்பிட்டது.

தொலைதூரம் போகாமல் இந்த மட்டில் பக்கமாகப் போன சந்தோஷத்தில் இருந்தவரை, ,மீனா மலைக்குக் கிளம்பிட்டாளா...? சந்தோஷம்! விதி எப்பவுமே ரொம்பவும் வலிமையானது கருணாகரன்" என்று சொல்லி உடனேயே முடங்கியது.

ஆயாசமும், பீதியுமாக பொத்தென்று சோஃபாவில் விழுகிறார் கருணாகரன்! பொறுப்பில்லாமல் மகளை அனுப்பிவிட்டோமோ? என்ன இதெல்லாம்?

மஞ்சள்கழுத்து மைனா ஒன்று மருதமரம் ஒன்றின் கிளைச்சரத்தில் மூக்குரசி அமர, கீழே கந்தசாமியும், வடிவேலுவும்.

"மாமா... இனி என்னால நடக்க முடியாது! அத்தை நிச்சயமா எங்கியோ போயிட்டாங்க நாம பாதை மாறி கண்டபடி அலையறோம்னு நினைக்கறேன்."

"எனக்கும் அப்படித்தான் தோணுது வடிவேலு.எல்லாம் ஒரே மாயமாவும்

இருக்குது…"

"போதும் மாமா… திரும்பிடுவோம்.நாமளும் அஞ்சு, ஆறு மணி நேரமா அலையறோம்…"

"பூரணியில்ம எப்படிப் போறது வடிவேலு?""மாமா! சொல்றேன்னு தப்பா நினைக்காதே பேசாம திரும்பிடுவோம்.அத்தை வந்து சேர்ந்துடுவாங்க..."

"அது அப்புறம்.அவ எதுக்கு தனியா வந்தா? யாரைப் பார்க்க...? வீட்ல கேட்டா கையெடுத்துக் கும்பிடறா. எல்லாம் அந்த தங்கசாமியோட வேலையாதான் இருக்கணும்.நான் கூட அதைப் பார்த்தேண்டா… இப்ப இங்க எங்க இருந்தாலும் பார்த்து, ,சாமி எங்கள விட்றுங்க, நாங்க ஒரு பாவமும் அறியாத மக்கள்,னு சொல்லி மீண்டுட்டா போதும் வடிவேலு... மீண்டுட்டா போதும்..."

"நீ வேணா போ.நான் பூரணியில்லாம வரமாட்டேன்."

"சரி... அப்ப நான் வரேன்.நீ என்ன நினைச்சாலும் சரி என்று சொல்லிக்கொண்டு திரும்பினவன் ஒரு வினாடி எகிறி விடுகிறான்.

"மாமா அங்க பாரு...' அவன் கைகாட்டிய திக்கில் ஒரு தழைவான மரக்கிளையில், கேமிரா ஒன்று தன் செம்பழுப்பு நிறத் தோலுறைப் பிடியோடு தூக்குக் கைதி போலத் தொங்கியபடி...

வடிவேலு அந்தக் கேமிரா நோக்கி ஓடிச் சென்று, ஒரு எம்பு எம்பிக் குதித்து அதை கைப்பற்றப் பார்க்கிறான்.

ஒரு முறை...

இரு முறை...

மூன்றாம் முறை உச்சப்பட்சமாக எகிறியதில் கேமிரா வசப்படுகிறது.கூடவே கீழே நச்சென்று நிற்க முடியாத படி ஒரு தள்ளாடலுடன் புரண்டு விழுகிறான்.உடல் புரண்டு இலை, தழை நகங்க உருளுகிறது.

"வடிவேலு... பாத்து..." கந்தசாமி கத்திக் கொண்டே பின்னால் ஓடிவருகிறார்.

உருண்டவன், எழுந்திருக்க கையை ஊன்றிய போது நெஞ்சில் பனித்துண்டு வைத்தமாதிரி ஒரு புது உணர்வு.கை வைக்க முனைந்த இடத்தில் பருத்த மார்பு வெளித்தெரிய பளிங்குச் சிலையாட்டம் ஒரு பெண்ணின் சடலம்!

# 12

*"கேளப்பா...!*

*எழுகடல் துயில் நீரினாலும்*

*விழும் பனிக் கயிலைச் சாரலிலும்*

*கெழுபொருள் பலவதன் ஊடகத்தே*

*மழுப்படவே சொர்ணம் மறைந்துள்ளது!*

*பழுப்பொருள் நிறத்துடன்*

*விழுப்புடன் குறுகி*

*கொழுப்பது போலது இருப்பதனை*

*வழுத்துவனேவழுத்துமிதை*

*தொழுதே நிற்கும் சீலா*

*நீ மனத்தில் வை'*

*சொர்ணஜாலத் திரட்டுக் குறிப்பு*

*அந்தப் பெண்ணின் சடலத்தை அப்படி ஒரு கோலத்தில் பார்த்ததில் ஆயிரம் கரப்பான்கள் வடிவேலுவின அடிவயிற்றில் கூடிக் கலைகின்ற மாதிரி இருக்கிறது அவனுக்கு...*

*"மாமா பொணம்..." பதட்டமான அவன் குரல் கந்தசாமியின் பிடறியைப் பிடித்து இழுக்கிறது.*

*"பொ.. பொணமா?" ... தந்திக்கட்டை சப்தமுடன் முன் வருகிறார்.வடிவேலு எழுந்து விட்டிருக்கிறான்.பயந்து முடித்து இப்பொழுது ஒரு தீவிர நோட்டத்தில் அந்தப் பிணத்தைப் பார்க்கிறான்.*

*,சத்தியம் செய்து சொல்லலாம்; வயது இருபதுக்கு மேல் இருக்காது.கூடவே உடை, உருவப் பளபளப்பு, தலைமுடி என்று சகலத்திலும் பணக்காரச் சாயல்கள்.பாப் வெட்டிய தலைமுடியும், அந்த நிலையிலும் ஜொலிக்கும் உதட்டு ரசமும் அம்மணி ஒரு அழகிப்போட்டி ஜாதி என்கின்றன.'*

*சலசல என்று இலை, தழை வதங்க அருகே வந்து சேரும் கந்தசாமியும்*

பெண் சடலத்தை பார்த்து கிட்டத்தட்ட வடிவேலுவின் அனுமானத்திற்கே வந்து…

,மாமா… யாருன்னு தெரியலே மாமா.ஐஸ்துண்டமா இருக்கு உடம்பு…"

"எனக்கும் ஒண்ணும் புரியல வடிவேலு.எல்லாமே மாயமால்ல இருக்கு…?"

… வடிவேலு பிணத்தைச் சுற்றி வந்து பார்க்க ஆரம்பிக்கறான்.முதுக்கு கீழே ஏதோ துருத்திக் கொண்டு தெரிகிறது.

லஜ்ஜையுடன் முதுகைத் தொட்டுக் தள்ளி துருத்தலைப் பார்க்கிறான்.ஹேண்ட் பேக்! வேகமாக எடுத்துதிறக்கிறான்.சின்னக் கண்ணாடி, லிப்ஸ்டிக், ஸ்டிக்கர் பொட்டு உதிரிகள், சிவப்பாக்கும் க்ரீம் என்கிற லொட்டு லொசுக்குகள்.கூடவே,என்ன அது தங்க நிறத்தில்… சாவிக் கொத்து! ஜிலு ஜிலு வென்கிற மஞ்சள் நிறமாய்… கூடவே கர்ச்சீப்புக்குள் மறைவாய் என்ன அது…? அட சின்ன பிஸ்ட்ல்! கைப்பிடிப் பரப்பில் அற்புதமான வேலைப்பாடு…

"மாமா துப்பாக்கி எல்லாம் இருக்கு…" எடுத்து அவர் எதிரே நீட்டுகிறான்.கந்தசாமி பதறிப்போகிறார்.

"எலேய் கைய மடக்கு… எதையாவது அமுக்கி, கிமுக்கி வைக்காதே…" என்று கத்திவிட்டு சுற்றிச் சுற்றிப் பார்க்கிறார்.

வடிவேலு திரும்பவும் பேக்கை துழாவியதில் அமெரிக்க சென்ட் நாணயங்கள் கலகலக்கின்றன.குறிப்பாக 25 சென்ட் நாணயம் ஒரு கை அள்ளலாம் என்கிற அளவில் இருக்கிறது. டாலர் நோட்டுகளும் மடங்கிக் கிடக்கின்றன.

"மாமா இது அமெரிக்காப் பொண்ணு போலத் தெரியுது.இங்க எதுக்கு வந்துச்சு?எதனால இப்படிச் செத்துக் கிடக்கு? தெரியலியே…"

"ஆராய்ச்சி போதுண்டா, கிளம்பு.யாராவது பார்த்தா நாமதான் கொன்னுட்டதா நினைப்பாங்க… வாடா…"

பல அடி ஓடி நின்று அழைக்கிறார் கந்தசாமி.அவர் சொல்லுவதும் வாஸ்தவம்தான். வடிவேலு நின்று ஒரு நொடி அந்தப் பிணத்தைப் பார்த்துவிட்டு கேமிரா பேக் சகிதம் திரும்புகிறான்.

"இதெல்லாம் எதுக்கு? விட்டெறி எழவு.பின்னால இதுக்காக நாம கொலை செஞ்சோம்னும் வரும்"புலம்புகிறார்.

அதெல்லாம் வராது... நீ கற்பனை பண்ணாதே!"

"போடா போ.வராதாம். கன்னுக்குட்டி சைஸ் நாய், மோப்பம் பிடிச்சு வந்து நிற்கும்போது தெரியும் உனக்கு.போட்று. போட்று..."

"இல்ல மாமா.இந்த மலைல நமக்குப் பிடிபடாத மர்மங்கள் நிறைய இருக்கு.நீ பாத்ததா சொன்னியே முதல்ல ஒரு பிணம், அவனுக்கும் இவளுக்கும்கூட ஏதோ சம்பந்தம் இருக்கணும்.கைல துப்பாக்கி இருந்தும் இந்தப் பொண்ணு சுடலை! எப்படிச் செத்தாங்கறதும் தெரியலை.

கற்பழிக்கப்பட்ட மாதிரியும் தெரியலை.தற்கொலை செய்துகிட்டிருக்கலாம்.இல்லே வேறு விதத்துல செத்துருக்கலாம்.

கூட்டிக் கழிச்சா பூரணி அத்தை பேசாம போனதுக்கும், இவங்களுக்கும்கூட தொடர்பு இருக்கலாம் மாதிரி தெரியுது.

"இந்த கேமிராலஃபிலிம் இருக்கு.இந்தப் பொண்ணு எதுனா படம எடுத்துருந்தா விழுந்திருக்கும்.கழுவிப் பார்ப்போம்.எதாவது பிடிபடும்..."

"வேண்டாண்டா..வேலியில போற ஓணாவை எடுத்து வேட்டிக்குள் விட்டுக்ட்ட கதையாகிடப் போகுது..."

"ஆகட்டும் மாமா... நானே, ,என்னடா இது செத்த பொழப்பு பொழைச்சுகிட்டிருக்கோம், இருக்குற அரைக்காணிக்கு விதை போட முடியாதபடி தரித்திரம் பிடிச்சவங்களா இருக்கோமே’ன்னு கவலைப்பட்டுக்கிட்டிருந்தேன்.இந்த விஷயம் எனக்குள்ள சுவாரஸ்யத்தப் பூசியிருக்கு.நான் விடப் போறதில்லை."

ஆசாரி சாவிக் கொத்தை உரசிப் பார்த்துவிட்டு வாயைப் பிளக்கிறார்.

"கோத்ரெஜ் கம்பெனிக்காரங்க பித்தளைல சாவி போடுவாங்க, பாத்திருக்கேன்.அந்த முத்திரையோட தங்கச் சாவியை இப்பத்தான் பாக்கறேன்."

"தங்கமா?"

"தங்கமாவா...?சொக்கத் தங்கம் வடிவேலு பஸ்பம் செய்ய இந்த மாதிரி தங்கத்தைதான் தேடுவோம்.ஆமா ஏதுய்யா இது உன்கிட்ட?"

என்னது இல்ல ஆசாரி... என் சினேகிதன்து.தங்கம்னான்.நான் நம்பலை.இப்ப நம்பறேன்."

"யார் அந்த சினேகிதன்.எனக்குத் தெரியாம...?

"விட்டா பயோடேட்டாவே கேப்ப ஆசாரி நீ. வரேன்." கிளம்புகிறான் வடிவேலு.ஆசாரி அதிர்ச்சியுடன் பார்க்கிறார்.வடிவேலு இந்தப் பக்கம் நகரவும் வீட்டு வாசலில் அந்தப் பக்கம் இருந்து ஒரு கார்.புழுதி புரட்டலோடு...

உள்ளிருந்து இறங்குகிறாள் மீனா.உடன் அகிலா.

"யாரு அகிலா பொண்ணா.கந்தசாமி மக அகிலாப் பொண்ணா?"

"ஆமாம் ஆசாரி நானேதான்.இது என் மாமா பொண்ணு. பேரு மீனா."

"வணக்கம்மா!"

மீனாவை பிரமிப்பாகப் பார்க்கிறார்.

" என்ன ஆசாரி.நாங்கதான் பஞ்சப்பரதேசிங்க. என் மாமாவும் அப்படியேதான் இருக்கணுமா என்ன? அவரு பெரிய போலீஸ் அதிகாரி..."

"கந்தசாமி சொல்லியிக்கான்.பேச்சு வார்த்தை இல்லேம்பான்.போகட்டும், எங்க தாயி இவ்ளோ தூரம்?"

"ஒண்ணுமில்ல... இது தங்கமான்னு பாத்துச் சொல்லணும்" --சொல்லிக் கொண்டே ஆசாரி வீட்டு வாசல்படி தாண்டி உள் நின்று கொண்டு பர்ஸிலிருந்து அந்தச் சாவிக் கொத்தை எடுத்து நீட்டுகிறாள்.வெளியில் காரை உரசிக் கொண்டு நிற்கிறாள் மீனா.

... ஆசாரிக்கு அரண்டு போகிறது.

"என்ன இது? இன்னிக்கு சாவிக் கொத்தா வருது?"

"என்ன சொல்றீங்க ஆசாரி?"

"ஒண்ணுமில்லம்மா" ... சமாளித்துக் கொண்டே சாவிக்கொத்தை வாங்கிப் பார்க்க, மஞ்சள் ஒளி மின்னல் பிடிக்கிறது.உரசியதில் பசுந்தங்கம் என்கிற உத்தரவாதம்.கூடவே வடிவேலுவின் சாவிக் கொத்தைப் போலவே கோத்ரெஜ் சின்னம், சாவி எண்கள் எல்லாம்.

"சொக்கத் தங்கம்மா... ஆமா ஏதும்மா இது?"

"அது வந்து... வந்து..."

"எங்களோடதுங்க..." வெளியிலிருந்து சமாளிக்கிறாள் மீனா.

"உங்க சாவி மேல உனக்கே சந்தேகமா? தங்கத்துல சாவி போட்டா பூட்டும்

தங்கமால்ல இருக்கணும். அது எங்கே?" ... ஆசாரி அடுத்து பிடித்த பிடியில் மீனா ஒரு பஞ்ச் வாங்கிய மாதிரி தடுமாறுகிறாள்.

"ஆங் இருக்கு... எனக்குச் சந்தேகமில்ல. இவதான் நம்பமாட்டேன்னா. அதான் சோதிச்சுப் பாத்துக்கோன்னேன்.வாடி உன் சந்தேகம் தீர்ந்ததா?"

... அகிலா சாவிக் கொத்தை பிடுங்கிக் கொண்டு திரும்ப காருக்குள் ஏறி அமற, கார் சீறத் தொடங், ஆசாரியிடம் மட்டும் மாறாத அதிர்வலைகள்!

காருக்குள் மோவாயை வருடிக் கொண்டு அமர்ந்திருக்கிறாள் மீனா.உற்றுப் பார்த்தபடி அகிலா.

கார் அவர்கள் வீட்டைக் குறி வைத்து... சந்தடி மிகுந்த தெருக்களில் நாய், கோழிகள் விலகி ஓட, சீறிக் கொண்டிருக்கிறது.

"மீனா உன் சந்தேகம் தெளிவாயிடிச்சு.சாவி தங்கச்சாவி! நல்லா தெரியும், இது எங்க வீட்டுச் சாவிதான்.எப்படி தங்கமானதுன்னுதான் தெரியல.ஒரே மர்மமா இருக்குல்ல..."

"உம் பொறு போகப் போக பார்ப்போம்..." ... மீனா தீர்மானிக்க,"ஏய் காருக்குள்ள நம்ம அகி..." வீதியில் இருந்து ஒரு குரல் காதைத் தீண்டுகிறது அகிலாவும் எட்டிப் பார்த்துக் கையை காட்டி"என் ப்ரெண்ட்" என்று சின்ன சின்ன புன்னகையுடன் விளக்கம்தர, மீனா ரசிக்கிறாள்.

"உனக்கு இந்த ஊர் பிடிக்குமான்னு சந்தேகமா இருக்கு. தட்டிப்படல் பாத்ரூம், சிமெண்ட்" தரை கூடம், ஈசல் பூச்சி சைஸ்ல கொசு, ஆனா சூப்பர் காத்து!"

... அகிலாவின் விளக்கத்தை புறந்தள்ளி அவள் கைகளைப் பற்றி தன் தொடை மீது வைத்து அழுத்துகிறாள் மீனா.அவளுக்கு இதமாக இருக்கிறது.ஆயிரம் வார்த்தைகளால் புரிய வைக்க முடியாததை அந்த இதம் புரிய வைக்கிறது கண்களில் கூட ஈரம் சேர்கிறது.

"ரொம்ப தேங்க்ஸ் மீனா.நீ இவ்ளோ தூரம் கூடவே வருவே, இத்தனை பாசமா இருப்பேன்னு நான் நினைக்கவேயில்லை..."

.... அளந்த மாதிரி ஒரு சிரிப்பு சிரித்து அகிலாவின் தோளைத் தட்டிக் கட்டி இழுத்து ஒரு அழுத்தம் கொடுத்து,"சரி... எதுக்கு இந்த ஃபார்மல் டாக்? நீ என் அத்தை பொண்ணு.நான் என் அத்தை வீட்டுக்கு வரேன்.இதுல ஆச்சரியப்பட என்ன இருக்கு? நான் இப்பதான் சந்தோஷமா இருக்கேன்.மெட்ராஸ்ல எவ்ளோ பிரஷர் தெரியுமா? ப்ரகாஷ்கிட்ட

சொல்லாம வந்திட்டேன்..."

"யாரு ப்ரகாஷ்?"

"ஓ... ஐ ஆம் சாரி... உனக்குத் தெரியாது பார்.ப்ரகாஷ் என் உட்பி. உட்பின்னா தெரியுமா? வருங்காலக் கணவர்."

"அப்ப இப்போ..."

"விட மாட்டியே... காதலர். ப்ரகாஷ் ஒரு சரியான எம்.பி."

"எந்த தொகுதிக்கு?"

"ஏய்... எம்.பின்னா முட்டாப் பயல்னு அர்த்தம்.செல்லப் பேர்."

... அகிலா அந்த விளக்கத்தில் சிரிக்கிறாள்.அப்படியே,"டிரைவர் நிறுத்து, நிறுத்து அந்த முருங்கை மரமுள்ள வீடுதான்" என்கிறாள்.காரும் தேய்ந்து நிற்கிறது.

மீனாவுடன் இறங்கி உள் நுழை;பபவளைப் பார்த்து கந்தசாமி பிரமிக்கிறார்.பின்னாலேயே மங்களா, பார்வதி, தேவி என்கிற கந்தசாமியின் தயாரிப்புகள்.

"வாம்மா... வா! நல்லாயிருக்கியா?"

"இருக்கேன் அங்கிள்.வாட் அபவுட் யூ?"

"என்னம்மா கேட்டே?"

"ஓ ஐ ஆம் சாரி அங்கிள்.நீங்க நல்லா இருக்கீங்களான்னு கேட்டேன்."

அடுத்த நொடி கந்தசாமி முகம் கடுப்பாகிறது. சுரத்தில்லாதபடி தலை அசைகிறது.பார்வை அகிலா மேல் சென்று முறைப்பாக நிற்க ஆரம்பிக்கிறது. ,இப்படித்தான் சொல்லாம, கொள்ளாம கிளம்பிப் போய் இவளை அழைச்சுக்கிட்டு வந்து நிற்கிறதா?"

கேட்காமல் அவர் கேட்பது புரிந்து அகிலா மிடறு விழுங்கிச் சமாளிக்கிறாள்.

"அப்ப... என்னை மன்னிச்சுடுங்க.நாம இப்ப இருக்கிற நிலைல மாமாகிட்ட போறதுல தப்பு இல்லன்னு பட்டுச்சு.அதான்... நீ உக்காரு மீனா..."

... அகிலாவின் கரிசனம் மற்ற பெண்களிடம் இல்லை.அவர்கள் இந்த நொடி இமைக்கவில்லை.மாமன் மகளைப் பார்த்துக் கொண்டே

நிற்கின்றனர்.நடுவில் டிரைவர், சாமான்களை உள் இறக்கிவிட்டு வெளியேறுகிறான்.

"ஏய் கமான்யா... உங்க பேர் என்ன? இதுல யார் மங்களா? யார் பார்வதி? யார் தேவி?"

"சாரி, மீனா.அறிமுகம் செய்யலை பார்.இது மங்களா, இவ பார்வதி" இவ தேவி..." ... நின்றபடியே பேச்சு வளர்கிறது.

"உங்களுக்கெல்லாம் நான் வர்ற வழியில மதுரையிலேயே ஒரு கிஃப்ட் வாங்கிட்டு வந்துருக்கேன்." அவர்கள் சந்தோஷமாக நெருங்கி வருகின்றனர். சட்டென்று பொறி தட்டியது போல நடுவில் கத்தரித்துக் கேட்கிறாள்.

"அங்கிள்... அத்தை எங்க?"

கந்தசாமி பதில் சொல்லமுடியாமல் திணற...

"அம்மா.... நேத்து போனவங்கதான்.எங்க போனாங்கன்னே தெரியலை..."

"ஆமாங்க... அப்பாவும் தேடாத இடமில்லை.

பெண்களின் கண்ணீர் பதிலை ஆமோதித்தபடி கந்தசாமி தானும் திரண்ட கண்ணீரை கசக்கியபடி வெளியேற்ற மீனா அவரை சமீபிக்கிறாள்.

கச்சிதமாக அப்பொழுது உற்சாகமாகக் கத்திக் கொண்டு உள் நுழைந்தான் வடிவேலு.

"மாமா... அந்த காமிரா ஃபிலிமை பிரிண்ட் போட்டுட்டேன்.போட்டோல பார்த்தா அத்தை!"

வந்திருப்பவர்கள் யார் என்றுகூட பார்க்காதபடி படபடப்போடு பேசிவிட்டுத்தான் வடிவேலு நிமிர்ந்து மீனாவையும், மற்றவர்களையும் பார்க்கிறான்.

கந்தசாமி அவன் சொன்னதைக் கேட்டு சற்று மிரண்டு போய்விட்டிருக்கிறார்.

"மாமா இது..." வடிவேலு மீனாவை பார்த்து பேச்சை மாற்றப் பார்க்கிறான்.

"இது... இது... பூரணியோட அண்ணன் மகப்பா..."

கந்தசாமி சொன்ன கையோடு அவனை நெருங்கி தனியாக ஒதுங்கப்

பார்க்கிறார்.

மீனா மிகத் துல்லியமாக இவற்றைக் கவனிக்கிறாள்.ஒதுங்கிய நிலையில் வடிவேலுவும், கந்தசாமியும் குசுகுசுவென்று....

"வடிவேலு என்னவே சொல்றே... ஃபோட்டோ, பூரணின்னு...?"

"அட, ஆமா மாமா... பாரு ஃபோட்டோவ... உனக்கே தெரியும்" ... வடிவேலு புகைப்படத்தைக் காட்டவும் அதில் தங்கசாமியும், பூரணியும் ஏதோ பேசிக் கொள்ளும் தோரணையில் உருவங்கள் தெரிகின்றன.பின் புலத்தில் வனப் பகுதி.

இன்னொரு புகைப்படத்தில் ஒரு கட்டிடப் பகுதியும் ஆங்காங்கே சில இடங்களில் மூலிகைக் கட்டுகள், கண்ணாடி பீங்கான் பாத்திரங்கள் குடுவைகள் என்று கிடக்கின்றன.

இன்னொரு புகைப்படம், தங்கசாமி மழை நீரை ஏந்திக் குடிப்பதைச் சித்தரிக்கிறது. அடுத்தடுத்து புகைப்படங்கள் அனைத்திலும் தங்கசாமியின் உருவம்தான்.ஒரு புகைப்படத்தில் தங்கசாமியின் உருவம்தான்.ஒரு புகைப்படத்தில் தங்கசாமி கரடி ஒன்றை வருடிக் கொடுத்தபடி நிற்பதும் தெரிகிறது.

"இவ்வளவு ஃபோட்டோ படமா இருந்துச்சு?"

"அமாம் மாமா. இதை செத்த அந்தக் குட்டிதான் எடுத்திருக்கணும்.நீ சொன்ன மாதிரி, இந்த விவகாரத்துல தங்கசாமிக்கு பெரிய தொடர்பு இருக்கு. அத்தையகூட அந்த ஆள் தான் பிடிச்சு வெச்சிருக்கணும்."

"அது சரி... அந்த சாவிக் கொத்தை ஆசாரிகிட்டே வாங்கினியா? தங்கம் தானா அது?"

.... வடிவேலு ஒரு வினாடி தாமதித்து விட்டு ,இல்லை' என்கிற மாதிரி தலையாட்டுகிறான்."அது பித்தளையாம் மாமா..." என்கிறான்.

"பித்தளையா?"

"என்ன மாமா, நான் பொய் சொல்றதா நினைக்கிறியா? வேணும்னா கார்மேக ஆசாரியை போய் கேட்டுப் பாரு."

"சரி... அந்தப் பேச்சு விடு.அடுத்து என்ன பண்ணப் போறே?"

"இதை இப்படியே விடக்கூடாது மாமா... அந்த மலைல அத்தையை தேடி கண்டுபிடிக்கத்தான் வேணும்.அந்தத் தங்கசாமிய பார்த்தா, மத்த விஷயங்க

தெரிய வரலாம்.

ஆமா, என்ன திடீர்னு உன் மச்சினன் பொண்ணு வந்திருக்கா? ஆள் ட்க்கரா இருக்கிறாளே..."

"எனக்கும் ஒரு எழவும் புரியல.இந்த அகிலா பொண்ணு சும்மா இல்லாம இவளைப் போய் கூட்டிக்கிட்டு வந்திருக்கா.அது, நல்லா படிச்சு பொண்ணு.அப்பன் போலீஸ் கிமஷனர்."

"அப்படிப் போடு.இதச் சொல்லி லோக்கல் போலீஸ_க்ட்டே நாம் கொஞ்சம் மஞ்சள் குளிச்சுக்கலாம்னு சொல்லு...'

"நமக்கெதுக்குடா போலீஸ் சங்காத்தம்? எனக்குத் தேவை இப்ப உங்க அத்தை.அவ்வளவுதான்."

"கவலைப்படாதே; நான் பார்த்துக்கறேன்."

"அப்ப நானு...?"

"நீ வேணாம்.நான் பார்த்துக்கறேன்.நீ கவலைப்படாம இரு, என்ன...?" ... வடிவேலு சுதாரித்துக் கொண்டு நழுவுகிறான்.

சற்று தூரச் சென்று பாக்கெட்டில் கையைவிட்டு சாவிக் கொத்தை எடுத்துப் பார்த்து சில்மிஷமாய் சிரிக்கிறான்.

எப்படியும் பத்து பவுனுக்குக் குறையாது" என்றும் சொல்லிக் கொள்கிறான்.

"யார் அங்கிள் அது...? என்னை இன்ட்ரட்யூஸ் பண்ணின மாதிரி அவரை எனக்குப் பண்ணலையே?" ... வீட்டினுள் மீனா கேட்கிறாள்... கந்தசாமி வழிய ஆரம்பிக்கிறார்.

"அவனாம்மா?... நீ எப்படி பூரணிக்கு அண்ணன் மகளோ, அப்படி அவன் என் ஒண்ணுவிட்ட தங்கச்சி மகன்.வடிவேலு அவன் பேரு.

"ஏதோ ஃபோட்டோ, அத்தைன்னு சொன்ன மாதிரி இருந்திச்சே..."

"ஐய... அது வந்து... அது வந்தும்மா ஒரு விசேஷத்துல ஃபோட்டோ, படம் எடுக்கும்போது பூரணியும் விழுந்திருக்கா... அதச் சொன்னான்."

மீனா புரிந்து கொள்கிறாள்.கந்தசாமி பொய்யை மென்னு துப்புகிறார்.சரி விட்டுப் பிடிப்போம் என்று நினைத்துக் கொள்கிறாள்.

"அம்மா, நீ வந்ததுல இருந்து ஒண்ணும் சாப்பிடலியே..." கந்தசாமி பேச்சை

மாற்றும்போது தேவியின் குரல் சமையல் கட்டிலிருந்து ஒலிக்கிறது.

"அப்பா! மீனாக்குதான் காபி போட்டுக்கிட்டிருக்கேன்."

"சீக்கிரம் போட்டு எடுத்திக்கிட்டு வாம்மா..."

"சரிப்பா..."

"ஆமா... ஆன்ட்டீ இப்ப எங்க அங்கிள்? அவங்க எப்ப காணாம போனாங்க? இதுபத்தி போலீஸ்ல ஏதாச்சும் புகார் தந்திருக்கீங்களா?"

"ஐயோ... இல்லம்மா! இதுல போலீஸை எதுக்குமா போட்டு இழுத்துக்கிட்டு? மானம் போயிடும்."

"என்ன இது புரியாம பேசிகிட்டு... வேற எப்படித் தேடப் போறீங்க?"

"எனக்கே ஒண்ணும் புரியலம்மா."

"நான் கேக்கற கேள்விக்கு முதல்ல பதில் சொல்லுங்க.பயப்படாதீங்க. நான்தான் வந்துட்டேன்ல?..."

"சரிம்மா" ... நடுவில் காபியுடன் நுழைகிறாள் தேவி.அம்மாவை தொலைத்த துக்கத்தை முகம் முழுக்க பூசிக் கொண்டிருக்கிறாள்.

"ஏய் டோண்ட் ஓர்ரி..." அவளை வருடித் தருகிறது மீனாவின் கரங்கள். அவளுக்கு காலையிலிருந்தே லேசான தலைவலி. அதிலிருந்து நொடிப் பொழுதில் இப்பொழுது விடுதலை கிடைக்கிறது.

"அக்கா, உங்க கை பட்ட மறுவினாடி தலைவலி பறந்து போயிடுச்சுக்கா... ரொம்ப ஆச்சரியமா இருக்கு..." என்கிறாள்.

"ஆமாம் தேவி. மீனா ஒண்ணும் சாதாரண பொண்ணு இல்ல. அவ மேல சாமி இருக்கு.பட்டணம் பூரா இதே தான் பேச்சு."

"போச்சுடா... ஏய் அகிலா! வாயவெச்சுக்கிட்டு சும்மா இருக்கமாட்டே? சாமியும் கிடையாது;பூதமும் கிடையாது அங்கிள்! உக்காருங்க இப்படி.... என் கேள்விக்குப் பதில் சொல்லுங்க." ... காபி குடித்தபடியே அவள் கேட்க ஆரம்பிக்கிறாள்.

அதே சமயம்...

‘கேளப்பா...!

பூதமைந்தில் திடதேகம் கொண்டதுவோ நிலம்.

நிலமதும் ஐந்தாம் ... ஐந்தில் குறிஞ்சியே சொர்ணத்து முதற்களம்!

வலமிடும் இரவியும், சந்திரவெள்ளியும் நலங்கெடும் கிரகண நாளில்...

முதற்களம் கொள்ளுமே முனைப்பான மாற்றங்கள்!

ஆலதன் சூல்கூட சீலம் கெடும் அச்சில நொடிகளில்

கோளதன் வக்கிரம் கொடுக்குமொரு மாற்றத்தில்

துளமிசை நெகிழ்ந்திட சில தாமிரத்தாதுகளும் தங்கமாகும்!

சொர்ணஜாலத் திரட்டுக் குறிப்பு

தோளில் கை போட்டுத் திருப்பிய ஆசாரியிடம் மல்லுகட்டிக் கொண்டிருந்தான் வடிவேலு...

"ஆசாரி... சொன்னா நம்புய்யா.இந்தச் சாவிக் கொத்து என் மாமா கந்தசாமியோடது.இது எப்படித் தங்கமாச்சு? யார் பண்ணாங்றதெல்லாம் எனக்குத் தெரியாது..."

"இல்ல வடிவேலு நீ பொய் சொல்றே... உனக்குத் தெரியும்."

"யோவ்! என்னயா நீ... சரி, தெரியும்னே வெச்சுக்க.இப்ப அதுக்கு என்ன பண்ணனுங்கறே?"

"ஒண்ணும் பண்ண வேணாம்.என் கிட்ட உண்மையச் சொல்லு.நானும் நீயும் கூட்டு சேருவோம்.தங்கமா அள்ளலாம்."

"ஆமா.... தங்கமா அள்ளலாம்.அது என்னவோ அந்த மலைல குவிஞ்சு கிடக்குது; போய் அள்ளிக்கிட்டு வரலாம்கற மாதிரி பேசறியே? அது என்ன காயா... இல்ல பழமா ... அள்ளிக்கிட்டு வர."

"பாத்தியா... பாத்தியா... உன்னையும் அறியாம மலைன்னுட்டே! அந்த மலைல இருக்கற தங்கசாமி பத்தி, நானும் கேள்விப்பட்டிருக்கேன்;ஆனா நம்புனதில்ல. ஏன்னா, ,ரசவாதம் சாத்தியம்ங்கிறதப் புரிஞ்சுக்கிட்டேன்.

ஒரு சாவிக் கொத்து இல்ல வடிவேலு... இரண்டு! நீ போன உடனே கந்தசாமி மவ, அவ வீட்டு சாவிக்கொத்தை, உன்னை மாதிரியே எடுத்திக்கிட்டு வந்தா.அதுவும் பசும்தங்கம்.அப்பழுக்கு

கிடையாது.அற்புதமான பஸ்பத்தங்கம்.நெருப்புல வாட்டும்போது நூறு மணி கிடந்தாலும் துளி சாம்பல் தட்டாது. தன்மையும் கெடாது. ஒரு பலம் தங்கத்தோட, ஒரு பலம் செம்பு சேர்த்து, நினைக்கிற மாதிரி வார்க்கலாம்.உறுதி குறையாம இருக்கும் காரட்டும் குறையயாது."

"ஆசாரி... நிறுத்துய்யா. என்ன நீ, தங்கம் பத்தி நான் உன்கிட்டே என்ன உரையா கேட்டேன்.அடுக்கறே? முடிவா சொல்றேன்.மலைன்னு ஒரு பேச்சுக்கு சொன்னேன்.மலைக்கும், தங்கத்துக்கும் என்ன சம்பந்தமோ எனக்குத் தெரியாது.ஆளவிடு..." சொல்லி விட்டு நடக்கிறான்.

"வடிவேலு! நில்லுப்பா, நில்லு... என்னை நம்பு.உனக்கு எம்புட்டு தங்கம் கிடைச்சாலும் எங்க இனத்தோட ஒத்தாசை இல்லாம உன்னால விக்கவோ, மாத்தவோ முடியாது."

"ஆசாரி சொன்னதில் உள்ள உண்மை வடிவேலுவின் காலரைப் பற்றி நிறுத்துகிறது.

நிற்கிறான்.

ஆசாரி நெருங்கி வருகிறார்.

"சொல்லு... இது ரசவாதத் தங்கம்தானே? மலைல கிடைச்சதுதானே?"

"மலைதான் கிடச்சுது.ஆனா ரசவாதத் தங்கமான்னு தெரியாது.""புரியும்படி சொல்லு. அந்த தங்கசாமிய பார்த்தியா?"

வடிவேலு தயங்கித் தயங்கி நடந்தைக் கூறுகிறான். ஆசாரி முகம் அபரிமிதமாய் மாறுகிறது. வியப்பும,; அதிர்ச்சியும் சரம் சரமாக வந்து தாக்குகின்றன.

பரண்மேல் கிடந்தது அந்த மரப்பெட்டி. இரவென்றும் பாராமல் ஏறி, அதைக் கீழிறக்கி தூசு தட்டித் திறந்த போது உள்ளேபழைய வேட்டியால் கட்டப்பட்டு ஒரு கட்டு. அதன் நெடி ஆசாரியையும், வடிவேலுவையும் தும்ம விடுகிறது. அதைப் பிரிக்க முனையும் போதே, இத்துப் போய் கட்டப்பட்டு பல ஆண்டுகள் ஆகிவிட்டன என்பதும் தெரிய வருகிறது. கட்டுக்குள் புத்தகங்கள்.

அச்சகம் பிறந்தகாலத்தில் உருவான புத்தகங்கள். ,பஸ்பரசம், சொர்ண ஜாலத் திரட்டு, சொர்ண மாளிகை, ரசவாத ரகஸ்யமெனும் தங்கம் பண்ணும் முறை' என்று புத்தகங்கள் முழுக்க முழுக்க தங்கத்தைச் சார்த்தே இருக்கின்றன.

''வடிவேலு பார்த்தியா....? இது என்கொள்ளுத் தாத்தன் விஷ்ணு பிரம்ம ஆசாரியோட புத்தகங்கள். அவர் காசி, ராமேஸ்வரம்னு தேசாடனம் போனப்ப, சாமி கும்பிடப் போனதை விட புத்தகக்கடை பக்கம் போய் இந்த மாதிரி புத்தகங்க வாங்குனதுதான் அதிகம்.

இதைப் பார்த்துப், படிச்சு மலைப்பக்கம் போய் மூலி கைச் செடி பிடுங்கிக்கிட்டு வந்து தங்கம் பண்றேன்னு சதா பித்தா கிடந்தாராம் எங்க தாத்தா.

அப்பால எங்கயோ போன ஆள்தான்.இந்த நிமிஷம் அது எங்க போச்சு, என்ன ஆச்சுன்னு யாருக்கும் தெரியாது.இதையெல்லாம் ,ஒழியட்டும் சனி'ன்னு என் பாட்டி கட்டி, மேல தூக்கிப் போட்டுட்டாள்.இப்பதான் நான் திறக்கிறேன்.''

''நிண்ட விளக்கமுடன் புத்தகத்தை விரிக்கிறார் கார்மேக ஆசாரி.அவருக்கே ஐம்பது வயது இருக்கும் என்றால், புத்தகங்களுக்கு? சில புத்தகங்கள் கையாலேயே எழுதப்பட்டுள்ளன.

அதில் ஒன்று, ,மகாலிங்க மலை புராணம்' என்கிற பெயரில்.... அதுதான் விரிபட்டு நிற்கிறது.

''ஆசாரி இப்ப இதை எதுக்குய்யா எடுக்கறே...? இதுல என்ன இருக்கு?''

''இல்ல வடிவேலு... அத தங்கசாமி பத்தி என் தாத்தா ஏதாச்சும் எழுதியிருக்கா, பாப்போம்.''

''பாத்து?...''

''என்ன நீ புரியாம கேள்வி கேக்கறே? உன்கிட்ட இருக்கிற விஷயங்களுக்கும், இதுக்கும் ஏதாவது ஒத்துமை இருக்கான்னு பார்ப்போம்.''

''வேண்டாத வேலை.நான் சொல்றேன் தங்கசாமியை தேடிப் பிடிச்சா எல்லா விவகாரமும் தெரிஞ்சுட்டுப் போவுது இதுக்கு எதுக்கு, இந்தப் பழைய குப்பையைத் தோண்டனும்?''

''தேடிப் பிடிக்கணும் இல்லையா? இந்த மலைல எங்கன்னு போய் தேடுவே?''

''இந்தப் புத்தகத்தைப் பார்த்தா தெரிஞ்சுடுமோ?''

''நிச்சயமா? எங்க அந்த பிளான் பேப்பர்? விரிச்சுப்பிடி, ஒரு பார்வை

*பார்த்துக்கறேன்?மகாலிங்க மலை ஒண்ணும் லேசுப்பட்ட மலை கிடையாது பாட்டாவே போட்டிருக்கு பார்..."*

*"ரமான் பாணம் போகும் தூரம் தெற்கிலும்*

*லட்சுமண பாண தூரம் வடக்கிலும் அர்ஜுன பாண தூரம் மேக்கிலும் விரிந்த மலை விந்தை மலை எம்பிரான் மகாலிங்க மலை..."*

*"எழுதுனவரு ஊர், கிழக்குல இருந்திருக்கும்.இதா கேள்வி? கிடைக்குமா? இப்பெல்லாம் இவ்வளவு விளக்கமும்.." ... கேள்வியோடு பதிலில் புரள ஆரம்பிக்கின்றவரை சலிப்போடு பார்க்கிறான் வடிவேலு. தனியாகப் போய் இரண்டில் ஒன்று பார்க்க ஆசைப்பட்டவனுக்கு, ஆசாரியால் விஷயம் இத்தனை இழுபடுவது வெறுப்பைத் தருகிறது.*

*"ஆசாரி... நீ பாத்து வை.நான் ராஜபாளையம் வரை போய்ட்டு வரேன்... ஒரு முக்கிய வேலை இருக்கு.முடிச்சுட்டு வரேன்." .... சொல்லிவிட்டுக் கிளம்புகிறான். மனதுக்குள் சொல்லிக் கொள்கிறான்:*

*"மவனே, இப்படியே படிச்சுக்கிட்டு அல்லாடிக்கிட்டு இரு.நான் பாக்காத மகாலிங்க மலையாக்கும்?... என் ப்ளான் படியே போய், ஒரு ரவுண்டு அடிச்சிட்டு வரேன். அப்புறமா உன்கூட கூட்டணி அமைக்கறதப் பத்தி யோசிக்கிறேன்..."*

*வடிவேலு வாசலைத் தாண்டியிருப்பான்.ஆசாரி உரக்கப் படிக்கிறார்:*

*,உள்ளும் புறமும் ஒன்றாக எண்ணம் முழுதும் சிவமாக இருப்பவர் மட்டுமே மலை தப்புவர். மற்றையோர்க்கெல்லாம் அம்மாமலை உயிருக்கே வைத்திடும் உலை!'*

# 14

*'கேளப்பா**...!***

*வேதமிசைக்கும் சிவநேசர் தம் சித்தியில்*

*பாதமசைக்கும் பரமனும் நல் முக்தியை*

*சாதகமாய் நல்கிடினும் **...** சொர்ண*

*வாதகமெனும் ரசாயனச் சக்திக்கு அது சிறிதில்லை**.***

*அரிதாகிய நவபாஷாணச் சித்தர்க்கு*

இது பெரிதுமில்லை!

சொர்ணஜாலத் திரட்டுக் குறிப்பு

மழை பெய்து முடிந்திருந்தது... வானத்திலும் மேகம் விலகி நீலம் தெரிய, நீந்தித் திரிய ஆரம்பித்து விட்டன பறவைகள் அழகாய் வானவில்லும் வடிவமெடுத்து நிற்கிறது.

சதுரகிரி மலையின் பாறைத் திண்டுகள் எல்லாம் மழையில் குளித்த ஈரத்தோடு சூரியக் கதிரால் காயமுற்படும் வேளை... புதரொன்று அசைய அங்கே முகமொன்று தெரிகிறது.விலகிய புதருக்கு அப்பால்குகை போல ஏதோ தெரிகிறது.அதில் இன்னொரு உருவம்! சுவர் ஏறிக் குதிப்பவன் போல பாறை மேல் கை ஊன்றி, கால்களால் தாவி ஏறி வெளிவரப் பார்க்கிறது அது.இரு பாறைகளுக்கு இடையே சில அங்குல அகலத்திற்குத் தான்இடைவெளி ஆனால் என்னதான் முயன்றாலும் தலையோ, உடலோ நுழைய முடியாது.

அந்த இடைவெளிக்குள்ளா இந்த உருவம் புகுந்து வந்து நினைக்க மலைப்பாக இருந்தாலும் அதுதான் உண்மைபுதரை விட்டு வெளிவந்த உருவத்திற்கு வயது இத்தனை என்று தீர்மானிக்க முடியவில்லை. தாடியும், மீசையும் முகத்தில் பொசிந்து கிடக்க, தலையில் சடை விழுந்த கள்ளிக்கட்டாய் ஜடாமுடி..

மார்பும், வயிறும் எலும்புக் கூட்டின் மேல் சுற்றிய தோலால் சமனமாய் தெரிய இடையில் ஒரு கோவணம்.

நிமிர்ந்தெழுந்து புதர் விலக்கி அந்த உருவமும் வெளிவர, புத்தொளி வானமும் வில் விழுந்த சூழலும் அதன் கண்ணில் பட... காத்திருக்கும் உருவம், வந்து நிற்கும் உருவத்தைப் பார்த்துச் சிரிக்கிறது.

வானம் பார்த்து இருவரும் ஒரு சேரக் கை கூப்புகின்றனர். பின் நடக்க ஆரம்பிக்கின்றனர்.மழை ஈரத் தரையில், ஆங்காங்கே சில இடங்களில் நீரின் நெளிசல்.நடக்கையில் கணுக்கால் நனைகிறது.சுகமாக இருக்கிறது.

சில நிமிட நடைக்குப் பிறகு காதில் சலசலவென்று நீரோடும் சப்தம் விழுகிறது. கூடவே காற்றில் கலந்து வரும் தீய்ந்த துளசியின் வாசம் நாசியில் கமகமக்கிறது. விபூதிப் பச்சிலை, மஞ்சள் துண்டு எல்லாமும் கூட கமகமக்கிற மாதிரி இருக்கிறது.நடக்கும் இருவரின் மேலும் அருகாமை மரங்களின் கிளைகளும், கிளைகளையே கொழுவாகப் பற்றி நீண்டிருக்கும் நீர் வேலிக் கொடிகளும் உரசுகின்றன.கரங்களால் ஒதுக்கி

நடைபோடுகின்றனர்.

நடைபோடும் நிலப்பரப்பில் நீர் கூடி கசிந்து ஓட, ஓடும் நீரெல்லாம்கூட ஏதோ கரைத்தது போல மஞ்சளாய்த் தெரிய இருவரும் அந்த மஞ்சள் நீர்ப பிராந்தியத்தில் வேகமாய் நடந்து, மேடு பள்ளங்களிலும் ஏறி இறங்கி, காதை அடைக்கும் ஹோவென்ற நீர் இரைச்சல் சப்தத்திற்கு காரணமான அருவி ஒன்றின் முன் போய் நின்றனர். அங்கே இவர்களுக்கு முன்பாகவே இவர்களைப் போல் பலர்!

மார்பும், வயிறும் எலும்புக்கூட்டின் மேல் சுற்றிய தோலால் சமனமாய் தெரிய இடையில் ஒரு கோவணம்.

நிமிர்ந்தெழுந்து புதர் விலக்கி அந்த உருவமும் வெளிவர, புத்தொளி வானமும் வில் விழுந்த சூழலும் அதன் கண்ணில் பட.... காத்திருக்கும் உருவம், வந்து உருவத்தைப் பார்த்துச் சிரிக்கிறது.

வானம் பார்த்து இருவரும் ஒருசேரக் கை கூப்புகின்றனர்.

அருவி நீர், மஞ்சள் கலந்து காய்ச்சிய பாலாய் கொட்டுமிடத்தில் ஒருவர் ஒற்றைக் காலில் நின்ற வண்ணமிருக்கிறார். உள்ளடங்கிய பாறைக்குடைவில் ஒருவர் சவமாட்டம் படுத்துக் கொண்டிருக்கிறார்.விழும் நீர் தேங்கிப் பின் பாறை இடுக்குகளில் மோதிப் பிரியும் ஒரு பரப்பில் பாம்பைப் போல குப்புறப்படுத்துக் கிடக்கிறார் ஒருவர்!

தேங்கிக் கிடக்கும் நீரின் மேல், மிதவையைப் போல ஆடாது அசையாது சப்பணமிட்டுக் கொண்டு ஒருவர்!

பொட்டுத் துணியில்லாத சன்யாசியிலிருந்து இடைத்துண்டு, கௌபீனம் என்று அங்கே ரகவாரியாக இருக்கின்றனர்.

இவர்கள் அத்தனை பேர் இருப்பது தெரிந்தும் அவர்களைப் பார்த்தும் பார்க்காதது போல், வந்த இருவரும் தங்கள் பங்கிற்கு நீராட ஆரம்பிக்கின்றனர்.

அந்த மஞ்சள் நீர் வீழ்ச்சியும், சாரலும், நீராடும் சன்யாசிக் கூட்டமும் பார்க்க மிக வித்தியாசமாக இருக்கிறது. குறிப்பாக பிள்ளையார் முகம் போன்ற ஒரு பாறைவரை வந்து நின்றபடி, ஏறத்தாழ நூறு தப்படி தொலைவில் கீழ்நோக்கிச் சரிந்த கோணத்தில் பார்த்துக் கொண்டிருந்த வடிவேலுக்கு ஆச்சரியம் பிடுங்கித் தின்றது.

மலை பற்றி நிறைய கேள்விப்பட்டிருக்கிறான். ஏகத்துக்கும் சன்யாசிகள்

உண்டு என்றெல்லாம்...

,அவர்களைப் பார்க்க முடியாது ... பார்க்க பல ஜென்ம புண்ணியம் தேவை' என்றும் சிலர் அதிசயமாகச் சொன்னதும் வடிவேலுக்குள் ஓடுகிறது.

,அப்படி என்றால் நான் நிறைய புண்ணியம் செய்தவனா? கேள்வி கொத்தாகிறது அவனுக்குள்.

ராமாமிர்தம் என்று ஒரு பள்ளி வாத்தியார்.இப்படித்தான் ஒரு கிழட்டு சன்யாசியை இதுபோல ஒரு தருணத்தில் பார்த்து அதன் காரணமாக வாழ்க்கையில் மிகப் பெரிய உயர்வை அடைந்தாராம்.

,எப்படி அடைந்தார்? எதனால் அடைந்தார்?...' என்பதெல்லாம் புரியாத புதிர். பின்னாளில் அவரை இந்த மலை இழுத்துக் கொண்டுவிட்டது. அவரும் சன்யாசியாகிவிட்டாராம்.நினைவில் ராமாமிர்தம் முகம் கிளர்ந்தெழ, அவர் எங்காவது தெரிகிறாரா என்று பார்க்கிறான்.புதர் போல முகங்கள்.இதில் அடையாளம் காண்பது எப்படி?

இது நாள் வரையில் இத்தனை தூரம் இந்த மலைப்பக்கம் வந்ததில்லை.தங்கச் சாவிக் கொத்து ஆசை காட்டி இழுத்து வந்துவிட்டது.

தோட்டம் ... விவசாய வேலை எல்லாவற்றையும் விடவும் இப்படி அலைவதால் லாபமிருப்பதாக மனக்கூடு சொல்கிறது.அது உண்மைதான்... இதோ! எதிரில எத்தனை, எத்தனை சன்யாசிகள்?

,இதில் அந்த தங்கசாமி எங்கே? ராமாமிர்தம் எங்கே? இவர்களிடம்தான் அகப்பட்டுக் கிடக்கிறாளா அத்தை பூரணி?

,எங்கே... எங்கே?'

விழிமணிகள் ஊன்றிப் பார்த்துத் தேடுகின்றன.சற்று முன் சென்று பார்ககலாமா?

கால்கள் உடம்பை முன் இழுத்துச் செல்லப் பார்க்கின்றன.

,போய் பேசுவோம்..இந்த மலைக்காட்டில் எப்படித் தனியாக காலந்தள்ள முடிகிறது?' என்று கேட்போம்.

,இந்த நீர்வீழ்ச்சி மட்டும் ஏன் மஞ்சள் பூத்துக் கொட்டுகிறது?' ... கேட்போம்.

,மறக்காமல் ,சாவிக் கொத்து தங்கமானது எப்படி,' என்று கேட்டே தீரவேண்டும்.'

.... வடிவேலு, எண்ணக் கொப்பளிப்போடு முன் நடக்கிறான்.சப்தம் பிறக்கிறது. ,ப்தக்... ப்தக்... சர சரங் சர...'

மூழ்கியபடி இருக்கும் ஒருவர் வடிவேலுவை பார்த்துவிடுகிறார். அதிர்ச்சியைக் காட்டுகிறார்.

"நில்லு..." குரல் கொடுக்கிறார்.கொடுத்த கையோடு அருவியை விட்டு நீங்கி வடிவேலுயை நோக்கி வருகிறார்.

வந்த பிறகுதான் தெரிகிறது வடிவேலுவிற்கே...

,ராமாமிர்தமோ?

"என்ன பாக்கறே?... எப்படி வந்தே?"

"எப்படின்னா?... நடந்துதான்.இது என்ன கேள்வி? நீங்க.... நீங்க ராமாமிர்தம் சார் தானே?"

"நான் இப்ப சிவாமிர்தம்.இங்க எப்படி வந்தே?"

"ஏன் வரக்கூடாதா? ஆமா, எப்படி சார் இங்க காலந்தள்ளிகிட்டு இருக்கீங்க? அடேங்கப்பா எவ்வளவு சாமியாருங்க? எல்லாருமே உங்க கேஸ்தானா?"

"உஸ்ஸ்.... மெல்லப் பேசு.ரொம்ப ஆச்சரியம்.இத்தனை பேர் தரிசனம் உனக்கு கிடைச்சிருக்குன்னா உன் ஜாதகம் விசேஷமானதாதான் இருக்கணும்..."

சிவாமிர்தம் என்று தன்னைச் சொல்லிக் கொண்ட சாமியாரின் பேச்சு, வடிவேலுக்கு ஆச்சரியம் மூட்டுகிறது. அதே சமயம் அது வரை அருவிப் பரப்பில் தெரிந்த சாமியார்கள் யாவரும் இப்பொழுது ஓடிவிட்டது போல அருவி ஆளரவமின்றித் தெரிவது திகைப்பையும் காட்டுகிறது.

"ஆமா... எங்க இங்க இருந்த சாமியாருங்கெல்லாம்?"

"சரி. சரி... போயிடு.இதுக்கு மேல எதையும் கேட்காதே. யாரையும் தேடாதே.அது உனக்கு நல்லதில்ல...!"

"என்ன சாமி இது?ஏதேதோ சொல்றீங்க?"

"நான் இன்னும் முழுசா அந்த மகாலிங்கத்தோட அருளைப் பெறலை.அதான் உன்னைப் பார்த்துட்டேன் பேசிக்கிட்டும் இருக்கேன்.தப்பு இது.நீ கிளம்புப்பா..." ... அவர் சொன்ன கையோடு

வேகமாகத் திரும்பி நடக்கப் பார்க்கிறார்.

"நில்லுங்க சாமி.நான் என்ன தப்பா கேட்டுட்டேன்?" வடிவேலுவின் கேள்விக்குப் பதிலே தராமல் விறுவிறுவென்று நடக்கிறது அந்த சாமி.

வடிவேலுவும் விடாமல் பின் தொடர்கிறான்.

"சாமி... சாமி..."

"வேண்டாம்.... வராதே போயிடு."

"ஏன் அப்படிச் சொல்றீங்க? எனக்குச் சில விஷயங்க தெரியணும்."

"எதையும் கேக்காதே.போயிடு."

"போக மாட்டேன்.பதில் சொல்லுங்க.என்ன நடக்குது இந்த மலையில? நான் என்ன ராட்சஸனா? எதுக்கு இப்படி ஓடறீங்க? சாதாரண மனுஷன்யா நான்?" ... விடாமல் பேசியபடி பின் தொடர்கிறான் வடிவேலு.

"போயிருப்பா... எங்களைப் பார்த்தாலும் நாங்க கூப்பிடாம நீ வரக்கூடாது.எங்களுக்க எதிரா சின்ன துரும்பைக் கூட கிள்ளிப் போடவும் கூடாது.எல்லாமே உனக்க ஆபத்து.போயிடு.எங்க ஏகாந்தத்துக்கு இடைஞ்சல் பண்ணாதே.உன் லௌகீக சிக்கல்களைச் சொல்லி எங்களை சஞ்சலப்படுத்தாதே."

"உங்க பேச்சே எனக்குப் புரியல... நானும் மனுஷன்; நிங்களும் மனுஷன்.ஏன் என்னென்னவோ பேசறீங்க...?"

அவர் சட்டென்று நிற்கிறார். மளுக்கென்று திரும்புகிறார்.

"என்ன சொன்னே?.... நியும் மனுஷன்; நானும் மனுஷனா?,

"இல்லியா பின்னே?"

"இல்லதான்.நாங்க சிவம். சுகப்ரும்ம சிவம். பசி காத்தில்லாத ஆனந்த சிவம். சிவத்தோட விளையாடதே! போ..."

"சரி போறேன்.எங்க அத்தை எங்க இருக்கான்னு மட்டும் சொல்லுங்க..."

"உன் பிரச்சினையை சொல்ல ஆரம்பிச்சிட்டே பார்த்தியா...?"

"சிவத்துக்கிட்ட பக்தன் பிரச்சினையை சொல்லக்கூடாதா?"

... வடிவேலு கச்சிதமாகத்தான் மடக்கிவிட்டான்.அந்த சிவாமிர்த சன்யாசி

*ஒரு வினாடி திணறி, பின் வடிவேலுவை நெற்றிப் புருவத்தை மையமிட்டு ஊன்றிப் பார்க்கிறார்.*

*அந்த நொடியில் அவர் மனக்கண்ணில் அவனுக்கு இன்னும் சில நிமிடங்கள்தான் ஆயுள் என்பது போல ஒரு எண்ணம் தோன்ற, அவர் முகம் ஒளியிழந்து இருண்டு போய்"மகாலிங்கம்..." என்று முணுமுணுக்கிறார்.*

# 15

*'கேளப்பா...!*

*பாதகமில்லா சாதகத்தில் ஒன்பதில்*

*வியாழன் .... புதனும் உடன் சேரும்*

*சந்திர திசைக் களத்தில் ... மந்திரப் பார்ப்பனர்*

*மதிப்புலம் வசப்படும் சொர்ணவித்தை! மற்று*

*ஆதிசக்தியம்சம் மேவிச் சுடர்விடும்*

*பேதை ஒருத்திக்கும் வசப்படும் ... அவள்*

*கோளின் பாதையில் வியாழன் ஐந்தில் ... வருகையில்...'*

*சொர்ணஜாலத் திரட்டுக் குறிப்பு*

*நல்ல தேஜோமயமான முகத்தில் வினாடியில் பரவிய கலவர உணர்வை வடிவேலும் கச்சிதமாகக் கவனிக்கிறான்.*

*"ஏன் சார்... ஒரு மாதிரி ஆகிட்டீங்க? நான் ஒண்ணும் தப்பா கேட்டுடலையே...?"*

*"ஒண்ணுமில்லே... அந்த மகாலிங்கத்த நினைச்சுக்கிட்டே போ.ஒரு வினாடி கூட அந்த நினைப்பை விட்டுடாதே. போற வழிக்காவது புண்ணியமும், அடுத்த பிறப்பாவது தீர்க்காயுசோடயம் அமையட்டும்."*

*சிவாமிர்த சாமி சொல்லிவிட்டு, விடுவிடு என்று நடக்கிறார்.*

*"சாமி... சாமி"... வடிவேலு விடுவதாகத் தெரியவில்லை.*

*"வேண்டாம் வடிவேலு. வராதே போ.போயிடு..." சொல்லியபடியே ஒரு*

புதருக்குள் விருட்டென்று நுழைகிறது சாமி.

வடிவேலுவும் பின்தொடர்ந்து புதரைக் குடைந்து பார்க்கிறான்.மறுபுறம் அடப்பமாக வனம். மற்றபடி சிவாமிர்த சாமி போன சுவடே தெரியவில்லை.

ஒரு கூஷணம் பிடறி உசும்புகிறது.

சிவாமிர்த சாமி சொன்னதை சரியாக அர்த்தப்படுத்திக் கொள்ள முடியவில்லை.குழம்பிப் போகிறான்.மலைக்கூட்டில் எங்கே எந்த புள்ளியில் இருக்கிறோம் என்பதே பிடிபடவில்லை.அருகாமைப் பாறை ஒன்றன் மேல் அமர்ந்து கொண்டு ஆசுவாசிக்கிறான்.அப்படியே மல்லாக்கப்படுத்தபடி வானம் பார்க்கிறான்.

ஒரு ஆர்வத்தில் நெடுந்தூரம் வந்த களைப்பு, கால் தொடை இரண்டில் வலியாய் உருவாகி ஒரு பிசை பிசைகிறது.

எழுந்து அமர்ந்து தொடையை பிடித்து விட்டுக் கொள்ளத் தொடங்குகிறான். அப்பொழுதுதான் ,மகாலிங்கம்' என்ற ஒரு தொலைதூர சப்தம் காதை உரசியது.

"யாரது?" விருட்டென்று எழுந்து சுற்றும் முற்றும் பார்த்தபோது ஒரு விறகு கூட்டுச் சுமையுடன் பூரணி தொலைவில் போய்க் கொண்டிருக்கிறாள்.

"பளிங்கர் இனப் பெண்களைப் போல அள்ளு கொசுவச் சேலை உடுத்தாமல், ஊர்க்கார பெண்களைப் போல சாதாரணமாக உடுத்திக் கொண்டு சேலை முந்தியையே தலைக்கான கம்மாடாக வைத்து அதன் மேல் விறகை வைத்திருக்கிறாள்.

"அத்தை" ... கத்திவிட முனைந்தபோது உள்ளுணர்வு நொடித் தாமதம் இன்றி தடுத்து, ,பின் தொடர்' என்று கச்சிதமாகச் சொல்கிறது.

எழுந்து அவ்வாறே செய்ய ஆயத்தமாகிறான்.

கைக் கடிகாரம் மணி ஐந்து என்று காட்டிட, மாலைச் சூரியனை ஆரஞ்சு வண்ணத்தில் தோய்த்தெடுத்துக் கொண்டிருந்தது மேற்று பாகம்!

கடிகாரத்தை பார்க்கிறர் கருணாகரன். மணி ஐந்து அப்படியே தொலைபேசி பக்கம் திரும்புகிறார்.மீனா போனவுடன் ஃபோன் செய்வதாக்க கூறியிருந்தாளே...? இதனால் அனிச்சையாக கண்கள் அதையே பார்க்கின்றன.

அவ்வப்போது அநாமதேய ஃபோன் கால் ஒன்று. ,விதிவலியது, பெரியது, அசைக்க முடியாதது' என்று பீடிகையாகப் போட்டுத் தள்ளிக் கொண்டிருந்தது.

இப்பொழுது திரும்பவும் சிணுங்கல்.

ஓடிப் போய் எடுக்கிறார்.

"ஹலோ அங்கிள்! நான் ப்ரகாஷ் பேசறேன்"

"சொல்லுங்க ப்ரகாஷ்..."

"மீனா இல்லியா?"

ப்ரகாஷின் கேள்வி கருணாகரனை சங்கடப்படுத்துகிறது.

,என்ன பதில் சொல்லலாம்?' ... சில நொடி தாமதத்தைக் குடைகிறான் பர்காஷ்.

"என்ன அங்க்கிள்... ஏன் பேசமாட்டேங்கறீங்க?"

"நத்திங்... நத்திங்.. அவ இப்ப ஊர்ல இல்லை ப்ரகாஷ்"

"ஊர்ல இல்லையா?"

"ஆமாம். ஷி வென்ட் டு வத்றாப்."

"வத்றாப்பா...?"

"ஆமாம்... வத்ராயிருப்புன்னு பேர்.ராஜபாளையம் பக்கத்துல இருக்கு."

"ஐ நோ... குட்டி மலையாளம்னும் அந்த ஊரைச் சொல்லுவாங்க.அங்க எதுக்கு?"

"அங்க என் சிஸ்டர் இருக்கா.அதான் பாக்கலாம்னு..."

"என்கிட்ட சொல்லவேயில்லையே?"

"யார்கிட்டேயும் சொல்லவேண்டாம்னு சொன்னா.உங்கிட்ட மறைக்கறது எனக்கு ஹானஸ்டா படலை. அதான்..."

"என்னத்த சொல்ல... எல்லாம் அவளோட ஸ்பெஷல் பவரால வந்த வினை. யாரைப் பாரு, அவ கால்ல விழுந்தா அவதான் என்ன பண்ணுவா? மென்ட்டலி ஒரு மாதிரி இம்பேலன்ஸ் ஆகி கொஞ்சம் தனியா இருக்கலாம்னு நினைச்சுக் கிளம்பிட்டா."

... மறுமுனையில் அதற்கு மேல் பேசாமல் ப்ரகாஷ் ஃபோனை கோபமாக முடக்குவது கருணாகனுக்கும் புரிகிறது சப்தம் மூலம்..

சாதாரணமாக யூனிபார்மில் இருக்கும்போது தான் இறுக்கமாக இருப்பார்.

இப்பொழுது லுங்கி சட்டையில் இருக்கும்போது மீனா நினைவில் இறுக்கம் தளர்ந்திருந்தது. மீசை நீவி கவலைப்பட ஆரம்பிக்கிறார்.

திரும்ப அழைக்கிறது தொலைபேசி.இம்முறை... அவர் மிக எதிர்பார்த்த மீனா.

"ஹலோ டாட் நல்லபடியா வந்து சேர்ந்துட்டேன்.நீங்க எப்படி இருக்கீங்க?"

"நல்லா இருக்கேன்மா.ஏன் இவ்வளவு லேட்டா ஃபோன் பண்றே?"

"கிழிஞ்சது போங்க. தேவியை தூங்க வச்சுட்டு நான் பப்ளிக் பூத்துக்கு வந்து உங்களுக்கு ஃபோன் செய்துக்கிட்டிருக்கேன்."

"ஆமா... யார் அது தேவி?"

"தேவி யாரா? அத்த மக! நல்லா கேட்டீங்க போங்க... டாட் இன்னொரு விஷயம்! அந்த இங்க இல்லை. காணாமப் போன மாதிரிதான்னு வெச்சுக்குங்களேன்.பக்கத்துல பெரிசா ஒரு மலை. அதான் சதுரகிரி மலைங்கறாங்க.அங்க இருக்கிறதா அகிலா, தேவி, மங்களா, பார்வதி எல்லாம் சொல்றாங்க.நான் போய் தேடிப் பார்க்கலாம்னு இருக்கேன்."

"நீயா... வேண்டாம்மா.அது நீ நினைக்கிற மாதிரி சாதாரண மலை இல்லம்மா..."

"தெரியும்ப்பா... அது எப்படி இருந்தா எனக்கென்ன.நான் ஜாக்கிரதையா இருப்பேன்."

"நோ... நீ போகாதே.பக்கத்து போலீஸ் ஸ்டேஷனுக்கு போய் விவரம் சொல்லு.என் பேரைச் சொல்லு. அவங்க பார்த்துப்பாங்க."

"நோ டாட் என்னால முடியாதப்ப நான் நீங்க சொல்ற மாதிரி நடந்துக்கறேன். அதோட... இந்த விஷயம் ஊருல அவ்வளவா தெரியாது.அது இனிமேலும் தெரிய வேண்டாம்னு ஆசைப்பட்றாங்க எல்லோரும்..."

"இல்லாம்மா... வேண்டாம். சொன்னா கேளு. நான் பார்த்துக்கறேன்.நீ விட்டுடு" ... கருணாகரன் பதறி வெடிக்கிறார்.மீனா புரிந்து கொண்ட

மாதிரி"சரி டாட்… சரி டாட்" என்பது தேய்ந்து காதில் விழுகிறது.

ஆனால், மீனா அப்படி எல்லாம் அடங்கிப் போகிற பெண்ணா என்ன?

கருணாகரன் தொலைபேசியை முடக்கி விட்டு முகத்தைத் துடைத்துவிட்டுக் கொள்கிறார்.

அநாமதேய ஃபோன் கால் எச்சரித்தது போல் விதி பெரிதா? அது மீனாவை ஏதாவது செய்து விடுமா…?

கலங்கியும், குழம்பியும் போகிறது அந்த போலீஸ் சிங்கத்தின் புத்தியே.

அடுத்த நொடி ராஜபாளையம் எஸ்.பி.க்கு ஒரு எஸ்.டி.டி. கால் பறக்க ஆரம்பிக்கிறது!

மலைத்தளத்தில் கந்தசாமி முன் நடக்க பின்னால் மீனா, அகிலா இருவரும்… மலையும் வாவென வரவேற்பதுபோல சாரல் மழையை சிலுப்பிக்க…

"ஒண்டர்ஃபுல் க்ளைமேட். ப்யூட்டிஃபுல் அட்மாஸ்பியர்" … ஸ்லாகிக்கிறாள் மீனா.

கந்தசாமி காதில் அது விழவில்லை.மனது பதைபதைத்துப் போய் கிடக்கிறது.எல்லாம் சங்கிலியால் வந்த சனியன்.எண்ணம் மழுக்க அதிலேயே போய்ப் போய் நிற்கிறது.

அந்த தங்கசாமியைப் பார்க்கப் போய்தானே இத்தனை களேபரமும்? பாழாய்ப் போன மனிதர்.. இப்படியா மனது தவறிழைக்கும்படியான ஒரு காரியத்தை செய்யச் சொல்லுவார்?

குமுற ஆரம்பிக்கிறது மனது கொந்தளிப்பால் உடைபடும் போல் இருக்கின்றன கண்கள். அவற்றை துடைத்துவிட்டுக் கொள்கிறார்.அதை மீனா கச்சிதமாகக் கவனிக்கிறாள்.

"அங்க்கிள்… உங்களுக்கு ஏதோ ஆகியிருக்கு. எதையோ மறைக்கறீங்க, நீங்க!"

ஒரு கோரைப் புதரை பிடுங்கி ஆட்டியபடியே மீனா கேட்பதற்கு கந்தசாமி பாய்ச்சலாக,"அதெல்லாம் ஒண்ணுமில்லைம்மா… ஒண்ணுமில்லை…." என்கிறார்.

"அப்ப கட்டாயம் ஏதோ இருக்கு…"

"இல்லம்மா... என்ன நீ, நான் மறைக்க என்ன இருக்கு?"

"அது எனக்குத் தெரியாது.ஆனா இரும்பை விழுங்கினவன் சுக்கு கஷாயம் குடிச்சு ஜீரணிக்க முடியாது. நீங்களும் அப்படித்தான்.என்கிட்டே மறைக்காதீங்க.என்ன நடந்தது? அத்தை நிஜமாலுமே காணாம போயிட்டாங்களா?... இல்லை உங்களால..."

மீனா முடிக்குமுன் பாய்ந்து கைகளைப் பற்றி,"அம்மாடி... நடந்தைச் சொல்லிடறேன்.சொல்லிடறேன்" என்று கந்தசாமி மிடறு விழுங்குகிறார்.

அகிலாவுக்கு அப்பாவின் அந்தப் பதில் ஆச்சரியம் தான்.மூவருமாக ஓர் ஓராமாக நெல்லி மரம் ஒன்றின் கீழ் அமர, விஸ்தாரமாக விளக்குகிறார் கந்தசாமி.

அரைமணி அவகாசம் எடுத்துச் சொல்லி முடிக்கவும், மீனா, அகிலா இருவருமே கிட்டத்தட்ட உறைந்து விட்டிருக்கின்றனர்.

"இந்த மலைல இத்தனை முடிச்சுக்களா?" முத்தாய்ப்பாகக் கேட்கிறாள்.

"ஆமாம்மா... எனக்க ஒண்ணும் புரியலை.ஒரு பொணத்துக்கு இரண்டு பொணத்த வேற பார்த்துட்டு கதி கலங்கிக்கிடக்கிறேன்.நம்பிக்கை இல்லைன்னா... வடிவேலு வருவான்.கேட்டுப்பாரு அவன்கிட்ட இருக்கிறஃபோட்டோவையும் பார்த்தா, உனக்கு மத்ததும் விளங்கும்."

"அது சரி... அந்தப் பொணங்கள் இப்பவும் இருக்கா?"

"இல்லாம.முதல்ல பார்த்த பொணம், அந்த இடத்துல அப்புறமா இல்லை.அந்தப் பொம்பளை பொணம் இருக்கா, இல்லையான்னு தெரியாது."

"அந்த இடத்தைக் காட்ட முடியுமா?"

"உம்..."

தலையசைத்துவிட்டு முன் நடந்து, முன்பு தான் சரிந்துவிழுந்த பள்ளம் அருகே சென்று நின்று கீழே கைகாட்ட முனையும்போது அவருக்கு தூக்கி வாரிப் போட்டது.

"அங்கே யாரோ சுருண்டு கிடக்கிற மாதிரி தெரிகிறதே..."

உற்றுப் பார்த்து புருவம் சுணங்க பள்ளத்தில் அமர்ந்த நிலையில் சரிந்து இறங்கி, சுருண்டு கிடக்கும் நபரின் முகத்தை இலை, தழை விலக்கிப் பார்த்தபோது, வடிவேலு" என்கிற பெயர் வாயிலிருந்து தெறித்து

விழுந்தது!

## 16

,கேளப்பா...!

புவியிதில் இரவியே புத்துயிர்க் காரகன்...

திவியமாய் பரவித் திசை காட்டிடும் நாயகன்!

நவிலுவேன் இவன் வணக்கம் நலங்களின் இணக்கம்...

கவிழவரும் இருளெலாம் இவனால் களைதனை இழக்கும்!

அவிழுமொரு கருவெனம் விந்து அன்னையத்தன்

இரவித் தசையினில் உருவகம் கொள்ள

வரவி வரும் மகவு என்றும் உமைபாகமே!

உமைபாகமே சித்த ஞானியர் உறவாகுமே!

சொர்ணஜாலத் திரட்டுக் குறிப்பு

"வடிவேலு நீயா?" ... பதறிப் போய் நெருப்பைத் தொட்டதுபோல உதறித் திரும்பிடும் கந்தசாமியை அகிலாவும், மீனாவும் அதிர்ச்சியுடன் பார்க்கின்றனர்.

அகிலா அதிர்ச்சியோடு நெருங்கிச் சென்று சற்று குனிந்து பார்த்துவிட்டு நிமிர்ந்து தன் செவ்வரி உதட்டில் ஈனசுரத்தி;ல், வடிவேலு அத்தான்" என்று முனங்குகிறாள்.

"வடிவேலுவா...? அங்கிள், நீங்க இப்ப சொன்ன வடிவேலுவா?" மீனா குறுக்கில் நுழைய, விம்மும் உதட்டோடு"ஆமாம்மா..." என்கிறார் கந்தசாமி.

"எப்படி... எப்படி இப்படி?"

"தெரியிலியே... ,மலைக்குப் போய் பூரணியைத் தேடறது என் பொறுப்பு" ன்னான்.இப்படி போய்ச் சேருவான்னு நினைக்கலியே..."
கொடகொடவென கண்ணிர் சிதற கந்தசாமி அப்படியே மேலேறி வந்து ஒரு ஓரமாக மண்டியிட்டு அமருகிறார்.

மீனாவின் பார்வை வடிவேலுவின் சடலத்தின் மேலயே இருக்கிறது. சில வினாடி.. சில வினாடிகள் தான்!

அவளும் இப்பொழுது வடிவேலுவை நெருங்கி துணிச்சலாகத் தொட்டு உடம்ப்பைப் புரட்டிப் போட்டு மரணத்தின் தன்மையை ஆராய ஆரம்பிக்கிறாள்.

எங்கும் சின்ன சிராய்ப்பு கூட இல்லை.உடையில் கிழிசலோ, போராடின தடயங்களோ அறவே இல்லை.தூங்கப் போனவன் செத்துப் போன மாதிரி இருக்கிறது.

வயிறு மட்டும் சற்று பருத்து உப்பினது போல இருக்கிறது.

அது என்ன வேட்டி முனையில் ஒரு முடிச்சு?

மீனா ஆவலாக அதை அவிழ்க்கிறாள்.தங்க சாவிக்கொத்துடன் சில தங்க நாணயங்கள்!என்ன இது அவ்வளவு நாணயமும் ஒரு ரூபாய், ஐம்பது பைசா காசு போல...?

இல்லையில்லை... ஐம்பது பைசா, ஒரு ரூபாய் நாணயம்தான் தங்கக்காசாக மாறியிருக்கின்றன!

"அங்கிள்..." நிமிர்ந்து அவற்றோடு கந்தசாமியை நெருங்கி சாவிக்கொத்தை காட்டுகிறாள்.

"இந்தச் சாவிக்கொத்து...?"

"இது... இது. இது அந்த செத்துப் போய் கிடந்த பெண்ணோட ஹேண்ட் பேக்குல இருந்த சாவிம்மா.ஆமா இதென்ன காசுங்க?"

"எல்லாம் நம்ப நாட்டு பைசாதான்.எப்படி இப்படி மாறினதுங்கறது போகப் போகத்தான் தெரியும்."

சொல்லும்போதே ஒரு அபரிமித எச்சரிக்கை அவளைப் பிசைய ஆரம்பிக்கிறது.

அவளும் அப்படியே கந்தசாமிக்குப் பக்கத்தில் சப்பணமிட்டு அமருகிறாள்.

மீனா! இங்க ஏன் உக்கார்ற? எனக்குப் பயமா இருக்கு... வா தள்ளிப் போய் உட்காருவோம்."

"இல்ல அகிலா... திடீர்னு உடம்பை என்னவோ பண்ணுது"

"என்ன பண்ணுது?"

"தலை சுத்தற மாதிரி இருக்கே..."

மீனாவால முழுவதுமாகக்கூட சொல்ல முடியவில்லை.நிஜமாலுமே மயக்கம் அவளை சாய்கிறது.

"மீனா... மீனா... ஏய்..." தாடையைப் பிடித்து தட்டிப் பார்த்துவிட்டு அகிலா மருண்டு கந்தசாமியை பார்க்க, அவர் முகத்திலும் தாராள பீதி.

,என்னம்மா இது... கத்தி போய் வாலு வந்த கதையா? நாம் கிளம்பி வந்ததே தப்போ?"

"அப்பா... இது பேசற நேரமில்லை... போய் தண்ணிகொண்டு வாங்கப்பா."

கந்தசாமி சுதாரித்து எழுந்து தண்ணீருக்காக தடுமாறியபடி, அகல... அகிலா, மீனாவை ஒரு பார்வையும், அருகில் பள்ளத்தில் கிடக்கும் வடிவேலுவின் பிணத்தை மறுபார்வையும் பார்த்து ,திடுக்' உணர்வில் நிலைப்படும்போது, யாரோ பாடியபடி வரும் குரலொலி அவள் காதில் விழுகிறது.

"ஐயோ யாரோ வர்றாங்களே... இப்படிப் பொணம் கிடக்கற இடத்துல உட்கார்ந்திருந்தா ஆபத்தாச்சே..." முனகலோடு மீனாவை அப்படியே தரையில் கிடத்திவிட்டு எழுந்து வேகமாக நடந்து சென்று ஒரு நெட்டிலிங்க மரத்தின் பின்னால் ஒளிந்து கொள்கிறாள்.

"மகாலிங்கத்துக்கு அரோகரா போடு...!"

எவனோ ஒருவன் தலை கொள்ளாத விறகுச்சுமையுடன் அரோகரா போட்டபடி பாதையில் வந்து கொண்டிருக்கிறான்.பார்க்க மலைப்பளிங்கன் போல இருக்கிறான்.

வருபவன் கீழே கிடக்கும் மீனாவை பார்த்துவிட்டு ஆச்சரியத்துடன் சுற்றிச் சுற்றி வேறு பார்க்கிறான்.விறகுச் சுமை, பள்ளத்து வடிவேலு பிணத்தை பார்க்கவிடாதபடி செய்கிறது.

"யாரிது பொண்ணு...? இப்படிக் கிடக்குது...? அவன் கேள்வி அகிலாவின் காதிலுமு; விழுகிறது.தயங்கியபடி மரத்தை விட்டு வெளிப்படுபவள் மீனாவை நெருங்கிறாள்.

"ஆரு தாயி நீங்க...? இது என்ன இந்தப் பொண்ணு இப்படிக் கிடக்கு?"

*"நாங்க… நாங்க… சாமி கும்பிட வந்தோம் வழில இவ மயங்கிட்டா… அதான் தண்ணி தேடி…"*

*"தண்ணியா? இங்கனையா? ஐய, அதுக்கு கொள்ள தூரம் போவணுமே ஆத்தா…"*

*"அப்படியா… சரி பரவால்ல நீங்க போங்க கொஞ்ச நேரத்துல இவ முழிச்சுக்குவா.நான் பாத்துக்குறேன்."*

*"நல்லாருக்கு.ஒத்த யானை அலையற மலைத்த்டம் இது வயசுப் பொண்ணுங்க இப்படி வந்து சிக்கிட்டிருக்கீங்க.பாத்துட்டு எனக்கென்னன்னு போனா நல்லாயிருக்குமா? என்கூட வா தாயி… சந்தனக்கோரை எங்கிட்டாச்சும் இருக்கும். பிடுங்கித் தாரேன். அதை நெருப்பில் சுட்டு புகையை இது மூக்குல காட்டு முழிப்பு தட்டிடும்…"*

*"சந்தனக் கோரையா?"*

*"ஆந்தாயி… ஐயருங்ககூட வந்து பிடுங்கிகிட்டு போவாங்களே, அதான் வா! வா! சுமை கழுத்த அழுத்துது பாரு.'*

*அவன் எட்டி எட்டி நடக்க ஆரம்பிக்கிறான்.அகிலா தயங்கி நிற்கிறாள். நல்லவேளை… வடிவேலு பிணத்தை அவன் பார்க்கவில்லை.*

*"வா தாயி… ஏன் நிக்கறே? ஒத்த யானை வர்ற நேரம் இது…" ஒற்றை யானையை தன் பேச்சில்இழுத்து அந்தப் பளிங்கள் வனைக்கவும் மிரண்டு போகிறாள்.வேறு வழி தெரியாதபடி அவன் பின்னால் செல்ல ஆரம்பிக்கிறாள்.பிணத்தருகே இருப்பதற்கு இது தேவலையே.*

*அதே சமயம்…*

*கந்தசாமி பெருமூச்கோடு ஒரு மர நிழல் நிற்கத் தொடங்குகிறார்.நீண்ட தூரம் வந்தும் தண்ணீர் தென்படவில்லை.அருவி கூத்தாடும் பூமி.ஆனால் அது ஓடும் பக்கமாய் போகவில்லையே?*

*மலையின் ஒவ்வொரு மூலை முடுக்கும் கந்தசாமிக்கு அத்துப்படி… எனவே நின்ற இடத்தில் இருந்து கண்ணுக்கு கையை கூரையாக கொடுத்தபடி பார்க்கிறார்.*

*மலையின் ஈசான்ய பாகம் தாழ்ந்து நீரோடையோடு கிடக்கும் பகுதி பக்கமாக இருப்பதும் அந்தப் பகுதிதான்.*

*நடக்க ஆரம்பிக்கிறார். ஓடை, சலசலப்போடு மலைநாட்டு ஊர்வலம் போல*

பேசியபடி செல்வத்தைத் தொலைவிலேயே கேட்கலாம்.இப்பொழுதும் கேட்கிறது.தண்ணிரைக் கொண்டு செல்ல ஒரு பாத்திரம்கூட இல்லாதது நினைவில் தட்டுகிறது.

"அடடா..." தலையைத் தட்டிக் கொண்டு துண்டால் முகத்தை துடைத்துக் கொள்கிறார்.ஒரு பெண், தொலைவில் மண்பானை ஒன்றுடன் நடந்து கொண்டிருக்கிறாள். அவளைப் பார்க்கவும் கந்தசாமிக்கு சற்று தெம்பாகிறது.வேகமாய் நடந்து அவளை நெருங்கி"இந்தாம்மா..." என்று அவளைப் பார்க்கவும், அவள் திரும்பிப் பார்க்கவும், தூக்கி வாரிப் போட்டது. அட பூரணி!

அனாதரவான வனப் பகுதி! ஒற்றையடி நடைத்தடம்... அதில் ஒரு ஓரமாக மீனாவின் மயங்கிக் கிடக்கும் உடல்.அவள் உடல் அருகே இப்பொழுது ஒரு சாமியாரின் உருவம்! கடந்து போகையில் பாதை ஓரமாகக் கிடப்பவளைப் பார்த்து அந்த உருவம் குனிகிறது.மீனாவின் முகத்தைத் தொட்டுப் பார்த்து புருவம் சுருக்கி ஆச்சரியப்படுகிறது.அப்படியே பார்வை பள்ளத்தில் கிடக்கும் வடிவேலு மேலும் செல்கிறது. அடுத்த நொடி முகத்தில் புன்னகை பரவுகிறது.

பின் என்ன நினைத்ததோ மண்டியிட்டு அமர்ந்து, அமர்ந்த இடத்தில் புற்களைப் பிடுங்கி உள்ளங்கையில் வைத்துக் கசக்குகிறது.பச்சையாக சாறு பெருக, அதை மீனாவின் மூக்கின் துவாரம் வழியே சொட்டத் தொடங்குகிறது.

ஒரு சொட்டு.

இரு சொட்..

மூன்றாவது சொட்டு... தலை உசும்ப கண் திறக்கிறாள் மீனா.எதிரே சடை முடிக்காடாய் கோரைப் புதர் போல தெரியும் முகத்தைப் பார்த்து ஒரு வினாடி திடுக்கிடுகிறாள்.

வாரிச் சுருட்டியபடி எழுந்து நிற்கிறாள்.,எங்கே அகிலா? கந்தசாமி?’தேடலோடு சுற்று முற்றும் பார்க்கிறாள்.அந்தச் சாமியார் உருவம் கையை அருளுவது போலக் காட்டிச் சிரிக்கிறது.

"யா... யார் நீங்க?"

"நானொறு சிவம்.நீ.. நீ மீனாவாம்மா உன் பேரு?"

"ஆ... ஆமாம். என் பேர் உங்களுக்கெப்படி...?"

"சிவத்துக்கு தெரியாத விஷயங்களா?... ஆமா இந்தச் சவத்தை நீ தொட்டியா?" ... அது வடிவேலு பிணத்தைக் காட்டிக் கேட்கிறது.

தலையசைப்பு மீனாவிடம்...

"வேண்டாம்... இனி பிணங்களைத் தொடதே! மனிதப் பிணங்களை மட்டுமல்ல.இறைச்சிகூட பிணத் துண்டு தான்.அதையும் தொடாதே.தொட்டாலே உனக்குச் சோர்வும் மயக்கமும் வரும்."

"நீங்க யார்... உங்களுக்கெப்படி...?"

"நான் தான் சொன்னேனே, நானொறு சிவம்."

"என்கூட வந்த அகிலா, மாமாவெல்லாம் எங்கே?"

"எல்லோரும் வந்துடுவாங்க.கவலைப்படாதே."

"ஆமா... இவர் எப்படிச் செத்துப் போனார் தெரியுமா?"

"விதி முடிஞ்சிருக்கும்.போயிருப்பான்."

"எல்லாம் ஒரே மர்மமா இருக்குஇந்த மலைல ஏதோ இருக்கு". ... கசங்கிய முகத்தோடு கைகளைப் பிசைகிறாள்.

"ஏதோ இல்லம்மா... சிவம் இருக்கு.ஆன்நத சிவம், பரமானந்த சிவம், ஜீவ சிவம், சித்துச் சிவம், பித்துச் சிவம், பிசாசுச் சிவம், கல்ப சிவம், கயிலைச் சிவம், கனகச் சிவம்னு ஒன்பது சிவம் இருந்த மலைம்மா இது..."

"நல்லா உளர்றீங்க.சாமியர்ங்கறவங்களே என் வரையில் பயங்கரமான எஸ்கேப்பிசமான ஆசாமிங்க.உங்களுக்கு இங்கிலீஷ் தெரியாதுல?"

"நோ பேபி. ஐ நோ இங்கிலீஷ். சேம் டைம் ஐ ஆம் நாட் ஆன் எஸ்கேபிஸ்ட்."

அதே வேளையில், கையில் சந்தனக்கோரை என்னும் தர்ப்பைப் புல்லுடன் வருகிறாள் அகிலா.

வருபவள் சாமியைப் பார்த்து லேசாக மிரண்டு மீனாவைப் பார்த்து,"மீனா... எப்படி மயக்கம் தெளிஞ்சிச்சு? யார் இவரு?" என்று கேட்டபடியே சாமியை திரும்பிப் பார்க்க, அது கைகளை உயர்த்தி அவளுக்கும் அருளுகிறது.அப்பொழுது நாயோ, நரியோ ஊளையிடும் சப்தம் காதில் விழுகிறது.

அவர் முகத்தில் இப்பொழுது கூர்மை. பின் மெலிதான பதற்றம்.

"சரிம்மா... ரெண்டு பேரும் கிளம்புங்க.இனி இங்க இருக்க வேண்டாம். இந்த உடம்பை மோப்பம் பிடிச்சு காட்டு நாய்களும், நரிகளும் சாப்பிடவர ஆரம்பிச்சிடிச்சு. நீங்க கிளம்புங்க. இங்க இருக்கிறது தப்பு. கிளம்புங்க., கிளம்புங்க."

"என்னது, இந்த உடம்பை நாயும், நரியும் வந்து சாப்பிடப் போவுதா? ஐயோ இது என் அத்தை மகன் உடம்பு."

"பிணத்துக்கு உறவு ஏதம்மா?போங்க... போங்க..."

"மாட்டோம்... அகிலா! அப்பா எங்கே? இந்த உடம்பை அவரைக் கொண்டுத் தூக்கிட்டுப் போகப் பார்ப்போம். கமான், அப்பா எங்கே?"

"நீ மயங்கி விழவும் தண்ணி கொண்டுவரப் போனவர்தான். இன்னும் வரலை. நான் ஒரு பளிங்கன் பின்னால போய் இந்தப் புல்லைக் கொண்டுவந்தேன். ,இதைப் பொசுக்கி புகை போட்டா நீ மயக்கம் தெளிஞ்சுடு’ன்னு அவன் சொன்னான்.ஆனா அதுக்கு அவசியமில்லாதபடி நீ நிக்கிறே... கூட இவரு வேற..."

"நான் வேறயா?... நான் தான்மா சிவம்."

"போதும். உங்களை எல்லாம் கட்டி வெச்சா உதைச்சா உண்மை தெரிஞ்சிடும்.சவமாம் சிவம். உளறலுக்கு ஒரு அளவில்லை.நாங்க எங்க உறவினர் செத்துட்ட துக்கத்துல இருக்கோம். எங்க அத்தையை வேறக் காணோம்! இந்த மலைல யாரோ தங்கசாமியாம்.அவர் பண்ற வேலை இது... அந்த ஆள்தானே ஏதோ பண்றான்."

"சாமி அதைக் கேட்டு சிரிக்கிறது."யாரு கனக சிவமா?" என்று கேட்கிறது.

"கனக சிவமா?"

"ஆமாம்மா நான் ஜீவ சிவம். தங்கசாமி கனக சிவம். கல்லையும், மண்ணையும் கூட தங்கமாக்க முடிஞ்சு கனக சிவம்."

சாமி சொன்ன மறுநொடி வடிவேலு பிணம் கிடக்கும் புதர் அருகே இப்பொழுது அசுரப் பாய்ச்சலெடுத்து வந்து நிற்கிறது ஒரு ஓநாய்க் கூட்டம்!

'கேளப்பா...!

கோடியில் ஒருயிரே கோளது நிலைபெறும்!

ஈசன்மிசைக் கூடியது வாளறுபட்டும் வாழும் கலையுறும்!

நாடியில் நோய் மிசை வாடி, முகம் தேஜஸ் ஜ்வாலைமிகும்!

ஓடியொளி வந்து உள்ளில் ஓங்காரம் பிடிபடும்!

தேடியுறும் மோட்சம் அவர் தேடாது வசப்படும்!

பாடியிதை நானுரைக்க தோடியிசைக்

கரையுமந்த

ஈசனருள் காரணமே... அவனருளே என்றும் பூரணமே!"

சொர்ணஜாலத் திரட்டுக் குறிப்பு

பாய்ந்து வந்து நிற்கும் ஓநாய் கூட்டம். வடிவேலு உடலைக் கடித்துக் குதறத் தொடங்குவதைப் பார்த்து மீனாவும், அகிலாவும் வெலவெத்துப் போக ,ஜீவ சிவம்' என்று தன்னை வர்ணித்துக் கொண்ட அந்த சாமி அண்ணாந்து ஆகாசம் பார்த்து கைகூப்பி மகாலிங்கம் என்று முணுமுணுக்கிறது.

"ஐயோ எத்தனைக் கொடூரம்?;" அகிலா கண்களில் கண்ணீர் சேர மீனாவின் தோளை அணைத்துக் கொண்டு நடுங்கியபடி முகம் புதைக்கிறாள்.

"நீங்க இனி இங்க நிக்காதீங்க.கிளம்புங்க.அந்த ஓநாய்கள் உங்க பக்கமும் திரும்பலாம். கிளம்புங்க. கிளம்புங்க..."

ஜீவசிவ சன்யாசி எச்சரிக்கை செய்தபடி அங்கிருந்து நகர காலெடுக்கிறார்.

மீனாவும், அகிலாவும் வேறு வழியின்றி நடக்க ஆரம்பிக்கின்றனர்.

"இந்த கந்தசாமி எங்கு போனார்? என்ன ஆனார் என்றே தெரியவில்லை..."

பம்மிப் பம்மி நடக்கின்றனர் இருவரும்.

"கொஞ்ச தூரம் போய் வெயிட் பண்ணுவோம். மாமா வந்துடட்டும் என்ன?" நடந்தபடியே மீனா சொல்ல ஆமோதிக்கிறாள் அகிலா.

"ஆனாலும், கொடுமை இது... வடிவேலு அத்தானுக்கு இப்படி ஒரு நிலை

வேண்டாம்...

வாஸ்தவம்தான், மாமா சொன்ன அந்த மத்த சடலங்களைக் கூட, இப்படித்தான் நாயும், நரியும் தின்னு தீர்ததுருக்கணும். பிணம் இருந்தாலாவது பரிசோதனைல எப்படிச் செத்துப் போனார்கள்னு கண்டுபிடிக்கலாம். இப்ப அதுக்கு கூட வழி இல்லாம போச்சே நடந்தபடியே வருந்துகிறாள் மீனா.

"அத்தான் வீட்டுக்கு தெரிஞ்சா துடிச்சுப் போயிடுவாங்க வத்ராப்புலேயே அத்தான் தான் அதிகம் படிச்ச நபர் பெரிய வேலைக்குப் போய் குடும்பத்தை காப்பாத்தப் போகுதுன்னு நினைச்சிட்டிருந்தாங்க. இப்ப எல்லாம் மண்ணாப் போச்சு."

"ஹ_ம்... ரொம்பவும்தான் மர்மமான மலையா இருக்கு இது. எனக்க மயக்கம்னா என்னன்னே தெரியாது.இடி என் மேல விழுந்தப்பக்கூட எனக்கு நினைவு இருந்தது.இங்க நான் மயங்கினது, அதைத் தொடர்ந்து மாமா பிரிஞ்சது, அந்த சாமியார் வந்ததன்னு எவ்வளவு விஷயங்கள்...? நினைக்க, நினைக்க ரொம்பவும் மலைப்பா இருக்கு அகிலா...

மீனா பேசும்போது அகிலா பயமும், அதிர்ச்சியும் விலகியிராதபடி திரும்பித் திரும்பி பர்த்தபடி வருகிறாள்.

ஓநாய்களின் உறுமல் சப்தம் மெலிதாகக் காதை மோதிய வண்ணம் இருக்கிறது. அது நாடி நரம்பகை; குடைந்து என்னவெல்லாமோ செய்கிறது.

நடுவில் யானை ஒன்றின் பிளிறல் வந்து கலக்கிறது.

"ஐயோ யானை... ஒத்தை யானையா இருந்தா ரொம்பவும் ஆபத்து வா மீனா, வேகமா நடக்கலாம்."

அகிலா பாதை தெரியாத வனப்பரப்பில் திசை தெரியாதபடி நடக்க ஆரம்பிக்கிறாள்.

"நில்லு அகிலா... மாமா வராம நாம போகக் கூடாது..."

தடுக்கிறாள் மீனா.

"இந்த அப்பா ஒண்ணு... இரண்டு பெண்களை விட்டுட்டு பொறுப்பே துளிகூட இல்லாம இப்படிப் பண்றாரே..."

அகிலா சலித்துக் கொள்ள, திரும்ப பிளிறல் சப்தம் கேட்க இருவரும் அருகாமை பாறை ஒன்றின் பின் போய் நின்று ஒளியப் பார்க்கின்றனர்.

அதே சமயம்..

அந்த மலையில் இப்படியெல்லாம் கூட வழித்தடம் உள்ளதா என்ன…? நடந்து கொண்டிருக்கிறாள் பூரணி. பின் தொடர்ந்தபடி கந்தசாமி முகத்தில் பிரமிப்பை விழித்துப் பூசிக் கொண்டிருக்கிறார்.நூற்றியெட்டு மலை வந்த அனுபவம் இருந்த போதிலும் … இந்தப் பாதை.இந்தப் பகுதி அவருக்குப் புதிதாய் படுகிறது.

எங்கும் நெல்லி … நடுநடுவே வில்வம் என்று மரக் கூட்டம் வண்ணப் பாவாடையுடன் சினிமாவின் கோரஸ் நடனப் பெண்கள் போலக் கூட்டமா வட்டம் கட்டிப் பறந்து கொண்டிருக்கிறது. துவக்க மலைப் பகுதியில் பார்த்த பிரண்டை, பிடாரி, முள்ளுக் கத்திரி, கத்தாழைக் கூட்டத்தை எங்கேயும் பார்க்க முடியவில்லை.

மலையின் பின் சரிவு போல இருக்கிறது அந்தப் பரப்பு. எதிரில் தாழத் தெரியும் பசும் நிலப்பரப்பு எது? கேரளமோ? காற்றின் ஈரமும் ,ஆம்' என்கிறது.

கந்தசாமிக்கு களைப்பே தெரியவில்லை. ஆனாலும் மனதில் மீனாவையும், அகிலாவையும் விட்டு விட்டு வந்தது அடிக்கடி பிறாண்டுகிறது.

எதேச்சையாக பார்த்த பூரணியோ பதில் பேசாது நடந்து கொண்டிருக்கிறாள். பேச முடியாது தான். ஆனாலும், கந்தசாமியைப் பார்த்த அதிர்ச்சி, அல்லது ஆனந்தம், இரண்டில் எதையாவது ஒன்று ,அவள் காட்டலாமல்லவா?

ஜடம் போல நடக்கிறாள்.

"பூரணி... எங்கே போறே?நில்லு! நம்ப புள்ளைங்க வந்திருக்காங்க. உன் அண்ணன் மக மீனாவும் வந்திருக்கு நில்லு பூரணி.. ஏன் இப்படியெல்லாம நடந்துக்கறே?நில்லு பூரணி... உன்னைத் தேடாத இடம் இல்லை, தெரியுமா?"

அவர் பேசப் பேச அவள் பதிலேதும் பேசாமல் நடக்கிறாள்.

"இப்ப நீ நின்னு என் கேள்விக்குப் பதில் சொல்லப் போறியா இல்லையா?"

நெருங்கிச் சென்று தோளைப் பிடித்து நிறுத்துகிறார். அவள் அவரை ஏறிடுகிறாள்.கண்களில் குளம் வெட்டினது போல கண்ணிர்.

"ஏம்புள்ள இப்படிப் படுத்தற?... இங்க என்ன பண்ற...? ஊட்ல புள்ளைங்க தவிக்குதுங்க..."

பூரணி முகபாவத்தாலேயே, அதற்கு நான் என்ன செய்யட்டும்? என்று கேட்கிறாள்.

"கிளம்பு என் கூட... வழியிலேயே நம்ம பொண்ணுகளை விட்டுட்டு உன் பின்னால வந்துட்டேன் வா... எதுவா இருந்தாலும் வீட்டுக்கு போய் பேசிக்கலாம்."

... பூரணி அதற்கு பதிலாக ஒரிடத்தை நோக்கி கை காட்டுகிறாள்.

அவள் கை காட்டிய திசையில் ஒரு குடிசை. கோரைப் புற்களை பழுக்கக் காயவைத்து இறுக்கக் கட்டி வேய்ந்த கூரை. குடியைச் சுற்றிலும் சோலைக் கணக்காக வில்வ மரக் கூட்டம்.

அந்தக் குடிசையை காட்டி, வரச்சொல்லி சைகை காட்டியபடி நடக்கிறாள்.

"இந்தக் குடிசைலதான் இருக்கியா? ஆமா இங்க யார் இருக்கா... அந்தத் தங்கசாமியா?"

அவள் பதில் பேசாது நடக்கிறாள்.வில்வச் சோலைக்குள் நுழைகிறாள்.முயல் கூட்டம் ஒன்றின் விளையாட்டையும், மயில்கள் சிலவற்றின் நிமிர்ந்த பர்வையும் பர்க்க முடிகிறது.

குடிசையில் ஆசிரமக் களை நிறையவே இருக்கிறது.பானை நீரை ஓர் ஓரமாக வைக்கிறாள்.திரும்பி, கையசைத்து கந்தசாமியை உள்ளே அழைக்கிறாள்.அவரும் தயங்கித் தயங்கி உள் நுழைகிறார்.உள்ளே நடுமையத்தில் சமாதி போல ஒரு மேடை; நடுவில் அகல் ஒன்றின் ஜோதிச் சுடர்.

"என்ன பூரணி இது. சமாதியாட்டம் இருக்கே?"

பூரணி தலையசைத்து ஆமோதிக்கிறாள்.

"யார் சமாதி இது ? இங்க உனக்கென்ன வேலை? எனக்கு ஒண்ணுமே புரியலை பூரணி" கந்தசாமி குரல் உடைகிறது.

பூரணியிடம் கலக்கம் மிகுதியாகிறது. கைகூப்பி அழுதபடி ஏதோ சொல்ல வாயெடுக்கிறாள்.ஆனால் பேசமுடியாத அந்தக் கொடுமை, வெறும் சப்தத்தைவெளிப்படுத்துகிறது.கந்தசாமி, குடிசைப் பகுதியின் உட்பரப்பைப் பார்க்கிறார்.ஆங்காங்கே சில குடுவைகள் தொங்கியபடி இருக்கினறன. மண் சுவற்றில் ஒரு சிறிய பிறை.அதில் ஒரு சம்புடன். ஆதில் கட்டைச் செருப்பு. அந்தச் செருப்பு மேல் காய்ந்த பூச்சரங்கள்.

"பூரணி என்னஇதெல்லாம்? இதெல்லாம் யாரோடது? எந்த சாமியோட சமாதி இது?"

"அவர் சாமியோட சமாதி என்று குறிப்பிட்டதைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு பலமாக தலையை அசைப்பவள், கந்தசாமியையும் கூப்பிட்டு கும்பிடும்படி சைகை காட்டுகிறாள்.

"நானும் கும்பிடணுமா? கும்பிடறேன்.கும்பிடறேன் மகாலிங்கம்! ஏனக்கு ஒண்ணுமே புரியலைய்யா... ஒண்ணும் புரியலை..."

புலம்பியபடி கைகூப்புகிறார் கந்தசாமி.

பூரணி, ஓடிச் சென்று சம்படத்து விபூதியை எடுத்து வந்து கந்தசாமி நெற்றியில் இடுகிறாள்.

"சரி கும்பிட்டுட்டேன்.கிளம்பு இருட்டப் போவுது பார். வயசுப் பொண்களை நடுவழியில் விட்டுட்டு வந்துட்N;டன் ஆத்தா .. கிளம்பு. கிளம்பு.."

பூரணி உடனே பதைத்துப் போய், ,நான் வரமாட்டேன்' என்கிற மாதிரி சைகை காட்டுகிறாள்.

"வரமாட்டியா? என்ன தாயி நீ.. உன்னைத் தேடித்தான் வந்திருக்கோம்.மாட்டேன்னா எப்படி பூரணி?அந்த வடிவேலு பய வேற, செத்துக் கிடக்கிறான் புள்ள...

அதுவரை வடிவேலு பற்றியே வாய் திறக்காதவர் முதன்முறையாக அவனைப் பற்றி சொல்லவும் பூரணிக்கு ,பகீர்' என்றது. நெற்றி மேட்டில் அவன் மரணம் குறித்த அதிர்ச்சிவ ந்து புடைத்து நிமிர்கிறது.சைகையாலேயே, ,நிஜமாகவா?' என்று கேட்கிறாள்.

"அமாம் பூரணி... உன்னைத் தேடித்தான் அவனும் இந்த மவைப்பக்கம் வந்தான். எப்படிச் செத்தான்னே தெரியலை, பூரணி... நான் ஏன் அதை எடுத்துக்கிட ஆசைப்பணும்? சு;சே... எல்லாம் அதுல ஆரம்பிச்சது. ஏங்கிட்டெங்கிட்டோ போகுது... சரி சரி, கிளம்பு பூரணி..."

திரும்பவும் பூரணி கும்பிட்டு அழுதபடி மறுக்க ஆரம்பிக்கிறாள்.

"என்ன பூரணி.. பிடிவாதம் பிடிக்கறே...? நீ என்ன நினைக்கறேன்னு தெரியலை. சுரி ஒண்ணு பண்றேன்.நீ இங்கேயே இரு.நான் போய் அவங்களை வெச்சுக்கிட்டுப் பேசிக்குவோம்.அக்காவைப் பார்த்து, வடிவேலு போய்ட்ட விஷயத்தை வேற சொல்லணும்.எப்படிச் சொல்லப்

போறேனோ... உடம்பு வேற கிடக்கு..."

கந்தசாமி சொன்ன கையோடு திரும்பி நடக்க ஆரம்பிக்கிறார். பூரணி ,வேண்டாம்' என்பது போல ஏதோ சொல்ல வாயெடுக்கிறாள்... ஆனால், அவர் பார்த்தால்தானே?

வத்திராயிருப்பில், கந்தசாமி குடியிருக்கும் தெருமுனையில் சீறியபடி நிற்கிறது ஓர் அம்பாஸிடர் கார் உள்ளிருந்து இரண்டு பேர் இறங்குகின்றனர். ,ஒட்ட வெட்டிய முடி நெக் பனியன் இறுக்கமான காக்கி பேண்ட்' என்கிற துப்புரவான போலீஸ் லட்சணங்களுடன்

"இங்க கந்தசாமிங்கறவர் வீடு?..."

"அதோ, இந்த முருங்கை மரமுள்ள வீடங்க.."

அவர்களைத் தாண்டிச் செல்ல முயன்ற பெருகக ஒன்று கைகாட்டுகிறது.

ஆவர்கள் நடக்கின்றனர்.

முருங்கை மரத்தை ஒட்டி கார் ஒன்று நின்று கொண்டிருக்கிறது. அதன் ரிஜிஸ்டிரேஷன் எண்ணில் சென்னைப் பதிவு காரினுள் டிரைவர் உட்கார்ந்து கொண்டு அன்றைய தினசரி பத்திரிகையைப் பார்ததபடி இருக்கிறான்.

காரை கவனித்தபடி நடந்து வரும் இருவரைப் பார்த்து வெளியே இறங்குகிறான். பார்த்த மாத்திரத்தில் போலீஸ் என்று தெரிந்துவிடுகிறது அவனுக்க முறைப்படி சல்யூட் செய்கிறான்.

"நீ...?"

"நான் கமிஷனர் ஐயாவோட கார் டிரைவருங்க..."

"எங்களை..."

"கமிஷனர் ஐயாவை பார்க்க வர்றவங்களைப் பார்த்துப் பார்த்து பழகிப் போச்சுங்க..."

"ஆமா அவங்க டாட்டர் மீனா இருக்காங்களா?"

... உடனேயே திணற ஆரம்பிக்கிறான் டிரைவர்.

"அது வந்து... வந்து..."

"என்னய்யா வந்து போயி... உங்க கமிஷனர் ஐயா அனுப்பிதான்

*வந்திருக்கோம்..."*

*பதிலோடு வீட்டினுள் பிரவேசிக்க முயல்கின்றனர் இருவரும்.*

*"ஐயா... அவங்க மலைப் பக்கம் போயிருக்காங்க.."*

*"மலைப் பக்கமா?"*

*"ஆமாங்க..."*

*"சதுர கிரி மலைக்குதானே?"*

*"அப்படி தாங்க நினைக்கிறேன்..."*

*"அவங்க மட்டுமா?"*

*"இல்லீங்க... கூடவே அவங்க மாமா கந்தசாமி.. பெரிய பொண்ணு... மூணு பேரும்..."*

*பேச்சின் நடுவில் சப்தம் கேட்டு மங்களா, பார்வதி தேவி மூவரும் வெளியே வருகின்றனர்.*

*"இவங்கள்ளாம்..."*

*"மீனாம்மா மாமா பொண்ணுங்க.."*

*"உங்கம்மாதான் மலைக்காட்டுல காணாம போயிட்டாங்களா?"*

*அவர்கள் ஆமோதிக்க, தெருவில் இப்போது இதைக் கவனிக்கும் பல முகங்கள்.*

*"ஓ.கே.. லாரன்ஸ்! நாம கிளம்புவோம். கருணாகரன், சார் சொன்னது சரியாயிடுச்சு... நாம மலைக்கு தான்போகணும்..." வீதி ஜனங்களை பார்த்துக்கொண்டே அந்த இருவரில் ஒருவர் சொல்ல.லாரன்ஸ் என்னும் மற்றவர் அதைக் கேட்டு ஆமோதித்தபடி ,யூ ஆர் கரெக்ட், போஸ் லெட் அஸ் கோ...' என்கிறார்.*

*அவர்கள் திரும்பத் தொடங்குகின்றனர். கந்தசாமியின் பெண்கள் ஆச்சரியம் கலையாமல் இதைப் பார்க்க., டிரைவரும் கவனிக்க, அவர்கள் காரில் ஏறி கிளம்புகினற்னர். கார், மலையை குறி வைத்து தாணிப்பாறை நோக்கி சீற ஆரம்பிக்கிறது.*

‘கேளப்பா...!

ஓங்கு பல்லுயிர் தாங்குமிந்தப் பிரபஞ்சம் என்றும்

ஏங்கித் தவமிசை கூடுவராலேயே இயங்கும்.

பாங்குடன் சுழலும் நவமர் கதிர்ப் பிடியில்

தூங்கியெழும் உலகில் விண்ணகர வண்ணமழை

வாங்கிப் பச்சை கூட்டுவது தவசியரே, வேதம்

நான்கும் நேர்ந்து அறம் தேட்டுவரும் தவசியரே!

நோன்புடை த்தவசிகளில், சிவச்சடையரே ... என்றும்

மாண்புடையர் ... மந்திர தந்திரமுடையர்!"

சொர்ணஜாலத் திரட்டுக் குறிப்பு

அடிவாரத்தில் தேங்கி நிற்கிறது கார்.லாரன்ஸ், போஸ் எனும் அந்த இரண்டு போலீஸ்காரர்களும் காரை விட்டு இறங்குகின்றனர்.

அவர்கள் எதிரில் வன இலாகா நட்டுவைத்திருக்கும் சாம்பல் அணில்கள் பற்றிய அறிவிப்பு பலகை. தமிழ்நாட்டிலேயே அபூர்வமாகக் காணப்படும் அணில்கள் அங்கே இருப்பதைச் சொல்கிறது.

இருவரும் நடக்க ஆரம்பிக்கின்றனர்.

"போஸ்... பலமைல் நடந்தாத்தான் கோவில் வரும்.இவங்க கோவிலுக்குதான் போயிருக்காங்களா, இல்லை வேற எங்காவது...?"

"அதைப் போய் பார்த்துதான் தெரிஞ்சுக்க முடியும்.மீனாவை பத்திரமாக பாதுகாக்கணும்னு கருணாகரன் சார் சொல்லியிருக்கறச்சே நாம இங்க நின்று குழம்பறதுல அர்த்தம் இல்லை லாரன்ஸ்.போய் பார்ப்போம் வாங்க."

இருவரும் ஷு கால்களுடன் மலைத் தளத்தில் நடக்க ஆரம்பிக்கின்றனர். துவக்கத்திலேயே அடிவாரத்தில் மலையருவியின் ஓட்டம் சலசலக்கிறது.

அப்பால் ஒரு சிறிய கோயில்.அதைத்தாண்டி பாதை நீள்கிறது.யாரையும் காணவில்லை.

"காக்கை கூட இல்லாதபடிக்கு ஒரு வெறுமை.

"அமாவாசை, பௌர்ணமின்னாதான் இந்த மலைக்கு கூட்டம். மற்ற நாட்கள்ல இப்படித்தான்..."

"நீங்க இதுக்கு முந்தி வந்திருக்கீங்களா, போஸ்?"

"ஓ.. ஒரு தடைவ வந்திருக்கேன்.வழியில ஒரு காட்டாறு கூட உண்டு.ஒரு தடைவ அந்த காட்டாற்றுலல வெள்ளம் வந்ததுல நூத்துக்கணக்கான பக்தர்கள் இறந்துட்டாங்க.அப்ப இருந்தே ஜனங்களுக்கு இந்த மலை மேல ஒருவித பயம் உண்டு."

நடந்தபடியே இருவரும் பேசுகின்றனர். லாரன்ஸ் ஒரு மரக்கிளைக் குச்சியை ஒடித்து கைத்தடி போல் உருவாக்கிக் கொண்டு நடையைத் தொடர, பேச்சும் தொடர்கிறது.

"இந்த மலையைப் பத்தி நம்ம போலீஸ் ரெக்கார்ட்ஸ்ல தப்பா ஏதாவுது இருக்கா லாரன்ஸ்?நான் இப்ப ட்ரான்ஸ்ஃபராகி வந்தவன்.இங்க சில இடங்கள்ல மரக் கடத்தல் இருக்கு. கஞ்சா பயிரிடறாங்கன்னு கூட ரூமர்.ஆனாலும், இந்த மலைல நிறைய சாமியார்கள் இருக்கிறதாகவும் ஒரு அபிப்பிராயம் இருக்கு.அது உண்மையா போஸ்? ஏன்னா நீங்க இந்து.கேள்விப் பட்டிருக்கலாம்.

"கண்ணுக்கு தெரிஞ்சு சில சாமியார்கள், தெரியாம பலர் இருக்கிறதா நானும் கேள்விப்பட்டிருக்கேன். ஆனா, அவங்கள நேர்ல பார்த்த அனுபவம் கிடையாது.அப்படி ஒரு சாமியார்தான், கந்தசாமி மனைவி பூரணி காணாமப் போகக் காரணம்னு நம்ம கமிஷனர்க்கு தகவல் வந்திருக்கு. ஸோ, இட் இஸ் காம்ப்ளிகேட்டட் லாரன்ஸ்... கொஞ்ச நேரத்துல இருட்டிடும்.இப்ப நாம மலை ஏறுவது அட்வைஸபிளா இல்ல... வாட்டு டு யூ ஸே?"

லாரன்ஸீம் நின்று ஒரு வினாடி தாடை வருடி யோசித்துவிட்டு சுற்றுமுற்றும் பார்த்தபடி..

"இருட்டிடுச்சு திரும்பிட்டோம்னு கருணாகரன் ஸார்கிட்ட சொன்னா, நிச்சயம் அவர் கோவிப்பார்.போலீஸ்காரன் இரவு பகல் கடந்தவனா இருக்கணும்னு உபதேசிக்க ஆரம்பிச்சுடுவார்."

"பேசாம நடையைத் தொடருவோம். நீங்க ஒரு நிமிஷம் இருங்க.நான் காரில் இருக்கிற டார்ச், வெப்பன்ஸ் எல்லாத்தையும் எடுத்துக்கிட்டு வரேன்.."

லாரன்ஸ் திரும்பி நடக்க ஆரம்பிக்கிறார்.போஸ்அப்படியே ஓரமாக ஒரு உருண்ட பாறை மேல் சாய்ந்து கொண்டு பாக்கெட் சிகரெட்டை எடுத்து

உதட்டில் செருகத் தொடங்... எங்கோ, யாரோ பாடியபடி வரும் சப்தம் காதில் கேட்க ஆரம்பித்தது....

,ஆங்ங்... காட்டுவழி போறேன் நான் ... கழுதப்புலி வழிமறிக்கும்! கழுதப்புலி வழிறிச்சா கருப்பண்ணன் தான் காத்திட வருவான்.

'ஆங்ங்... கருப்பண்ணன் தான் காத்திட வந்தா, வாடா கருப்பா நான் வாடாதிருக்க ஒரு வழி சொல்லும்பேன்."

.... போஸ் நிமிர்ந்து சிகரெட்டை சிமிட்டியபடி, சப்தம் வந்த திக்கைப் பார்க்க... தலைமேல் ஒரு மூட்டைச் சுமையோடு ஒரு பளிங்கன் பாடியபடி வர, உடன்அகிலாவும், மீனாவும்!

'போஸீக்கு முதுகுத் தண்டில் சுரீரிப்பு..

'இவர்கள்தான் நாம் தேடி வந்த பெண்களா?' கேள்வி புடைத்தெழ அவர்களும் போஸை சமீபக்கின்றனர்.பளிங்கன் கேட்கிறான்...

"சாமி என்ன இது... இது மகாலிங்க மலை.இங்க போய் புகை விடலாமா?"

"ஏன் விட்டா என்ன?"

"புகையா போயிடப் போறீங்க... அணையுங்க.."

போஸ் சிரித்தபடி ஒரு இழுப்பு இழுத்தபடி,"ஆமா நீங்க.." மீனா, அகிலாவை பார்க்கிறார்.

"நாங்க... நாங்க..." அவர்கள் பதில் சொல்லுமுன் பளிங்கன் முந்துகிறான்.

"சாமி... ரெண்டு பேரும் மலைல தடுமாறிக்கிட்டிருந்தாங்க. ஒத்த யானைகிட்ட மாட்டத் தெரிஞ்சாங்க.நல்ல வேளை மகாலிங்கம்தான் எண்ணை அனுப்பிக் காப்பாத்திருச்சு.உங்களைப் பார்த்தா ஃபாரெஸ்டாளுங்க மாதிரி தெரியுதே.சரிதானுங்களா?"

"கிட்டத்தட்ட" போலீஸ் பதிலைக் கேட்டு மீனா உடனே சிலிர்த்து"தென்... ஆர் யூ எ போலீஸ்"

"எக்ஸாக்ட்லி.."

"தேங்க்ஸ் எ லாட்... ஒரு உதவி செய்யணும் சார், நீங்க..."

"அதுக்குதான் வந்திருக்கேன். ஆர் யூ மிஸ் மீனா?"

"ஆமா... உங்களுக்கெப்படி..?"

"எப்படியோ... உங்க அப்பா கருணாகரன், எங்க ராஜபாளையம் எஸ்.பிக்கு ஃபோன் பண்ணி உங்களைப் பத்தி சொல்லி, எங்க எஸ்.பி.அனுப்பி நாங்க வந்திருக்கோம்.பை த பை.. ஐ ஆம் போஸ். கிரைம் பிராஞ்ச் ஸ்பெஷல் இன்வெஸ்டிகேஷன்.."

போஸின் விளக்கத்தால் பெரிதாக நெகிழ்கிறாள் மீனா.

"தேங்க்யூ மிஸ்டர் போஸ்.நாங்க எங்க மாமா, அத்தை இரண்டு பேர்களையுமே இந்த மலைல மிஸ் பண்ணிட்டோம்.அது மட்டுமில்ல, எங்க ரிலேடிவ் ஒருத்தர் மர்மமா இறந்து கிடந்தாரு.அவர் உடம்பை ஓநாய்களும், நரிகளும் சாப்பிடற கொடுமையை வேற பார்க்கற துர்பாக்கியம் எங்களுக்கு..."

"என்ன சொல்றீங்க மீனா.. ஏதாவது மர்டரா?"

"தெரியல... டோட்டலா கன்ஃப்யூஷனா இருக்கு. இப்ப முதல்ல எங்க மாமாவை கண்டுபிடிக்கணும்.எங்க கூட வந்தவரை மிஸ் பண்ணிட்டோம். மீனா பதற்றத்தோடு சொல்லும்போதே லாரன்ஸ், துப்பாக்கி போன்ற ஐட்டங்களோடு அங்கு வந்து சேர்கிறார்.வந்து நிற்பவரை பார்த்து,"மிஸ் மீனா.. இவர் லாரன்ஸ். என் கலீக் ரெண்டு பேரும்தான் உங்களைத் தேடி வந்தோம்.நல்லவேளை, இங்கேயே பார்த்துட்டேன்."

"அங்... லாரன்ஸ் நாம தேடி வந்த மீனா, அகிலா இவங்கதான்..."

லாரன்ஸ் இருவரையும் பார்த்து இணக்கமாய் சிரிக்க பளிங்கன் கத்தரிக்கிறான்.

"அப்ப சரி... இனி நீங்க பார்த்துக்கங்க.நான் வர்றேன்."

"ஏய் நில்லு..." தடுக்கிறார் போஸ்.

"என்ன சாமி.."

"மூட்டைல என்ன?"

"மூட்டைல நெல்லிக்காய்ங்க..."

"எங்க காட்டு.."

பளிங்கன் மூட்டையை திறந்து காட்ட பெரு நெல்லிக்காய்கள் உருண்டை உருண்டையாய்...

"உன் பேர்?"

"என் பேருங்களா... மாசாணமுங்க.."

"எங்க இருக்கே?"

"மலைல கிழக்கே ஊத்துப்பாறைகிட்டங்க.."

"உனக்கு இந்த மலைல எல்லா இடமும் தெரியுமா?"

"தெரியும்ங்க.ஆனாலும் வடக்கு பக்கம் போகமாட்டோம்."

"ஏன்...?"

"அங்க மகாலிங்க சிவசாமிங்க இருக்காங்க.அவங்களை பாக்கக்கூடாதுங்க. அதான்...!

"ஏன் பாக்கக்கூடாது?"

"அதெல்லாம் தெரியாது.சில சாமிங்கள பார்த்தா அதுங்க மருந்து தரும்.சில சாமிங்க நம்ம உசுரையே வாங்கிப்புடும்னு சொல்வாங்க..."

"அந்த வடக்கு பாகத்துக்கு எங்கள இப்பக் கூட்டிக்கிட்டுப் போறீயா?"

"ஐயோ... வேண்டாங்க! பத்து நாளைக்கு முந்திகூட ரெண்டு பேர் இப்படிதான் வந்து, அங்க போகணும்னாங்க.நான் வேண்டாம்னேன்.கேக்கலை.கடைசில உள்ள போனவங்கதான்.இந்த நொடி வரை வெளியே வரலைங்க.என்ன ஆனாங்கன்னே தெரியல..."

பளிங்கன் பேசுகிற பேச்சில் பளிச்சிட்ட நிஜம் போஸையும், லாரன்ஸையும் ஒரு பிடிபிடிக்கிறது.

"என்னது... பத்து நாளைக்க முந்தி இரண்டு பேரா? எப்படி இருந்தாங்க?"

"உங்களைப் போலதான் நல்ல வாட்டச்சாட்டம்.ஆனா கோட்டு சூட்டு போட்டிருந்தாங்க. கூட ஒரு பொட்ட புள்ளையும் கொழா போட்டுக்கிட்டிருந்துச்சு.கைல படம் புடிக்கிற பொட்டி, தோல்பை லொட்டு லொசுக்குன்னு நிறைய வெச்சிருந்தாங்க.."

பளிங்கனின் விவரிப்பு மீனா, அகிலாவையும் கூட விழிகளை விரிக்கவிடுகிறது.

,இவன் சொல்கிற நபர்களைத்தான் கந்தசாமியும், வடிவேலுவும் பார்த்தனரோ?"

"சார்.. என் மாமா கூட காட்டுக்குள்ள இரண்டு டெட் பாடிகளைப்

பார்த்ததா சொன்னார்.ஒரு பாடி கோட் சூட் போட்டுக்கிட்டிருந்ததாகவும், இன்னொன்னு பொண்ணுன்னும் சொன்னார்.அந்தப் பெண்கிட்ட ஒரு கேமிரா இருந்ததையும் எடுத்து வெச்சிருந்திருக்கார்..."

மீனா, பளிங்கன் கருத்தை ஊர்ஜிதம் செய்வது போலச் சொல்ல, இரு போலீஸ்முகங்களிலும் இப்போது அதிர்ச்சிக் களை.

"போஸ்... நாம அந்த வடக்குப் பகுதிக்கு போய் என்னன்னு பாத்துடணும்!"

"ஆமாம்... ஆனா இப்படி தனியா போகங்ககூடாது.ஒரு குரூப்பாதான் போகணும்.அந்தப் பகுதியில ஏதாவது சமூக விரோதச் செயல் நடக்கலாம்."

பளிங்கள் உடனே அதைக் கேட்டுச் சிரிக்கிறான்.சிரித்தபடி,"சாமி... போய் வாயக் கழுவுங்க.. வடக்கு சாமிங்க அம்புட்டுப் பேரும் அசலான சாமிங்க.போன உசுரை மீட்டுத் தந்துருவாங்க.அம்புட்டு சக்தி.புரியாம போய், முன்ன போனவங்க மாதிரி செத்துகித்து வைக்காதீங்க... நான் வர்றேன்.."

பளிங்கன் மூட்டையோடு திரும்பப் பாடியபடி ஓட ஆரம்பிக்கிறான்.

மீனாவும், அகிலாவும் வந்த பாதையில், இப்பொழுது கந்தசாமி கத்தியபடி ஓடி வந்து கொண்டிருக்கிறார்.

"காப்பாத்துங்க.. காப்பாத்துங்க..."

# 19

'கேளப்பா...!

கோடித் துகள்தில் கோளமிதும் ஒன்று .. ஈங்கு

நாடித் தவம் செய்வோர் இதை நன்கறிவது நன்று!

வேடிக்கையாக சிவம் இதைப் படைத்ததென்று .. பலர்

பாடிச் சொன்னதில் உள்ளது சான்று!

ஆடிக் களிக்குமந்த நாதன்

ஆலகிலா விளையாட்டு மாதன்

கூடிக் களித்த ஒரு சக்தி

அவன் மேனி பற்றியதொரு யுக்தி.

வாடித் தவிக்கும் மனம் ,வா சிவா'

என பூத்துச் சிறந்திடும் தினம்

தேடித் தவிப்பதும் சிலர்

கரும வினையே... அவரை

கூட்டி இணைத்திடு தருமதுரையே!

சொர்ணஜாலத் திரட்டுக் குறிப்பு

கத்திக் கொண்டே ஓடிவரும் கந்தசாமியை பார்த்து மீனாவும், அகிலாவும் அதிர்ச்சியடைய, லாரன்ஸ் வினாடி தாமதம் இன்றி பாக்கெட் பிஸ்டலை எடுக்கிறார்.

கந்தசாமிக்கு பின்னால் ஒரு ஓநாய்க் கூட்டம் போலத் தெரிகிறது.புழுதி பறப்பதில் அதன் வேகம் புலப்படுகிறது. ,டுமீல்' லாரன்ஸின் பிஸ்டல் தாமதமின்றி சப்தமுடன் குண்டை அனுப்ப.. ஒரு ஓநாய் கச்சிதமாக எகிறி சுருண்டு விழ, மற்ற ஓநாய்கள் சிதறிப் பிரிந்து ஓடுகின்றன.

கந்தசாமியும் லாரன்ஸ், தாஸ், மீனா, அகிலா நிற்குமிடத்தில் வந்து மரம் போல விழுகிறார்.

"அப்பா... என்னப்பா இது? இதுங்களை எங்க பார்த்தீங்க?"

"வெய்ட் அகிலா.அவர் கொஞ்சம் மூச்சு விடட்டும்... எப்படியோ தேட வேண்டிய அவசியமே இல்லாம வந்திட்டீங்க" மீனா ஆறுதலாக அவர் கரத்தைப் பற்றி வருடத் தொடங்க, அவருக்குள் வேகமாகப் புத்துணர்வு பரவுகிறது.

லாரன்ஸீம், தாஸீம் சுருண்டு விழுந்த ஓநாயருகே ஓடி, அதைப் பார்த்துவிட்டு சுற்று முற்றும் பார்க்கின்றனர்.

"இனி இது பிழைக்காது தாஸ். ஜீப்பில் தூக்கிப் போட்டுக்குவோமா?" லாரன்ஸின் கேள்விக்கு, தாஸ் அதைப் பார்த்துக் கொண்டே பதில் தருகிறான்:

"நாம வேட்டைக்கு வந்ததா உனக்கு நினைப்பா, லாரன்ஸ்? வா முதல்லஅந்த ஆளைப் போய் பார்ப்போம்."

இருவரும் திரும்பி வருகின்றனர்.

கந்தசாமி இருவரையும் பார்த்து பெரிதாகக் கை கூப்புகிறார்.

"சார்! இவர்தான் எங்க மாமா.நல்லவேளை வந்து சேர்ந்துட்டாரு" மீனா அறிமுகத்தை முடிக்கிறாள்.

"என்ன சார் இது... எங்க போய்ட்டீங்க நீங்க?"

"அது இருக்கட்டும் அகி.. இவங்க யார்?"

"போலீஸ்காரங்கப்பா... நம்மை தேடிதான் வந்திருக்காங்க."

,போலீஸா... என்னம்மா சொல்றே?"

"ஆமாப்பா... கருணாகரன் மாமா ஏற்பாடு இது"

"மிச்சத்த நாங்க சொல்றோம் மிஸ் அகிலா.சார்! உங்களை, உங்க மனைவியை தேடிக் கண்டுபிடிக்கத் தான் வந்திருக்கோம்.இது எங்க கருணாகரன் ஐயா உத்தரவு."

கந்தசாமி ஒரு வினாடி அவர்களைப் பார்த்து தடுமாறுகிறார். பின் சற்று ஒதுங்கிச் சென்று அகிலா, மீனாவை அழைத்துக் கேட்கிறார்:

"எதுக்கும்மா போலீஸெ;லலாம்? விஷயம் விபரீதமாயிடும்மா."

"நாங்க கூப்பிடலை மாமா. எல்லாம் அப்பாவோட வேலை..."

"அது யார் வேலையா இருந்தாலும் அவங்களை திருப்பி அனுப்பிடு. பூரணி இருக்கற இடத்தை நான் கண்டுபிடிச்சுட்டேன்."

"நிஜமாவா?"

"ஆமாம்மா.இந்த மலையில பணிவாவும், பக்தியாவும் நடந்தாதாம்மா நல்லது. அதிகாரம், சந்தேகம், ஆராய்ச்சி, தேடல்னு கிளம்பினா ஆபத்து. அவங்க்ளைத் திருப்பி அனுப்பிடு.."

"என்ன மாமா இது... நாமவான்னா வரதுக்கும், போன்னா போறதுக்கும் அவங்க யாரோ இல்ல மாமா. ரெஸ்பான்ஸிபிள் போலீஸ் பெர்ஸன்ஸ்."

"அம்மாடி நான் ஒருத்தன் தப்பு பண்ணிட்டு படறபாடு போதாதா? சொன்னா கேளு.அவங்கள திருப்பியனுப்பு. அப்புறமா நாம மூணு பேரும் பூரணி இருக்கற இடத்துக்குப் போவோம் சொன்னா கேளு."

கந்தசாமி கசிந்துருகுவது போஸ், லாரன்ஸ் காதிலும் விழுந்ததோ என்னவோ?..

"ஓ.கே மீனா.. பி கேர் ஃபுல். நாங்க கிளம்பறோம். வாங்க, உங்களை வீட்ல டிராப் பண்ணிடறேன்."

தயங்கித் தயங்கி மூவரும் அவர்களுடன் நடக்கத் தொடங்குகின்றனர்.

இயிருட்டு நீங்கி முழு இருட்டு கூடு கட்ட போஸின் ஸ்பெஷல் டார்ச், வட்டமாய் வெளிச்சப் பாய்ச்சல் காட்டுகிறது.

"போஸ்! அந்த ஓநாய்?.." சில தப்படிகள் போட்டுவிட்டு லாரன்ஸ் கேட்கிறார்.

"ஓ.கே. போய் தூக்கிட்டு வாங்க தாஸ். ஓநாய்க் கறி எப்படி இருக்குன்னுதான் பார்ப்போமே.."

போஸ் உடனேயே ஓடி இன்னமும் சாகாது நாக்கு வெளித் தள்ள துடித்தபடி கிடக்கும் ஓநாயைத் தொட்டுத் தூக்கி வருகிறார்.

அல்சேஷன் நாய் கணக்காய் உயரம். ஆனால் வாலில் மட்டும்தான முடிக்கற்றை.உடம்பெங்கும் ஷேவ் செய்த மாதிரி ,வழ வழ' என்று இருக்கிறது.

"இன்னும் சாகலை லாரன்ஸ், உசுர் கெட்டி போல" என்றார் லாரன்ஸ்.அவருடைய டார்ச் ஒளி, அந்த ஓநாயின் மூச்சிரைப்பை துல்லியமாக காட்டுகிறது.பின் தொடையருகே குண்டு தைத்ததில் சிவந்த சொத சொதப்பு.

மீனா அதைப் பார்த்து சற்று பல்லைக் கடித்து சிலிர்த்து விட்டு; மெல்ல கரம் நீட்டி அந்த சிவந்த பாகம் அருகே தொடுகிறாள்.

அதுவரை துவண்டு கிடந்த அந்த ஜீவன் அடுத்த நொடி மின்சாரம் பட்ட மாதிரி துடிக்கிறது.

எல்லோருக்கமே ஆச்சரியம்.

"மீனா! எங்கே தொடு... தொட்டுக்கிட்டே... இரு பார்ப்போம்" அகிலா ஆர்வம் காட்டுகிறாள்.

மலைக்காற்று நீவிச் செல்ல மீனாவின் கரம் தொடர்ந்து வருடுகிறது. லாரன்ஸீம், போஸீம் கண் இமைக்க மறந்து அதைப் பார்க்கினற்னர்.

சாவை நோக்கிப் பயணம் செய்து கொண்டிருந்த அந்த ஓநாய் தொடர்ந்து காலை உதறி ஒரு புத்துணர்ச்சியைக் காட்டுகிறது.

"மீனா, இதுதான் உன் சக்தியா! என்ன அதிசயம்" அகிலா வாயைப் பிளக்கிறாள்.

சட்டென்று படுத்துக் கிடக்கும் அந்த ஜுவன் எழுந்து நிற்க முயல்கிறது.மீனா பயத்துடன் கைகளை பின்னுக்கு இழுத்துக் கொள்கிறாள்.

"நோ மேடம்.ஒண்ணும் பண்ணாது அது.கமான் வருடித் தாங்க..." போஸீம், லாரன்ஸீம் ஒன்று போல கத்துகின்றனர்.

ஒரு டார்ச்சுக்கு, இரண்டு டார்ச் லைட் வெளிச்சம் பாய்ச்ச.. அந்த ஓநாய் த்ததித் தடுமாறி எழுந்து நிற்கிறது.

"வாவ்... என்ன ஒரு மிராகிள்!"

"உம் கமான்... வருடித்தாங்க." இருவரும் திரும்பவும் கத்த... மீனா தொடர்ந்து வருட... அந்த ஓநாய் ஒரு கட்டத்தில் எழுந்து, துளியும் நடுக்கமின்றி நின்று மீனாவை நன்றியோடு பார்க்கிறது.

"மீனா என்னால நம்பவே முடியலை!" அகிலா ஸ்லாகிக்கும் தருணம் சிருட்டென்று அவளுக்கு;ப பக்கவாட்டில் ஒரு பாய்ச்சல்.

போஸ் டார்ச்சை வேகமாய்த் திருப்ப, சற்றே நொண்டியபடி அந்த ஓநாய் பாதைச்சரிவில் ஓடுவது தெரிகிறது.லாரன்ஸ் டார்ச்சை அக்குளி;ல் வைத்துக் கொண்டு கை தட்டுகிறார்:

,மேடம் ரியலி ஒண்டர்ஃபுல்.மார்வலஸ். நீங்க சாதாரணப் பெண் இல்லை ப்ளீஸ் ப்ளெஸ் மீ....!

மீனா அடுத்த நொடி கையைப் பிசைந்து கொள்கிறாள்.

இரவு நேரம்...

காரில் இருந்து அனைவரும் இறங்குகின்றனர் போஸீம், லாரன்ஸீம் மட்டும் காரிலேயே இருந்தனர்.

"ஓ. கே. மேடம்... நாங்க கிளம்பறோம்.இனிமே அந்த மலைப்பக்கம் பாத்துப் போங்க..."

டார்ட் செய்தபடியே பேசும் போஸை மீனா வாஞ்சையாகப் பார்த்துக்

கையசைக்கிறாள். கார் சீறிக் கிளம்புகிறது.

"அப்பாடா..." கந்தசாமி பெருமூச்சு விடுகிறார்.

"மாமா... இப்ப சொல்லுங்க அத்தையை எங்க பாத்தீங்க?"

"சொல்றேன்மா.முதல்ல வீட்டுக்குள்ள போவோம். வடிவேலு விஷயம் வேற இருக்கே. அக்காவை பார்த்து உடம்பை எடுத்துக்கிட்டு வர ஏற்பாடு செய்யணும்மா முதல்ல..."

"உடம்பா...?"

"ஏம்மா அப்படிக் கேக்கறே..."

"அதை..."

"அதுக்கு என்னம்மா?"

"காட்டு ஓநாய்ங்க கடிச்சுக் குதறிடிச்சுப்பா. இப்ப எலும்புத்துண்டு கூட அங்க கிடையாது.கொடுமைப்பா அந்தக் காட்சி..."

"என்னம்மா சொல்றே?" கந்தசாமி பக்கவாட்டுச் சுவர் மேல் அப்படியே பொத்தென்று சரிகிறார்.

சிணுங்குகிறது தொலைபேசி காதைக் கொடுப்பவர் கருணாகரன்.

"குட்மார்னிங் சார்..." மறுமுனை மூலமாகக் காதில் பாய்பவன் போஸ்.

"யெஸ்"

"சார் நான் ராஜபாளையம் க்ரைம ப்ராஞ்ச் போஸ் பேசறேன்."

"சொல்லுங்க."

"உங்க யூகப்படி உங்க டாட்டர் மலைக்கு கிளம்பிப் போயிட்டாங்க. நாங்க தேடிப்போனோம்.வழியிலேயே பர்த்துட்டோம்.உங்க மாப்ளை கந்தசாமி எங்ககிட்ட பேசவே பயப்பட்டாரு.நாங்களும் விட்டுப் பிடிக்கிற சென்ஸ்ல ,நாங்க கிளம்பறோம்'னு சொல்லிட்டுக் கிளம்பிட்டோம்.."

"என் சிஸ்டரை பார்த்தீங்களா? எப்படி இருக்கா?"

"நோ சார்... ஆனா அவங்க மலைல எங்கேயோ சேஃபா இருக்காங்க.கந்தசாமி மூலமா இதைத் தெரிஞ்சுக்க முடிஞ்சது."

"ரைட் என்ன பண்ணப் போறீங்க.மீனாவை வார்ன் பண்ணீங்களா?"

"நோ சார்.அவங்கள வார்ன் பண்ண வேண்டிய அவசியமே இல்லை.அவங்க சக்தி அம்சம் சார்."

"என்னய்யா சொல்றே... இந்த மாதிரி புகழ்ச்சிக்கு பயந்துதான்யா அவ அங்கேயே போனா...?"

"சார்! நான் எப்படி சார் சொல்வேன்.சாகக் கிடந்த ஒரு ஓநாயை அவங்க வருடிக் கொடுத்தே காப்பாத்தினதை இரண்டு கண்ணால பார்த்தோம் சார்."

போஸின் பேச்சை கேட்டு சில வினாடிகள் மௌனம் கொள்கிறார் கருணாகரன்.

"சார்! கேக்கறீங்கதானே?"

"யெஸ்... யெஸ்..."

"அப்ப நாங்க, அடுத்து என்ன சார் பண்ண...?"

"மீனா மலைப் பக்கம் போகக் கூடாது.பாத்துக்குங்க. என் சிஸ்டரை தேடிப் பிடிச்சு ஒப்படைச்சுட்டு மீனாவை மெட்ராஸீக்க அனுப்பிடுங்க.நானும் அவளுக்குச் சொல்றேன்."

"ஓ.கே. சார்."

தொலைபேசி முடங்குகிறது.கால் கைகளை நீட்டி, பெரிதாகச் சோம்பல் முறிக்கிறார் கருணாகரன்.

"ஹலே அங்க்கிள்" குரல் கேட்டுத் திரும்பினால் ப்ரகாஷ்.

"ஹலோ ப்ரகாஷ்!" வரவேற்றபடி எழுந்திருக்கிறார்.நெருங்கி வருபவன் அவர் நீட்டிய கரங்களை வாஞ்சையாகப் பற்ற, உட்காரச் சொல்கிறார் உட்காருகிறான்.

"மீனா கிட்ட இருந்து ஏதாவது தகவல்?..." எடுத்த எடுப்பிலேயே அவளைப் பற்றித்தான் கேட்கிறான்.

"ஆங்... நேத்து கூட ஃபோன் பண்ணினா. ஆமா என்ன சாப்பிட்றீங்க...? காஃபி, டீ...?"

"அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம் அங்க்கிள்."

"நோ. ஏதாவது சாப்பிடணும் எனக்கும் டயர்டா இருக்கு. இருங்க

வந்துட்றேன்."

கருணாகரன் எழுந்து சமையற்கட்டை நோக்கி நடக்கிறார்.சிறிது தூரம் சென்றவர்"வேலைக்காரங்களுக்கு இன்னிக்கு ஆஃப்.அதனால இன்னிக்கு எல்லாமே நான்தான்..." என்ற சிரித்தபடியே சொல்லிக் கொண்டு மறைகிறார்.

அவர் அறைக்குள் மறையவும் தொலைபேசி திரும்பவும் சிணுங்குகிறது.

சப்தம் கேட்டு கருணாகரனே வருவார் என்று ப்ரகாஷ் அமைதியாக அமர்ந்திருந்தான்.

கருணாகரனும் சப்தம் கேட்டு வருகிற மாதிரி தெரியவில்லை.ப்ரகாஷே தொலைபேசியை எடுக்கிறான்.மறுநிமிடமே ஒரு இதமான குரல்.

"நாளைக்கு உன் பொண்ணு அந்த மலைப்பக்கம் போனா, எந்த நாளும் அவ திரும்ப மாட்டா கருணாகரன். இது விளையாட்டில்லை ஜாக்கிரதை!"

டொக். குரல், தொடர்பைத் துண்டிக்க... ப்ராகஷ்... திடுக்கிட்டு நிமிர்கிறான்.

# 20

'கேளப்பா...!

குர்சினியில் பூசனைக் பொருளுரைப்பேன்!

மாசிலா வில்வம் அந்த மாசிவனுக்குரியது.

தீதிலாத் துளசி என்றும் மாதவனுக்குரியது.

மேடுவளர் எருக்கென்றும் கணபதிக்கேரியுபது.

கூடிவளர் அரளி சக்தி உபாசனைக்குரியது.

முல்லை மல்லி அல்லி முப்பெருந்தேயிருக்குரியது.

நிலை மஞ்சள் சேர்ந்த மலர் சார்ந்த நவமர்க்குரியது.

ஊது சுடர்த் தங்க மலர் ஆதிசக்திக்கே...

ஏது இடர், ஏது இடர் ... தங்கமலர் தூவினவர்க்கே!

சொர்ணஜாலத் திரட்டுக் குறிப்பு

அந்தத் தொலைபேசிச் செய்தி முதலில் ப்ரகாஷை குழப்புகிறது.பின் நிமிர்த்துகிறது.

''ஹலோ யார் நீங்க... என்ன சொல்றீங்க?''

... பதிலுக்கு மறுமுனையில் துண்டிப்புச் சத்தம் தான் கேட்டது.கச்சிதமாக டீ கோப்பையுடன் வருகிறார் கருணாகரன்.தொலைப்பேசி அருகில் நிற்பதைப் பார்த்து கேட்கிறார்.

''என்ன ப்ரகாஷ்,ஏதாவது ஃபோன் வந்ததா?''

''யெஸ் அங்க்கிள்.''...கலவரமான முகத்துடன் திரும்புகிறான் ப்ரகாஷ்.

''யார் பண்ணினது...?''

''யார்ன்னு தெரியலை.,மீனா, நாளைக்கு அந்த மலைக்குப் போனா திரும்ப மாட்டா... ஜாக்கிரதை'ன்னு சொல்லிட்டு ஃபோனை கட் பண்ணிட்டான்.''

... அடுத்த நொடி கருணாகரன் சீவின மாதிரி ஒரு கூர்மைக்கு மாறுகிறார். டீ கோப்பையை டீப்பாய் மேல் வைத்துவிட்டு தொலைபேசியை தொட்டுச் சுழற்றுகிறார்.

அவர் பேசுவதிலிலருந்து தொலைபேசி இலாகாவிடம் பேசுகிறார் என்பது தெரிகிறது.

''எனக்கு வரும் கால்ஸை எல்லாம் ட்ரேஸ் பண்ணச் சொல்லியிருந்தேனே... பண்றீங்கதானே?''

''...''

''ஜஸ்ட் ஒரு நிமிஷம்கூட ஆகலை ஒரு கால் வந்து... எங்க இருந்து வந்தது? என்ன நம்பர்னு சொல்லமுடியுமா?''

''....''

''ஓ.கே.ஃபைவ் மினிட்ஸ் வெயிட் பண்றேன். சொல்லுங்க'' ஃபோனை முடுக்கியபடி திரும்புகிறார் கருணாகரன்.ப்ரகாஷ் பார்வையிலேயே கேட்கிறான்''என்ன அங்கிள் இதெல்லாம்?''

''ராஸ்கல்... யார்னு தெரியலை ப்ரகாஷ் ஒருத்தன் அடிக்கடி ஃபோன் பண்ணி மீனா பத்தி எதையாவது சொல்லிக்கிட்டே இருக்கான்.நூம போன் பண்ணிப் பேசறது ஒரு கமிஷ்னர்கிட்டங்கற பயமே அவனுக்கு

இல்லை.எதுவா இருந்தாலும் நேர்ல வரலாமே... எதுக்கு இந்தப் பூச்சி...?

"என்ன அங்க்கிள் என்னவென்னமோ சொல்றீங்க?"

"சொல்ல வைக்கிறாங்க... ஒரு அஞ்சு நிமிஷம் பொறுங்க.நம்பரை ட்ரேஸ் பண்ணச் சொல்லியிருக்கேன்.கிடைச்சிடும.; அவனையும் பிடிச்சுடலாம்.மத்ததெல்லாம் பிறகு தெரிஞ்சிடும்"...பொறுமியபடி டீயை சூப்புகிறார். அது ஆறிவிட்டிருக்கிறது.

"நீங் சாப்பிடுங்க..." என்று ப்ரகாஷை தூண்டுகிறார்.

"நான் டீ சாப்பிட்றது இருக்கட்டும். மீனா ஏதாவது ஃபோன் பண்ணினாளா அங்க்கிள்? தெரிஞ்சுக்கத்தான் வந்தேன்."

"பண்ணினா ப்ரகாஷ். நௌ ஷி ஈஸ் சேஃப்டி இன் வத்ராப். என் சிஸ்டர் வீட்லதான் இருக்கா. என் சிஸ்டர் நிலைதான் புரியாத புதிரா இருக்கு."

"அவங்களுக்கென்ன அங்க்கிள்...?"

"அவ காணாம போயிட்டதாக தகவல் வந்தது ப்ரகாஷ்.காணாம போக அவ ஒண்ணும் சின்னக்குழந்தையில்லை. சம்திங் ராங்.."

"என்ன அங்க்கிள்... எவ்வளவு பெரிய விஷயம்? சாதாரணமா சொலறீங்க?"

"வேற எப்படிச் சொல்றது...? அவளோட நான் பேசியே இருபது வருஷம் இருக்கும். எங்க துடும்பத்துப் பெரியவங்க பேச்சைக் கேட்காம காதலிச்சுக கல்யாணம் செய்துகிட்டவ அவ. நடுவுல அவளப் பத்தி எப்பவாவதுசில விஷயங்கள் காதுல விழறது உண்டு. சில பொதுவான சொந்தக்காரங்க கல்யாணத்துல பார்ககறதும் உண்டு.ஆனா பேசிக்கிட்டதில்ல..."

"அங்க எப்படி மீனாவை..."

"அனுப்பினேன்னுதானே கேட்க வர்றீங்க. நான் அனுப்பலை.அவளா ஆசைப்பட்டுதான் போனா ஷில்லாங் போறேன்னு கிளம்பினவ, ஏதோ இந்த மட்டுல நமக்குப் பக்கத்துல இருக்கிற ஊருக்குதானே போறான்னு அனுமதிச்சேன்.ஆனா அதுல ஆயிரம் புதிர்கள் இருக்கும்னு நினைக்கலை..."

... கருணாகரனின் பேச்சைக் கத்தரிக்கிறது தொலைபேசியின் சிணுங்கல். ஓடிச் சென்று எடுக்கிறார்.

"யெஸ்.. கருணாரன் ஹியர்."

மறுமுனையி;ல் பதில்...

"சார்... கொஞ்சம் முந்தி உங்களுக்கு வந்த ஃபோன், ஒரு பப்ளிக் பூத்ல இருந்து வந்தது.அந்த பூத் மயிலாப்பூர் கற்பகாம்பாள் கோயில்கிட்ட இருக்கு.பூத் நம்பர்..."

கருணாகரன் நம்பரை மனதில் குறித்துக் கொண்டு தொலைபேசியை முடக்குகிறார்.முகத்தில் கரி பூசினதுபோல் சோர்வு.

"என்ன அங்க்கிள்... யாரு?"

"அந்த அநாமதேய குரல், பப்ளிப் பூத்லேந்துன்னு தெரியவந்தது அதான்!"

"எப்பவுமே இந்த மாதிரி ஆட்கள், பப்ளிக் ஃபோன் மூலமாதானே அங்க்கிள் பேசுவாங்க..."

"ஆமாம் ப்ரகாஷ்.அது எனக்குத் தெரியாம இல்லை. சிலர் தொடர்ந்து ஒரே பப்பளிக் பூத்தை பயன்படுத்தறுதும் உண்டு. அதை வெச்சும் கொஞ்சம் கிட்ட நெருங்கலாம். இருப்பதான் ஒரு பூத் பத்தி தெரிய வந்திருக்கு.பார்ப்போம்.அடுத்து ஏதாவது கால் வந்தா தெரிஞ்சிடும்."

"அதைவிட முக்கியம் அந்த மெலேஜ்.' மீனா நாளைக்க மலைக்குப் போனா திரும்பி வரவே மாட்டா'ன்னா என்ன அர்த்தம்?"

"அதையும் பார்ப்போம்.இந்த விஷயத்துல நான் ரொம்ப அலெர்ட் ப்ரகாஷ். என் சார்புல இரண்டு எக்ஸ்பீரியன்ஸ்டு போலீஸ்மென் இப்ப அந்த மலைலதான் இருக்காங்க.மத்ததை அவங்க பார்த்துக்கு வாங்க."

"அது சரி அங்க்கிள்... மீனாவை கொஞ்சம்எச்சரிக்கை செய்யறதும் நல்லதுதானே?"

"ஸாரி ப்ரகாஷ்.. அது சராசரி தகப்பன்களோட வேலை. நான் போலீஸ்காரன்.தெரிஞ்சோ, தெரியாமலோ ஒரு மர்மமான விஷயம் என்னையும், மீனாவையும் சுத்தி நடக்கத் தொடங்கிடுச்சு. என்னன்னு பாக்காம நான் விடப் போறதில்லை."

கருணாகரன் உறுதிப்படத்தான் பேசுகிறார். ப்ரகாஷ் புரிந்து கொள்கிறான்.இந்த உறுதியை அசைக்க முடியாது. இருந்தும் நாடி ஜோதிடர் சொன்னதெல்லாம் ஞாபகத்தில் வந்து ஒரு முறை தட்டமாலை சுற்ற ஆரம்பிக்கிறது. அதில் சொன்னபடிதான்.எல்லாம் நடக்கப் போகிறதோ? கடவுளே...

கலகலவென்று சோழிகள் தரை மேல் குலுங்கி விழுகின்றன.கூர்ந்து கவனிக்கிறார் கிருஷ்ணமாச்சாரி.புருவ இடுக்கில் விழுந்து நிற்கும் சோழிகளைக் கணிதப்படுத்தும் சிந்தனை.

"என்ன மிஸ்டர் சாரி... நான் மீனாவை பத்திக் கேட்டா நீங்க சோழி குலுக்கிப் போட்டுப் பாக்கறீங்க?"

சாரி சிரிக்கிறார்:"அமானுஷ்யமான விஷயங்களை எப்பவும் இப்படிச் சோழி மூலமாத்தான் தெரிஞ்சுக்க முடியும் ப்ரகாஷ்."

"சரி...இப்ப என்ன தெரிஞ்சுகிட்டீங்க?"

"எட்டு சோழி நிமிர்ந்து விழுந்திருக்கு.இந்த நிமிஷம் நாம மனசுல நினைச்சு கேட்துக்கு பலன் இந்த எட்டுதான்.எட்டு, சனியோட எண்.அவனுடைய கட்டுப்பாட்ல இருக்கறவங்களை மற்ற யாராலேயும் கட்டுப்படுத்த முடியாது ப்ரகாஷ்..."

"அப்படின்னா...?"

"மீனா மலைக்குப் போகப் போறதும், நாம எதிர்பார்த்த, ,திரும்பி வராத' சமாசாரங்களுகம் உறுதியா நடந்தே தீரும்.. இதை யாராலயும் மாற்ற முடியாது..."

"நான் போனா ஒரு வேளை தடுத்து நிறுத்த முடியுமா?"

"விதியோட. எதுக்குப் போட்டி...?"

"எது விதி... இப்படிக் காணாம போகப் போறதா?"

"அப்படித்தானே ஏடு சொல்லியிருக்கு.."

"திரும்ப கல்யாணமாகும்னு சொல்லியிருக்குல்லியா?"

"உம்.ஆனா இப்ப இல்லையே..."

"குழப்பறீங்க. நடக்கறது நடக்கட்ம்னு விட்டுவிட்டு வேடிக்கை பார்க்கவா?"

"வேடிக்கை பார்த்தாலும் பார்க்கலைன்னாலும் நடக்கறது நடந்து தான் தீரும்..."

கிருஷ்ணமாச்சாரியாரின் விளக்கம் பிடரியைப் பிடிக்கிறது. காதல் அதில் அக்னியாக உரசுகிறது.

வெளியே வருகிறான்.

"ஹலோ ப்ரகாஷ்..." குரல் கொடுப்பவர் பாண்டுரெங்கன். மும்பை கவர்னரின் பி.ஏ. போன முறை ப்ரகாஷ் வந்திருந்தபோது எதிர்பட்டு இதே மாதிரி ஹலோ சொன்ன கேஸ்...

"ஹலோ பாண்டுரங்கன். என்ன இது? இங்கேயே திரும்பச் சந்திக்கிறோம்...?"

"அதானே?... அது சரி. வாட் அபௌட் யுவர் உட்பி? நிறைய கேள்விப்பட்டேனே அவங்களை பத்தி.... மும்பைலகூட அவங்களைப் பத்தித்தான் பேச்சு..."

"மும்பை மட்டுமா... மூலை முடுக்கெல்லாம்கூடத்தான்... ஆமா நீங்க...?"

"பாலிடிக்ஸ் பத்தி தெரிஞ்சுக்கத்தான்.. என் ஃப்ரண்ட் ஒருத்தன் எம்.பி ஆயிட்டான்.மந்திரி ஆவானான்னு தெரிஞ்சுக்கணும். அதான் சரி பார்க்க வந்தேன்.."

"சாரி அதையெல்லாமா சொல்றாரு...?"

"அவர் எங்க சொல்றாரு... ஏடுதானே சொல்லப் போவுது?"

"இதெல்லாம் நிஜமா பாண்டுரங்கன்? ஏடு சொன்னா சொன்னதுதானா? மாறவே மாறாதா?"

"சிலர் வரைல மாறியிருக்கு ப்ரகாஷ்.."

"நிஜமாவா?"

"யெஸ். என் வரைல சுத்தமா எதுவும் நடக்கலை.இதுக்கு என்ன சொல்ல? கேட்டா.உங்களுக்கு சரியா ஏடு கிடைக்கலைன்னு சாரி சுலபமா சொல்லிடுவார்..."

"அப்ப நடக்காம போகவும் வாய்ப்பிருக்கு?..."

"அதான் சொன்னேனே... நாலு அப்படி நடந்தா, நாலு இப்படியும் நடக்குது.."

"தேங்க்யூ. என் வரைல நான் கேள்விப்பட்டது நடக்காம இருந்தா அதுவே போதும்."

"எதைக் கேள்விப்பட்டீங்க... என்ன சேதி...?"

"அது... அது... ஸாரி... அப்புறமா சொல்றேன்.இப்ப நான் கிளம்பறேன்."

"ஆல் த பெஸ்ட், ப்ரகாஷ்."

பாண்டுரங்கன் கண் சிமிட்டியபடி பிரிய… ப்ரகாஷ் ஓடுகிறான்; தீப்பெட்டிக்குப் போட்டியாகத் தயாரித்த மாருதி 800-ல் ஏறி அதைக் கிள்பபுகிறான்.

சென்னை நகர டிராஃபிக்கில் லாவகங்கள் காட்டிப் பறக்கிறான். அண்ணாசாலையில் சமீபத்தில் கான்ஸ்டபிள் ஒருவர் குண்டு கண்டுபிடித்த இடமாகப் பார்த்து நிற்கும்படி ஆகிறது.. சிக்னல்!

ஏதிரில் இருநூறு மீட்டர் தொலைவில் தெரிகிறது டாஸ்மார்க் ஆபீஸ்.

முதல் காரியமாக உள் நுழைத்து ஒரு வாரம் லீவு எழுதி வைக்கவேண்டும். எம்.டி.யை பார்த்தால் ,ஏன், எதற்கு?' என்று ஆயிரம் கேள்விகள் கேட்பார். ,உடம்பு சரியில்லை' என்று மொட்டையாக முடித்துக் கொண்டு வத்றாப்புக்கு கிளம்ப வேண்டியதுதான்.

கார் இடப்பக்கமாக டி.வி.எஸ்.ஐத் தாண்டி ஓடி, இடதுபுறம் திரும்பி, பின் வலது பக்கம் திரும்பி, ஆயிரம் விளக்கு மசூதியை ஒட்டி திரும்பக் கூடாத இடத்தில் திரும்புகிறது.

ஆனந்த தியேட்டர் கூட்டம் சற்று நெருக்கடி தருகிறது. இப்படி எல்லாம் ப்ரகாஷ், டிரைவ் செய்ததே கிடையாது. வேகமும் காட்டியதில்லை.

"பாம்… பாம்…" சப்தம் செய்து இடது பக்கமாய் வளைத்துக் காரை ஓட்டுகிறான்.தேவநேயப் பாவாணர் அரங்கத்து மூன்றாவது ஃபளோரை நோக்கி ஒரு அசுரப் பாய்ச்சல் காட்டுகிறான்.

நிறைய ,குட்மார்னிங் சார்' களை ஒதுக்கி வழித்துத் தள்ளுகிறான். தன் ப்ளைவுட் தடுப்ப ஏ.ஸி. அறைக்குள் நுழைந்து மளமளவென்று ஒரு வெள்ளைத்தாளை எடுத்து லீவ் கோரி எழுத ஆரம்பிக்கிறான்.

நடுவில் சிணுங்குகிறது தொலைபேசி.

சற்று கோபத்தோடு காதைக் கொடுக்கிறான்,"ஹலோ ப்ரகாஷ்… எங்க மலைக்குத் கிளம்பிட்டீங்களா? வேண்டாம் ப்ரகாஷ் விட்றுங்க. லீவுதான் வேஸ்ட் ஆகும்.மீனாவை யாராலாயும் தடுத்து நிறுத்தமுடியாது. திரும்பச் சொல்றேன். லீவு போடாதீங்க. வேஸ்ட் ஆயிடும்."

"ஏய் யார்மேன் நீ? எதுக்கு இப்படியெல்லாம் ஸ்கூப் இன்ஃபர்மேஷன் தரே? உன் பேர் என்ன?"

"அத ஒருநாள் நிச்சயம் சொல்வேன். இப்ப ஒரு விஷயம் சொல்றேன்.அந்த மலைல மிஸ்டர் கருணாகரனால அனுப்பப்பட்ட போலீஸ் ஒருத்தன், நாளைக்க சாகப் போறான். அவ்வளவுதான்... மிச்சத்த அவன் செத்ததுக்குப் பிறகு சொல்றேனே..."

ப்ரகாஷிக்கிற்கு திக்குமுக்காடுகிறது.

# 21

'கேளப்பா...!

குறுமுனி வழிவந்த ஒரு முனி நான்...

தருகுவேன் தவறாது பலபொருள் விளக்கம்!

அருகி வரும் அமிர்தம் சிலகுறித்தும்

பெருகி வரும் விடங்கள் சிலகுறித்தும்

உருக உருகச் சொல்லுவதை சீடாநீ தமிழ்

பெருகப் பெருக குறித்தே வை., ஏட்டின்

தலையது ,சொர்ணஜாலத் திரட்டாமோ..."

மருகிடும் மலர்ககண்கள் வாசிக்குங்கால்

கருகல் விளக்காய் அன்னவர் காணட்டும் அரும்பொருள்!"

சொர்ணஜாலத் திரட்டுக் குறிப்பு

'அந்ததொலைபேசிச் செய்தி முடங்கிவிட்டது. ஆனால், அதனால் உருவான் உணர்ச்சிகள். ப்ரகாஷ் குழப்பத்தோடு அமர்ந்து கொண்டு யோசிக்க ஆரம்பிக்கிறான்.

,இந்த தொலைபேசிச் செய்திகள் என்னதான் கூற வருகின்றன? மலையின் மர்மம் யாராலும் கண்டறிய முடியாது என்றா? இல்லை தங்கள் மேலுள்ள அக்கறையாலா? அக்கறை உள்ள நபர் எதற்காக அநாமதேயமாக, யார் என்றே கூறாமல் பேச வேண்டும்?"

கேள்வி கூடுகட்ட, மல்லர்நது சோம்பல் முறிக்கிறான் ப்ரகாஷ்.

கிரீச்சிட்டு கதவு திறக்கிறது. அட்டெண்டர் எட்டிப் பார்க்கிறான்.

''குட் மார்னிங் சார்...''

''குட் மார்னிங்...''

''என்ன சார்... இவ்வளவு சீக்கிரம் வந்திருக்கிங்க? இன்னிக்க செகரெட்டேரியட்ல மீட்டிங்னீங்களே...?''

அப்பொழுதுதான் மீட்டிங் ஞாபகமே வருகிறது.அடுத்தமாதம் பட்ஜெட் தாக்கலாகப் போகிறது. மது வகையறாக்களில் எதில் வரியைக் கூட்டலாம். குறைக்கலாம் என்று அறிக்கை சமர்ப்பித்து சம்பந்தப்பட்ட மந்திரியிடம் ஒப்புதல் பெற வேண்டும்.மீனாவால் எல்லாமே மறந்தே போய்விட்டதே...

இப்பொழுது என்ன செய்யலாம்?

''டிசன்ட்ரி' என்று சொல் ப்ரகாஷ்'' ... மூளை செல் ஒன்று மலிவான, அதேசமயம் அனைத்திந்திய தொழிலாளர் சமூகமே பயன்படுத்தும் ஆயுதத்தை ஞாபகப்படுத்துகிறது.

''டிசன்ட்ரிப்பா... அதான் லீவு எழுதி வைக்க வந்தேன்.''

''அப்படீங்களா?... மாத்திரை போட்டுக்கறதுதானே சார்.''

அட்டெண்டர்களைக் கூட காலம் டாக்டர் லெவலுக்கு ஆக்கிவிட்டதை உத்தேசித்து சிரிப்பு, கொஞ்சம் வியப்பு என்று அவனைப் பார்க்கும் ப்ரகாஷ் எழுந்திருக்க முனைகிறான்.தொலைபேசி சப்தித்து உட்காரு என்கிறது.

''ஹலோ ப்ரகாஷ் ஹியர்.'' அசாலட்டாக குரல் கொடுத்து விட்டு அப்படியே மாறுகிறான்.முகத்தில் திடுமென்று அணை உடைத்துக் கொண்டது போல ஒரு சந்தோஷ குதூகலம்.

''ஏய் மீன்... என்ன இது.இப்படியா சொல்லாம கொள்ளாம போவே? நல்லவேளை ஃபோன் பண்ணினே... எங்கேயிருந்து பேசறே?''

''வத்ராப்புங்கற ஒரு வில்லேஜ்..கம்..சிட்டில இருந்து...''

''வில்லேஜ் ... கம் .. சிட்டியா?''

''ஆமாம் ப்ரகாஷ்... ஆமா எப்படி இருக்கே நீ?''

''என்ன கேள்வி மீனா? உன்னைப் பார்க்காம...''

''பீலா விடாதே ப்ரகாஷ்.. சினிமா டயலாக்கெல்லாம் வேணாம் கண்ணு!''

"மீனா... உன்கூட நான் பேசணும்னு இப்பதான் நினைச்சேன். நீயே ஃபோன் பண்ணிட்டே எல்லாம் ஸ்ட்ராங் டெலிபதியோட வேலை.."

"யார் அது டெலிபதி? வெங்கடாஜலபதி பிரதரா?"

"கிண்டல் பண்ணாதே மீனா... வெரி இம்பார்ட்டன்ட் நியூஸ்.நாளைக்கு நீ எந்தக் காரணம் கொண்டும் அந்த மலைக்குப் போகாதே..."

"நான் போகப் போறது உனக்கு எப்படித் தெரியும்?"

"உன் அப்பாவைப் பார்த்தேன்.சொன்னார்... அது மட்டுமில்லை... மிஸ்டர் கிருஷ்ணமாச்சாரி இல்ல... சாரி... சாரி... வேண்டாம் மீனா சொன்னா கேளு."

"வாட் நான்சென்ஸ் டாக் பிரகாஷ், இஸ் திஸ்.. என் அத்தை அந்த மலைல இருக்கா.அவளைப் பார்ககணும்.வீட்டுக்கு கூட்டிக்கிட்டு வரணும். அது என் ஜாப்..."

",அதனாலதான் சொன்னேன். அது ஆபத்தான ஜாப்."

"அப்ப கட்டாயமா என்னன்னு பார்த்துட வேண்டியதுதான்."

"ஐயோ... உன்கிட்ட எது பேசினாலும் எதிர்மறையாகும்னு தெரிஞ்சும் பேசறேன் பாரு.நான் ஒரு முட்டாள்."

"அது இப்பதான் தெரியுதாக்கும்..."

"மீனா... சொன்னா கேள்! மலைபக்கமெல்லாம் போகாதே... உன் ஸ்பெஷல் பவருக்கும் இந்த மலை விஸிட்டுக்கும் நிறைய தொடர்பு இருக்கு..."

"யார்... அந்த சாரி சொன்னாராக்கும்?"

"யார் சொன்னா என்ன? திஸ் இஸ் ட்ரூ. நீ மலைக்குப் போனா திரும்ப மாட்டே."

"அதையும் பார்ப்போமே!"

"வேண்டாம் மீனா. உன்னை கெஞ்சிக் கேட்டுக்கறேன்.நம்ம காதல் பேரால கேட்டுக்கறேன்.நாளைக்க ஒரு நாள் மட்டும் நான் சொல்றதை கேளு.."

"என்ன ப்ரகாஷ்... ,நானும் வரேன் ... ஹெல்ப் பண்றேன்'னு சொல்லாம, பேடி மாதிரி கெஞ்சறே... இவ்ளோ கோழையா நீ?"

"நீ என்ன சொல்றே... நான் வரணும்ங்கிறியா? ஓ.கே. மீனா...ஐ வில் கம். நான் வர்றேன்.இப்பதான் லீவு லெட்டர் கூட எழுதினேன்."

"அப்ப உடனே வா... அட்ரஸ் சொல்றேன் நோட் பண்ணிக்கோ"

அவள் சொல்லச் சொல்ல குறித்துக் கொள்கிறான். ஃபோனை முடக்கிவிட்டு அடடா ,ஸ்வீட் கிஸஸ்' என்று கொடுத்தும் வாங்கியும் கொள்ளத் தவறிவிட்டோமே என்று ஒரு சின்ன வருத்தமும் கொள்கிறான்.

அட்டெண்டர் அதுவரை ஒதுங்கியிருந்தவன் முன் வருகிறான்.

"நான் ஒரு வாரம் லீவுல போறேன்.இந்த லெட்டரை நம்ம லோது மூலமா எம்.டி.கிட்ட கொடுத்துடுப்பா... வரேன்."

பாய்ச்சலும், ஓட்டமுமாய் சொல்லிவிட்டு ஓட ஆரம்பிக்கிறான்.அட்டெண்டரிடம் பலத்த ஆச்சரியம்.

சரி. கதவை சாத்திக் கொள்வோம் என்று கதவை சாத்த முனையும் போது திரும்பக் கூப்பிட்டது தொலைபேசி. சில வினாடிகள், நெருங்கிச் சென்று தொலைபேசியை எடுக்கிறான்.

"ஹலோ..."

"என்னப்பா அட்டெண்டர்... உங்கபாஸ் லீவு போட்டுட்டு கிளம்பிட்டாரா?"

"ஆமாம். நீங்க யாருங்க.."

"நான் யாரா இருந்தா என்ன? இனிமே உன் பாஸ் அவர் கிடையாது. புதுசா வரப்போறவர் தான்..."

"என்னங்க சொல்றீங்க.. யாருங்க நீங்க?"

"அதுவா முக்கியம். ப்ரகாஷ் கிளம்பிப் போறதுதானே எனக்கு முக்கியம்... டொக்!"

தொலைபேசிச் செய்தியின் விவரம் அட்டெண்டரை குழப்புகிறது.உடனே இதை ப்ரகாஷிடம் சொல்லத் துடிக்கிறது.ஓடி கீழ் இறங்க ஆரம்பிக்கிறான்.துல்லியமாக மயிரிழையில் அந்த மாருதி அவனை விட்டுப் பிரிந்து பறக்க ஆரம்பித்திருந்தது.

அமைதிக்கு அர்த்தம் சொல்லிக் கொண்டிருந்தது அந்த இடம். வீசும் காற்றில் மார்புக்கு இதமான கற்பூரம் போன்ற வாடை நல்ல

ஈரப்பதமாகவும், இருப்பதால் சிலுசிலுப்பில் பனிப் புள்ளிகள் தெரிகின்றன.

மலைக்கு வெண் துகிலால் தலைப்பாகை கட்டினது போல விரிந்து கிடக்கிறது.மேற்கில் சூரியனை திசை திருடிக் கொண்டுவிட்டது. உத்தராயண காலம்.ஆதலால் சூரிய மறைவுக்குப் பிறகும் வானம் வெளிச்சப் பூச்சோடு தெரிகிறது.

"ட்ரைக்.. ட்ரைக்... ட்ரைக்" விசித்திரமான மெய்யெழுத்துச் சப்தம் போட்டுக் கொண்டு, வானம் கடந்து கொண்டிருக்கிறது செம்போத்துக் கூட்டம்.

அடுத்து கிடாய் நாரைகள்... பின்னாலேயே மூட்டான் என்னும் கரிய வால் பெருங்குருவிக் கூட்டம்.

அந்த இடத்தைச் சுற்றிலும் அகண்ட சமவெளிப்பரப்பு நாலாப்புறமும் புடைத்துக் கொண்டு நிற்கும் பசுமை. புறவைகள் திசை பிரிந்து பசுமைக்குள் தங்களை மறைத்துக் கொள்கின்றன.

கூர்ந்து கவனிக்கையில் மலை வடக்காக அது இருப்பதும்; அதிலும் மிகத் தாழ்ந்து வடக்கே கூர்முனைப் பரப்பில் ஒரு பெரிய நீர்த்தேக்கத்தோடு இருப்பதும்; அந்தப் பரப்பில் சுமார் நூறு அடி தூரத்துக்கும் வடக்கப்புறமும், கிழக்குப் புறமும் ஒரு சிறு மரமும்கூட இல்லாதபடி அந்தப் பகுதி அபார ஈசான்ய சக்தி பெற்றும் இருப்பதும் தெரியவருகிறது.அதன் நேர்கோண பரப்பு மலைக்காடாக அகண்டு படிப்படியாக கூடிக் கொண்டே போய் இருப்பதும் கூட, ஒரு வகையில் திட்டமிட்ட வரப்பிரசாத இயற்கையாகவே படுகிறது.

இப்படி ஒரு அமைப்பு எங்கிருக்கிறதோ அங்குதான் வாஸ்து புருஷன் அற்புதவாசம் செய்கிறான்.அவனது வாசமிகுபரப்பில் ஈசான்யம் பெருகிடும் வெளியில் தவம், மந்திரம், அமைதி மிகக் கைகூடும்.உலகாயத துன்பம் ஏதும் செய்யாது.நேர்கோண மபை;பரப்பின் நைரூகமூலை முடிவில் கூடித் துயில் கொள்வோர்க்கு பலிக்கக் கூடிய கனவுகள் தோன்றும். மலட்டுக் கருப்பையும் சினையால் கர்ப்பம் தரிக்கும்.அற்புதம்... அற்புதம்..

இவற்றை நின்று சிலாகித்துக் கொண்டிருப்பது யார் அது? இடை கௌபீனமும், செழித்த தாடியுமாய் இது கைகட்டி ஈசான்யத்துக்கு மையத்தில் நின்று நைரூகம் பார்த்து சிந்தனையோடு நின்று கொண்டிருப்பது அந்தச் சாமி.

அது பார்கக, நைரூகமலை மேட்டில் தெரியும் ஒருவழி இறங்கு முகத்தடத்தில் ஒரு பெண்ணுருவோம் தெரிகிறது. நெருங்க நெருங்க அது பூரணி என்பதும் அவள் நெருங்குவதை ஆவலாக அந்த சாமி கவனிப்பதும்கூட புரிகிறது. பூரணி நடந்துவரும் விதத்திலேயே ஒர நல்லவேகம்.வருபவள் சாமியைப் பாத்ததும் வேகமாக ஓடி வந்து சரேலென்று பொசிந்து கிடக்கம் புல் தரையில் விழுகிறாள்.சாமி அகலாமல் நின்று பார்க்கிறது. நிமிர்கிறாள்.அவள் விழிகளில் கண்ணீர்.

"அனேகமாக நீ நாளைக்க போயிடுவே பூரணி?" என்கிறார் அவர்.அவள் முகம் அதைக் கேட்டு மலர்ச்சிக்கு மாறுகிறது.

"ஆமா... உன் புருஷன் வந்தான் போல தெரியுதே?.."

அவள் ஆமோதிக்கிறாள்.

"நாளைக்கும் வருவான். கூப்பிட்டா வீட்டுக்குப் போ.ஆனா, கூட ஒரு பொண்ணு வருவா... அவ உங்களோட வீட்டுக்கு வரமாட்டா."

கூஷத்தில் பூரணி அதிர்ச்சி காட்டுகிறாள்.

"பயப்படாதே... எல்லாம் சிவத்தோட விளையாட்டு அவளுக்கு எந்த ஆபத்தும் வராது. அவ பராசக்தி அம்சம்."

பூரணி மலங்க மலங்க விழிக்கிறாள்.

"அவளுக்காகத்தான் உன்னையே நான் இத்தனை நாள் இங்க நிறுத்தி வெச்சேன்.வீட்டுக்குப் போன பிறகு நீ எந்தக் காரணத்தைக் கொண்டும் இங்க பார்த்த, கேட்ட விஷயங்களை யாரோடையும் பகிர்ந்துக்க முயற்சிக்காதே.முயற்சி செய்தாலும் உன்னால சொல்லமுடியாது.மூணு நாள்ளயே அது உன் நினைவுல இருந்து அழிஞ்சு போயிடும்."

அவள் கை கூப்புகிறாள்.நன்றி கூறுகிற மாதிரி இருக்கிறது.

"இப்போதைக்கு நீ ஆசிரமக் குடிசைக்குப் போ பூரணி. இன்னிக்கும் தவறாம அந்த குரு பூஜையை செய். உன் பெண்கள் கரை சேர அதுதான் கைகொடுக்கப் போகுது. அதுக்குத்தான் உன்னை அதை விடாம செய்யச் சொன்னேன். நாளையோட ஒன்பது நாள். கச்சிதமா பூஜையை முடிச்சுடு.அப்புறமா உன் வரைல எல்லாம் நல்லபடியகாவே நடக்கும்ஃ"

பூரணி திரும்பவும் கீழே காலில் விழுகிறாள்.

"போதும் எழுந்திரு. கிளம்பு. எனக்க இனி தான் நிறைய வேலை

இருக்கு.இதுவரை நான் சொன்னபடியே நடந்துக்கிட்டே இனி எல்லாம் நல்ல படியாக நடக்கும் கவலைப்படாம போ.."

சொல்லிவிட்டு திரும்பி அந்த ஈசானபாகம் நோக்கி நடக்க ஆரம்பிக்கிறார் அந்த சாமி. பூரணியும் எதிர்த்திசையில் நைரூகமேட்டில் கால் வைத்து விலகிச் செல்லத் தொடங்குகிறாள்.

அதில் ஒரு புதர்க்கூட்டம் லேசாக அசைகிறது. அதைப் பார்த்தும் பார்க்காதபடி அந்த சாமி நடந்து போய்க் கொண்டிருக்கிறது.

அசைந்த புதர் அருகே இருந்து ஒருவன் இப்போது வீடியோ கேமிராவும் கையுமாக நிற்கிறான். ஸ்டோன் வாஷ் சட்டை தரித்திருக்கிறான்.அதை மீறி தோள்பட்டை, மார்பு உன்று ஓடிப் பெருகிய செவ்வெறும்புக் கூட்டக் கடியை பட்பட்டென்று தட்டிவிட்டுக் கொள்கிறான்.

திரும்பவும் படுத்துக் கொண்டு அந்த சாமி செல்வதை படம்பிடிக்க ஆரம்பிக்கிறான்.மெல்லிய வெளிச்சமானாலும் படம்பிடிக்கக் கூடிய ஸ்பெஷல் லென்ஸை முன்னால் பொருத்தியிருக்கிறான்.

காமிரா கண்கள் வழியே அவன் பார்த்தாபடி இருக்க… நிதானமாக நடந்து போய்க் கொண்டிருந்த சாமி, ஒரு இடத்தில் சட்டென்று நிற்கிறது.

நிதானமாக திரும்பி, அவன் சற்றும் எதிர்பாராதபடி அவனை நோக்கி நடந்து வர ஆரம்பிக்கிறது.

# 22

‘கேளப்பா…!

வினையது விதிப்படி நிகழ்வது இயம்புவேன் வினை குறித்து..

தினையது நிலம்வரை, உழுதலும் பொழிதலும்’ வினையாமே…

நினைவது மனம்வளர

,காண்பதும் கேட்பதும்’ வினையாமே…

நிகழ்வது அனைத்துக்கும், நடந்ததும் நகர்ந்ததம்’ வினையாமே…

மகிழ்வது மாத்திரம் என்றும் நலவினைப்பாட்டினால் தானே.."

சொர்ணஜாலத் திரட்டுக் குறிப்பு

'அதிர்ச்சி பரவிய முகத்துடன் அவன் வீடியோ கேமரா சகிதம் இப்பொழு எழுந்து நிற்கிறான்.

,ஓடலாமா?" என்று ஒரு கேள்வி அவனுள் ஓடினாலும் முடியாதபடி ஒரு தயக்கம் காலைக் கட்டுகிறது.

சாமி அவனை நெருங்கிவிட்டது சிந்தனை தோய்ந்த முகத்துடன் பார்க்கிறது."நீ..?" கேள்வியும் பிறக்கிறது.

"நான் வீடியோகிராஃபர் அழகான சூழ்நிலையைப் படம் பிடிக்க வந்தவன்.." தட்டுத் தடுமாறி அவன் பேசி முடிக்கிறான்.

"ஒளிஞ்சிருந்தா?" ... சாமியின் சரியான மடக்கல்.

"அது... அது..."

"எது.. எது?"

"நான் வரேன்.."

"நில்லு... உண்மை பேசு."

"என்ன உண்மை? நான்தான் சொன்னேன்ல படம் எடுக்க வந்தேன்னு.."

"என்னையா?"

"உங்களை... உங்களை.. உங்களையில்லை."

"வேண்டாம். அந்தச் சாதனத்தைக் கீழே வை... உண்மை பேசு.."

அவன் முகம் வெளிறுகிறது. தயக்கம் வேகமாகப் பரவுகிறது. தடுமாற்றம் முகத்தில் கரணமடிக்கிறது. பயப்பூச்சி நெளியத் தொடங்கிவிட்டதை கழுத்துப் பாகத்து வியர்வை நிரூபிக்கிறது.

"சொன்னேன்ல?.."

அவன் தயங்கியபடி வீடியோ கேமராவை கீழே வைக்கிறான்.

சாமி நின்று ஒரு மந்தகாசப் புன்னகையுடன் அவனைப் பார்க்கிறது."கிட்ட வா.." என்று அழைக்கிறது.

ஒரு அடி இடைவெளி வரை நெருங்கி நிற்கிறான்.

சாமி கண்களை உடனேமூடிக் கொள்கிறது.

சில வினாடிகள் காற்றின் வருடலோடு கனமான அமைதியோடு கழிய.. சாமி உதடு பிரிகிறது. கண்கள் மட்டும் மூடிய நிலையிலேயே.

"உன் பேர் ஞானமணி. படம் பிடிக்கிறது உன் தொழில் பட்டப்படிப்பு படிச்சிருக்கே. பூபதி உன் அப்பா பேர் ... மரகதம் உன் அம்மா பேர் ... மூணு சகோதரிகள். அம்மாவாசைல பூராட நட்சத்திரத்தல ஜனிச்சிருபக்கே. சுயபுத்தி குறைவு.சொல்புத்தி அதிகம். இப்பகூட சிலர் ஏவிவிட்டுதான் இங்க வந்துருக்கே. சரியா?"

கண் மூடிய நிலையில் இத்தனை விவரங்களா? அவன் மருண்டு போகிறான்.

"சாமி... சாமி... எப்படி இப்படி என்னால நம்ப முடியலை. என்னைப் பத்தி உங்களுக்கு எப்படி?" படபடக்கிறான். சாமி கண் திறந்தபடி சிரிக்கிறது.

"பிரம்ம முகூர்த்த வேளையில் சிரசானமும், அப்புறமா சவாசனமும் போட்டுட்டு ஆக்கினங்கற புரவ மையத்துக்குள்ளாற மூன்றாவது கண்ணைத் திறக்க வைக்கற தியான உபாசனையை ஒருமுகமா செய்தா, உடம்பிருந்தும் இல்லாம போகும். மனசும் இலவம் பஞ்சும் ஒண்ணுண்ணு தோணும். காற்றை ஊடுருவிப் பார்க்கமுடியும். உன்னுள் நிலவுகிற எண்ண அலைகளும் ... என் எண்ண அலைகளும் ஒண்ணு கூடும். பேசாம பேசலாம். நடக்காம நடக்கலாம் என்னென்னமோ பண்ணலாம். சாமியின் விளக்கம் அவனை பிரமிக்க வைக்கிறது.

"இதை எல்லாம் ஒரு நாள் ஒரு பொழுது செய்து வசப்படுத்த முடியாது. நம்பிக்கை குன்றாம பல நாட்கள் செய்யணும். அதுக்கு சிவக்ருபையும் துணை செய்யணும்."

"தெரியும் சாமி... கேள்விப்பட்டிருக்கேன். நாங்களெல்லாம் சாதாண மனுஷங்க. உங்களைப் பத்தி இப்படித்தான் சொன்னாங்க. இது மட்டுமா? இன்னும் என்னென்னமோ சொன்னாங்க."

"இரும்பைக்கூட தங்கமாக்க முடியும்னு தானே?"

சாமி வளைத்த வளைப்பில் அவனிடம் ஒரு அசுரத் திணறல்.

"ஆமா... ஆமா... அப்படியும்தான்."

"நான் இப்ப சொல்றேன். சிவத்துக்கு ரசவாதம் ஒரு அற்ப விஷயம்."

"ஆனா எங்களுத்து அது பெரிய விஷயமாச்சே சாமி.."

''நான் சொல்றதக் கேள் ... ... உனக்கும் அது சின்ன விஷயமாயிரும்.''

''என்ன செய்யணும் சாமி.''

''இந்த இடத்துக்கு இரண்டு விதமான மனிதர்களாலதான் வரமுடியும். ஒண்ணு சிவமா மாற விதியிருக்கணும். இல்லேன்னா சவமா மாற விதியிருக்கணும். நீ சிவமாகப் போறியா? இல்லை சவமாகப் போறியா?''

''சாமி... எனக்குள்ள பூந்து என்னையே பிரிச்சு போட்ட உங்களுக்கு நான் சிவமா, சவமாங்கறதா தெரியாது?''

முதல்முறையாக ஞானமணி என்னும் அவன், சாமியை மடக்குகிறான். சாமி சிரிக்கிறது.

''வா என்கூட...''சாமி அழைக்கிறது.

''எங்க சாமி?''

''நல்ல சீடனுக்கு அழகு கேள்வி கேட்காமை..''

அவன் உடனே வாய் பொத்தி அவர் பின் நடக்கத் தொடங்குகிறான்.கேமரா லாவகமாக தொங்கியபடி தொடர்கிறது.

அந்த மாமாலையின் வடபுலத்தினின்றும் நீங்கி நைரூகம் நோக்கி சாமி நடக்க ஆரம்பிக்கிறது. குழி முயல்கள் சில ஸ்நேகமாக ஓடிவந்து காலை வளைத்து விளையாடுகின்றன.சாமியின் கரம் அவற்றின் காதைப் பிடித்து தூக்கிவிட்டு வருடித் தருகிறது.

அருகாமைப் புதரில் முக்கால் தூரம் நுழைந்துவிட்ட நாகம் ஒன்றின் வால் பாகத்தையும் சாமி பற்றி உருவி, பின் இழுக்கிறது. அந்த நாகம் அவரது கைப்பரப்பில் துளியும் அச்சமோ, கணக்கமோ இன்றி சுருண்டபடி நிமிர்கிறது.சில நிமிடங்கள்தான். பார்வையிலேயே நலம் விசாரிக்கிற மாதிரி தெரிகிறது. பின நழுவி, கீழ் விழுந்து நிதானமாக ஓட ஆரம்பிக்கிறது.

ஞானமணி திகைத்துப் போகிறான்.திகைத்து விறுவிறுக்கும் பேதே சாம்பல் அணில் ஒன்று சீதாப்பழம் ஒன்றை சுமந்தபடி வந்து, சாமியின் இடுப்பேறி தோளில் அமர்ந்து''எனது ஆசனம் இதுதான்' என்கிற மாதரி பழம் தின்ன ஆரம்பிக்கிறது.

,இந்த வியப்புகளைப் படம் பிடித்தாலென்ன?' அவன் புத்தி அவனை உடனேயே கேமராவை தூக்க வைக்கிறது.

"வேண்டாம்... இதைப் பதிவெடுக்காதே.." தடுக்கிறது சாமி.

"ஏன் சாமி?"

"பதிவெடுத்து என்ன பண்ணப் போறே?"

"பரவசமா இருக்கு சாமி... காட்டு மிருகங்களோட ஒரு மனுஷன் இப்படிக்கூட பழகமுடியுமா? உலகம் இதைப் பார்த்தா அசந்து போகுமே.."

"போயி..?"

"போயின்னா.. இதெல்லாம் காணக் கிடைக்காத காட்சி ஆச்சே சாமி.."

"ஒரு சாதாரண அன்பு உனக்க இவ்வளவு பெரிசா தெரியுதுன்னா இந்த உலகம் அன்பை விட்டு எவ்வளவோ தூரம் போயிடிச்சின்னுதானே அர்த்தம்?"

"ஆமாம்... நிச்சயமா சாமி."

"சரி எடுத்துக்கோ.." சொல்லிவிட்டு மர்மச் சிரிப்ப சிரிக்கிறது.

அணில் இப்பொழுது அவர் தோள் மேலிருந்து அவனைப் பார்க்கிறது.

"கொஞ்சம் பொறு..." சாமி சொல்லிவிட்டு ஒரு மாதிரி"கூவு... கூவு...' என பட்சிஜாலக் குரல் கொடுக்க சில நொடிகளில் வாலாட்டிகளும், செம்போத்துகளும், மரங்கொத்திகளும், மைனாக்களும் எங்கிருந்தெல்லாமோ பறந்து வந்து அருகாமைப் பாறைகள் மேல், மலைக் கொடிக் கூட்டம் மேல் அமர்ந்து அவரை நோக்க...

"உம்... வாங்க ராஜாக்காளா... வாங்க.."

அவர் குனிந்து ஒரு பாறையை ஒட்டி தழைத்துக் கிடக்கும் இலந்தைப் பழம் போன்ற ரத்தச் சிவப்புமிருதுளம் பழங்களைப் பறித்து கையேந்திரப்படி நிற்க, அந்த கரத்தின் மேல் பறவைகள் கொடிமரத்தில் அமர்கிற மாதிரி வந்து அமர்கின்றன. ஒரு வாலாட்டி, சடைபிடித்த அவர் தலையைத் தன் கூடாகக் கருதி அமர்ந்து, வால் சிறகை நாற்காலியின் சாய்வுப் பகுதி போலத் தாங்கி நிறுத்துகிறது.

ஞானமணி அதிசயித்துப் போகிறான்.வீடியோவால் வேக வேகமாகச் சுடுகிறான். ,என்ன அதிசயமான காட்சிகள் இவையெல்லாம்...?' சாமியும் போஸ் கொடுத்துச் சிரிக்கிறது. அவன் கேமராவால் அப்படியே மலைத் தலத்தையும் ஒரு வட்டம் அடித்துப் படம் பிடிக்கிறான்.

தவழ்ந்துபோகும் மேகக்கூட்டம் ... பறந்துபோகும் பறவைக் கூட்டம், மறையப் பார்க்கும் மேற்குச் சூரியன், ஆரஞ்சு நிறத்துக்கு மாறிவிட்ட அந்திப் பகுதி. காது மடலில் குசுகுசுக்கும் மலைக்காற்று. அதன் கரங்கள் பட்டு சிலிர்த்தாடும் மலைமரங்கள்...

ரம்யம்... ரம்யம்!"எடுத்துட்டியா? போகலாமா?" கேட்கிறது சாமி.ஆரை மனதாகத் தலையசைக்கிறான்.

"வா... போற வழியில் யானைக் கூட்டம் வரும்.அதையும் படம் எடுக்கலாம்.." சாமி திரும்ப நடக்க ஆரம்பிக்கிறது. அணில் தோளைவிட்டு இறங்கவேயில்லை.

"எப்படி சாமி இது சாத்தியம்...? இதெல்லாம் முடியுமா?"

"பார்க்கறேல்ல...?"

"நல்லவேளை. படம் புடிச்சேன்.இல்லேன்னா யாரும் நம்பமாட்டாங்க."

சாமி அதைக் கேட்டு மர்மமமாகச் சிரிக்கிறது.

"சரி உன்னை அனுப்பினவங்களைப் பத்தி கொஞ்சம் சொல்."

சட்டென்று விஷயத்து வருகிறது.

அவனிடம் திரும்பவும் திணறல்:

"என்னை... என்னை..."

"அவங்க நல்லவங்க இல்லை... அது தெரியுமா உனக்கு?"

"ஓரளவு..."

"தெரிஞ்சும் ஒத்துகிட்டு வந்துருக்கே... எல்லாம் பணம் படுத்தற பாடு, இல்லியா?"

அவனிடம் மௌன ஆமோதிப்பு.

"உன்னோட வந்த இரண்டு பேர் இப்ப உயிரோட இல்லை. தெரியுமா?"

அவன் அடுத்த க்ஷணம் அதிர்ச்சியின் உச்சம் போகிறான்.

"அவங்களுக்கு சிவமாகற விதியல்ல. அதான்"

"அப்ப நான்..."

*"நீ இனி சிவம்.ஆயிரம் வருஷத்து சிவமடம் ஒண்ணுல சீடனாகி, பின்ன சிவமாகப் போற ஜீவன்."*

*"சிவ மடமா?"*

*"ஆமாம். இந்த மலை பத்தி உனக்கு சரியா தெரியாது.இப்ப சொல்றேன் கேட்டுக்கோ.. சிவனோட புஜப்பகுதி தான் இந்த மலை.."*

*அவன் அவரை ஆழ்ந்து பார்க்கிறான்.சாமி ஒரு பாறை மேல் அமர்கிறது. கச்சிதமாகத் தலைக்குப் பின் இப்பொழுது சாயும் சூரியன்.சாமியைப் பார்க்க சிவத்தையே பார்க்கிற மாதிரி இருக்கிறது.அவன் கேமராவை கீழ்வைத்து விட்டு அதன் காலடியில் அமர்ந்து கொள்கிறான்.அது சொல்ல ஆரம்பிக்கிறது.*

*"இந்த பூமியில இமயமும், மானசரோவரும் எப்படிப் புனிதமான பூமத்திய ரேகையோட விட்டப் பரப்புல வரும் பகுதிகளோ, அப்படித்தான் இந்த மலையும்.. அங்க பனி, இங்க உலோகக் கனி..."*

*"உலோகக் கனியா?"*

*"ஆமாம்.இந்த மலை அம்சம் உலோகம். இந்த மலைக் காற்றுல கூட அதன் வாசம் உண்டு.இந்த உலகம் தோன்றின நாள்ள இருந்து எவ்வளவோ சிவபுருஷர்கள்... சித்த புருஷர்கள்! அவர்கள் பல காரணங்களுக்காக இந்த மலையைத் தஞ்சமடைந்து இங்கேயே வாழ்ந்து சாமியாகியிருக்காங்க. அவர்களுக்கு எவ்வளவோ வித்தைகள் தெரியும்.அதுல ரசவாதம் ஒரு அல்பமான விஷயம்.*

*அந்த ரசவாதத்தாலேயே ஆன சொர்ண லிங்கமும், சொர்ண ஆவுடையாரும் கொண்ட சன்னதி பீடம்தான் சிவ மடம்... இப்போ நான்தான் அந்த சிவமடந்து தங்க சிவம்.எனக்குப் பிறகு அதைப் பரிபாலிக்க அதன் அரும் பொருளை அடுத்த நூற்றாண்டில பாதுகாக்க அடுத்த சிவம் இங்க வரும்.அதோட கைல நான் மடத்தை ஒப்படைத்துவிட்டு நானும் சமாதியாகிடுவேன்.."*

*"ஆமாம் சாமி... இதைத்தான் என்னை இங்க அனுப்பினவங்களும் சொன்னாங்க.எப்படியாவது அந்த ரசவாத ரகசியத்தையும் தெரிஞ்சுக்கணும்னாங்க..."*

*"இதை எப்படி அவங்க தெரிஞ்சுக்கிட்டாங்கன்னு தெரியுமா?"*

*"இமயமலை பக்கம்யாரோ ஒரு நாடி ஜோசியன்.ஏட்டுல, இங்க தங்கம்*

செய்யற சிவமடமும், சிவலிங்கமும் இருக்குன்னு வந்தததாம். அது தெரிஞ்சதுல இருந்துதான் இந்த முயற்சிகளே…"

"ஓ இதுக்குப் பின்னால ஒரு அரசாங்க ஊழியனும் இருக்கணுமே..?"

"ஆமாம் சாமி… ஆனா அவன் யாருன்னு தெரியாது. ஆனா அவன் ஏவிவிட்டுதான் நாங்க வந்தோம். என் வேலை படம் எடுக்கறது.மிச்சமிருக்கற இரண்டு பேருக்கும் வேற பொறுப்பு…"

"தெரியும்.. எல்லாம் தெரியும்.நடக்கறது எல்லாம் நல்லதுக்குதான்."

"நல்லதுக்கா… அவங்க செத்துட்டாங்கன்னீங்களே?"

"அவங்க மட்டுமா..? வடிவேலுன்னு ஒருத்தனும் போய் சேர்ந்துட்டான்.அந்தக் தங்க ஆவுடைப் பீடத்தையும், லிங்கத்தையும் யார் பார்த்தாலும் ஒண்ணு சவமாகணும்இல்லே சிவமாகணும் விதிவிலக்கா பூரணி மட்டும் தப்பி இருக்கா! காரணம், அவளோட நேர்மையான சிவபக்தி. கூடவே அவளுக்கு இருக்கற சில கடமைகள்.எல்லாத்துக்கும் மேல, அவ மூலமாதான் அடுத்த சிவசக்தி இங்க வர வேண்டியிருக்கு."

"என்ன சாமி சொல்றீங்க?"

அவன் நிஜமாலுமே புரியாமல் கேட்க, சாமி மந்தகாசமாகச் சிரிக்கிறது.

# 23

'கேளப்பா…!

விதிப்படி நிகழும் வினை பற்றிஞான மதி பற்றி

விளம்பினேன் இனி,

வினையதன் கருத்தல விதி பற்றி விளம்புவேன்

பொருள் நலம்பட…

எது விதியென்றே வினவுங்கால் வினவுதல்

விதியதன் விசையாலே!

ஆணும் பெண்ணும்புணருதல் வினையாம்

ஆங்கோர் மகவு மலருதல் விதியாம்

புணர்ந்த வினைக்கு காரணம் விதியாம்

மகவு மலர்ந்த விதிக்கு காரணம் வினையாம்

ஒன்றிலொன்று ஒளிந்துள்ளது

நல்வினை ஒன்றே நல்விதி பயப்பது.

நலம்பட உரைத்தேன் நன்னெஞ்சில் கொள்!

சொர்ணஜாலத் திரட்டுக் குறிப்பு

அந்தச் சிரிப்பு ஞானமணியை என்னவோ செய்கிறது. கைக் கடிகாரத்தைப் பார்க்கிறான். சாமியோடு இணக்கம் ஏற்பட்டு முழுவதுமாக ஒரு மணி நேரம் கூட ஆகியிருக்கவில்லை. ஆனால் பல ஜென்மங்கள் பழகின மாதிரி பிரமிப்பு தட்டுகிறது. உள்ளுணர்வெல்லாம்

சலவை செய்யப்பட்ட மாதிரி மாறிப்போய் விட்டிருக்கிறது.

"ஞானமணி கொஞ்சம் கஷ்டமான வேலை.. அனா நல்ல கூலி தரேன். ஜாக்கிரதையா செயல்படணும்" என்று எச்சரித்து இங்கே வந்த நொடி முதல் ‘அஸைன்மெண்டை முடித்துக் கொண்டு எப்பொழுதடா திரும்புவோம்?’ என்று இருந்தவனுக்குள் இப்பொழுது குடும்ப நினைப்போ? சம்பாத்ய நினைப்போ துளி கூட இல்லை!

ஒட்ட பிழிந்த கடற்பஞ்சு போல, மனசு மகா லேசாக இருக்கிறது. காற்ற வீச்சு, பட்சி ஜாலம், காணும் காட்சி எல்லாமே மிகமிக இனியதாகத் தோன்றுகிறது. காமிராவை கீழே வைக்கிறான் கைகளை கட்டிக் கொள்கிறான் கேள்விகள் எதுவும் கேட்கத் தோன்றாமல் சாமியையே பார்க்கிறான்.

"வரயா மடத்துக்கு..? கேட்கிறது சாமி.

"வரேன் சாமி. இனி நீங்க என்ன சொன்னாலும் கேட்பேன்.

"நல்லது.. வா". கிளம்புகிறான். வீடியோ காமிராவை விட்டு விட்டு.... சுமந்து வந்ததும், படம் பிடித்ததும் அதற்குள்ளாக மறந்துவிட்டதா என்ன?

****

மூங்கில்களாலேயே வேய்ந்த குடிசை. குடிசை மேல் மணி பிளாண்ட் என்று ஆங்கிலத்தில் வர்ணிக்கப்படும் செவ்வக் கொடி. வெட்டி வேர் வாசம்

கமகமக்கிறது. சலசலவென்று தண்ணீர் பாயும் சப்தமும் கேட்கிறது.

ஒடுங்கிக் கிடக்கும் வேலி மாணிக்கக் கொடிகளும், மூங்கில் மரங்களும், நெல்லிமரங்களும்,தழைத்த மரக்கூட்த்தை குடைந்து கொண்டு உள் நுழைந்து பார்க்கும் இடம் இத்தனை பராதனமானதா என்ன?முகப்பில் கல்லால் ஆன ஒரு சித்தர் உருவம் அதன் கழுத்தில் பாதி காயந்த மகிழம்பூ மாலை.

''வா.. இதான் மடம்.அந்தக் காலத்துல 'சொர்ண மடம்'னு சொல்வாங்க. இப்ப இதை 'தங்சாமி மடம்'னு சொல்வாங்க'' சொல்லிக் கொண்டே முன் செல்கிறது தங்கசாமி.

திரும்பித் திரும்பிப் பார்த்தபடி நடக்கிறான் ஞானமணி. கிட்டத்தட்ட சொர்க்கலோகத்துக்கு வந்துவிட்ட மாதிரி உணர்வு.

''இங்க இப்படி ஒரு குடிசை இருக்கறதோ, அங்க நீங்க இருக்கிறதோ எங்களுக்குத் தெரியவெ இல்லை. நாங்களும் இந்த காட்டுல சுத்தாத இடம் இல்லை.''

சாமி சிரிக்கிறது.

''இங்க வர விதியிருக்கணும்ப்பா''.

''அப்ப எனக்கு இருக்கா?''

இல்லாமலா?..உள்ள வா!''

காலை வளைத்து ஓடும் ஊற்று நீர் வாய்க்காலில் இறங்கித்தான் அந்தக் குடிலருகே போகவேண்டு;ம். அதனால் தன்னால் கால் கழுவப்பட்டுவிட, சாமி கழுவிய கால்களுடன் மூங்கில் குடிலின் முன வாசலைத் தொட்டு நிற்க… ஞானமணி கைகளால் தண்ணிரை மொண்டு முகம் கழுவியபடி பேண்ட்டை இழுத்த மடித்தெல்லாம் விட்டுக் கொள்கிறான். வாயில் நீரை குழாய் நீர் போல் பீறலாக உமிழ்ந்தபடி வாய்க்கால் கடக்கிறான்.

தங்கசாமியை போலவே முன் வாசல் மிதிக்கிறான். உள்ளே எட்டிப் பார்க்கிறான். மான் ஒன்று வாலாட்டிய படி பார்க்கிறது. நாய் போல உள்திரியும் அந்தக் கவர்ச்சி மிக விலங்குக்கு அப்பால் யார் அது வெள்ளைவெளேரென்று…?

''வெல்கம் குருஜி'…..

தங்கசாமி அழைத்த அவனையும், ஞானமணியையும் மாறி மாறிப்

பார்க்கிறது.

"இவர் அமெரிக்கவாசி. பேர் எல்டன். அங்க பெரிய டாக்டர். இங்கயோ என்னோ சிஷ்யப்பிள்ளை.." என்று அறிமுகப்படுத்துகிறார். ஆமெரிக்காகாரன் சிஷ்யனா?

ஆச்சரியம் நெற்றியில் தீய ஆரம்பிக்கிறது.

அந்த வெள்ளைக்காரன் பதவிசாக காவி உடுத்திக் கொண்டும், பட்டை தீட்டிக் கொண்டு, குங்குமம் மிளிர சிரிக்கிறான். கைகளில் ஏட்டுக்கற்றை!

"என்ன எல்லடன்.. படிச்சு முடிச்சிட்டியா?"

"இல்ல சாமி.. சில இடங்கள் புரியலை"...

"அது பற்றி பிறகு பேசலாம். இவன் ஞானமணி. உன்னைப் போல ஒரு சிஷ்யன். உள்ள கூட்டிட்டுப் போ..."

அவன்"உள்ள வாங்க' என்று நல்ல தமிழில் அழைக்கிறான்!

உள்ளே பெரிய கூட்டம். தரைப் பரப்பெல்லாம் சாணியில் மெழுகப்பட்டிருக்கிறது. சுற்றிலும் உள்ளமூங்கில் சுவர் பரப்பில் கட்டுக்கட்டாய் ஏடுகள்! தலையணை, தலையணையாகப் புத்தகங்கள். ஆங்காங்கே வெண் பளிங்குச் சிலை உருவங்கள். அவ்ளளவு பேரும் யோகிகள். கூடத்தின் மையத்தில் விபதிப் தொட்டி. அதில் விபூதியில் மூழ்கிய விபூதிலங்கம்.

"இங்க இருக்கற ஏடெல்லாம் பொக்கிஷங்கள் வியாதிக்கு மருந்தையும், மனுஷனுக்கு ஜோதிடத்தையும், வாழக்கைக்கு பக்தியையும், இறப்புக்குப் பின்

மோட்சத்தையும் போதிக்கிற ஏடுகள்.

இதுவரை இந்த சொர்ண மடத்துல நூத்தி ஏழு சித்த புஷர்கள் தலைமை தாங்கி நடத்தியிருக்காங்கா. நூத்தி எட்டாவது தலைமையோட இந்த மடத்தோட பணி முடிஞ்சிடும்னு மடத்து காலச்சக்கரம் சொல்லுது..." சொல்லிக் கொண்டே காலச்சக்கரம் என்னும் அந்த ஏட்டுக்கட்டை எடுக்கிறான் எல்டன் என்னும் அந்த வெள்ளைக்காரன்.

"நீங்க எப்படி இங்க?"

"நாடோடிஎயா வந்தேன். அப்படியே தங்கிட்டேன்.ரொம்பப் பிடிச்ச போச்சு."

"உங்க வீட்ல தேட மாட்டாங்காள?"

"தேடலாம். இருந்தாலும் குரு இங்க தங்கியிருந்து இந்தஏட்டுச் சரக்கையெல்லாம் இங்கிலீஷ்ல ட்ரான்ஸ்லேட் செய்யச் சொன்னதால, செய்துகிட்டு இருக்கேன்."

"எதுக்கு?"

"குருவை கேள்வி கேட்கலாமா?"

"ஆமா... எங்க அந்த சொர்ண்லிங்கம்?"

அடுத்த கணம் தங்கசாமி வெளியில் சிரிப்பது உள்ளே

இவன் காதில் விழுகிறது.

"சாமி ஏன் சிரிக்குது?"

"நீயே போய்க் கேள்.." எல்டன் அப்படிச் சொல்லவும்ஞானமணி வெளியே சென்று விரைப்பாக அமர்ந்துவிட்ட தங்கசாமியை பார்த்து நிமிருகிறான்.

"எதுக்கு சிரிச்சீங்க?"

"தங்கம் மேல அவ்வளவு ஆசையா?'

அடுத்த வினாடி தடுமாற ஆராம்பிக்கிறான் ஞானமணி.

"சராசரி மனுஷன் போல எதையும் இங்க தேடாதே. விலகிப் போ. எல்லாம் விரும்பி வரும்."

அவன் முகம் சற்று களையிழக்கிறது.

"போ... போய் ஓடையில குளிச்சிட்டு வா. காவி தரேன். உடுத்திக்கோ. இந்த உடுப்பை எல்லாம் கழட்டி எறி. இனி இது உனக்கு வேண்டாம்..."

அவருடைய கட்டளை அவனை மேலும் என்னவோ செய்கிறது.

'எனக்கு இனி இங்க என்ன வேலை சாமி?"

"உன்னைத் தேடறதுதான்!"

"என்னைத் தேடி?"

"சரி..அப்ப கிளம்பு முடிஞ்சா வெளியேறு"

தங்சாமியின் பதில் எந்த வகையைச் சேர்ந்தது என்பதை அவனால் யூகிக்க முடியவில்லை.

"என்னால் இங்க இருக்க முடியாது சாமி... நிமிஷத்துக் நிமிஷம் என் மனசுல உணர்ச்சிகள் மாறுது." சொல்லிவிட்டு சட்டென்று காமிரா நினைவு வந்தனாக, அடடா..வீடியோ காமிராவை எங்கேயே வெச்சுட்டேனே.." என்று பதறத் தொடங்குகிறான்.

சாமி அர்த்தத்தோடு சிரிக்கிறது.

அதே சமயம்.....

லாரன்ஸ்.. போஸ் இருவரும் ஒரு வகை தேடலோடு பளிங்கன் சொன்ன வடபகுதியில் நடந்து கொண்டிருக்கின்றனர்.

"அற்புதமா இருக்கு சூழ்நிலை.. ஆனா யாரையும் காணலையே போஸ்..." லாரனஸ் ஸ்லாகிக்கிறார்.

"அதான் எனக்கும் ஒண்ணும் புரியலை. பார்க்கலாம்னு நினைச்சதெல்லாம் மிகையோ..."

போஸ் இப்படிக் கேள்வி கேட்கும் போது, மிளாமான் ஒன்று தாவிக் குதித்தபடி வந்து நின்று அவர்கள் இருவரையும் பார்க்கிறது. இருவரும் அதைப் பார்க்கின்றனர்.

"பியுட்டிஃபுல்" என்கின்றனர்.

"அசுரத்தனமான மனுஷன், மரங்களையும், மிருங்களையும் வேட்டையாடினாலும் சில இடங்கள்ல இயற்கை இன்னும் சாகாமதான் இருக்கு. என்ன சொல்றீங்க லாரன்ஸ்.."

"அஃப்கோர்ஸ்..."

லாரன்ஸ் ஒப்புக்கொண்ட மறுநொடி, யானை ஒன்றின் பிளிறல் சத்தம். வந்த திசைப் பக்கம் பார்த்தால், தரைதட்டும் தந்த்தோடு ஒரு யானை, சின்னக் கண்களில் சீற்றம் நன்கு தெரியும்படி நின்று கொண்டிருக்கிறது.

"போஸ்! கமான் ஓடுவோம். ஓத்த யானை.. நின்னா நம்மை உண்டு இல்லைன்னு பண்ணிடும்..."

லாரன்ஸ் துப்பாக்கியை எடுத்துச் சுட்டபடி ஓட அதன் சப்தத்திகெல்லாம் அஞ்சாது அது துரத்தத் தொடங்க. லாரன்ஸ் ஈசான மூலை நோக்கியும், போஸ் நைருக மேட்டிலும் பிரிந்து ஓடத் தொடங்குகின்றனர்.

லாரன்ஸ் சமவெளியில் ஓடினாலும் வளைந்து வளைந்து ஓடி யானைக்கு தண்ணீர் காட்டாத்தான் செய்கிறார். ‘மிகவும் முடியாதபோது சுடலாம்’ என்கிற உணர்வு, கைத்துப்பாக்கியை இறுகப் பற்றியிருக்கிறது. ‘இதற்கு மேல் முடியாது’ என்கிற உள்ளுணர்வு, ஒரு கட்டத்தில் கைத்துப்பாக்கியை யாணையை நோக்கி நீட்டி சுடச் செய்கிறது. முதல் இரண்டு குண்டுகள் தடம் விலக்கினாலும், மூன்றாவது குண்டு யானையின் நடுமுகத்தை துளைக்கிறது.

அதன் ஆவேசமும் அதிகரிக்கிறது. லாரன்ஸின் ஆவேசமும் அதிகரிக்கிறது. லாரன்ஸின் துரதிர்ஷ்டம், பின்னோக்கிய நடையில் அவர் ஒரு பள்ளத்தில் சரிந்து உருண்டு விழ... குண்டு பட்டயானைஆவேசம் குறையாமரல் அங்குவந்து உருண்டு விழுந்து லர்ரன்ஸை நசுக்கியபடிமூட...

லாரன்ஸின்உயிர்க்குரல், போஸ் காதுகளை அவர் ஒரு பாறை மேட்டில் இருக்கும் போது எட்டுகிறது.

"லாரன்ஸ்.. என்ன ஆச்சு? ஐ வில் கம்..." திரும்ப உத்தேசித்து கத்திய போஸ் திரும்பிய அந்த க்ஷணத்தில் காலில் ஏதோ இடற... குனிகிறது பார்வை. கீழே ஞானமணி தவற விட்ட வீடியோ காமிரா! அதே சமயம் தொலைவில் லாரன்ஸின் இறுதி உயிர்குரல்!

# 24

‘கேளப்பா...!

கோளொன்பது ... நாள் முன்னைந்தருபது!

சராசரம் முக்கோடி ... தேவரதில் முப்பதவர்

பூதமைந்து ... சார்ந்த கோளமோ ஒன்று!

கேளாமிதில் மூலமுணர் சீலர் சிவர்

சிவர் வழி கூடுடையர் சித்தர்

சித்தருக்குள் மேலனைத்தும் அடக்கம்

அடக்கமெலாம் மடத்து நிழல் கிடக்கம்

மடமதுவும் பூதமைந்தை முடக்கும்

உள்வெளிக் கலையெலாம் அதனுளேயடக்கம்.

*உய்த்துணரு அதனொரு சீடனாகி...'*

*சொர்ணஜாலத் திரட்டுக் குறிப்பு*

*'லாரன்ஸின் உயிர்க்குரல் ஒரு வினாடி போஸை உலுக்க, காமிராவும் கையுமாக சப்தம் வந்த திக்கு நோக்கி ஓட ஆரம்பிக்கிறார்.*

*மூச்சிரைக்க, ஈசான்ய பள்ளத்தை நெருங்கியபோது அவர் கண்ட காட்சியில் கண் விழி தெறிக்கத் தொடங்கியது.*

*யானை சுருண்டு லாரன்ஸை நசுக்கியபடி கிடக்க, லாரன்ஸின் கரம் மட்டும் வெளித்தெரிந்த நிலலையில்...*

*"லாரன்ஸ்.. லாரன்ஸ்.." ... போஸிடம் குரல் உடைகிறது. அவருக்கு அருகில் அமர்ந்து அழலாம் போலிருக்கிறது.*

*காற்றிடம் சிண்டைப் பிய்க்கும் வேகம்.*

*சுற்றி ஒரு பார்வை பார்க்க எத்தனை ரம்யம்? இந்த இயற்கைக்கு நடுவில் இப்படி ஒரு கோர முடிவு?*

*போஸ் தலையைப் பிடித்துக் கொண்டு பக்கத்தில் அமர்ந்து விட அதே சமயம்!*

*"அப்பா... அப்பா உங்களைத்தான்.இப்படிப் போய் கிட்டே இருந்தா எப்படி? எங்க இருக்கு அந்தக் குடிசை?" அகிலா தோளைப் பிடித்து உலுக்கி கேட்டபிறகுதான் அவருக்கு வடிவேலு நினைப்பு துண்டுபடுகிறது.*

*"என்னம்மா கேட்டே...?"*

*"போய்கிட்டே இருந்தா எப்படிப்பா? அம்மாவுக்காக யாருக்கும் தெரியாம ரிஸ்க் எடுத்து வந்திருக்கோம், ஞாபகம் இருக்குல்ல?..."*

*விரக்திச் சிரிப்ப சிரிக்கிறார் கந்தசாமி.*

*மாலை கட்டிக் கொண்டிருக்கிறார் பூரணி.மயில் அகவும் குரல் கேட்டு அவள் திரும்ப... கந்தசாமி மீனா, அகிலாவோடு உள் நுழைத்து கொண்டிருக்கிறார்.*

*நேற்று சாமி சொன்னபடி இன்று கந்தசாமி வந்துவிட்டார். கிளம்ப வேண்டியதுதான். அது யார்?... ஓ மீனாவா? அடேயப்பா எத்தனை அழகு... போஷாக்கு?*

ஆச்சரியம் அலையடிக்க, எழுந்து வெளியே வருகிறாள்.

"அம்மா.." அகிலா முன் பாய்ந்து வருகிறாள்.

"என்னம்மா இது? இங்க என்னம்மா பண்றே?"

கோபமும், வருத்தமும் சம விகிதத்தில் கலந்து கொப்பளிக்கிறது. மீனா பார்வை உள்வீட்டை ரசித்தபடி இருக்கிறது.மெழுகின சமாதி.எரியும் விளக்கு... முக்கோண மாடங்கள்... பாதி காய்ந்து மீதி காயாத மாலையின் வாசம்.சூழ்நிலை வியக்க வைக்கிறது.

பூரணி மீனாவின் கரங்களைப் பற்றுகிறாள்.

"எப்படி இருக்கீங்க அத்தை?" வழக்கமான கேள்விதான்; ஆனாலும் பாச நெகிழ்வு பளிச்சென்று தெரிகிறது.

"அண்ணன் எப்படி இருக்கார்?" பூரணி ஜாடையில் விசாரிப்பது முதலில் புரியவில்லை.பின்பு புரிகிறது.

"நல்லா இருக்கார்... ஆமா இது என்ன இப்படி ஒரு குடிசைல? இந்தச் சமாதி யாரோடது?;" திரும்பவும் பூரணியிடம் ஜாடையிலான பதில்.

"பூரணி... இனி ஒரு நிமிஷம் நீ இங்க இருக்க நான் விடமாட்டேன்.கிளம்பு. மத்ததை வீட்ல போய் பேசிக்கலாம்" கந்தசாமியின் தீர்மான பதிலைத் தொடர்ந்து அந்தச் சமாதியின் முன் விழுந்து எழுந்திருக்கிறாள்.சுற்றி வருகிறாள்.ஒரு முக்கோண மாடத்திலிருந்து ஞாபகமாய் அகல் விளக்கு ஒன்றை எடுத்துக் கொள்கிறாள்.

"அது எதுக்கு.. போட்டுட்டு வா! இந்த மலைல இருந்து துரும்பு வேண்டாம் பட்டது போதும்." கந்தசாமி அதட்டுகிறார் பூரணி லட்சியம் செய்த மாதிரியே தெரியவில்லை.எல்லாம் எனக்குத் தெரியும் என்பது போல ஜாடை செய்துவிட்டு ,நடங்கள்' என்கிறாள்.

"இருங்க அத்தை... ஒரு நிமிஷம்" மீனா பார்வை அங்கே ஒரு அறையில் உள்ள புத்தகம் ஒன்றை எடுத்து தூசு தட்டுகிறது.

"மீனா... என்னம்மா நீ? நாம வந்திருக்கிறது இவளை கூட்டிட்டுப் போக... அதையெல்லாம் தொடாதேம்மா."

"இருங்க மாமா... என்ன புத்தகம்? யார் எழுதினது? எதுக்கு இங்க இருக்குன்னு தெரிய வேண்டாமா?" பதிலோடு விரல்கள் பக்கம் புரட்ட, முதல் பக்கத்தில் காய்ந்த மையெழுத்தில் ,வனக்கோனார்' என்று

ஆங்கிலத்தில் கையெழுத்து.கீழே 3.3.37 என்னும் தேதிக்குறிப்பு.

"வாவ்... கிட்டத்தட்ட அறுபது வருஷத்துக்கு முந்திய புத்தகம். சபாஷ்..."

பாராட்டோடு கை அடுத்தப் பக்கத்திற்கு செல்கிறது.தூக்கி வாரிப் போடுகிறது.

,வடக்கு வனக் குறிப்புகள்' என்று எழுதி அடித்திருந்தது.அடித்த இடத்திற்கு கீழே,"இன்று எனக்கு மகள் பிறந்தாள். மீனாட்சி என்று திருநாமம் சூட்டத் தீர்மானித்தேன்.மனைவியாகிய வடிவழகு, ,செல்லாயி அம்மன் பெயரைத்தான் சூட்ட வேண்டும்' என்றாள். ,சரி' என்று ,செல்லாயி' என்று நாமம் சூட்டி ,மீனாட்சி' என்றழைக்க உத்தேசம் செய்வேன்."

குறிப்பை படித்தவளுக்கு மூலையில் பூச்சி ஊர்கிறது.

"என்ன மீனா... எதைப் பார்த்து இப்படி ஸ்தம்பிச்சிட்டே?"

"இந்தக் குறிப்பு.. இந்தக் குறிப்பு அகிலா.என்ன ஒரு ஆச்சரியம்! இதுல இருக்கிற குறிப்பு அப்படியே எனக்கும் பொருந்தும்."

"என்ன சொல்றே?"

"எனக்கும் வச்ச பேர் செல்லாயி.கூப்பிட்ற பேர்தான் மீனா. பர்த் டேட்டும் மூணுதான். 3.3.73. இதுல 3.3.37 ..இல் ஒரு மீனா பிறந்திருக்கா..."

"ஆச்சரியமா இருக்கே... இது என்ன புத்தகம்?"

புத்தகம் இல்ல... டைரின்னு நினைக்கிறேன்.அந்தக் காலத்துலேயே இப்படி ஒரு பழக்கம் இருந்துருக்கு!"

சொல்லிக் கொண்டே அடுத்தடுத்த பக்கங்களைப் புரட்டுகிறாள். தாள் முனை மடிந்து பொடிகிறது. உள்ளே ,காசம் போக்கும் வழிமுறை', ரசாயனம் செய்யும் முறை', ,ஊதுகாமாலை வற்றச் செய்யும் வழிமுறை' என்று வெறும் மருத்துவக் குறிப்புகள்...

சில பக்கங்களில் ,எங்கு பார் வந்தே மாதரகோஷம்... மின்சாரம் வரப் போகிறதாம்.." என்று அந்த நாளைய நினைவுப் பதிப்புகள்...

"அம்மாடி, அந்தப் புத்தகத்தை எறிம்மா... முதல்ல கிளம்புவோம்" கந்தசாமி குறுக்கில் நுழைந்து கையைப் பிடித்து இழுக்கிறார்.

"இருங்க மாமா... எவ்வளவு இண்டரஸ்டிங்கா இருக்கு. தெரியுமா?"

அடுத்தடுத்த பக்கங்களில் புகுந்து வெளிவர... ஒரு பக்கத்து செய்தி அப்படியேவ பிடரியையே கவ்வி விடுகிறது.

,மகாலிங்கம் போல ஒரு லிங்கததை தாமிரத்தில் செய்து பின் ரசாயனச் சாற்றில் ஒரு மண்டலம் ஊற வைத்து எடுத்ததில், சர்வமும் தங்கமாக மாறி விட்டிருந்தது. ,அந்தத் தங்க லிங்கத்தை மலைச்சுனை ஒன்றில் போட்டு வைக்க அதன் நீரெல்லாம் கங்கை போல பாவம் போக்கும்படியான சக்தி பெறும்' எனும் குருநாதர் ஆக்ஞைக்கு ஏற்ப வடக்கு ஈசான்ய சுனையில் அதைப் போடலாயிற்று.

இனி ஈசான்ய பாகம் பூமண்டல வாஸ்து புருஷன் பலத்துடன் சிவத்தின் பேரருளும் கூடிப் பெறும்.

கால தூதர்கள், நவமாதிபர்கள் தங்கள் சுழல்வுகளால் ஞான அஞ்ஞான விளையாட்டு நிகழ்த்த... இங்கு மட்டும் அந்த விளையாட்டு, எவரையும் ஏதும் செய்யாது.

பேராசை காமாந்தகனும் சுனை நீராடிட ஒரு மனக்கட்டுப்பாட்டுக்குள்ளாவான்.அனேக சித்த புருஷர்கள் தோன்றி சிவனருளைப் பெறுவர்.

உலகம் அத்தனை சுலபத்தில் அஞ்ஞான வசமாகி அழிவு நோக்கிச் செல்லாது, ஆயினும் ஊழி உற்பாதம் வரும்கால் சுனை வற்றினாலோ, சிவலிங்கம் அங்கிருந்து நீங்கினாலோ, ஈசான்யம் பூமி அதிர்வுகாளல் மேடு ஆனாலோ, அனைத்து நலங்களும் போய் மாமலை வெறும் மண்மேடு என்று மட்டுமாகிவிடும்.'

வாசிப்புக்கு நடுவில் நிமிர்ந்து கண்ணிரண்டில் ஆச்சரிய ஒளியைக் காட்டியபடி கந்தசாமியை பார்க்கிறாள்.

"என்னம்மா... எதுக்கு அப்படி பார்க்கறே?"

"மாமா... இதல இருக்கறதப் படிக்க, படிக்க ரொம்ப ஆச்சரியமா இருக்கு.இங்க வடக்கு பாகத்துல எங்கையாவது சுனையிருக்கா?"

"கிளம்பும்மா... அந்தப் புத்தகத்தை தூக்கிப் போடு. மொதல்ல போவோம்.எது இருந்தா நமக்கு என்ன? நமக்கு பூரணி கிடைக்கணும்.கிடைச்சுட்டா.அவ்ளோதான், கிளம்பும்மா."

"ஐயோ.. இப்படியா துளிகூட எடர்னல் இண்டரஸ்ட் இல்லாம பேசுவீங்க?" கந்தசாமியை லட்சியமே செய்யாமல் அடுத்து ஒரு புத்தகக் கட்டை

எடுக்கிறாள்.தலைப்பை பார்க்கிறாள்.,சிவநாடி' என்றிருக்கிறது. அடுத்துஇன்னொன்று... அதில் ,குபேர விலாசம்' என்கிற தலை எழுத்துக்கள்.

"அம்மாடி... இப்ப நீ கிளம்பறீயா, இல்ல நான் கிளம்பட்டுமா?" கந்தசாமி அலறவே, அவற்றை வைத்துவிட்டு அரை மனதாக திரும்புகிறாள்.நிலை தாண்டுபோது"மீனாக்கண்ணு... நாகலிங்க புஷ்பங்கள் பறிச்சுகிட்டு வந்துட்டியா?" என்று ஒரு குரல்.

"நாகலிங்க புஷ்பமா?" மீனாவிடம் பதில் கேள்வி.

"என்னம்மா.. என்ன நாகலிங்கப் பூ? எதுக்கு கேட்டே?"

"இல்ல மாமா... இப்ப யாரோ ஒருத்தர் என் பேரைச் சொல்லி நாகலிங்க புஷ்பங்கள் கொண்டு வரச் சொல்லலை?"

"எங்க காதுல எதுவும் விழலையே...?"

"என் காதுலு விழுந்ததே..."

"உளறாதே... கிளம்பு.குரலாம்.காதுல விழுந்தாலும்.எங்க மூணு பேர் காதுல விழாதது, உனக்கு மட்டும் விழுந்துடுச்சாக்கும்?;"

"சத்யமா அங்க்கிள்."

பூரணி மட்டும் மீனாவை பரிதாபமாகப் பார்க்கிறாள் நெருங்கி வந்து கைகளை பிடித்துக் கொள்கிறாள்.ஏதோ சொல்ல வருகிறாள்.முடியவில்லை.

"சரி, சரி... நடங்க."

நடக்க ஆரம்பிக்கின்றனர்.நடக்க நடக்க மீனா பார்வை, திரும்பித் திரும்பிப் பார்க்கின்றது.

பல லட்சம் தடவைகள் பார்த்த ஒரு இடம் போல மனப்பதிவு கொள்கிறது அந்த இடம். தொடர்ந்து நடை... நடை...

"போதும் சாமி. எனக்கு இனி இந்த ஊரே வேண்டாம்.என்ன ஒரு பாடு... என்ன ஒரு பாடு" அலுத்துக் கொள்கிறார் கந்தசாமி.

இடையிடுகிறது எதிரொலிமிக்க ஒரு குரல்.

"ஹலோ யாராங்கே... கொஞ்சம் உதவிக்கு வாங்களேன்!"

தொலைதூரத்தில் ஒரு ஒட்டக முதுகு போன்ற பாறை மேல் ஏறி நின்றபடி குரல் கொடுத்துக் கொண்டிருப்பது போஸ்!

# 25

*'கேளப்பா...!*

*நெருஞ்சிக்கும் பொறாத தேகமிது...*

*உயிர் விலகிட கண்டங் கூறிடலாம் எனும்போது*

*போன உயிர் பற்றி போகா உயிர் கொள்ளும் ஞானம்*

*ஆத்ம ஞானம்!*

*தேகமிதில்ஒன்பது துவாரம்...*

*சிரமதுவோ முகத்துவாரம்!*

*மென்விரல் கூரை நகமும், நல்விழிக் காப்பிமையும்*

*கற்பனைக்கெட்டா அற்புதங்கள்!*

*அற்புதமும் அடங்குவது பிணியால்...*

*பிணியோ வினைகளால்!*

*ஈதெலாம் உணரும் ஞானம் ... ,ஸ்தூல ஞானம்!*

*ஆத்தும், ஸ்தூலம் அடங்கிய கோள்வெளி*

*கொண்ட பெருக உலகினை ... ஆக்கியணைத்து*

*அழித்துச் சுழற்றிடும் ஆதீசோதி பற்றியதே,வெளி ஞானம்!'*

*சொர்ணஜாலத் திரட்டுக் குறிப்பு*

போஸின் அந்த உதவிக் குரல் கச்சிதமாக மிதந்து வந்து மீனா காதில் விழுகிறது.திரும்பிப் பார்க்கிறாள்.நெடுந்தூரத்தில் போஸ் ஒரு பாறை மேல் நின்று கொண்டு கைகளை அசைத்து அழைப்பது தெரிகிறது.

"யாரோ உதவிக்கு கூப்பிடறாங்க..." அகிலாவும் அதைப் பார்த்து புரிந்து கொள்கிறாள்.

"யார் கூப்பிட்டாலும் சரி... நமக்கு இனி வீட்டுக்குப் போறதுதான்

சரி.போதும் இதுவரை பட்டது..." கந்தசாமி சலித்துக் கொள்கிறார்.

"என்ன அங்கிள், இப்படிச் சொல்றீங்க? அவங்களுக்கு என்ன பிரச்சினையோ?" மீனா போஸை நெருங்கத் தீர்மானித்து விட்டாள்.

"வேண்டாம்மா... சொன்னா கேளு."

"பேசாம வாங்க பக்கத்துல போய் பார்ப்போம்."

கந்தசாமி முகம் கசங்குகிறது.பூரணி புரிந்தது போலஅவரைப் பார்த்து ,ஒன்றும்' நடந்துவிடாது, கவலைப்படாதீர்கள்' என்று ஜாடை செய்கிறாள்.

வேறு வழியில்லை.

நெருங்க நெருங்கத்தான் தெரிகிறது, அது போஸ் என்று!

"போஸ் நீங்களா?"

"ஆமாம் மேடம்.நீங்க எங்க இந்தப் பக்கம்?"

"இவங்கதான் என் அத்தை கண்டுபிடிச்சுட்டோம்.கூட்டிக்கிட்டு போய்க்கிட்டிருக்கோம்.ஆமா இது என்ன கையில் வீடியோ காமிரா?!"

சோல்றேன் மேடம், சொல்றேன்.அதுக்கு முந்தி எனக்கு ஒரு உதவி செய்யணும்!"

"என்ன போஸ்?"

"இமீடியட்டா கீழே போய் போலீஸை காண்டாக்ட் பண்ணி நாலைஞ்சு கான்ஸ்டபிள்ஸ், சென்ட்ரியோட வரணும்.."

"எதுக்கு?"

"எப்படி மேடம் சொல்வேன்.நடக்கக் கூடாதது நடந்துப் போச்சு..."

"என்ன?"

"என் கூட வந்த லாரன்ஸை யானை மிதிச்சு கொன்னுடுச்சு..."

"வாட்?"

"ஆமாம் மேடம்.ஒத்தை யானை!"

சொன்ன கையோடு முகம் பூசியபடி பெருமூச்சு விட்டு கண் கசக்குகிறார் போஸ்.

"இப்ப எங்க இருக்கு பாடி?"

"வாங்க காட்றேன்."

அடுத்த நொடி மீனா ஆவலாக கிளம்ப, கந்தசாமி இடைமறிக்கிறார்.

"அம்மாடி... போதும்மா சொன்னா கேள்.நாம கீழ போய் போலீஸை அனுப்புவோம். நீ போகாதே..."

"என்ன அங்கிள் நீங்க.நாம கொஞ்சம் தாமதிச்சாலும் வடிவேலு உடம்பை ஓநாய்கள் சாப்ட மாதிரி ஆயிடும்!"

"ஆமாம் மேடம். அதுக்குத்தான் பயப்படறேன்.எவ்வளவு சீக்கிரம் போலீஸ் வருதோ அவ்வளவுக்கவ்வளவு நல்லது.அதனால்தான் நான் இங்கேயே இருக்கேன்.ப்ளீஸ் மேடம்."

"அப்ப சரி.. நீங்க இருங்க. நான் எவ்வளவு வேகமா செயல்படமுடியுமோ அவ்வளவு வேகமா செயல்படறேன். வாட் அபௌட் யுவர் வயர்லெஸ்?"

"இங்க இருந்து கேச் பண்ண முடியலை.லைன் கனெக்ட் ஆக மாட்டேங்குது.சம்திங் ராங்.."

"ஓ.கே. ஓ.கே கொஞ்சம் பொறுங்க.வந்திடறேன்.அங்கிள் நடங்க சீக்கிரமா..."

மூவரும் வேகமாக நடக்கத் தொடங்க, பக்கமாய் உள்ள மரத்தடியில் சென்று சாய்ந்து நின்று வானம்பார்க்க ஆரம்பிக்கிறார் போஸ்.

பூரணி முகத்தில் விதியின் வலிமை குறித்த ஒரு சின்ன சிலிர்ப்பு.

,மீனா, இனி வரமாட்டாய், எனக்குத் தெரியும்' என்கிற மாதிரி பார்க்கிறாள்.

புழுதி பறக்க தாணிப்பாறை அடிவார நுனிப் பகுதி வரை வந்து நிற்கிறது போலீஸ் ஜீப்.

ஏராள திபுதிவோடு பத்து பதினைஞ்சு போலீஸார் ஸ்ட்ரெச்சர்,கயிறு என்று இறங்குகின்றனர்.

சாம்பல் அணில் ஓடிவந்து பார்த்துவிட்டு திரும்ப ஓடுகிறது. மீனா அந்த நிலையிலும் அதன் ஓட்டத்தை ரசிக்கிறாள்.

"மேடம் நீங்க வரணுமா?" தயங்கியபடி கேட்கிறார் இன்ஸ்பெக்டர்.நேம் பேட்ஜ்அவரை ஜீவானந்தம் என்கிறது.

"கட்டாயம்" என்று கூறி தோளை சிலிர்க்கிறாள் மீனா.

"வேண்டாம் மேடம்... கருணாகரன் சார் எங்களைக் கோவிச்சுக்குவார்."

"நோ ப்ராப்ளம், நான் பார்த்துக்கறேன்."

"இல்ல மேடம். இப்பதான் ஃபோன் வந்தது.உங்களை கேர்ஃபுல்லா பார்த்துக்கணும்ம்ங்கறது எங்க பொறுப்பு. பாடிய ரிமூவ் பண்ற இடத்துக்கெல்லாம் நீங்க எதுக்கு?"

இன்ஸ்பெக்டர் ஜீவானந்தத்தின் உறுதியை அரைக்கண் மூடி அங்கீகரிக்கிறாள். மீனா:

"சரி நீங்க கிளம்புங்க."

"உங்களை வீட்ல விடச் சொல்லட்டுமா?"

"வேற வழி?" சலிப்பாய் பதில் தருகிறாள்.

அதேபோல் ஒரு சென்ட்ரி தாங்கள் வந்த ஜீப்பிலேயே அவளை ஏற்றிக் கொண்டு கிளம்ப ஆயத்தமாகிறான்.

சோர்வாக இருக்கிறது அவளுக்கு.

ஜீப் நிலம் கிழிக்க ஆரம்பிக்கிறது.

நீவிச் செல்கிறது காற்று.சாலை ஓரமாக தென்னஞ் சோலை.. குட்டி மலையாள தேசத்துக்குள் நுழைந்து செல்வது போல் இருக்கிறது!

,முதல் நாள் கனகம்பீரமாக பார்த்த லாரன்ஸ் இன்று உயிருடன் இல்லை'. நினைக்கவே என்னவோ செய்கிறது. ஈரக்காற்றுகூட அதனால் லேசாக சுடுகிறது.அப்போது திடும்மென்று ஜீப் நின்று போகிறது.

"என்னாச்சு?"

"ரேடியேட்டரில் தண்ணி இல்லைன்னு நினைக்கிறேன்." என்று சொல்லி சென்ட்ரி இறங்கி பானட்டை திறக்கிறான்.மூஞ்சியில் எகிறுகிறது நீராவிப் புகை!

"மேடம்..."

"என்ன... தண்ணி பிடிச்சுக்கிட்டு வரணுமா?நான் வெய்ட் பண்றேன்."

அவன் அவளது எக்ஸ்பிரஸ் வேக பதிலால் ஆச்சரியப்பட்டு அழுக்கு

வாட்டடர் கேன் ஒன்றை சீட் அடியில் இருந்து எடுத்துக் கொண்டு நகர ஆரம்பிக்கிறான்.

மீனாவும் சீட்டைவிட்டு இறங்குகிறாள்.

காற்றில் கூந்தல் விளையாட ஆரம்பிக்கிறது.சேலை முந்தானையும்! இழுத்துக் கட்டிக் கொண்டு திரும்பினால் எதிரில் சற்று தொலைவில் சிவம் ஒன்று!

நீண்ட சடைபிடித்த தலைமுடியும், தாடியுமாய் கோவண சகிதம் நடந்துகொண்டிருக்கிறது.ஆச்சரியமாய் பார்க்கும் மீனாவை தூரச் சென்றபடியே திரும்பிப் பார்க்கிறது.

அந்தப் பார்வை.. அந்த நடை.. எதுவுமே மீனாவுக்கு புதிதில்லை எனும்படியாய் ஓர் எண்ணம்.

அது, கைகளை அசைக்கிறது.அருகே வா என்கிறது.மீனாவும் மகுடி, நாகம் போல் நெருங்கிச் செல்கிறாள்.அதன் முகத்தில் மந்தகாச் சிரிப்பு.

நெருங்கி விட்டவளைப் பார்த்து மெல்ல வாய் திறக்கிறார்.

"வந்தட்டியா?"

"நீங்க?"

"தெரியலையா?"

"தெரியலையே..."

"கிட்ட வா."

நெருங்குகிறாள்.

"தெரிவிக்கிறேன், இன்னும் கிட்ட வா..."

மேலும் நெருங்குகிறாள்.சற்று பயம் உள் ஓடினாலும் அதையும் மீறிய ஒரு தைரியம் அவளை இயக்குகிறது.அந்த சிவத்தின் பாம்பு விரல் இப்பொழுது உயர்ந்து அவளது நெற்றிப் பொட்டில் பதிகிறது.பொட்டு வைப்பது போல்...

அடுத்த நொடி தேகம் இருந்தும் இல்லாது போய்விட்ட மாதிரி ஒரு மிதப்புணர்ச்சி. வானில் எல்லையில்லா பெருவெளியில் திக்கு திசை தெரியாது.பறந்து கொண்டிருக்கிறாற்போல் ஒரு மிரட்சி.சட்டென்று

பொறியனைத்தும் அடங்கிப் போய் ஒரு இருண்ட பொறியனைத்தும் அடங்கிப் போய் ஒரு இருண்ட வெளியில் ஒற்றை நட்சத்திர சுடர் ஒன்று விசையோடு பயணிப்பதுபோலவும் கூட தோன்றுகிறது.

தன்னிலை மறக்கத் தொடங்கி விட்டவளின் முகத்தையே அந்த சிவம் கண்கள் இடுங்க முகம் கசங்க பார்த்து சிரித்த படி பேச ஆரம்பிக்கிறது.

"எப்படிம்மா இருக்கு?"

"பர.. பரவசமா."

"அவ்வளவுதானா?;"

"அதுக்கும் மேல நான்... நான்.. நான்..."

"உம்.. நீ..."

"நான் மீனாட்சி.."

"உம் மீனாட்சி... அப்புறம்?"

"நான் மீனாட்சி... மீனாட்சி.. என் அப்பா சுந்தரவனம். இந்தத் தோப்பு.. இந்த தென்னந்தோப்பு எங்களோடது தான். இங்க நான் விளையாடியிருக்கேன்; ஆடிப் பாடியிருக்கேன்."

"அவ்வளவுதானா?"

"இன்னும் என்னென்னமோ தோணுது.சொல்ல வார்த்தை வரலை.."

"உன் மரணானுபவத்தை கொஞ்சம் நினைச்சுப் பாரேன்!"

"ஆமாம்மா... பெரியம்மை வந்து நீ சாகக் கிடந்தியே..."

"ஆமாம்.ஆமாம். என் அப்பா ரொம்பவும் கலங்கினார். ,ஐயோ! என்னை விட்டு போய்டப் போறியா?'ன்னு கேட்டார்..."

"அப்புறம்?"

"நானும் ரொம்ப பயந்தேன். ,அப்பா! செத்தாலும் உங்களைவிட்டு பிரிய மாட்டேன்'னேன்."

"ஆனாலும் பிரிஞ்சுட்டியே?"

"என்ன செய்ய... உலக இயற்கை அப்படி..."

"அப்புறம்?"

"எதுவும் தெரியலை.ஆனா இப்ப நான் சாகலைன்னு ஒரு உணர்வு சொல்லுது."

"இது உன் மறுஜென்மம்மா!"

"இருக்கலாம்.உணர்வு அழியலையே... அப்பா இப்ப எப்படி இருக்கார்?"

"அறுபது வருஷம் கழிச்சு கேட்கற கேள்வியாம்மா இது? சரி வா காட்றேன்."

பாம்பு விரலை எடுத்தபடி நடக்கத் தொடங்குகிறார்.மீனா பதில் பேசாமல் தொடரத் தொடங்குகிறாள்.

வாட்டர் கேனில் தண்ணீருடன் வந்து நிற்கும் சென்ட்ரி, மீனாவை காணாது சுற்று முற்றும் பார்ககிறான்.

"மேடம்... மேடம்.." மெல்லத் தொடங்கி வாயோரம் கைகுவித்து ஓங்கி உச்சபட்சமாகவெல்லாம் கத்திப் பார்த்துவிட்டு அப்படியே சோர்ந்து அமருகிறான்.

"இப்படி தொலைத்துவிட்டோமே.. ஜீவானந்தம் பார்வையும், ஏ.கே. 46-ம் ஒன்றாயிற்றே!'

நினைக்கும்போதே குடலேறுகிறது.சுரியாக அந்த சமயம் பார்த்து ,சர்ர்ர்..' என்று சப்தமுடன் தேய்ந்து நிற்கிறது ஒரு மாருதி. நிமிர்கிறான். எதிரில் காரில் இருந்து இறங்கும் நபராக ப்ரகாஷ்!

"இது போலீஸ் ஜீப்தானே?"

"ஆமாம்... நீங்க?"

"மீனா வந்தாங்களா?"

"கமிஷனர் ஐயா மக தானுங்களே?"

"எக்ஸாட்லி."

"அத ஏன் சார் கேக்கறீங்க?ரேடியேட்டர் தண்ணி கேட்டுச்சுன்னு தண்ணி கொண்டுவரப் போனேன். இதோ இங்கதான், இந்த சீட்லதான் உக்காந்திருந்தாங்க.. வந்து பார்த்தா காணோம்!"

"என்ன மேன் சொல்றே?"

"ஆமாம் சார்... நானே தேடித் தேடிப் பார்த்தேட்டு ஓய்ஞ்சு உட்கார்ந்துட்டேன்.ஒருவேளை மலைக்கு லாரன்ஸ் சார் பாடிய பார்க்க போயிட்டாங்களோ என்னமோ?"

"என்னது... பாடியா?"

"ஆமாம்.க்ரைம் ப்ராஞ்ச் சப்.. இன்ஸ்பெக்டர் லாரன்ஸீம், போஸீம் மீனாம்மாவை தேடி மலைக்கு வந்தாங்க.வந்த இடத்துல லாரன்ஸ் ஐயாவை இன்னிக்கு யானை மிதிச்சு கொன்ருச்சுங்க!"

சென்ட்ரியின் பேச்சு ப்ரகாஷை உசுப்புகிறது.மர்மமாய் காதில் பாய்ந்த தொலைபேசிச் செய்தி வரை நினைவு தானாகச் செய்கிறது.

,நாளைக்கு இரண்டு பேரில் ஒருவன் செத்துப் போவான்' என்றதே... உண்மையாகிவிட்டதே!

பீதிபறக்க நிமிரும் ப்ரகாஷ்",இப்ப மத்தவங்க எங்க?" என்கிறான்.

"வாங்க காட்றேன். மீனாம்மாவை பார்த்தாதான் எனக்கும் அடங்கும்.இல்லாட்டி ஜீவா சார், பொறட்டி எடுத்துடுவாரு.."

சென்ட்ரி ஜீப்பில் ஏற, ப்ரகாஷ் தன் மாருதியை கிளப்புகிறான். ஜீப்பும், மாருதியும் அகன்ற மறுநொடிப்போதில் தென்னை ஒன்றின் பின் இருந்து புன்னகையுடன் வெளிப்படுகிறார், அன்று கந்தசாமிக்கு தங்கச்சங்கிலி தந்த அதே தங்கசாமி!

# 26

'கேளப்பா...!

ஆயகலை அறுபத்து நான்கென்பார் ... அதிலொன்று கூடுமாறல்!

கூடு மாறல் கொள்ள நீயும் நாடியறிய வேணுமே..

கண்ட நாடி... கல்ப நாடி ... சுவாச நாடி ... கிலேச நாடி

என்று நாடி நாற்பதாம் தேகமிதில்...

நாற்பதில் நடுவதே சிவமெனத் துடிக்கும்

ஜீவனின் மையமாய் அச்சிவநாடி கிடக்கும்

ஓடுக்கியொரு பிடிபிடிக்க சிவநாடி விடுக்கும்

உயிர் மூச்சினுள்ளேதான் ஆன்மத்துளி கிடக்கும்.

கிடக்கும் துளி மாற தேகம் சிவநாடி பிடித்தே

சீவனை இயக்கும்.கூடு மாறுதலும் மிளிர்க்கும்.’

சொர்ணஜாலத் திரட்டுக் குறிப்பு

தங்கசாமி முகத்தில், கிடைக்கவேண்டியது கிடைத்துவிட்டதைப் போல ஒரு உணர்ச்சி. ப்ரகாஷும், டிரைவரும் சென்ற அதே வழித்தடத்தில் நடக்க ஆரம்பிக்கிறார்.

ப்ரகாஷும், டிரைவரும் தாணிப்பாரையில் காரையும், ஜீப்பையும் நிறுத்திவிட்டு அடிவாரத்தில் காலை வைத்திருக்கின்றனர்.

"எவ்வளவு தூரம் போகணும்?" ப்ரகாஷ் கேட்கிறான்.

"தெரியாது சார். போனாதான் தெரியும்" நடந்தபடியே பதில் தருகிறான் சென்ட்ரி.

மலைக்காற்றின் அழைப்பு, இள வெய்யிலின் ஜொலிப்பு.அத்தனைப் பசுமையில்லாத அடிவாரக் காட்டுப் பாறைகளின் தோற்றம் ப்ரகாஷை என்னவோ செய்கிறது.

வேகமாக நடக்கிறான்.

சென்னையிலிருந்து கல்லுப்பிள்ளையார் போல அமர்ந்து கொண்டு டிரைவ் செய்து வந்ததற்கு இந்த நடை இன்பமாய் இருக்கிறது.ஆனாலும் மூச்சிரைக்கிறது துல்லியமான அதே நொடிகளில்...

லாரன்ஸின் அடிவயிற்றில் ஐந்துக்கும் மேல் ஓநாய்கள் வாயை வைத்து உலட்டி எடுத்துக் கொண்டிருந்தன, ‚கிர்ர்... கிர்ர்...’ என்கிற பசிப் பொருமலோடு...

இறந்துவிட்ட யானை உடம்பையும் சில ஓநாய்கள் குதறிக் கொண்டிருக்கின்றன.

"ஓ மை குட் னெஸ்..." தொலைவிலேயே அதைப் பார்த்துவிடும் இன்ஸ்பெக்டர், நெக்குருகிப் போகிறார்.மொத்த போலீஸ் கூட்டமும் பேயறைந்நதாற்போல மாறிப் போகிறது.

அடுத்தகணம் துப்பாக்கி குண்டுகள் ஓநாய் நோக்கிப் பாய்கின்றன. சப்தம் மலைப் பிராந்திய முகடுகளில் பட்டு கன்னா பின்னாவென்று

எதிரொலிக்கிறது.

சிலிர்த்து, நிமிர்ந்து ஓநாய்களும் விரைப்பாகின்றன.பின் திசைக்கொன்றாய் பிரிந்து ஓடுகின்றன.

நெருங்குகிறது போலீஸ் கூட்டம்.

பீஸ் பீஸாக பிடுங்கிக் குதறப்பட்ட நிலையில் லாரன்ஸ்.

,எங்கே போஸ்?"

பார்வைத் தேடலுக்கு விடையாக கையில் வீடியோ காமிராவுடன் போஸ், ஒரு மறைவுப் பகுதியில் இருந்து மூக்கை மூடிக் கட்டியிருக்கும் கர்சீப் சகிதம் ஒரு திருடனைப் போல வருகிறார்.

கண்களின் கலக்கத்தில் அதிர்ச்சியின் அளவு நன்றாகவே தெரிகிறது.

"வாட் அபௌட் யுவர் பிஸ்டல்?"

"நோ யூஸ் சார்... குண்டெல்லாம் தீர்ந்து போச்சு, நான் ஒருத்தன். ஓநாய்களோ நாலைஞ்சுக்கும் மேல போராட முடியலை.அதான் ஒதுங்கிட்டேன்."

"பாவம் லாரன்ஸ்.இப்படி ஒரு கொடுமையான முடிவு நேரிட்டிருக்க வேண்டாம்."

"விதி சார். விதி.பளிங்கன் எச்சரிக்கை செய்தான்.கேக்கலை. அனுபவிச்சிட்டேன்.

"இது என்ன கேமரா?"

"இங்கதான் கிடைச்சது? யாரோ மிஸ் பண்ணியிருக்காங்க..."

"எங்க எப்போ...?"

"என்னை இப்ப எதுவும் கேக்காதீங்க. டோட்டலி ஐ ஆம் கன்ஃப்யூஸ்ட் ப்ளீஸ், ஒரு சிகரெட் யார்கிட்டையாவது..."

அடுத்த நொடி ஒர சிகரெட் போஸை அடைய.. படு வேகமாகப் பற்றவைத்து புகை கக்கியபடி.அப்படியேதரை மேல் மல்லாக்கப் படுக்கிறார் அந்தப் போலீஸ்காரர்.

பார்ப்பவர்களுக்கு அவரது தவிப்பும், துடிப்பும் புகைக்கும் வாய்களில் தெரிகிறது.

"சார் உடம்பை...?" ஒரு சென்ட்ரி கேட்கிறான்.

"அள்ளுங்க... ஸாரி, எடுங்க வேற வழி?" இன்ஸ்பெக்டர் தன் ஸ்லிப் ஆஃப் தி டங்க்கை சரி செய்து பேசுகிறார்.

ஸ்ட்ரெச்சர் லாரன்சின் கை, கால் துண்டுகளை வாங்கிக் கொள்ள ஆரம்பிக்கறிது.

"ஹேய் யூ..." தூரத்தில் சப்தம் ஒன்று தாக்க... திரும்பினால் ப்ரகாஷ்!

"யாராது?"

தெரியலியே.. கூட நம்ப சென்ட்ரி வேலாயுதம்"

நெருங்கும் ப்ரகாஷ் துர்வாடை மற்றும் துண்டுபட்ட லாரன்ஸை பார்த்து ஏராள மிரளல் கொண்டு முகத்தில் அதைக் காட்ட..

"நீங்க?"

"நான் ப்ரகாஷ் டாஸ்மாக் கம்பெனி செகரட்டரி. கமிஷனர் கருணாகரனோட வருங்கால மாப்பிள்ளை"

இன்ஸ்பெக்டர் அடுத்த நொடி நட்புடன் கைகளை குலுக்குவதற்காக நீட்டுகிறார்.

"ஆமாம் மீனா வரலை...?"

"மீனாவா?"

"ஆமாம்யா... நான் அவங்களோட போகைல ரேடியேட்டர் தண்ணிக்காக வண்டியை நிறுத்தும்படி ஆயிடிச்சுங்க.தண்ணி தேடி எடுத்துட்டு வந்து பார்த்த, அவங்களை ஜீப்ல காணலைங்க.அப்பதான் சார் வந்தாரு..."

"என்னயா சொல்றே? உன்னை வீட்லையில்ல ட்ராப் பண்ணச் சொன்னேன்?"

"ஆமாங்க.ஆனா ரேடியேட்டர் பிராப்ளத்தல.."

"மை குட்நெஸ்.. எங்க போயிருப்பாங்க? கமிஷனர் ரொம்ப கேர் எடுத்துக்கச் சொன்னாரே... என்னயா இப்படிப் பண்ணிட்டே ஆமாம் சார் நீங்க எங்க இங்க?"

"அவங்களை பாக்கத்தான் வந்தேன் சார். மீனாவை இம்மீடியட்டா கண்டுபிடிக்கவே முடியாதுன்னு ஆயிடும் இன்ஸ்பெக்டர்..."

"எங்கேயும் போயிருக்க மாட்டாங்க பர்சனல் இன்ட்ரஸ்ட் அதிகம் அவங்ககிட்ட வித் அவர் லெவர் பெஸ்ட், ட்ரை பண்ணுவோம் சார்.இந்த பாடி வேற பிராப்ளம் பண்ணிடுச்சு, பாத்தீங்களா?"

இன்ஸ்பெக்டர் கை காட்டுகிறார்.திரும்ப ப்ரகாஷ், லாரன்சின் கோரமான உருவைப் பார்த்து முகம் சுண்டி ஃபோன் கால்ல சொன்னது மாதிரியே ஆயிடிச்சே..." என்கிறான்.

"என்ன ஃபோன் கால்.ஏன்ன சொன்ன மாதிரி?"

"இப்படி நடக்கும்னு நேத்தே ஒருத்தன் ஃபோன் பண்ணினான் சார்."

"யாரது?"

"தெரியலை.அனாமதேய கால்." அதைக் கேட்டு போஸ் இடை நறுக்குகிறான்.

"அனாமதேய காலா...? என்னன்னு சார் வந்தது?"

"மலைக்குத் தேடி போயிருக்கிற இரண்டு போலீஸ்காரங்கள்ல ஒருத்தன் நாளைக்கு இறந்துடுவான்னு..."

"அப்ப இது திட்டமிட்ட மர்டரா? இன்ஸ்பெக்டர் ஊடுருவ,"நோ... நோ... நான் பர்த்தேனே இட்டிஸ் ஏன் ஆக்சிடெண்ட்டல் டெத் பற்றி மெட்ராஸில இருக்கிற ஒரு நபருக்கு எப்படித் தெரியும்?"

"தெரியலை... சம்திங் மிராக்குலஸ்."

"ஆமாம்... இந்த மலையே ஒரு மிராகிள் ஹில்தான்.இங்க புரியாத புதிர்கள் ஆயிரம், ஆயிரம். நான் நிறைய கேள்விப்பட்டிருக்கேன்.லைஃப்ல பல விஷயங்களுக்கு லாஜிக் பார்க்க முடியாது மிஸ்டர் ப்ரகாஷ் பார்த்தா ஒண்ணுமே புரியாது."

"இப்ப பேச்சை விட எனக்கு மீனா முக்கியம் அவளை..."

"அதுக்கு முந்தி இந்த வீடியோ காமிரால என்ன ஷூட் ஆகியிருக்குன்னு பார்ப்போமே."

"எல்லாம் பிறகு பர்க்கலாம்.மொதல்ல மீனா.எனக்காக காத்திருக்கிறதா சொன்னாளே?"

"முதல்ல பாடியை ரிமூவ் பண்ணுவோம் அப்புறமா செர்ச்சிங்.டோண்ட் ஒர்ரி மிஸ்டர் ப்ரகாஷ்"

இன்ஸ்பெக்டரின் ஆறுதல் ப்ரகாஷை சமாதானப்படுத்தவில்லை. மனது அலைபாய்கிறது.

நாடி ஜோதிடர் சொன்னது போல மீனா தேடக் கிடைக்காது போய்விட்டவளா?

அவ்வளவுதானா? ஆவளை இனி பார்க்க முடியாதா?

சுலசலத்துக்கொண்டு ஓடிக் கொண்டிருக்கும் ஓடை நீரில் பாலிதீன் தாள் போன்ற உடலோடு ஒட்டிக் கொண்டிருக்கிறது பாம்புச்சிரா மீன்கள்.கால் பதித்து தாண்டி நடக்கையில் உரசிச் செல்கின்றன.உற்சாகம் பிடித்தாட்ட ஆரம்பிக்கிறது மீனாவுக்கு.

அவளுகு;கு முன்னால் அந்த சித்த சிவம்.

"வாம்மா.. ஏன் நின்னுட்டே?" சேலையை உயர்த்திப் பிடித்தபடி மீன்களைப் பார்த்து நிற்கும் மீனாவை உள் அழைக்கிறார் அவர்.

ஓடைநீரின் குறுக்கீடு கடந்து கூழாங்கல் கிடக்கும் தரைப்பரப்பில் நடந்து குடிலின் துவக்க வாசலில் மீனா ஏறும்போது எதிரில் ஞானமனணி.

"மேடம் நீங்க மீனாதானே?" ஆச்சரியத்தை அப்பி எடுத்தபடி கேட்கிறான்.

"என்னை.."

"என்ன மேடம் உங்களைத் தெரியாதா? உங்க ஃபோட்டோ வராத புக்கே இல்லியே.மும்பைல நீங்க எவ்ளோ ஃபேமஸ் தெரியுமா?"

"நானா... மும்பையிலயா?"

"ஞானமணி... என்ன இது வந்ததும் வராததுமா... வா மீனாட்சி.."

அந்தக் குரல்.. அந்தக் குரல்.. ஞானமணிக்கு பின்னிருந்து ஒலிக்க நிமிர்ந்து நோக்குகிறாள்.மாறாப் புன்னகையோடு ,யாரது... யாரது?" நினைவில் தெரிந்தும் தெரியாமல் சண்டித்தனம் செய்கிறது அந்த முகம்.

"நீங்க.. நீங்க.."

"உம்.. நான்தான்... மனசுக்குள்ளேயே தேடு மீனாட்சி. நான் அகப்பட்டுடுவேன்."

மீனா முகம் மாறிப்போய் தேடல் உணர்வு கன்னக்கதுப்பு, இமைப்பரப்பு, நெற்றி என ஊர்கிறது. ஞானமணிக்குள் அது மேலும் ஆச்சரியம் சேர்கிறது.

"இவங்களை உங்களுக்கு முந்தியே தெரியுமா?"

"கொஞ்சம் பேசாம இரு... மீனாட்சி கண்டுபிடிக்கட்டும். என்ன மீனாட்சி பிடிபடலையா?"

மீனா உற்றுப் பார்க்கிறாள்.பார்வையை சுழலவிட்டு இடையில் கைகட்டியபடி வந்து நிற்கும் அந்த வெள்ளைக்கார எல்டன் வேறுசற்று குழப்பமூட்டுகிறான்.

"அந்த இடம்... அந்த உள் அமைப்பு.. முக்கோண பிறைகள், தலையணை, தலையணையாக புத்தக்கட்டுகள், சுவடிக் சாவடிகள், மென்னிழையாகத் தவழும் மூலிகை வாசம்... அழ்ந்த சுவாசத்தில் சிரத்தின் உள் பரப்பெல்லாம்சிலிர்த்துப்போய் கொக்கிப் பிடியில் உள்ள புழுவிடம் மாட்டும் மீன் வாய் போல மனதில் ஒரு இள உருவம் பிடிபட்டு,"சந்திர... சந்திர... சந்திரகாந்தன்..." என்று சப்தமாய் முடிகிறது.

அதைக் கேட்டு அந்தச் சிவம் பிரகாசமடைகிறது."சந்திரகாந்தனேதான். உன் சந்திரகாந்தனேதான்." ஆமோதிப்பு அந்தச் சிவத்திடம். அது அப்படியே அழைத்து வந்த சிவத்தைப் பார்க்கிறது.

"ரொம்ப நன்றி பரமா... வர வேண்டியவ வந்துட்டா.காலம் கை விடலை. அதன் அற்புத விளையாட்டு திரும்ப நிரூபணமாகிடுச்சு.பிரயாசை வீண் போகலை."

,சந்திரகாந்தன்’ என்று மீனா அழைத்த சிவத்தின் குரலில் புரியாத புதிர் விமர்சனம்.உடன் நிற்கும் பரமன் என்னும் சிவம் அதைக் கேட்டுச் சிரிக்கிறது.

"என்ன மீனாட்சி பர்க்கறே... இந்த சந்திரகாந்தன் யாருன்னு புரிஞ்சிடுச்சுல்ல?"

மீனா பாதி புரிந்து மீதி புரியாத மாதிரி திரும்ப விழிக்கிறாள்.

"விடு பரமா.மெல்ல மெல்லத்தான் தெரியவரும்.அப்படியே தெரிய வரட்டும்.ஜென்மங்கள் கடந்த விஷயங்கள்ளனா சும்மாவா என்ன?" திரும்பவும் புதிரனாதில் ஞானமணி விக்கித்துப் போகிறான்.

"ஜென்மங்கள் கடந்த விஷயமா... சாமி என்ன சொல்றீங்க?"

"உனக்கும்தான் ஞானமணி... மெல்ல, மெல்ல எல்லாம் தெரியவரும். மீனாட்சி நீ போய் ஒய்வெடு.." சொல்லித் திரும்புகிறது சந்திரகாந்த சிவம்.

எங்கோ நடையிடத் தொடங்குகிறது ஆனால் வாயில் தாண்டி ஓடை கடக்குமபோதில் எதிரிலிதங்கசாமி.

"வா தங்கம்... வர வேண்டியவ வந்துட்டா..." என்று ஓடை நீரில் காலை அலம்பியபடி குனிந்து நீர் குடித்து பீறி உமிழ தங்கசாமி சொல்கிறது.

"சந்திரா... மீனாட்சி மட்டும் வரலை.சுந்தரமும் வந்திட்டான்."

"சுந்தரமா?"

"ஆமாம்... ப்ரகாஷ்ங்கற பேர்ல..."

அடுத்த நொடி சந்திரகாந்தத்தின் முகம் எதனாலோ அதிர்கிறது!

# 27

'கேளப்பா...!

அறுபதிலே கூடுமாறல் கூறக் கேட்டாய்! இளமை

இருபதிலே கொங்கைமங்கை மயக்குவழி அறுபதிலொன்றாம்.

புஜம் பெருக்கி கெஜமடக்கி புலிபிடித்தாலும்

இடைத்துளி பிடித்தடக்குவதே இளமையில் தினவாம்.

அதிலுமொரு மங்கைபுழல் காணுமனம்

சிதிலமாகி உழலுமே காணுமக்கணம்

சிதிலமாகி உழலுமே காணுமக்கணம்

தேகமிசை வாழும் பூத நெருப்பு

நெய்குடித்தாற்போல் எரிப்பதும் அதன் பொறுப்பு.

வாட்டிடும் நெருப்படக்க நெறிப்படுமே தேகக்கட்டை

எட்டிதனை விழுங்க திடப்படுமே ஸ்கவித முட்டை

சொர்ணஜாலத் திரட்டுக் குறிப்பு

அதிர்ச்சி பரவிய முகத்துடன் சந்திரகாந்த சிவச்சாமி யோசிக்கத் தொடங்குகிறது.

"சுந்தரம் வந்துட்டானா?" ஈன ஸ்வரத்தில் கேள்வியும் எழுகிறது.

வந்தா என்ன... அவங்கபாட்டுக்கு அலைஞ்சுகிட்டே இருக்கட்டுமே..." தங்கசாமி சொல்வதை கேட்டு சந்திரகாந்த சிவச்சாமி சிரிக்கிறது.

"இந்தச் சிரிப்புக்கு அர்த்தம் எனக்கும் தெரியும்"

"தெரிஞ்சுமா கேக்கற?"

"வேற என்ன பண்றது? இது அவனை நினைச்சு கவலைப்படற நேரமில்ல. மீனாட்சிக்கு பட்டம் சூட்டணும். அதான் இப்ப முக்கியம்."

"நானும் இல்லேங்கல.தங்கம் இருந்தாலும் அதுக்குள்ள காரியம் கெட்டுடவும் இடமிருக்கு.."

"எப்படி?"

"இது இந்தச் சிவமடத்துக்கு பரிட்சைக் காலம், தங்கம். சனி பெயர்ந்துட்டான்.அவனது பார்வையும், கூட்டும் பாவக்கிரகச் சேர்க்கையோடு இருக்கு.அதனாலதான் இவ்வளவுநாள் இல்லாம இந்த மலைக்கு நம்மை தேடி, மடத்து ரகசியங்ளைத் தேடி ஒரு கூட்டம் வந்து அதனால இதுவரை நான்குபேர் இறந்த கொடூரம் நிகழ்ந்திருக்கு.

விஞ்ஞானம் விஸ்வரூபம் எடுத்துக்கிட்டு வர்றகாலம் இது.நமது மெய்ஞான ரகசியங்களை விஞ்ஞானம் தன் வசப்படுத்திக்கப் போற விபத்து நடக்கலாம்.விஞ்ஞானத்தோட வசம்போறதுகூட தப்பில்ல.ஆசையே மனுஷனாயிட்ட தப்பான பிரஜைகள் கைல சிக்கினா என்ன ஆகும்.யோசிச்சுப் பார்."

"எவ்வளவோ ரகசியங்களை உணர முடிஞ்ச நமக்கு, இனி என்ன நடக்கும்னு உணருவதுதானா பெரிசு?"

"உணரலாம்.ஆனா தடுத்து மாத்தும் சக்தி நமக்கேது?"

"நல்லதையே நினைப்போமே... சிவத்தின் பாதைல யார் வந்து எதைச் செய்துட முடியும்? சந்திரா இது பேசற நேரமா? மீனாட்சிக்கு..."

"வரும் பௌர்ணமில அவ மடாதிபதியாயிடுவா!... கவலைப்படாதே இப்ப அவளுக்கு அமிர்த ரசம் கொடு..."

மீனாவுடன் பேசிக் கொண்டிருந்தான் ஞானமணி.

"மேடம், நீங்க இங்க எப்படி வந்தீங்க? உங்களுக்கு இந்த மலைல

*இவங்கள்லாம் இருக்கிறது தெரியுமா?" மீனா நெடி கிளப்பும் சில சுவடிகளைப் பிரித்தபடியே பதில் தருகிறாள்.*

*"தெரியாது ஞானமணி.எப்படியோ வந்தேன்.இப்ப அதுவா முக்கியம்?"*

*"வேற எது முக்கியம்கறீங்க?"*

*"பாருங்க... எவ்வளவு பொக்கிஷங்க! இதை எல்லாம் சி.டிக்கு இன்டர்சேஞ்ச் பண்ணி இனியும் கெட்டுடாம பார்த்துக்கணும்.ஸ்ப்ரே பண்ணி பூச்சியும் செல்லும் அரிச்சிடாம இருக்கச் செய்யணும்."*

*"மேடம் மூலிகைல அதுக்கு இல்லாத மருந்தா என்ன? இங்க இருக்கற மனுஷங்க எமகாதகங்க.ஒரு விஷயம் தெரியுமா உங்களுக்கு?... இங்க ஒருத்தருக்கு கூடுவிட்டு கூடுமாறவே தெரியுமாம்.நம்பறீங்களா?"*

*ஞானமணி அபிலாஷையோடு பேசுவதற்கு"அப்படியா?" என்கிற ஒரு தெரியாத மாதிரியிலான அங்கீகாரம் தருகிறாள் மீனா.*

*"என்ன மேடம்... கேட்டுட்டு சிரிப்பீங்கன்னு நினைச்சேன்.அப்படியாங்கறீங்க?"*

*"ஏன் கூடுவிட்டு கூடு மாற முடியாதா?" அவள் எதன் அடிப்படையில் அப்படித் திருப்பிக் கேட்டாள் என்று தெரியவில்லை.ஆனாலும் அது தொடர்பாய் ஏதோ ஒன்று உள்ளே பல்லிடுக்குச் சிரட்டையாய் நெருடுகிறது. அது பெருகுகிறது.முகத்திலும் அதற்கான மாற்றங்கள்.*

*புள்ளி விரிந்து வட்டமாகி, வட்டமும் விரிந்து வலையாகி, அந்த வலை அவளது நினைவலையில் அவள் மேலேயே விழுந்து அவளை வளைத்தால் எப்படி இருக்கும்? அப்படி ஒரு உணர்ச்சி பீறிடுகிறது.*

*,க்ஷணத்தில் கருநீலத்தில் ஒரு பிரேதம் அவள் கண்முன் எழுகிறது.கிட்டத்தட்ட அது வயதானவரை ஒத்திருக்கிறது.பிரேதத்தின் கால்மாட்டில் ஒருவன் அமர்ந்த நிஷ்டையில் இருக்கிறான்.அவன்.. அவன் ப்ரகாஷைப் போல் இருக்கிறான்.*

*அடிவயிறு ஒட்டிப் போய் முதுகுத் தண்டுடன் உரசி நிற்க, அவன் சுவாசாப்பியாசம் செய்கிற மாதிரி இருக்கிறது.கவலையுடன் அவனையே பார்த்தபடி ஒருத்தியாக யார் அது? அவளோ? அவளேதான்...! அவளேதான்....!*

*"சுந்தரம்... வேண்டாம் சுந்தரம்... அப்பாவை புதைக்கற வழியப் பாரு."*

அவள் பேசுகிறாள்.அவன் கேட்பதாகத் தெரியவில்லை. மாறாக பத்மாசனத்தில் அப்படியே மேலெம்பும் முயற்சிக்கு அவன் தாவுகிறான்.

பேரதிசயமாய் அமர்ந்த அவனது பத்மாசனக் கோலம் தரைப்பரப்புக்கு ஒரு அடிவரை மேல் செல்கிறது.அந்தரத்தில் காற்றையே பலகையாக்கி அமர்ந்த மாதிரி இருக்கிறது.

இந்த வித்தையை அவனுக்கு அந்த பௌத்த சன்யாசிதான் சொல்லிக் கொடுத்திருந்தான்.மானசரோவர் போய் வந்ததன் பலன்... அவனே அவனிடம் சொல்லியது மின் கீற்றாக எழுந்தடங்குகிறது.

"சுந்தரம்... சுந்தரம் எனக்கு பயமா இருக்கு.அப்பா பிணத்த போட்டுகிட்டு இது என்ன அப்பியாசம்? எல்லாரும் வரப்போறாங்க..."

அவள் அப்படிப் பேசுவது அவன் காதுகளில் விழுவதாகவே தெரியவில்லை.அவன் உடல் இப்பொழுது மரத்திலிருந்து விழும் பழம்போல பொத்தென்று தரை தட்டுகிறது.அவன் கண் விழிக்கிறான்.அவளைப் பார்க்கிறான்.

"மீனாட்சி... ஏன் பயப்படறே? நான் கூடு மாறப் போறேன்.என் அப்பாவை நான் நடமாட விட்டுகிட்டே இருப்பேன்.அவர் வேணும் எனக்கு"... அவன் சொல்கிறான்.

"உனக்கென்ன பைத்தியமா? நடக்கறதைப் பேசு, சுந்தரம்."

"இப்படித்தான் என்னைப் பார்த்து ,அந்தர நித்திரை' (படுத்தாற்போல் அந்தரத்தில் எழும்பி மிதப்பது)பண்ணப் போறேன்னப்ப சிரிச்சாங்க... கேட்டாங்க.இப்ப அதை நான் வசப்படுத்திடலையா? இமாலயம் போய் கத்துக்கிட்டு வரலை? இது ஒண்ணும் பெரிய விஷயமில்ல, மீனாட்சி.நீ அகத்தியரோட சொர்ணஜாலத் திரட்டு படிச்சியா? நூடிகளைப் பத்தி தெரிஞ்சா போதும். மேல்ல மனசு ஒருமைப்படுத்தி கண்ட நாடியடக்கி, ஜீவ நாடி பிடிச்சு..."

"போதும்... இந்தப் பயிற்சியாலதான் மேகநாதன் இறந்தே போனான்.இங்க இதுபத்தி யாருக்கும் தெரியாது. அஷ்டமா சித்தியடைஞ்சவங்களே இன்னும் சாதிக்காத விஷயம் இது... தெரியாத இந்த விஷயத்துல இறங்காதே... பார் உன் அப்பாவை அவர் என்ன பாவம் செயதாரோ? பாம்பு கடிச்சு இறந்துட்ட நிலை. ஊரிய நேரத்துல முறி மருந்து கொடுக்கக் கூட ஆளில்லாதபடி இறந்து போயிட்டர். ,வேட்டைக்குப் போகவேண்டாம்! வேட்டைக்குப் போக வேண்டாம்னு சாமியார்

சொன்னார் கேட்டாரா...? இப்படி ஆயிடிச்சு.இவரைப் புதைக்கறத விட்டுட்டு.. இது என்ன பைத்தியக்கார விளையாட்டு?"

"நீ என்ன சொன்னாலும் சரி... நான் என் அப்பாவை புதை;க மாட்டேன்.அவர் ஸ்தூலம் மறையக்கூடாது.அதைப் பயன்படுத்தி வாழ்ந்து காட்டுவேன்.இரும்பைத் தங்கமாக்குறதவிட பெரிய விஷயம்இது, மீனாட்சி.விடவே மாட்டேன்...."

"இல்ல.உன்னை நான் இதுல ஈடுபட விடமாட்டேன்.நீ எப்படி மனசை ஒருமைப்படுத்தறேன்று பாக்கறேன்." அவள் சொல்லிக் கொண்டே பாய்கிறாள்.அவளைக் கட்டி அணைக்கிறாள்.கண்ணத்தில் முத்தமிடுகிறாள்.அவன் மரக்கட்டை போல நிற்கிறான்.

"பெண்ணுக்கு மயங்கற நிலையில இருந்து நான் விடுபட்டுட்டேன்" என்று அவன் விகாரமாகச் சிரிக்கிறான். சிரித்தபடி சடலத்தின் அருகிலேயே படுக்கிறான்.

"வேண்டாம் சுந்தரம்... வேண்டாம் சுந்தரம்... வேண்டாம்... வேண்டாம்"

"என்ன மேடம் வேண்டாம்...?"

இந்தக்குரல்... இந்தக் குரல்... மீனா கேள்வி கேட்ட ஞானமணியால் கலைகிறாள்.

"என்னாச்சு... எதாச்சும் ஃப்ளாஷ் பேக் ஞாபகமா?"

மீனா சுவடிக்கட்டை கீழே வைத்தபடி அப்படியே அமருகிறாள். பெருமூச்செறிகிறாள்.அனல்பாகத்தில் சிக்கினதுபோல முகமெல்லாம் வியர்வைப் புள்ளிகள்.

"ஒண்ணுமில்ல... ஒண்ணுமில்ல... கூடுவிட்டுக் கூடுபாயறதப் பத்திப் பேசினதுமே ஏதேதோ ஞாபகங்கள் வந்துடுச்சு..."

அவள் சொல்லவும் கச்சிதமாக தங்கசாமி வருகிறார். கைகளில் அமிர்த ரசம்.இமாலயத்து அதிபலாமரத்துக் கட்டையைக் குடைந்து கோப்பையாக்கி அதில் ஊற்றி எடுத்து வந்திருக்கும் ரசம்.

"என்ன இது?"

"அமிர்த ரசம்மா... வில்வம், மதுரம், எருக்கம்னு பல விஷயங்களால தயாரிக்கப்பட்ட ரசம்.இதைக் குடிச்சா பசியே தெரியாம உற்சாகமாகவும் இருக்கலாம். அவள் வாங்கிப் பருக ஆரம்பிக்கிறாள்.தொண்டை சற்று

கமறுகிறது. இருந்தாலும் அது வயிற்றுக்குள் விழுந்த மறுநொடி நாடி நரம்பில் டன் கணக்கில் குளுகோஸ், புல்லட் மெயிலாக ஓடுவது போல ஒரு பரவசம்!

தாணிப்பாறை இருட்டப் போகும் நேரம்... ப்ரகாஷ் உட்பட எல்லோரும் சோர்ந்து போய் சங்கமித்திரக்கும் நிலை...

"மிஸ்டர் ப்ரகாஷ்... இனி நாளைக்குதான் தேடமுடியும்.ராத்திரிப் பொழுதுல தேடிப் போறது நல்லத்துக்கில்ல..." இன்ஸ்பெக்டரின் கருத்தைக் கேட்டு மறுப்பாகத் தலையசைக்கிறான் ப்ரகாஷ்.

"ஸாரி இன்ஸ்பெக்டர். அது என்னால முடியாது."

"மீனாவைப் பாக்காம நான் வரமாட்டேன்.என்ன ஆனாலும் சரி..."

"நீங்க புரியாம பேசறீங்க ஐந்நூறு மைல் சதுர பரப்பளவு காடு கொண்டு மலை இது... போய்கிட்டே இருக்கலாம். அந்தப் பக்கம் போனா கம்பம், குமுளி வரை போகலாம்.மேற்குத் தொடர்ச்சி மலைக்காடு ஒண்ணும் சாதாரணமில்ல."

"இருக்கலாம்.அதனாலதான் நான் பயப்படறேன். மீனாவுக்கு ஏதாவது ஆயிட்டா...?"

நீங்கதானே தேடும்போது சொன்னீங்க அவங்க இந்த மலைல கரணாம போயிடுவாங்கன்னு நாடி ஜோஸ்யன் சொன்னதா..."

"அதுக்காக...?"

"கவலைப்படாம வாங்க சார்.அவங்களுக்கு எதுவும். ஆயிடாது. சாகக் கிடந்த ஓநாயையே பிழைக்க வைக்க முடிஞ்சவங்க அவங்க அவங்களுக்கு எதுவும் ஆயிடாது..."

"அங்க்கிள் கேட்பாரே..."

"நான் பிராக்டிகலா பேசறேன் ப்ரகாஷ். ஒரு கடமை உணர்வுள்ள இன்ஸ்பெக்டர் இப்படிப் பேசக்கூடாது தான்.இருட்டுல எங்கன்னு போய் தேடமுடியும்? புத்திசாலித்தனமா பளிங்கர்களை பிடிச்சு விசாரிச்சு உள்ள போகணும்.

இது வெறும் காடு இல்லை.ப்ரகாஷ்.என் அனுபவத்தல மந்திரக்காடு. புதிர்வனம். கமிஷனர்க்கும் எங்க கஷ்டங்கள் தெரியும் கவலைப்படாதீங்க..."

இன்ஸ்பெக்டர்க்கு நல்ல தமிழ்ப் பரிச்சயமும் இருப்பது பேச்சில் தெரிகிறது. ப்ரகாஷ் சோர்ந்து அவரைத் தொடர ஆரம்பிக்கிறான்.கடிகாரத்தைப் பார்ககிறான்.

சூரியன் உலகின் மறுபாகம் காணவிழையும் ஆறுமணி!

ஆறுமணிக்கான பெண்டுலச் சப்தம் அடங்கின கையோடு தன் பங்குக்கு சப்திக்கத் தொடங்குகிறது. கருணாகரன் வீட்டுத் தொலைபேசி. வேலைக்காரன் எடுக்கிறான்.

"யார் வேணுங்க?"

"கருணாகரன் இல்லியா?"

"இலலீங்களே... ஐயா, முதலமைச்சரோடு போலீஸ்கார்க மீட்டிங்கில் இருக்காருங்க..."

"சந்தோஷம்..."

"நீங்க...?"

அவன் கேள்விக்குப் பதிலாக ,டொடக்'சப்தம் மட்டுமே கேட்கிறது.

கான்ஃபெரன்ஸ் ஹால்! அரக்குப் பழுப்பு அரை வட்டமேஜைகள். அதன் பின்னாலெல்லாம் விரைப்பான சலவை மடிப்போடு போலீஸ் அதிகாரிகள் அமர்ந்திருக்கும் தோற்றம். மையமாய் உள்ள ஆசனத்தில் முதல்வருக்காக காத்திருக்கும் நிலையில் ஐ.ஜி...

வரிசையில் மூன்றாம் நபராக கருணாகரன். கச்சிதமாய் அவரை அழைக்கிறது பேஜர். கையில்எடுத்து திரையைப் பார்க்கிறார்.

,மீனாவை மலை அழைத்துக் கொண்டுவிட்டது. மகளை இனி மறந்துவிடுவது உங்களுக்கு நல்லது.இ;ப்படிக்கு ஆதி;' என்கிற செய்தி ஆங்கிலத்தில்.

கருணாகரன் விடைக்க ஆரம்பிக்கிறார்.

தனது பேஜர் என தெரிந்துகொண்டு இப்படிச் செய்தி அனுப்பிய இந்த ஆதி யார்? கேள்வி எழும்பும் போதே மீனா மலைக்குள் மறைந்துவிட்டதாகச் சொல்லும் அந்த விஷயம், சற்று நெஞ்சைக் கரிக்கிறது. தைரியத்தையும் திடத்தையும் மீறிய பதற்றம் அவரை மயக்கத்துக்கு இழுக்க ஆரம்பிக்கிறது.

# 28

'கேளப்பா...!

*அறுபதிலொன்று விரல்வரி அறிவது: உறு*

*கருபமதில் அது அன்னை கருமத்தால் வருவது.*

*குரு சனி புதனெனும் புடைப்பும்*

*சிறு துளி விரலதில் சங்கு சக்கர அமைப்பும்*

*ஒரு பிழையுமிலா சந்திர சூரியர் தரப்பும்*

*பெரும் சுக்கிரட மேடதில் சிலர் வக்கிரக் களிப்பும்*

*தரும் பலனதை உரைத்திடும் கல்வி பெற*

*நறும் கருமமென, வேதியர்' காத்திடல் வேணும்.*

*மறு ஜென்மத்திலே வரி ஞானம் பூத்திடக் காண்பாய்!"*

*சொர்ணஜாலத் திரட்டுக் குறிப்பு*

*கருணாகரனின் மயக்கம் போலீஸ் ஆபீஸர்கள் கூட்டத்தையே அதிர்ச்சியடைச் செய்கிறது.*

*பக்கத்து சீட் கமிஷனர் ராகவன், கருணாகரனின் கையிலிருந்து நழுவி விழுந்து கிடக்கும் பேஜரை வேகமாக எடுக்கிறார்.*

*அதன் செவ்வகத் திரை செய்தி பார்த்து கணிசமான அதிர்ச்சி காட்டுகிறார்.*

*"என்ன ராகவன்... எனி பேட் நியூஸ்?"*

*"லைக் தட் சார்..." ராகவன் நிமிருகிறார். இடை நுழைகிறது ஜில்லென்ற மினரல் தண்ணீர். முகம் மீது பரவி அவர் மயக்கத்தை தெளிவிக்கப் பார்க்கிறது.*

*மெல்ல கண் மலர்த்துகிறார் கருணாகரன்.*

*"என்ன மிஸ்டர் கருணாகரன்? வாட் ஹேப்பண்ட்...?"*

*வாஞ்சை ததும்ப நெருங்கித் தோளை பற்றியபடி கேட்கிறார் ஐ.ஜி.*

*"ஐ ஆம் சாரி சார்... வெரி சாரி.. ஜஸ்ட் கிட்டிநெஸ். தட்ஸ் ஆல்..."*

"ப்ளீஸ்... போய் ரெஸ்ட் எடுத்துக்குங்க..."

"நோ சார்... நோ... ஐ ஆம் ஆல்ரைட் ஆல்ரைட்" கருணாகரன் சமளிக்கிறார். ஐ.ஜி. அரைமனதாகத் தன் இருப்பிடத்துக்குத் திரும்புகிறார்.

பக்கத்து சீட் ராகவனின் பார்வையில் மட்டும் அம்புக்கூர்மை.

"யார் சார் அந்த ஆதி? யார் அந்த ஸ்கௌண்ட்ரல்? ஒரு போலீஸ் கமிஷனருக்கே வார்னிங் மெஸேஜ் அனுப்புற அளவு துணிச்சலுள்ள அவன் யார்....?" காதோரமாக உஷ்ணமாக கிசுகிசுக்கிறார்.

ஊடே நுழைகிறது சி.எம். வந்து விட்டதற்கான அறிகுறியாக சைரன் சப்தம்.

"மீட்டிங் முடியட்டும்.சொல்றேன்." கருணாகரன் மென்று விழுங்குகிறார்.

ஸ்ருட்ட்ட்...!

கர்ட்டன் விலகுகிறது. கண்ணாடி சாளரம் வரியாக சென்னையின் பரபரப்பான சந்தடியும், வாகன நடமாட்டமும் தெரிகிறது.

"சொல்லுங்க..." காப்பி கோப்பையை சுப்பியபடி கேட்கிறார் ராகவன்.

"எதைச் சொல்ல மிஸ்டர் ராகவன்? என் பெண் விஷயமே எனக்குப் புரியாத புதிரா இருக்குதே...?"

"அந்த புதிரைப் பத்திதான் கேக்கறேன்."

"திடீர்னு அவ ஃபிசிக்ல சூப்பர் நேச்சுரல் பவர்ஸ். அவ தொட்டா குணமாகுது.பாய்சனோட எலெட்ரிசிடியோ அவளை எதுவுமே செய்ய முடியறதில்லைன்னு..."

"இதெல்லாம் நிஜந்தானா?"

"டூ ஹண்ட்ரட் பர்சண்ட் உண்மைதான் மிஸ்டர் ராகவன். நோ டவுட் நான் ஏன் பொய் சொல்லணும்?"

"ஐ ஆம் சாரி.உங்க வாயால தெரிஞ்சுக்கத்தான் அப்படிக் கேட்டேன். சொல்லுங்க..."

"இப்படிப்பட்டவ சதுரகிரி மலைல காணாமப் போவா, அப்புறமா திரும்பக் கிடைப்பா, ஆனா அப்ப அவ ரொம்ப மாறி இருப்பான்னுல்லாம் நாடி ஜோசியத்துல வந்தது...'

"நாடி ஜோசியத்துலையா?"

"ஆமாம் ராகவன்."

"நீங்க எங்க அங்கெல்லாம் போனீங்க?"

"நான் போகலை. மீனாவை மிஸ்டர் ப்ரகாஷ் கூட்டிகிட்டுப் போயிருக்கார்.ப்ரகாஷ் தெரியுமில்லையா? என் வருங்கால மாப்ளை."

"சரி. அவர் எதுக்கு கூட்டிகிட்டு;ப் போகணும்?"

"அவருக்கு, அவர் நண்பர் மூலமா ஏதோ ஃபோர்ஸ். போயிருக்கார்.போன இடத்துல இருந்துதான் ப்ராப்ளம்ஸ்."

"சரி, அப்புறம் சொல்லுங்க... இப்ப மீனா அந்த ஜோசியர் சொன்னபடி மலைக்கு போய் மிஸ் ஆயிட்டாளா?"

"ஆமாம்."

"முன்னையே தெரிஞ்சும் ஏன் புரொடக்ட் பண்ணலை கருணா?"

"அஸ் எ போலீஸ்மேன், எனக்கு அப்படி நடந்துக்கப் பிடிக்கலை ராகவன். என்னதான் நடக்குதுன்னு பார்த்துருவோம்கிற ஆர்வமும், ஆசையும்தான் உருவாச்சு..."

"நோ... அதுக்குப் பெண்ணையா பலி கொடுப்பீங்க?"

"இது பலின்னு ஏன் எடுத்துக்கணும்? மீனா ரொம்ப க்ளவர். அடுத்து அவளோட ஸ்பெஷல் பவர்.ஆகையால அவளை யாரும் எதுவும் செய்துட முடியாது துங்கறது என் நம்பிக்கை."

"சரி... இந்த அநாமதேய ஃபோன் கால்ஸ்...?"

"அதுதான் புரியலை. ஒரு பக்கம் இப்படி நடந்தே தீரும்னு நாடி ஜோஸியம். மறுபக்கம் அதோட ரன்னிங் காமெண்ட்ரி மாதிரி ஃபோன் கால்ஸ்."

"இது அந்த நாடி ஜோஸியன் வேலையாகக் கூட இருக்கலாம் இல்லியா?"

"இல்ல... நேர்லையே சொல்லிட்ட பிறகு மர்மமா ஃபோன்ல வார்ன் பண்றதுல அவருக்கு என்ன இண்டரஸ்ட் இருந்துட முடியும்? சொல்லுங்க பார்ப்போம்."

"இது விஷயமா ஐ.ஜி. எதுவும் பேசினாரா?"

"இல்ல... பட். அவருக்கு எல்லாம் தெரியும்னு நினைக்கறேன்."

"முதல்வர் வரை விஷயம் போயிருக்கு அது தெரியுமா உங்களுக்கு..."

"ஐ. ஸீ "

"இன்னொரு முக்கிய விஷயம் மிஸ்டர் கருணாகரன்."

"என்ன ?"

"ரசவாதரகசியம் அந்த மலைல இருக்கிறதாகவும், ;அப்படி ரசவாதத் தில உருவான பல மில்லியன் டாலர் மதிப்புள்ள லிங்கம் ஒண்ணும் அந்த மலைல தற்போது இருக்கறதாகவும், அதை அடைய ஒரு குரூப் பயங்கரமா முயற்சி செய்யறதாவும் நம்ப டிபார்ட்மெண்ட்டுக்கு தகவல் வந்திருக்கு."

"நிஜமாவா?"

"இனனொரு அதிர்ச்சி தரக்கூடிய விஷயத்தைச் சொல்லப் போறேன்கருணாகரன்."

"என்ன ராகவன்?"

"ஐ ஆம் ஸாரி. அந்த நாடி ஜோஸியர் இப்ப உயிரோட இல்லை."

"என்ன சொல்றீங்க?"

"ஆமாம். அவர் சாவுலயும் நிறைய மர்மங்கள் இருக்கு. அவரும் சும்மா சாகலை ஒரு கடிதம் எழுதி தபால்ல சேர்த்துட்டுதான். லுக்."

ராகவன் கடிதம் ஒன்றை எடுத்து நீட்டுகிறார். அதைப் பார்க்கும் கருணாகரனின் விழிகளில் அதன் விரிவு.

மதிப்பிற்குரிய போலீஸ் அதிகாரி அவர்களுக்கு!

வணக்கம்.

பல தலைமுறைகளாக நாடி ஜோதிடத்தை பிழைப்பாக கொண்ட கிருஷ்ணமாச்சாரியார் எழுதிக் கொள்வது..

என் தொழிலில் இதுவரை நான் தவறியதே கிடையாது.. முனிவர்கள் எழுதிய குறிப்புப்படி செயல்பட்டு வந்திருக்கிறேன்.அப்படிப்பட்ட என்னை ஒரு மும்பை கூட்டம் முற்றுகையிட்டு தவறானபடி செலுத்தப்பார்த்தனர்.எவ்வளவோ முயன்றும் என்னால் முடியவில்லை. என் மகனைக் கடத்தி வைத்துக்கொண்டு என்னைத் தங்கள் இஷ்டப்படி

செயல்படுத்தினர்.

அதன்படி போலீஸ் கமிஷனர் திரு. கருணாகரன் மகள் மீனா பற்றி நாடி ஜோஸியம் சொன்னதில் நிறைய தவறுகள் செய்துவிட்டேன். அவளுக்கு ஓலை கிடைக்கவில்லை என்று தப்பிக்கப் பார்த்தும் அவர்கள் விடவில்லை.அவளது வருங்கால கணவன் ப்ரகாஷ் என்கிற நபரின் பெயரில் நாடி பார்த்ததில் ,மலைக்கு அவள் சென்று காணாமல் போக வேண்டும்.. இரும்பைத் தங்கமாக்கும் ரசவாத சிறுக்கி...' என்றெல்லாம் கூற வேண்டியதாகிவிட்டது.

உண்மையில் மீனா ஒரு ரசவாதம் புரியத்தக்க பெண்ணா என்று தெரியாது எனக்கு. என் வசம் நிஜமாகவே அவளுக்கான ஓலை இல்லை. அவள் மலைக்குச் செல்ல வேண்டும். ரசவாத ரகசியம் அறியவேண்டும் என்று இமாலயத்தில் ஒரு நாடி ஜோலியர் சொன்னதாக மட்டும் எனக்குத் தெரியவந்தது.

அப்படிச் செல்லும் அவள் திரும்புவதற்கு வாய்ப்பே இல்லை என்றும் இமாலய ஜோதிடர் சொன்னாராம். ஆனால் அவள் திரும்ப வேண்டும் என்பது இந்த மும்பை கும்பலின் ஆசை.

அதற்காகவே போலீஸ் தரப்புக்கு ரகசிய செய்திகளைக் கூறி, மர்மமாக அடுத்தடுத்து நடக்க இருப்பதை தெரிவித்து, மீனாவின் தந்தை கருணாகரன்னுக்குள் ஒரு முனைப்பை உருவாக்கி, போலீஸை மலைக்குள் நுழைக்கச் செய்தனர்.

இந்த முயற்சியில் மீனாவை தேடிச் செல்பவர்களில் ஒன்பது பேர் இறந்தாக வேண்டும் என்று ஜோதிடக் குறிப்பு வந்ததாகவும் அவர்கள் மூலம் அறிந்தேன்.

அந்த ஒன்பது பேராக தாங்கள் இருக்கக்கூடாது அது போலீஸாக இருக்கவேண்டும் என்பதும் அந்தக் குழுவின் ஆசை, அதன்பின் அந்தக் கும்பல் மலைக்குள் நுழைந்து இமாலய சன்யாசி ஒருவர் மூலம் மீனாவை கைப்பற்றிக் கொண்டு வெளிநாட்டுக்கு சென்றுவிடுவது தான் அவர்கள் திட்டம்.

அப்படியே அந்த மலையில் ரசவாதத்தால் ஆன மாபெரும் சிவலிங்ம் ஒன்றும் உள்ளது. அதையும் கடத்துவது அவர்கள் நோக்கம்.

இதெல்லாம் அத்தனை சுலபமானதல்ல.சிவனின் பேரருள் நிரம்பப் பெற்ற சித்த சன்யாசிகள் உள்ள மலை அது. ஆயினும் ஈசன் திருவிளையாட்டை

ஒருவரும் யூகிக்க முடியாது.

குலி புராணப்படி இந்த நூற்றாண்டின் இறுதியில் புயலும், மழையும் வறட்சியும் இந்த மண்ணைத் தாக்க வேணடும். அது இப்படிப்பட்ட ஒரு அநீதியான செயல் காரணமாக நிகழலாம். அல்லது மீனா போல் அபூர்வப் பெண் இதை தடுத்துஇந்த மண்ணையும் காப்பாற்றலாம். எது நடக்கும்? எப்படி நடக்கும்? என்று திட்வட்டமாக என்னால் சொல்ல முடியவில்லை.

மீனா அந்த மும்பை கும்பல் வசம் சேர்ந்தால் அழிவு நிச்சயம்.. அவள் அப்படி சேராவிட்டால் அழிவிலிருந்து தப்பிப்போம். எது நடக்கும், எப்படி நடக்கும் என்று சொல்ல முடியவில்லை. இந்தக் குழப்பங்களுக்கு நானும் தெரிந்தோ, தெரியாமலோ ஒரு காரணமாகிவிட்டேன். எனது நாடி ஜோஸியத்துக்கும் களங்கம் உண்டாக்கிவிட்டேன். என்னை மன்னிக்கவும்.

தயவு செய்து மீனா விஷயத்தில் மிகுந்த எச்சரிக்கையுடன் செயல்பட்டு வெற்றி பெறவும். ஆந்த மும்பை கும்பல் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. ஆனால் ப்ரகாஷை இங்கு சாமர்த்தியமாக அழைத்து வந்த சுகுமாருக்கு தெரியும்.

இந்தக் கடிதம் பற்றியும் காட்டிக் கொள்ளவேண்டாம். இதை எழுதிவிட்டு நான் தலைமறைவாகிவிடுவது என்ற முடிவில் உள்ளேன். ஊருக்கே பலன் சொல்லும் எனக்கு என் நிலை தெரியாதா என்ன? அதன்படி எனக்கு இது மிக போதாத காலம். எனக்கு எது வேண்டுமானாலும் நிகழலாம்.

மீனா ஒரு அபூர்வ பெண். ஈசனருர்ளல் அவளைப் பாதுகாத்து தேச நலன் காக்கவும்.

பணிவுடன்

கிருஷ்ணமாச்சாரி.

நீண்ட கடிதத்தை படித்து முடிக்கும்முன் கருணாகரன் முகத்தில் வியர்வை முத்துக்களின் பிரவேசம். நிமிர்கிறார்.

"என்ன பாக்கறீங்க...? உங்களுக்கே தெரியாம இவ்வளவு நடந்திருக்குன்னா? ஐ ஆம் ஸாரி... இந்த லெட்டர் அந்த கிருஷ்ணமாச்சாரி உள்ள பகுதியில இருக்கறி ஸ்டேஷனுக்குப்ட போய் என் கைக்கு வர தாமதமாயிடுச்சு...

பை த பை... நீங்களும் இரண்டு நாள் லீவு. அதான்."

"அப்போ எப்படி இப்படி எழுதின கிருஷ்ணமாச்சாரி செத்தாரு?"

"அதான் பெரிய புதிர் பாடிய போஸ்ட் மார்ட்டத்துக்கு அனுப்பியிருக்கு.பேப்பர்ல இஷ்யூவா இதை ஆக்கலை. ரிசல்ட் வந்தா தெரிஞ்சிடும், கொலையா, என்னனு... எனி வே, இனியும் நாம இங்க இருக்கிறது நல்லதா படலை. இந்த க்ரைம்லாம் நடக்கற ஜுரிஸ்டிக்ஷனே வேறன்னாலும், அங்கயும் போலீஸ் கேரியர் இன்டரஸ்ட்டோடையும் இதுல நாம நேரடியா இறங்கறது நல்லதுன்னு படுது..."

கருணாகரன் அதைக் கேட்டு ஆமோதிப்போடு சோஃபாவில் மரம் போல சாய்கிறார்.

"பை த பை... அந்த சுகுமார்?"

"எனக்குத் தெரியாது அவனை. ப்ரகாஷ்க்குத்தான் தெரியும்."

"இப்ப ப்ரகாஷ் எங்கே?"

"தெரியாது.. டாஸ்மாக்குக்குப் ஃபோன் பண்ணா தெரியலாம்."

அதே போல் செய்தததில் டாஸ்மாக்கில் இருந்து பதில் கிடைக்க,"ஸார்! அவர் உடம்பு சரியில்லைன்னு லீவு போட்டுட்டு போயிட்டாராம்."

"கருணாரன்! ப்ரகாஷ் வீடு தெரியுமா?"

"தெரியும்.இதோ வீட்டு நம்பர்..." டைரியை விரித்து எண்களைக் காட்ட, அந்த எண்களை சுழற்றிப் பிடித்ததில்...

"ஸார், ஊரில் இல்லையே... காரை எடுத்துகிட்டு வத்ராயிருப்புவரைபோயிருக்காரு. எதுக்குன்னு சொல்லலை."

,போச்சுடா... சுகுமாரை தெரிஞ்ச ஒரே நபர் ப்ரகாஷ் இப்ப அவரும் அந்த மலைக்காட்டுப் பக்கம் போயிட்டராக்கும்..." ராகவன் புலம்ப, நடுவில் சிணுங்குகிறது தொலைபேசி எடுத்து காதைக் கொடுக்கும் கருணாகரன் முகம், பலமாக வெளிறுகிறது.

"என்ன கருணாகரன்?"

ரிஸீவரை முடக்கியபடி பதில் தருகிறார் கருணாகரன்:

"மலைக்கு மீனாவைத் தேடிப் போன க்ரைம் ப்ராஞ்ச் இன்ஸ்பெக்டர் லாரன்ஸ் இறந்துட்டாராம். ப்ரகாஷ் இப்ப அங்க அவங்களோடதான் இருக்கார்.ஒரு வீடியோ காமிரா மலைல கிடைச்சிருக்காம்.."

"வீடியோ காமிராவா?"

"ஆமாம்."

"லாரன்ஸ் எப்ப இறந்தாராம்?;"

"ஆக்ஸிடெண்ட்லதான்! பாடிய கூட ஓநாய்கள் பிடுங்கி குதறடிச்சாம். மதுரை ஜி.எச்.சுக்கு பாடி ஸ்டிச்சுக்கு வந்திருக்காம்."

"இனியும் நாம இங்க தாமதிக்கக்கூடாது கருணாகரன் கமான் கிளம்புங்க. நாம வரப்போற தகவலை முதல்ல எஸ்.பி.க்கு கொடுத்திருவோம்."

இருவரிடமும் பரபரப்பு தொற்றுகிறது.

"ராமசாமி;" கருணாகரனின் அழைப்பைத் தொடர்ந்து ஓடி வருகிறான் ஒரு வேலைக்காரன்.

"நான் ராஜபாளையம்வரை போகப் போறேன்.ஏதாவது ஃபோன் வந்தா ரெக்கார்ட் பண்ணிடு. ஏதாவது முக்கிய விஷயம்னா நம்ம க்ரைம் கண்டரோல் மூலமா நான் ராஜபாளையம் ரவுண்ட்ஸ்ல இருக்கிற இடத்துக்கு மெஸேஜ் பாஸ் பண்ணிடு" சொல்லிக் கொண்டே வேகமாகிறார்.

"ஐ.ஜீ. ஆபீஸ் போய்ட்டு போவோம்" ராகவன். வாசல்படி தாண்டுகையில் கருணாகரனிடம் ஆமோதிப்பு. இருவரின் ஜீப்களும் கேட்டைக் கடந்த மறு நொடிப் பொழுதில் தொலைபேசி அலற, ராமசாமி ஓடி வந்து எடுக்கிறான்.

"யாருங்க வேணும்?" கேட்கிறான்.

"யாரும் வேணாம். உங்க ஐயா கிளம்பிட்டாரா?"

"இப்பதான் போறாரு."

"அடடா... அவரோட பேசணுமே... பேஜர் நம்பர் இருக்கா?"

,எதுவா இருந்தாலும் என்கிட்ட சொல்லுங்க..."

"அதெல்லாம் உன்கிட்ட சொல்ல முடியாது. அவர் போகக் கூடாதுய்யா.போனா எப்பவுமே திரும்ப மாட்டாரு.தயவு செய்து இதைச் சொல்லிடு. லேட் பண்ணிடாதே."

ராமசாமி நெருப்பாகிறான்.

கேளப்பா....!

கலையறிவு... உடற்செறிவு ... பொருள்

மூனறுமிருந்தாலும் .... உயிர்

ஊலையாமிந்த கூடுபற்றி அறிந்தவனே மாஞானி!

தலை முதல் பதம் வரை

பரவி நிற்கும் ஊண் கறிக்குள்

காந்தம் முதல் மாந்தம் வரை பல உண்டு.

குரோதம் முதல் சீதம் வரை சிலவும் உண்டு.

வன்மகுன்ம வாயுபித்த நல்லன அல்லன் எனப் பலவும் உண்டு.

அத்தனையும் ஒடுக்கி ஒரு சித்தனாக ஆதல் கோளம் வெற்றி

கொள்ளலிலும் பெரிதாமே!"

- சொர்ணஜாலத் திரட்டுக்குறிப்பு

நெருப்பாகும் ராமசாமி அடுத்த நொடியே ஐ.ஜி. ஆபீஸ் எண்களைச் சுழற்றுகிறான். ,அங்கு போய்விட்டு வந்திராயிருப்பு நோக்கிக் கிளம்பலாம்' என்று ராகவன் சொன்னது கச்சிதமாக அவன் ஞாபகத்தினை நிமிண்டுகிறது.

ஐ.ஜி. ஆபீஸ் கேம்ப் ... கிளார்க்குக்கு ராமசாமியின் செய்தி பாஸாக ஆரமபிக்கிறது..

"ஐயா... நான் கமிஷனர் கருணாகரன் சார் வீட்டு வேலைக்காரன் பேசறேங்க. ஐயாவுக்கு ஒரு முக்கியச் சேதி சொல்லணுங்க. அவர் இப்ப அங்கதான் வந்துக்கிட்டிருக்காங்க. அவரை கொஞ்சம் வீட்டுக்கு;ப் ஃபோன் பண்ணச் சொல்றீங்களா?"

"சரிதான்... அவர் உனக்கு ஃபோன் பண்ணணுமா? நீ பண்ணுய்யா, கொஞ்ச நேரம் கழிச்சு..." ..டொடக், ரைட்டர் முக்கியத்துவம் தெரியாமல், வர்க்க பேதம் பார்த்து முடக்குகிறார்.

ராமசாமிக்கு மூச்சு முட்டுகிறது.

சில நாட்களாக நடப்பதெல்லாம் அவனுக்கும் தெரியும். ஃபோன் கால்

வருவதும் அதன்படியே எல்லாம் நடப்பதும் கருணாகரன் என்னதான் தைரியசாலியாக இருந்தாலும் குழம்பிப் போய் முற்றத்தில் பாக்கெட் பாக்கெட்டாய் சிகரெட் புதைத்தபடி நடந்ததும்...

ஒரு முடிவுக்கு வருகிறான். செல்ஃபோனில் தொடர்பு கொள்ள வழியில்லை.பேஜரில் சொல்லலாம் என்றால் ஆங்கிலம் தகராறு; பழக்கமும் இல்லை.

பேசாமல் நேரிலேயே கிளம்பிடுவதுதான் உத்தமம்.வாசலில் சென்ட்ரியிடம் சொல்லிக் கொண்டு ஒரு ஆட்டோ பிடிக்க வேண்டியதுதான்.

இன்னமும் விஷயம் கைமீறிவிடவில்லை!

தனது அசிஸ்டெண்ட் ராஜமாணிக்கத்தைப் பிடித்து சில ஃபாலோ ... அப்களை சொல்லி விட்டு, ஐ.ஜியையும் பார்த்து கான்ஃபிடென்ஷியலாக பேசிவிட்டுக் கருணாகரன் காரைக் கிளப்பியபோது பகல் சரியாக மூன்று மணி.

கார்இடது பக்கம் வளைந்து அதிகப் புகை பிடித்து வேகம் காட்டி நகர, ஆட்டோ அந்த நூலிழை தாமதத்தில் அங்கு வந்து சேர... பதறிப் போகிறான் ராமசாமி.

ஆபீஸீக்குள் நுழைந்து"ஐயாக்கு ஒரு அவசரமான சேதி சொல்லணும்ங்க. உதவி பண்ணுங்க" என்று எதிர்ப்படும் காக்கிச் சட்டைகாரர்கள் அவ்வளவு பேரிடமும் மன்றாடுகிறான்.

ஒரு அதிகாரி இடைநறுக்கிப் பிடிக்கிறார்.

"என்னயா சேதி அது?"

"ஐயா, இப்ப அந்த வத்ரப் மலைக்கு போய்கிட்டு இருக்காருங்க அங்க போனா அவரு உசுரோட திரும்ப முடியாதாம்!"

"எவன் சொன்னான்?"

"அது தெரியாது. மர்மமமா இப்படி யாரோ ஃபோன் பண்ணி பேசிக்கிட்டே இருக்காங்க."

கேள்வி கேட்ட போலீஸ் அதிகாரி சிரிக்கிறார்.

"போலீஸ் வாழ்க்கைல இப்படி மிரட்டல்கள் வந்துகிட்டுதான்யா இருக்கும். அதுக்கெல்லாம் பயப்படறவறா நம்ம கமிஷனர்?"

"ஐயா, எதுக்கும் எச்சரிக்கையா இருக்க..."

"சரி, சரி... நீ போ.நான் பேஜர்ல நியூஸ் கொடுத்துடறேன்."

"ரொம்ப சந்தோஷம்ங்க. சீக்கிரம்...!"

அந்த அதிகாரி பேஜர் நம்பரை வாங்கி எண்களை சுழற்றி..."ப்ளீஸ் பீ ஆல்வேஸ் அலெர்ட்... ராமசாமிக்கே மூச்சு ஒழுங்குபடுகிறது.ஆனாலும், செய்தியின் பரிமணம் வேறுவிதமாகச் சிதைந்து சுருங்கியது அவனுக்குப் புரியவேயில்லை!

விதி வலியது என்பது இப்படித்தானோ?

அருவி ஆர்ப்பரித்துக் கொண்டிருக்கிறது. அதன் மஞ்சள் நிறத்தில் சூரியன் தன் பொன்வண்ணப் பிரகாசத்தைப் பிழிந்தெடுத்து சேர்த்த மாதிரி ஒரு ஜொலிப்பும் தெரிகிறது.

முதுகுத் தண்டின் அடிப்பகம் கிடக்கும் குண்டலினியே உணரும்படியான ஜில்லிப்பு வேறு.ஆனாலும், குளிக்க குளிக்க மகா பரவசமாக இருக்கிறது.

அனுபவித்துக் குளித்துக் கொண்டிருக்கிறாள் மீனா.

அப்பா, குடும்பம், ப்ரகாஷ் என்று ஒருவர்கூட இப்பொழுது அவள் நினைவில் இல்லை.

காரில் போய் காரில் வந்து ஏ.சிக்குள் அடங்கி வாழ்ந்த அவளால், சொகுசான வாழ்க்கையின் நினைவுகளை இந்தக் காட்டுக்குள் எப்படி மறக்க முடிந்தது என்பதெல்லாம் வியப்பிலும் வியப்பாக இருக்கிறது.

தொலைவிலே தோதகத்தி மர நிழலில் இதைப் பார்த்த படி நின்று கொண்டிருக்கிறது சந்திரகாந்த சிவம். ஊடன் தங்கசாமி. இருவரின் முகத்திலும் வியப்பலைகள். பேச்சில் அதன் வெளிப்பாடுகள்.

"தான் மீனாங்கறதையே மறந்துட்டா தங்கம், பார்த்தியா?"

"ஆமாம் சந்திரா.. உன் அப்பா வனக்கோனார் ஆசை, துளிகூட வீண் போகலை. சுயநலமில்லாத தவசிகளோட பிரயாசைகள் நிச்சயம் ஈடேறும்கற சான்றாதான் மீனா என் கண்ணுக்குத் தெரியறா!"

துல்லியமா இருபத்தி ஏழு நாளைக்கு முந்தி கடல் வெளிமேல பெய்த இடி, மின்னல், மழை மீனாவை நமக்கு அடையாளம் காட்டி அவளை இங்கு அழைத்து வரும் வழியையும் காட்டினதை என்னென்னு சொல்ல?

"ஒரு சிவமா... இரு சிவமா... ஆயிரம் சிவங்கள் வாழ்ந்து திரியற மலை இது. அவர்களுடைய தவசக்தி வீண் போகுமா, என்ன?"

அவர்கள் பேச்சின் நடுவே சில சிவ புருஷ சித்தர்கள் அருவியில் குளிக்க அவர்களைக் கடந்து செல்கினறனர். முகத்தில் சாந்தம் கலந்த காந்தப் புன்னகையோடு... ஒரு சிவம் நின்று கேட்கிறது.

"முதல் முறையாக சிவ மடத்துக்குப் பொறுப்பேற்க ஒரு சக்தி வந்திருக்கா போல இருக்கே..?"

"ஆமாம் சாமி... நூத்தியெட்டு அவள் அம்சமாச்சே!"

"ரொம்ப சந்தோஷம். எல்லாம் நல்லபடி நடக்கட்டும். வித்தை பழக ஆரம்பிச்சுட்டாளா?"

"இல்ல.. இனிதான் ஆரம்பிக்கணும்."

"இன்னிக்கு சந்திப்பொழுதுல ஈசான்ய திருக்குளத்துல நிறுத்தி வெச்சு தீட்சையை ஆரம்பியுங்க.அமோகமா வரும்.அப்புறம், ஒரு விஷயம்."

"சொல்லுங்க சாமி."

"நான் இன்னிக்கு மகா சமாதியடையத் தீர்மானிச்சிருக்கேன்."

"என்னது... மகா சமாதியா?" திடுக்கிட்டுப் போய் கேட்கிறார் சந்திரகாந்த சிவம்.

"என்ன திடுக்கிடற? ... இன்னமும் மானுட வாசைன இருக்கே உன்கிட்ட.."

"இருக்கலாம் சாமி. ஆனாலும் உங்களைப் போல அனுபவசாலிகளை இழக்கறதை தாங்க முடியாது."

"தாங்கணும். முதல்ல என்னை நீ இழக்கறேங்கிறதே தப்பு. உன் மடத்துல என்ன கத்துகிட்டே நீ? நான் சமாதியடையப் போறேன்னு சொன்ன நிமிஷம் நீ எதுவும் பேசாம கால்ல விழுந்திருக்கணும். ஏன் உனக்குத் தோணலை? சந்திரகாந்தா! நீ இன்னமும் முழு சிவமாகலைன்னு நல்லா தெரியுது...

"சாமி..."

"என்ன ,சாமி?" என்ன சரீரம் மட்டும்தான் மண்ணாகும் என் ஆத்மா அல்ல. அது தெரியாதா உனக்கு? இந்தச் சரீரம் ஒரு ஒன்பது வாசல் வீடுதானே? இதுக்குள்ள பரமாத்மாவை வெச்சு பராமரிக்கிறதுல எனக்கு

ஒரு சலிப்பு வந்துடுச்சு. ரத்தம் மலம்னு பட்டது போதும்.

என் பயிற்சியும் அனுபவமும் சித்தாகாசத்துல என்னை சேர்க்கும். என்னால பரம்பொருளோடு கரைய முடியும்.அந்த நம்பிக்கை வந்ததாலதான் மகா சமாதியாகற முடிவை எடுத்தேன்.

கர்மக் கணக்குலயும் வினைகள் எதுவும் பாக்கி இல்லை. இந்த நொடி இந்த தேகம் எனக்கொரு அற்பச் சுமை. இதை எல்லாம் நான் சொல்லிதான் நீ புரிஞ்சுற நிலையில் இருக்கியா?"

"இல்ல சாமி.மகாசமாதி யாருக்குச் சித்திக்கும், யாருக்குச் சித்தியாதுங்கறது கூடவா எனக்குத் தெரியாது.. திடீர்னு நீங்க சொன்னதால நான் கொஞ்சம் அதிர்ச்சியடைஞ்சிட்டேன்.

வாஸ்தவத்துல எனக்கும் மகா சமாதி ஆசை உண்டு.ஆனால், வினைக் கணக்குப்படி எனக்கு இன்னொரு சித்தபிறப்பு இருக்கிறதா, ஜாதகத்த ஸ்புடம் போட்டதுல தெரிஞ்சிச்சு.

அதனாலதான் எனக்கு அடுத்து மீனாட்சியை மடத்துக்குப் பட்டம் சூட்ட தீர்மானிச்சேன். இது இப்படி நடக்கும்னு வனக்கோனார் சொன்னபடி, எழுதி வெச்சபடி பங்கமில்லாம எல்லாம் நடந்துடுச்சு. ஆனாலும், இதுநாள் வரை இல்லாதபடி இந்த மாமலை சில தீய, சுயநல சக்திகள் பிவேசிக்க ஆரமபிச்சிருக்கு. அதனால சில துர்மரணங்களும் நேர்ந்திருக்கு. ஜாதகப்படி மடத்துக்கு நல்ல நேரமிருக்கிறதாவும் தெரியலை.

இப்படிஒரு காலகட்டத்துல உங்களைப் போன்ற அனுபவ சித்தர்கள் அருகே இருந்தா பலமா இருக்குமே? அந்த ஆதங்கம்தான்!"

சந்திரகாந்த சிவத்தின் நீண்ட விளக்கம் கேட்டு அந்த சிவம் சற்று கெக்கலிப்பாக சிரிக்கிறது.

"இல்ல சந்திரா... என் முடிவுல மாற்றமில்லை.நான் ஸ்தூலத்தோட இருந்துதான் உதவணும்னு இல்ல. என் மகாசமாதில தவறாம விளக்கெரிய நீ வழி பண்ணு. எந்தத் தப்பும் எங்கும நடந்திராதபடி நான் பார்த்துக்கறேன்.நான்னா இங்க நானில்ல. அந்தச் சிவம் பார்த்துக்கும். சரியா?"

சொன்ன கையோடு அருவிக்குளியலுக்கு அது ஆயத்தமாகித் திரும்ப, எதிரில் ஈரம் காய்ந்த உடலோடு மீனா! சில நொடி அந்தச் சிவபுருஷரை மலங்க மலங்கப் பார்ப்பவள், பின் கைகூப்பி வணங்கத் தொடங்குகிறாள். அது சிரித்து ஆசீர்வதிக்கிறது.

"நான் சமாதியடையும்போது வாம்மா.நீதான் விளக்கேத்தணும்" என்கிறார். என்னமோ நிறைய புரிந்தது போல தலையசைக்கிறாள் மீனா. ஆவர் தாண்டிச் செல்கிறார். மீனா சந்திரகாந்தத்தையும் தங்கசாமியையும் பார்த்தபடி திரும்புகிறாள்.

"என்னம்மா! எப்படி இருந்து குளியல்?"

"அருமை."

"அது சரி... சாமி பேசியதைக் கேட்டுக்கிட்டுதான் இருந்தியா?"

,ஆமாம்."

,புரிஞ்சுதா?"

"ஏன் புரியாம?"

"அப்ப இது புரிஞ்ச உனக்கு. நீ யார்ங்கிறதும் புரிஞ்சிருக்கணுமே..."

"எனக்கும், இந்த இடத்துக்கும், உங்களுக்கும் ஏற்கனவே தொடர்பு இருந்திருக்கும்ங்கிற மாதிரி தெரியுது.ஆனா எப்ப, எந்த விதத்துலன்னு தெரியலை."

"பூர்வ ஜென்மத்துலு நீ வனக்கோனார் மகள் மீனாட்சி. நான் உன் சகோதரன். கர்ம வினைப்படி அம்மை வார்த்ததுனால நீ இறந்து போனே... உன் மரணம் அப்பாவை ரொம்ப பாதிச்சது. அது அவரை வாழ்க்கையே வெறுக்க வைச்சு சித்த புருஷராவும், தவசியாவும் மாற வெச்சது. இதெல்லாம் உனக்குத் தெரிய வருதா?"

"எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியலை."

"உன் மரணத்தால மிக பாதிக்கப்பட்டது அப்பா மட்டுமல்ல... சுந்தரமும்தான். சுந்தரம் யார் தெரியுமா?"

"தெரியும் என்னை உயிருக்குயிரா...."

"நேசிக்க ஒரு ஜீவன்.யோகம் தியானம், வர்மம், சிலம்பம்னுவித்தை பழகியிருந்த ஒரு கலைஞன்."

"அந்த விதத்தைல ஒண்ணான கூடுமாறல் மூலம் இறந்த உன் உடலுக்குள் புக அவன் முயற்சி செய்ததுதான் அவன் செய்த மிகப் பெரிய தவறு."

தங்கசாமி வருத்தச் செறிவோடு சொல்வதை அதிகபட்ச அதிர்ச்சியோடு

கேட்டு நெற்றிவழி தலை ஈரம் புரண்டு ஒழுகச் சிலிர்க்கிறாள் மீனா.

"ஆமாம்மா... சுந்தரம் ஒரு அவசரக்காரன். உன்னை உயிர்ப்பிக்கிறேன்.நடமாடச் செய்யறேன்னு அவனே நடமாட முடியாதபடி ஆயிட்டான்.பல ஆயிரம் சித்த புருஷர்கள் வெளி உலகம் தெரியாதபடி ஒடுங்கிக் கிடக்கிற இந்த மலைல அவர்களுக்கே கைவராத வித்தை அது. அதனாலதான் அவன் இறந்தான்; அதனாலதான் அவன் இறக்கணும்கறதும் விதி."

"விதியா?"

"ஆமாம்... இப்ப நீ இங்க வரக் காரணமுமு; அதுதான்.இனி உன்கடமை என்னன்னு உனக்குத் தெரியுமா?"

"என்ன?"

"மகா சிவ மடத்தோட பட்டத்துக்கு துறவியாகி இதன் பொக்கியஷங்களை நீ காப்பாத்திப் பராமரிக்கணும்."

"பொக்கிஷங்களா?"

"ஆமாம்.நேராக நிவாரணி, ஸ்தூல சூட்சமம், ஜோதி ஐக்கியம் திரேக மாயம், ரசவாதம்னு எத்தனையோ பொக்கிஷயங்கள்..."

"இதை நான்தான் பராமரிக்கணுமா? ஏன் உங்களால, இந்த மலைல உள்ள மற்ற மனிதர்களால பராமரிக்க முடியாதா?"

"மற்ற சிவங்களால்னு சொல்லு மீனா. ஆனால் உன்னால மட்டும்தான் இதைப் பராமரிக்க முடியும்."

"எப்படி?"

"சிவ சொத்துக்களை சக்தியால மட்டும்தான் இனி வரும் காலத்துல காப்பாத்தி வைக்க முடியும்."

"நீங்களும் என்னை சக்திங்கறீங்களா?"

"நீ மறுத்தாலும், மறுக்கலைன்னாலும் நீ சக்திதான். உலகிலேயே மகா வலிவானது இடியும் மின்னலும்தான். ஆதை ஜெயிச்சவ நீ. எந்த ஒரு சித்த புருஷனையும், விஷயம் கொல்லும்.அதையும் ஜெயிச்சவ நீ.அழிவிலிருந்து மீட்பது எதுவா இருந்தாலும் அது சக்தி அருள். அது உன்கிட்ட இருக்கிறதாலதான் வியாதிகள் மற்றவர்களுக்க நீங்குது."

"போதும்... நான் நினைச்சே பார்க்கப் பிரியப்படாத விஷயத்தை நீங்களும் சொல்றது எனக்கு வெறுப்பைத் தருது. இங்க வந்ததுல இருந்து இனம்புரியாத ஒரு சந்தோஷம் எனக்கு இருக்கு.சில விசித்திர நினைவுகள் தோன்றியடங்குது.மற்றபடி வேற எந்த ஒரு விஷயத்துலயும் அறிவுப்பூர்வமா எனக்கு நம்பிக்கை வராம எதையும் நான் ஒத்துக்க மாட்டேன்."

"அப்படின்னா?"

"விஞ்ஞானத்துல நிரூபணங்கள் உண்டு நீங்க சொன்ன பராமரிக்கப்பட வேண்டிய விஷயங்களுக்கும் எனக்கு அது வேணும்."

"உன் பூர்வ ஜென்மத்தையே புரிஞுசுக்க முடிஞ்ச உனக்கு இதெல்லாம் நிரூபிச்சாதான் புரியுமா?"

"அதைப் பூர்வ ஜென்மம்னு நீங்கதான் சொல்றீங்க.நான் இன்னும் முடிவெடுக்கலை..."

"அப்ப என் பேரை நீயா சொன்னியே... அது எப்படி?"

"அது தற்செயலாகக் கூட இருக்கலாம் இல்லியா?"

"மீனாட்சி... என்ன இது? உன் பேச்சும், போக்கும் எங்க சந்தோஷத்தைக் கெடுத்துடும் போல தெரியுதே."

"அதுக்கு நான் என்ன பண்ண? ஏனக்கு இந்த இடம் பிடிச்சிருக்கு. உங்க மேலையும் வெறுப்பு இல்ல.வேளி உலகம் எனக்கு கோயில் கட்டிடற நிலைல, நான் இங்க இருக்கிறத விரும்பறேன்.இது ஒரு வித்தியசமான வாழ்க்கை மற்றபடி ஆன்மீகம் பற்றி நான் நிறைய கேள்விப்பட்டிருக்கேன்; படிச்சிருக்கேன்.கடைசியா மகாசமாதி பத்தி ஒருத்தர் இங்க சொன்னாரே... அதுவரை.

இதெல்லாம் கேட்க ஆச்சரியப்படுத்தற விஷயங்கள்.எனக்கு அந்த அளவு போதாது.அனுபவபூர்வமா நான் உணரணும்."

"நீ ஒரு சக்தி அம்சம்ங்கறத தான் பலமுறை பல விஷயத்துல நிரூபிச்சிட்டியே... விஷத்தை ஜெயிக்கலையா நீ? பலரை குணமாக்கலையா நீ?"

"ஆமாம் ஆக்கினேன்.ஜெயிச்சேன்.நம்ம உடம்புல இப்படியும் ஒரு எனர்ஜி இருக்கிறதாலதான் அது சாத்தியமானதுன்னு நினைக்கிறேன்.இந்த எனர்ஜி எல்லார்கிட்டையும் கூட இருக்கலாம்.உடற்பயிற்சி செய்யறவன் உடம்பு,

கட்டுமஸ்தா இருக்கு. மற்றவர்கள் உடம்பு சாதாரணமா இருக்கு. அது மாதிரி இடி விழுந்த அதிர்வுல அந்த எனர்ஜி என் வரைல உடம்புக்குள்ள இருந்து வெளிப்பட்டு செயல்பட ஆரம்பிச்சிருக்கு; மத்தவங்களுக்கு ஆகல.அதனால அவங்களுக்கு சாதாரணமா இருக்கு. இதைப் போய் சக்தி, பராசக்தி, காளி அம்சன்னு விவரிக்கிறது பைத்தியக்காரத்தனம்னும் சொல்லலாமே..."

மீனாவின் விளக்கம் அவர்களைப் பிரமிப்பில்புதைக்கும் அதே தருணம்...

மதுரை விமான நிலையம்....

ராட்சத இரும்புப் பறவையாக இறங்கி நீந்தி வளைந்து நிற்கும் விமானத்துள்ளிருந்து இருவர் இறங்குகின்றனர்.ஒருவனுக்கு நல்ல இளவயது. உருக்கு உடம்பு; ராஜமிடுக்கு. இன்னொரு நபர் காவி வேட்டி, சட்டையில் ஒரு ராஜ சன்னியாசி போல இருக்கிறார்.விமானத்தில் இருந்து தரையைத் தொட்ட மறுநொடி, குனிந்து அங்கிருந்த மண்ணை எடுத்து நெற்றியில் பூசிக் கொள்கிறார்.

# 30

கேளப்பா...

அண்ட பகிரண்டம் ஆகாசம் அவ்வளவும்

உண்டென்றால் உண்டு! இல்லையென்றால் இல்லை!

ஊன் பொதிக்குள் உறக்கம் வரும் நேரத்தில்

வானுமில்லை, மண்ணுமில்லை, நீயுமில்லை. நானுமில்லை!

உறக்கமெனும் வரம் ஈசன் அருட்பொழிவின் கரம்.

விழித்துறங்கும் வழியுண்டு. சித்தம் பயில

கிட்டுமந்த வரம்! அதுவே நித்ய மோட்ச பரம்!"

சொர்ணஜாலத் திரட்டுக் குறிப்பு

மதுரை மண்ணை தொட்டு நெற்றியில் நீராக இட்டுக்கொள்ளும் அந்த மனிதரை உடன் வந்தவன் விசித்திரமாகப் பார்க்கிறான்.

இருவரும் ஹிந்தியிலேயே பேசிக் கொள்கின்றனர்.

"பாபா, இந்த மண்ணை எடுத்து இட்டுக்கிறீங்களே... இது அவ்வளவு சிறப்பானதா என்ன?"

,பாபா' என்று பனிவோடு அழைத்தவனை அந்தக் காவி மனிதர் இனக்கமாகப் பார்த்துவிட்டு சிரித்தபடியே சொல்கிறார்:

"சந்தர்... அண்ட பகிரண்டத்துல பூலோகம்தான் இறைவன் கருணையை முழுசா பெற்ற இடம். அதுலயும் இந்தப் பாரத பாகம் இருக்கே; அது இந்த பூமியோட இடை பாகத்துல வரும் ஒரு பகுதி. எல்லாவித தட்பவெப்பமும் பாரதத்துலு மட்டுதான் உண்டு.பனி, வசந்தம் வெப்பம், மாரின்னு சம பாகமெடுத்த காலங்களும் இங்க மட்டும் தான்.வாழை, துளசி, தும்பை, தூமணின்னு மங்கலப் பயிர்கள் இங்க மட்டும்தான் விளையும்.ராஜபட்சியான மயிலும், அதன் பட்டுத் தோகையும் இங்க மட்டுமே சாத்தியம்!

அப்படிப்பட்ட பாரதத்துல சங்கரன் தன் சரீரம் காட்டித் திரிஞ்சது எங்கேயுமில்லை. இந்த மதுரைல தான். இது திருவிளையாடல் நிகழ்ந்த மண்.

ஏன் ஜென்ம ஆசையைத் தீர்த்துக்க உதவப்போற மண்ணும் இதுதான். அதனாலதான் இந்த மண்ணுக்கு முதல் பூஜை செய்தேன்..."

"பாபா.... ஒரு காஷ்மீரியா இருந்தாலும் உங்களுக்குதான் எவ்வளவு ஞானம்? இந்த மண்பத்தி இன்னும் எவ்வளவு தெரியும் பாபா உங்களுக்கு?"

"நிறைய... போகப் போகச் சொல்றேன்.வல்லபன் வந்திருப்பான் பாரு..." என்கிறார் அவர்.அவர் சொன்னது போலவே லக்கேஜ் க்ளியாரன்ஸீக்கு வெளியில் முண்டி நிற்கும் ஜனக் கூட்டத்திற்கு ஒருவன், இருவரையும் பார்த்து கையசைக்கிறான்.

"வந்திருக்கான் பாபா... அதோ.."

பாபா என்னும் அந்த சன்யாசி அவனைப் பார்த்து சிரிக்கிறார்.கையை அசைத்து, காத்திரு; வந்துவிடுவோம்' என்கிற மாதிரி சைகை காட்டுகிறார்.பெரிய சைஜஸில் வரும் இரண்டு சூட்கேஸ்களையும் கன்வேயர் பெல்ட்டில் இருந்து எடுத்துக் கொண்டு வெளியே வந்த அடுத்தநொடி, அந்தக் கருப்பன் பொத்தென்று அவர் காலில் விழுகிறான். மொத்தக் கூட்டமும் பார்க்கிறது.

"எழுந்திரு வல்லபா... எழுந்திரு!"

எழுந்திருக்கிறான். உரசி வந்து நிற்கும் காரில் இருவரையும் ஏற்றுகிறான்.

"தாஜ் ஹோட்டலுக்கு போப்பா..." என்று டிரைவருக்கு கட்டளையிட்டுவிட்டு பாபா பக்கம் திரும்புபவன், ஹிந்தியில் பேச ஆரம்பிக்கிறான்.

"பாபா... அந்த மீனா, சிவமடத்துல சேர்ந்துட்டா, வரும் பௌர்ணமில அவளுக்கு தீட்சை தரப் போறாங்களாம்..."

பாபா அதைக் கேட்டு மந்தகாசமாகச் சிரிக்கிறார். மிக மெலிதான குரலில் இதழ் பிரிக்கிறார்.

"ஆமாம்... இதுவரை எத்தனை பேர் செத்திருக்காங்க.?"

"நாலு பேர் பாபா. நம்ம ஆட்கள் ரெண்டு பேர்; அவங்க தரப்புல இரண்டுபேர்..."

பாபா அதைக் கேட்டு கண்களை மூடிவிட்டு பின் மலங்கத் திறந்தபடி"ஞானமணி வந்துட்டானா?" என்று கேட்கிறார்.

"இல்ல பாபா. அவன் என்ன ஆனான்னு தெரியலை. ஆனா அவனோட கைல இருந்த வீடியோ காமிரா, போலீசுக்கு கிடைச்சிருக்கு. ...

பாபா திரும்பக் கண்களை மூடுகிறார்.எதுவோ தெரிந்த மாதிரி சிரிக்கிறார்.சந்தர் குறுக்கில் கத்தரிக்கிறான்:

"ஒன்பது பேர் செத்தாகணும்னு நாடி சொன்னதா சொன்னீங்க. அவங்க யாருன்னுல்லாம் சொல்லலையா பாபா..."

பாபா அவன் பக்கம் திரும்புகிறார். அர்த்தப் பொதிவோடு திரும்பச் சிரிக்கிறார்.

"தெரியும் சங்கர்.ஆனா நான் அதைச் சொல்லக்கூடாது. இன்னிக்குகூட மலைல ஒரு மரணம் இருக்கு. இன்னிக்கு பரணி நட்சத்திரம்தானே?

"ஆ... ஆமாம்!"

பாபா ஓடும் காருக்குள் அதைக் கேட்டு கண்களை மூடி தியானத்தில் மூழ்க ஆரம்பிக்கிறார்.வல்லபன் என்னும் கருப்பு மனிதன் பேசுகிறான்:

"சந்தர்... நான் உடனே மலைக்குப் போகணும். நெல்லிக் காய் விற்க வந்த பளிங்கனாட்டம் கீழே வந்தேன். சீக்கிரம் போணும்."

''நானும் வரப்போறேன் வல்லபா...!''

புழுதிபுரண்டெழ அந்தக் கார் வத்திராயிருப்பின் அழுக்கு வீதிகளை அரட்டியபடி நுழைகிறது.

உள்ளே ராகவனும், கருணாகரனும்...

எவ்வளவு செழிப்பான ஊரா இருந்தாலும், இன்னும் முழு சுகாதாரம் வரலை பாத்தீங்களா கருணா...?''

ராகவன் சிகரெட் சிமிட்டலுடன் வீதிகளைப் பார்த்தபடி கேட்கிறார். சிரித்தபடியே, ,பார்த்துப் போப்பா... வெளியே முருங்கை மரம் இருக்குமாம். கவனிச்சு நிறுத்து...''

அவர் சொன்ன முகூர்த்தம் கந்தசாமி வீட்டு வாசலும், மரமும் வர... நச்சென்று பிரேக்கடித்து வண்டியை நிறுத்துகிறான் டிரைவர்.

உள்ளிருந்து எட்டிப் பார்க்கிறாள் பூரணி. அடுத்த நொடி,''அண்ணே...'' என்று ஓடி வருகிறாள். கூடவே கந்தசாமியும் அவரது பெண்களும்...

தயங்கித் தயங்கி இறங்குகிறார் கருணாகரன்.

''உள்ளே வாங்கண்ணே... நீங்க வரப்போறதா போலீஸ்காரங்ககூடச் சொன்னாங்க...''

''வாங்க மாமா.. வாங்க மாமா...''

''வாங்க மச்சான்...'' எல்லோரும் இணக்கமாக வரவேற்கிறார்கள்.கைவசம் வாங்கி வைத்திருக்கும் இனிப்பு, பலகாரம் துணிப்பை சகிதம் உள் நுழைகிறார் கருணாகரன்.நிதானமாக விநியோகிக்கிறார்.விநியோகித்தபடியே,''எப்படியிருக்கே பூரணி?'' என்று கிணற்றுக் குரலில் கேட்கிறார்.

''நல்லா இருக்கேன்.நல்லா இருக்கேன்.மீனாதான் எவ்வளவு சொல்லியும் கேட்காம...''

''ஆமாம் மச்சான். எனக்கு முன்னமே தெரியும், இப்படி ஆகும்னு. ஆன மட்டும் சொன்னேன்... கேக்கலை மீனா.முதல் முதலா என் வீட்டுக்கு வந்த பொண்ணு இப்படிக் காணாம போனதை நினைச்சா...''

விசும்புகிறார் கந்தசாமி.

''நான் உங்களை ஒண்ணும் சொல்லலையே...சொல்லவும் மாட்டேன்...''

*தீர்க்கமாக தடுக்கிறார் கருணாகரன்.*

*அகிலா அதற்குள் காபி போட்டு எடுத்து வந்திருக்கிறாள்.அனுசரணையான பார்வையோடு நீட்டுகிறாள். ராகவனுக்கும் ஒரு கப்.*

*உறிஞ்சும்போது அவரிடமிருந்து ஒரு கேள்வி,"நீங்க எப்ப இருந்து பேசறீங்க?" அதற்குப் பதில் அகிலாவிடமிருந்து..."அம்மா நேத்தே பேசிட்டாங்க.ஆனா மலைல என்ன நடந்ததுன்னு கேட்டா, ,சுத்தமா ஞாபகம் இல்லே'ங்கறாங்க..."*

*"நிஜமாவா... இல்ல பயந்துக்கிட்டா...?"*

*"ஐயையோ... அந்த மகாலிங்கத்தின் மீது சத்யம் அண்ணே... எதுவுமே ஞாபகம் இல்லை"*

*"ரொம்ப ஆச்சரியமா இருக்கே.."*

*"இப்படி ஆச்சரியப்படுத்தறது தானே மகாலிங்க மலை."*

*"ஆமாம்.எல்லாம் சாமியோட திருவிளையாடலா.... இல்லை, ஆசாமிகள் யாராச்சும் சாமி போர்வைல...?" ராகவன் கந்தசாமி பக்கம் திரும்பிக் கிளறுகிறார்.*

*"ஆசாமிங்கள்லாம் தப்பு பண்ண முடியாதுங்க, அந்த மலைல..."*

*ராகவன் அதை நம்பவில்லை என்பது அவரின் முகபாவங்களில் தெரியும்போது, ஒருவர் ஓடி வருகிறார். யார் என்று பர்க்க... மூச்சிரைப்போடு கார்மேக ஆசாரி!*

*"என்னவே.. எதுக்கிந்த வேகம்?"*

*"ஒண்ணுமில்லே கந்தா... கமிஷனர், போலீஸ்னு வந்துருக்கிறதா தகவல் தெரிஞ்சுதான் ஓடிவந்தேன்."*

*ஆசாரி விளக்கமளித்தபடியே இருவரையும் பார்த்து ஒரு பெரிய கும்பிடு போடுகிறார்.அவர்களும் கும்பிடுகின்றனர்.*

*"என்னென்னமோ நடந்து போச்சுங்க நம்ம மலைல... எனக்கு நினைவு தெரிஞ்ச நாளா இப்படியெல்லாம் நடந்தேயில்லீங்க... ஜனங்க பாட்டுக்கு போவாங்க, சாமி கும்பிடுவாங்க, வருவாங்க. மகாலிங்கமும் கட்டி அணைச்சுக்கிற சாமியாதான் இருந்துச்சுங்க.*

*மரம் திருடுற களவாணிங்ககூட, ,சிவன் சொத்து குல நாசம்'னு, இந்த*

மலைல ஒத்த சுள்ளிய தொடமாட்டாங்க.

அப்படி இருந்த மலை.... இப்ப மர்மமா மிரட்டுது."

கார்மேக ஆசாரி எதற்காக இப்படி சம்மன் இல்லாதபடி விஜயம் செய்து இத்தனை பேசுகிறார் என்று ஒருவருக்கும் புரியவில்லை.

ஆனால் ராகவன் புரிந்துகொண்டு அவரோடு தனியே ஒதுங்குகிறர்.வீட்டுக் கொல்லைப்புறத்தில் வேப்பமரம். அதனடியில்...

"ஏதோ ரகசியமாக சொல்ல விரும்புறீங்ன்னு நினைக்கறேன்."

"ஆமாங்க... கச்சிதமாப் புரிஞ்சுகிட்டீங்களே!"

"சொல்லுங்க..."

"ஐயா... இரும்பைத் தங்கமாக்கற சாமியாருங்க, மலைல இருக்காங்க.அவங்க இரும்பைத் தங்கமாவும் ஆக்கியிருக்காங்க."

ஆசாரி சொன்னதைக் கேட்டு ஒரு இடக்கு சிரிப்பு சிரிக்கும் ராகவன்,"உம்... அப்புறம்' என்கிறார்.

"நீங்க நம்பலைன்னு தெரியுது, ஆனா நான் சொல்றது சத்தியம் இதோ ஆதாரம்.." இடுப்பில் இருந்து ஒரு சாவியை ஆசாரி எடுது;துக் காட்ட ராகவன் நெற்றியில் வியர்வை.

"இது நம்ப கந்தசாமி வீட்டுப் பூட்டோட சாவி. செத்துப்போன வடிவேலுவும், ஒரு சாவிக்கொத்தை மலைல கிடைச்சதா எடுத்துக்கிட்டு வந்து காமிச்சான்.இரண்டு கொத்துல இருந்தும் ஒவ்வொரு சாவியை எடுத்து வைச்சுக்கிட்டேன்.பாருங்க... கோத்ரெஜ்ங்கற சின்னம் கூட அப்படியே இருக்கிறத.

இது என்கிட்ட, தங்கம்தானா? ன்னு தீர்மானிக்க வந்துச்சு.நான் பாத்து அசந்துட்டேன்.தங்கம்னா தங்கம், அப்படி ஒரு தங்கம். சொக்கப் பசுந்தங்கம்.வெயில்பட்டா உருகி வளையற அளவுதான் நல்ல தங்கத்துக்கு திடமிருக்கும். இதுவும் அதே ஜாதிதான்..."

கார்மேக ஆசாரி விவரித்துக் கொண்டேபோக... ராகவன் கண்கள், சாவியையே ஆராய்கின்றன.

"சரி... இந்தத் தங்கச் சாவிக்கும், அந்த மலைக்கும் சம்பந்தமிருக்குன்னு சொல்றீங்களா?" நிமிர்கிறார்.

"ஆமாங்கய்யா... ஒரு முக்கிய விஷயம் நான் ஒரு பரம்பரைத் தட்டான்.என் பாட்டனார் ஒரு ரசவாதி.சித்தமலைல தங்கம் பண்ற சாமியாருங்க இருக்கறது தெரிஞ்சு... அவங்களைத் தேடிப்போய் அதைக் கத்துக்கிட்டு வந்ததா சொல்வாருங்க.அதுக்கு முந்தி தங்கம் பண்ற ஆசைல அவர், பல புத்தகமெல்லாம் வாங்கி வெச்சிருந்தாரு.அதுல ஒண்ணு,"அமர நாடி'ங்கறது.அதை அவர் இமயமலைப் பக்கம் தேசாடனம் போனப்ப ஒரு சாமியார் சொல்ல எழுதினாராம்.

,நீ தமிழ்நாட்டுக்காரனா? ... மகாலிங்கமலைக்காரனா?," என்னு கேட்டுட்டு அந்தச் சாமியார் சொன்னாராம். அவர் சொல்லச் சொல்ல எழுதினாராம் இவரும்..." கார்மேக ஆசாரி தன் பேச்சில், கற்பனை செய்து பார்க்க முடியாத பாகங்களுக்கெல்லாம் போகிறார். ராகவன் சற்று குழம்பிப் பார்க்கிறார்.

"ஹலோ... நீங்க சொல்ல வர்றத தெளிவா சொல்லணும். மலை, தங்கச்சாவி, உங்க தாத்தா, அமரநாடின்னு நான் கதை கேட்க வரலை.போலீசுக்கு உபயோகமா ஏதாவது தகவல் தர முடியுமா உங்களால?" கண்டிப்புடன் கேட்கிறார்.

"ஐயோ... அதுக்குதானே வந்திருக்கேன். வடிவேலுவால இந்த விஷயத்துல விழுந்த நான், பழைய குப்பைகளைக் கிளறிப்போ அந்த அமரநாடிங்கற நோட்டு கிடைக்கிச்சுங்க.

வாசிச்சா, மூச்சே நின்னு போச்சுங்க!

இப்ப நடந்துகிட்டிருக்கிற விஷயமெல்லாம் அதுல அப்பவே இருக்குங்க. எனக்கு ஒரே அதிசயமாப் போச்சுங்க...!"

"எங்க இப்ப அந்த அமர நாடி..?"

"வீட்ல இருக்கு. நீங்க நம்பணும் அதை. அதுல சொல்லியிருக்குது, ,இன்னிக்கு ராகவன்னு ஒருத்தர் வந்து அநியாயமா செத்துப் போவார்னு... அவரை நீங்கதான் போகவிடாம தடு;க்கணும்'னு.."

கார்மேக ஆசாரி, ராகவனிடமே அவர் யார் என்று தெரியாமல் பேசியதில் ராகவன் நெஞ்சில் அதிர்ச்சி ஏறுகிறது.

"இன்னிக்கு... இன்னிக்கா...? யூ மீன் மே மாசம் எட்டாம் தேதியான இன்னிக்கா...? 1998.. ஆம் வருஷத்து மே மாசம் எட்டாம் தேதியான இன்னிக்கா...?"

"அப்படி இல்லீங்க... ,வெகுதான்ய தமிழ் சித்திரைல பௌர்ணமிக்கு மூன்று நாள் முந்தி, நால்வரைத் தொடரும் ஜவனாக காவலன் மறிப்பான்.போதும் ராகவன்'னு தெளிவா சொல்லியிருக்குங்க.

அதான் சொல்ல வந்தேன்.தடுக்க முடியும்னு தோணலைங்க. இருந்தாலும் ஒரு நப்பாசை!"

"எங்கயா அந்த நோட்டு? நீ சொல்றத நம்பவும் முடியலை... நம்பாம இருக்கவும் முடியலியே."

"பாத்துட்டு நம்புங்க... இதோ போய் கொண்டுகிட்டு வரேன் அதுல இன்னும் என்னென்னவோ போட்ருக்கு. எனக்கு புரியலை..."

கார்மேக ஆசாரி கதி கலக்கிக் கொண்டிருக்க... உள்ளே தங்கை குடும்பத்தினருடன் கரைந்து கொண்டிருக்கும் கருணாகரன், வேகமாகத் தங்களை கடந்து செல்லும் ஆசாரியைப் பார்த்துவிட்டு ராகவன் பக்கமாக திரும்ப.... ராகவன் முகத்தில் இதுவரை வந்திராத கலக்கம்!

வாசற்புறமும் ஏதோ அரவம்...

எட்டிப் பார்த்தால், மலையில் அகப்பட்ட வீடியோ காமிராவுடன் உள் நுழைந்து கொண்டிருக்கிறார் இன்ஸ்பெக்டர் ஒருவர்!

# 31

கேளப்பா...

பசிக்காதிருக்க ஒரு வழியண்டு ... ஒருநாளும்

புசிக்காதிருக்கும் அந்த வழிகண்டு ... ஊனை

நசிக்காது காத்திட நீ முதலில் எண்ணத்தை

உறுங்கச் செய்ய வேண்டுமே...

நிசிப்போது உறக்கம்போல் கட்டை செயல் துறந்து

அபானத்தில் உபானத்தில் கிடத்தலும் வேண்டுமே!

விசிக்காது குடல் பாம்பும் அப்போது...

எப்போதும் அதை அடக்க

ஒரு நெல்லி,

ஒரு மிளகு,

ஒரு நீற்றுப் பச்சிலை ... இயலுமாயின்

மண்படாத மழைநீர் ஒர கைக்குழி!

போதும்... போதும்... போதுமே!

உயிர் ஒடுங்கி உன்னுள் வாழுமே...

தேகம் அடங்கிப் பொன்னில் சேருமே...

சொர்ணஜாலத் திரட்டுக் குறிப்பு

பணிவோடு உள்நுழையும் அந்த இன்ஸ்பெக்டர், தன் கரத்தில் உள்ள வீடியோ காமிராவை கீழே வைத்துவிட்டு ஒரு சல்யூட் செய்கிறார்.கூடவே அறிமுகம்...

"சார்.. நான் ராஜபாளையம் சரக இன்ஸ்பெக்டர் உமாநாத். இப்பதான் வந்தீங்களா சார்..?"

"ஆமாம் தகவல் வந்ததா?"

வந்தது சார்.எல்லா உதவியும் செய்யச் சொல்லி டி.எஸ்.பி.ஐயா சொன்னார்.டீராவலர்ஸ் பங்களால ஸ்டே பண்ண எல்லா ஏற்பாடும் செய்திருக்கோம்.'

"இந்த வீடியோ காமிரா?"

"நீங்க பாக்கத்தான் கொண்டு வந்திருக்கேன். மலைல கிடைச்சிருக்கு. க்ரைம் பிராஞ்ச் லாரன்ஸீம், போஸீம் தங்களோட முதல் ரவுண்டுல இதை மலைல கண்டெடுத்திருக்காங்க. அப்புறம் தான் லாரன்ஸ் இறந்திருக்காரு.."

"இப்ப லாரன்ஸ் பாடி..?"

"அவங்க ஃபேமிலிகிட்ட ஹேண்ட் ஒவர் பண்ணியாச்சு சார்..."

"இந்த வீடியோல ஏதாவது மெஸேஜ் இருக்கா நமக்கு?"

"இல்ல சார்... ஆனா, ஒரு சாமியாரை யாரோ படம் எடுத்திருக்காங்க. பார்க்கவே பிரமிப்பா இருக்கு சார்... அதோட, மலைல பல பாகங்களை ஷுட் பண்ணியிருக்காங்க. ஒரு அருவில சில சாமியாருங்க குளிக்கறாங்க.

ஒரு சமாதியையும் ஷுட் பண்ணியிருக்காங்க.சாமியை சுத்தி நிறைய புத்தகங்க.. சுவடிக் கட்டுங்க."

இன்ஸ்பெக்டர் உமாநாத், தன் பேச்சில் ஆர்வத் தீயை நன்றாகவே மூட்டுகிறார். கருணாகரனும், ராகவனும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்கின்றனர். அதேபோல் கந்தசாமியும், மனைவியை பார்க்கிறார்.

அவர்கள் பார்த்த இடங்களைப் பற்றித்தானே இன்ஸ்பெக்டர் சொல்லிக் கொண்டிருக்கிறார்?

"என்ன மிஸ்டர் கந்தசாமி... உங்களுக்கு ஏதாவது தெரியுமா?"

கந்தசாமி மென்று துப்புகிறார்.

"அந்த சமாதிய நானும் பார்த்திருக்கேன்.அது ஒரு சித்தரோட சமாதி.அங்கதான் பூரணியும், பேச்சு செத்துப் போய்க் கிடந்தா."

"பேச்சு செத்துப் போயா?.."

"ஆமாம் ராகவன். ஏதோ மூலிகையைக் கொடுத்து என் சிஸ்டரை பேசவிடாம செய்துட்டாங்க. அப்படித் தானே பூரணி...?"

"ஞாபகமே இல்லைன்ணே. சுத்தமா ஞாபகம் இல்லை."

"எல்லாமே ஆச்சரியமா இருக்கு.இதைப் பார்க்க ஏற்பாடு செய்யுங்க, மிஸ்டர் உமாநாத்."

"ஷ்யூர் சார்... டிராவலர்ஸ் பங்களால டி.வி.யும், டெக்கும் இருக்கு. உட் யூ ப்ளீஸ்..."

"ஓ.கே. லெட் அஸ் மூவ்..."

கிளம்ப எத்தனிக்கிறது அந்தப் போலீஸ் கூட்டம்.

"மாமா.."

அகிலா மட்டும் சற்று கசிந்த குரலில் கருணாகரனை அழைக்கிறாள்.அவரும் திரும்பிப் பார்க்கிறார்.

"மலைல சாமியர்ங்ககிட்ட மரியாதையா.." எதையோ சொல்ல வந்து முடிக்க முடியாமல் நிறுத்துகிறாள்.

"மரியாதையா பக்தியா நடந்துக்கணும்கறே.... அவ்வளவுதானே?"

"ஆமாம்.அவங்கள்லம் ரொம்ப நல்லவங்க. கால்ல விழுந்தா எந்த உதவியும் செய்வாங்க. என் சினேகிதி ஒருத்தரோட அப்பாவுக்கு டி.பி இருந்துச்சு. ஒரு சாமியார் நெஞ்சை கையால வருடிவிட்டே குண்பபடுத்தி அனுப்பியிருக்காரு."

அகிலா சொல்வதில் கருணாகரனை விட ராகவன்தான் அதிகம் மயங்குவதுபோல் தோன்றுகிறது.

கருணாகரன் சிரிக்கிறார்.

"சாமியாருங்கன்னாலே மிகையான தகவ்லகள்தான் எங்கேயும் பரவியிருக்கு..." என்று அபிப்பிராயம் வேறு சொல்கிறார்.

"இல்ல... சத்தியமா சொல்றேன், மிகையில்லை.அப்புறமா அங்க்கிள் ... மீனாவோட நீங்க இங்க இரண்டு நாள் தங்கிட்டு தான் போகணும்."

அகிலா பேசுவதை இன்ஸ்பெக்டர் உமாநாத் ரொம்பவும்தான் ரசிக்கிறார் ராகவன் அதையும் கவனிக்கிறார்.

"என்ன உமாநாத்... அகிலா மேல வெச்ச கண்ணை எடு;க்காமலே இருக்கீங்க போலிருக்கே?.."

உமாநாத் இந்த வளைப்பை எதிர்பர்க்கவில்லை போலும்...

"ஆமா... கல்யாணம் ஆயிடுச்சா?" அடுத்த கேள்வியில் அதைவிட பெரிய வளைப்பு.

"இல்ல சார்... பார்த்துக்கிட்டு இருக்காங்க."

"பொண்ணு எப்படி வேணும்? வேலைக்குப் போற பொண்ணா, இல்லை..."

ராகவன் முடிக்கும் முன் பதில் வருகிறது:

"அகிலா மாதிரி சார்..."

"மாதிரியா... அகிலாவேவா?"

ஒரு இரண்டு நிமிட காலவெளியில் ஒரு திருமணப் பேச்சு நடந்து முடிந்து முடிவுக்கு வருமா என்ன? ஆகிலா தடுமாறிப் போகிறாள். வெட்கமும், வியர்வையும் அவளைக் குளித்துவந்தவள் போலாக்க.. ராகவன் இடைவெளி கொடுக்காமல் அடுத்த பிடி பிடிக்கிறர்:

"என்ன மிஸ்டர் கந்தசாமி... உமாநாத் தன் விருப்பத்தை சொல்லிட்டார்...

உங்க விருப்பம் என்ன?"

"என் விருப்பம்.. என் விருப்பம்." கந்தசாமிக்கு மூச்சு முட்டுகிறது,

"இதுல விருப்பமில்லைன்னா விட்ருங்க.. என்னடா சீரியஸான ஒரு கட்டத்துல இப்படி பேசறானேன்னு நினைக்காதீங்க..நான் பேசலை இங்க. உங்க மகாலிங்கம்னு நினைச்சுக்கங்களேன்..."

"ஐயா... நாங்க எங்க.. அவர் எங்க? நான் ஒரு அஞ்சு பவுன் கூட, போடற நிலைல இல்லயே?"

"வேண்டாம்.போண்ணை அனுப்புங்க போதும்.என்ன உமாநாத்... போதும்தானே?"

"சார்... எல்லாம் உங்க ஆசீர்வாதம் சார்."

"அவர் எப்படிப்பட்டவர்ங்கறதுக்கு நான் பொறுப்பு. எங்க டிபார்ட்மென்ட் ஆளைப் பத்தி எனக்குத் தெரியாதா என்ன? வர்ற முகூர்த்தத்துலேயே கல்யாணத்த வெச்சிடுங்க..."

"ஆமா, இவங்க யார்?"

"சார் அவ தேவி... அவ பார்வதி... கடைசி பொண்ணு மங்களா..."

"தேவி, பார்வதி இரண்டு பேரும் இரட்டையரா?"

"இல்லை சார்... ஆனா, பாக்கறவங்க அப்படி நினைக்கிற அளவுக்கு குரல், உருவம் எல்லம் ஒண்ணு."

"என் பசங்களுக்கு நான் வரன் பார்த்துக்கிட்டிருக்கேன். அவங்க ட்வின்ஸ்... உங்க பெண்களையே முடிச்சுடலாமா?"

அவர் அப்படிக் கேட்ட நொடிப் போதில், பூரணி ஓடிப் போய் மகாலிங்கசாமி படம் முன் நிற்கிறாள்.மளமளவென்று விளக்கேற்றுகிறாள்.

"சாமி நீ நினைச்சா ஒரு காரியம் இப்படிக் கூடவா வேகமா நடக்கும்? நம்ப முடியலையே... தேடி அலைய விடாம வீட்டுக்கே கூட்டிக்கிட்டு வந்து, நாங்க சம்மதமான்னு கேட்கற அளவுக்கு பண்ணியிருக்கியே..."

அவள் பிராத்தனையிலேயே அவளது சம்மதமும் தெரிந்து போகிறது.

"என்ன கருணாகரன் உங்க அபிப்பிராயம் என்ன?"

கருணாகரன் தன் சகோதரியைப் பார்க்கிறர். ஏழ்மை அவளை துடைத்து

வைத்திருந்தாலும், அகல்விளக்கு பார்க்க அருவருப்பாகவா இருக்கும்?

"ராகவன்.. எனக்கென்னமோ இத்தனை வேகம் அவசியமான்னு தோணுது. அதோட நாம வந்திருக்கிறது வேற ஒரு வேலைக்காக..."

"யூ ஆர் ரைட்... ஒருக்கால் நான் இந்த மலைய விட்டு கீழ இறங்காமலே போய்ட்டா?"

"என்ன பேச்சு இது, ராகவன்..."

"சும்மா... சும்மா ஒரு பேச்சுக்குச் சொன்னேன் கருணாகரன்.இப்ப என்ன... பேசிக்கத்தானே போறோம்."

"பூரணி... நான் தடுத்து நிறுத்தறதா நினைக்காதே. கல்யாணம்ங்கறது உனக்கு ஆன மாதிரி ஆயிடக் கூடாது பாரு."

கருணாகரன் எதைச் சொல்கிறார் என்பது இருவருக்கும் புரிகிறது.துலையை கவிழ்த்துக் கொள்கின்றனர்.

"நோ கருணாகரன். பழைய குப்பையைக் கிளறாதீங்க.மிஸ்டர் கந்தசாமி! இரண்டு வெத்தலை இருந்தா எடுத்துக்கிட்டு வாங்க."

மங்களா ஓடிப் போய் பெட்டிக் கடையில் வாங்கி வருகிறாள்.

"உமாநாத்... முதல்ல அச்சாரம். ஒரு ஒண்ணேகால் ரூபாயை வெச்சு மிஸ்டர் கந்தசாமிகிட்ட தாங்க."

உமாநாத் அவ்வாறே செய்கிறார்.

"இது என்னோடது. உங்க மகள் தேவி, பார்வதி இருவரையும் என் மகன் ஜெகன், மோகன் இருவருக்கும் கல்யாணம் செய்துவைக்க முடிவு செய்து இந்த அச்சாரம்."

கந்தசாமி நடுங்கும் கரத்தால் வாங்கிக் கொள்கிறார். அதுவரை இறுக்கமாய் இருந்த கருணாகரன் தன் கழுத்திலிருந்து ஒன்பது பவுன் சங்கிலியை கழட்டி, அகிலாவை அழைத்து அவள் கழுத்தில் போட்டுவிட்டு சொல்கிறார்:

"இது மாமாவோட முதல் சீர்.ஊருக்குப் போய் மத்தவங்களுக்கு நான் அனுப்பறேன்.ஓ.கே. ராகவன் கிளம்புவோமா?"

பெண்கள் மூவருமே ஆடிவிட்டனர்.தெருமுனையில் இருக்கும் பிள்ளையார் கோயில் மணி சப்தம், நடந்து முடிந்த நிச்சயத்தை ஆமோதிக்கிறது.

உமாநாத் அகிலாவை திரும்பித் திரும்பிப் பார்த்தபடி ஜீப்பில் ஏறுகிறார். குடும்பமே சிலிர்த்துப் போய்விட்டிருக்கிறது.விரைப்பாக, முறைப்பாக வந்தது போலீஸா... இல்லை கடவுளர்களா?

வளைத்துக் கட்டி நிற்கும் பஸ்ஸில் இருந்து சந்தர்நாத்தும், வல்லபனும் இறங்குகின்றனர். மலைக்காற்றின் தாக்கத்தில் தலைமுடிக் கூட்டம் கொடியாட்டம் பறக்க, அதை தலைப்பாகை கட்டு அடக்குகிறது.

பார்க்க அச்சு அசல் பளிங்கர்களைப் போன்ற தோற்றம்.அதுவரை போட்டிருந்த சட்டையை கழட்டி பக்கமாக செந்தட்டிப் புதரில் வீசி எறிகின்றனர்.

ஆளுக்கொரு சாக்கை எடுத்துக்கொண்டு தோளில் போட்டபடி நடக்க ஆரம்பிக்கின்றனர்.அடிவாரப் பாறை மேலேயே போலீஸ்காரர் ஒருவர் பீடி பிடித்துக் கொண்டு...

வல்லபன் அப்பாவியாகக் கேட்கிறான்:

"சாமியோவ்... மேல, சாமி கும்புட மந்திரி ஆராச்சும் வந்திருக்காங்களா என்ன?"

"மந்திரியாவது, மண்ணாவது, ஒரு பொண்ணு காணாம போயிட்டா... அதான் தேடி வந்திருக்கோம்."

"ஐயோடா... பொண்ணா?"

"சாதாரண பொண்ணில்ல... கமிஷனர் பொண்ணு."

"அடி ஆத்தி. அது எங்க இங்க வந்துச்சு,"

"தலையெழுத்து வந்துச்சு.ஆமா நீ மலைநாடா?"

"ஆமாஞ்சாமி."

"போற வழித்தடத்துல அந்தப் பொண்ணைப் பார்த்தா போலீஸ்காரங்ககிட்ட பிடிச்சு தா... ரூபா தருவாங்கயா..."

"ஆகட்டும்."

அவரைத் தாண்டுகிறான்.

"கேட்டியா சந்தர்.போலீஸ் வந்து இறங்கியாச்சு. மீனாவை பிடிக்க வைக்கற குறியில, மொத்த சாமியார்களையும் பிடிச்சு உலுக்கப்போறாங்க.நடுவுல

நாம ஓசைப்படாம காரியத்தை முடிச்சுக்கணும்."

"இப்ப நாம குளத்துக்குத் தானே போறோம்?"

"ஆமாம்."

அவர்கள் பாறைகளில் தாவி ஏறி வேகமாக நடந்து முதல் குன்றின் உயரம் தொட்டு மறு சரிவில் இறங்கி மறைகின்றனர்.

நாலாபுறமும் மலை. மலைச்சரிவெல்லாம் பச்சைப் புடைப்பு. நடுவில் சிவன் கொண்டை போன்ற உருவ அமைப்பில் நீல நிறம் தோய்ந்து கிடக்கிற மாதிரி குளம்.

மேலிருந்து அந்த வடகிழக்கு முனை நோக்கி இறங்கும் போது பார்க்கும் காட்சி, மீனாவை பரவசப்படுத்துகிறது.அப்போதுதான் அகல் விளக்கேற்றி ஆண்டவனை வழிபட்டுப் புறப்படிட்டிருந்தாள் அவள்.கூடவே சந்திரகாந்த சிவம் வருகிறார்.

"வேகமா நட மீனா... சூரியன் மறையறதுக்குள்ள நாம அதுல குளிக்கணும்..." இதே விஷயத்தை மலைப்பாறையில் நடந்து வரும் வல்லபனும், சந்தர்நாத்திடம் சொல்லிக் கொண்டிருக்கிறான்.

# 32

கேளப்பா....

நாளும் பொழுதுமாய்

நீ காணும் உலகு பற்றி

கோளின் கோணத்தில் சில சொல்வேன்!

வாளும் முனை மழுங்கும்

அட்டத்தில்.... சந்திர அட்டத்தில்!

பறழும் செயலாகும் பணி ... ராகுவின் அட்டமத்தில்

தேளேறிக் கடித்தாலும் விடமேறாது அமிர்தத்தில்!

சூளேற்றிச் சொல்லிடுவேன்

உள்ளுணர்வும், பல்லுணர்வும் உன்னாலில்லை ... கோளினாலே....

கோள்வழிச் செல்வதே எண்ணம் ... அதை

கொள்முதலாக்கிக் கொள்ளுமுன்னம் ஈசன் தாள் பற்றிட

என்றும் மாசு கதிர்கூட மின்னும் பொன்னாய் மின்னும்.

சொர்ணஜாலத் திரட்டுக் குறிப்பு

வல்லபன் சொன்ன சூட்டோடு எட்டி நடை போடுகிறான்.சந்தர்நாத்தால் அவனுக்கு சரியாக நடக்க முடியவில்லை.

மலையும், தடமும் மிரட்டுகிறது.

"மெல்ல வல்லபா... மெல்லப் போ..."

"கிழிஞ்சது.... இங்க இருந்து எவ்வளவு வேகமா நடந்தா அந்தக் குளம் இருக்கற இடத்துக்கு போய் சேர முடியும்னு எனக்குத் தெரியும்.தாமதமானா இருட்டிவிடும.; இருட்டின் நிலையில் குளத்துல இறங்கறது ஆபத்து..."

"ஒரு ஆபத்தும் இல்லை... இருட்டுதான் வசதியானது நமக்கு. மூழ்கி லிங்கம் இருக்கற இடத்தைத் தேட வேண்டியது என் பொறுப்பு. நீ கவலைப்படாதே..."

சொல்லிவிட்டு இடுப்பு வேட்டி மடிப்பை ஒரு முறை தொட்டுப் பார்த்துக் கொள்கிறான்.

"டிடெக்டர் கொண்டு வந்திருக்கியா?"

"ஆமாம்... ஸ்பெஷலா இதுக்குன்னே பண்ணினது.... பாரு..."

பேஜர் போல ஒரு கருவியை எடுத்துக் காட்டுகிறான் அவன்.

"எங்க தங்கம் இருந்தாலும் இதுல இருந்து கிளம்பிப் போற கதிர்கள் அது மேல பட்டா,இதுல சிவப்பு விளக்கு எரியும்.தங்கம் தவிர வேற எந்த உலோகத்துலமேல பட்டாலும் எரியாது.ஸ்பெஷல் கோல்டு டிடெக்டர்! பாபா சொல்லி மும்பைல ஒருத்தன் பண்ணி எடுத்துகிட்டு வந்து தந்தான். தண்ணிலகூட வேலை செய்யும்..."

நடந்தபடி சந்தர்நாத் விளக்கம் தர, மலைக்காற்று அவர்கள் மார்பு வருடி ஒழுகும் வியர்வையை சிலிர்க்க விட நடை வளர்க்கின்றனர் அவர்கள்....

அவர்கள் போல் இல்லை. ஆனால் பதறல் இல்லாத நடை.

கைகட்டிக்கொண்டு, சூழ்நிலையை வெகுவாக ரசித்தபடி நடந்து கொண்டிருக்கிறாள் மீனா.

சந்திரகாந்த சிவம் மட்டும் சற்று எட்டி நடைபோடுகிறது."நீ இந்தக் குளத்தைப் பார்த்திருக்கமாட்டே.ரொம்ப விசேஷமான குளம்" என்கிறார் முன்னால் நகர்ந்தபடி...

"குளத்துல, விசேஷமான குளம்னும்... விசேஷமில்லாத குளம்னும் இருக்கா என்ன?"

"மனுஷங்கள்ளயே நல்லவங்க, கெட்டவங்க இருக்கும் போது, குளத்துல இருக்கக்கூடாதா?"

"கம்பேரிஸனே தப்பு.தண்ணி எல்லா இடத்துலேயும் ஒண்ணுதானே? அதுக்கு ஏது அறிவு. இஷ்டத்துக்கு தன்னை மாத்திக்க?"

"தண்ணி ஒண்ணுதான்.ஆனா அது தேங்கி இருக்கிற இடம்தான் அதன் தூய்மையை, புனிதத்தை தீர்மானிக்குது."

"அப்படின்னா?"

"எப்பொழுதுமே வடக்கு பாகம் விசேஷ பாகம். அதுலயும் பூமியின் வடக்குக்கு அதிக சக்தி உண்டு. அது குபேர திசை.அது மட்டுமல்ல... ஈசான்ய சக்தி பொங்கிப் பெருகி வருகிற வெளி அது. எந்த ஒரு வீடு வடக்குப் பார்த்து இருந்தாலும் அது விருத்திதான் ஆகும்.

எந்த ஒரு வடக்கு, கிழக்கு முனையில் நீர்வெளி இருந்தாலும் அது ரொம்ப, ரொம்பச் சிறப்பாகும்.அந்த நீர்ப பரப்புல குளி;ச்சா மனசு ரொம்ப உற்சாகப்படும்.அப்படி நாம குளிக்கற வட பாகத்து நீருக்கும், திசைக்குமே ஈசான்யம் இருக்க, அந்தக் குளத்துக்குள்ளேயே பொன்னீசன் இருந்தா கேட்கவா வேணும்."

"நீங்க சொல்றத ஒரு வாதத்துக்கு கேட்டுக்கறேன்; ஒப்புக்கறேன். திரும்பவும் சொல்றேன், அனுபவபூர்வமா நான் அதை உணர்ந்ததான் நம்புவேன்.

என் அறிவு ,இவற்றை ஒத்துக்காதே’ன்னுதான் இந்த நிமிஷம் சொல்லுது. இதெல்லாம் ரசமான கற்பனை.அவ்வளவுதான். மனுஷ வாழ்க்கைல தான் ஏழை, பணக்காரன்... நல்லவன், கெட்டவன்கற பேதங்கள்னா, திசைகள்ளையுமா?"

சந்திரகாந்தம் அதைக் கேட்டு சற்று வருந்துகிற பாவம் கொள்கிறார். உள் மனது மெலிதாய் ஓலமிடுகிறது.

,ஈசா... ஏன் இந்தப் பெண்ணிடம் இத்தனை எதிர் மறை உணர்ச்சி... எதற்கு?"

கேள்விச் சுமையோடு நடப்பவர் எதிரில் மேற்கு பாகத்தில், ஆரஞ்சின் நிறம் பிடிக்க கதிரவன் சுழன்றடிப்படி இறங்கிக் கொண்டிருக்கிறான்.செம்போத்து கூட்டம் ,சக்கரக்கக்...!' சப்தமுடன் தலைமேல் ஒரு சின்ன கூட்டமாக கத்திப் பறக்கிறது. அவை வீடு திரும்பத் தொடங்கிவிட்டது என்றால் பொழுது ஐந்தைக் கடந்துவிட்டது என்று அர்ததம்.

இதுவரை நடந்த நடை மேட்டுப் பாகத்தில் இருக்க, இனிமேலான நடை பள்ளத்தில் என்று மாற... எதிரில் வெள்ளிக் கவசம் பூண்டது போல் அதோ, அதோ அந்த ஈசான்யகுளம்.

சந்திரகாந்தம் அதைப் பார்த்ததும் பரவசமாகிறார்.

முதலில் அதில் குளியல்.பின் ஜலத்தாரை வார்த்து பிரமாணம்.அதற்குப் பின் அன்றைய இரவில் மீனாவை வெறும் தரையில் உறங்கச் சொல்ல வேண்டும். விடிந்த பின் மான் தோலாசனம் ஏற்றி உபதேசிக்கத் தொடங்கவேண்டும். வரிசையாக மடத்துச் சம்பிரதாயங்கள் இருக்குகின்றன. எந்த அளவுக்கு அனைத்துக்கும் மீனா ஒப்புதலளிக்கப் போகிறாளோ, தெரியவில்லை.

கவலையென்ற உணர்வையே உள் பரவ விடாதவர், மீனா நிமித்தம் சகலத்தையும் மீறி கவலைப்படுகிறார். இருந்தும் வெளிக்காட்டாது செயலுக்குள் பிரவேசிக்கிறார்.

"மீனாட்சி... உன்னை நான் இந்தக் குளத்துக்கு எதுக்குக் கூட்டிகிட்டு வந்துருக்கேன்... தெரியுமா?"

"தெரியலை.."

"எதுக்குன்னு கேட்க மாட்டியா?"

"கேட்டாதான் சொல்லுணுமா... எத்தனை விஷயங்களை நான் கேட்காம சொன்னீங்க? இத மட்டும் நான் கேட்கணுமா?"

"நீ இதுல நீராடணும்மா.நான் இதன் நீரால உனக்கு என் பொறுப்பை தாரை வார்க்கப் போறேன். ஏத்துக்கணும் நீ..."

"நான் இங்க தங்கியிருக்கிறது வித்தியாசமான அனுபவங்களுக்காக. அவ்வளவுதான.; பொறுப்பு அது, இதுன்னு என் தலைல எதையாவது ஏத்திடாதீங்க. நாளேக்கே நான் இங்க இருந்து போயிடலாம்..."

"நீ போக வரலை மீனாட்சி... போகவும் கூடாது."

"இங்கயே காலமும் முழுக்க நான் இருக்கவா?"

"அதுதான் ஈசன் ஆணை..."

"அவர் யார், எனக்கு ஆணையிட...?"

"ஏன் இப்படியெல்லாம் பேசறே... எனக்கே உன் கேள்வி ஆச்சரியம் தருது."

"என் கேள்வில என்ன தப்பு? அவர் யார் ஆணையிட? அது எனக்குத் தெரியணும்.எதுலயும் என் விருப்பம்னு ஒண்ணு இருக்கு.எதையும் புரிஞ்சும், விரும்பியும் செய்யணும்..."

"அப்ப உனக்கு நான் சொல்றதுல உடன்பாடு இல்லையா?"

"நிச்சயமா இல்லை..."

குளத்தங்கரையில நின்று கொண்டு நீரில் காலை நனைத்தபடி கேட்கிறார் சந்திரகாந்தன்.மீனாவும் பதற்றமே இல்லாமல் பதிலளிக்கிறாள்.

"சரி... அப்பக் கிளம்பு." அவர் திரும்பத் தொடங்குகிறார்.முகத்தில் மூட்டம் போட்ட மாதிரி வாட்டம்.

மீனா குளத்தங்கரையில் கால் வைத்து நீரை கைகளால் மொண்டு குடிக்கிறாள்.அற்புதமாக இருக்கிறது. பனி நீரின் சில்லிப்பு.கூடவே இனம் காண மாட்டாத சுவை.

வட்டமாக என்றும், சதுரமாக என்றும் ஒரு திட்டமாக இல்லாமல் உலக நாடுகளின் வரைபடம் போல இருக்கிறது.அந்தத் திருக்குளம், நடுநடுவே பாறைகள். அதில் பூத்த பாசங்கள்.அனைத்தையும் ரசிக்கிறாள். பின் மெல்லத் திரும்பி சந்திரகாந்தன் தளர் நடைபோட்டுச் செல்லும் பாதையாகப பார்த்து நடக்கத் தொடங்குகிறாள்.

அவளை தொலைதூரத்தில் இருந்து நான்கு விழிகள் பார்த்துக் கொண்டிருக்கின்றன. சந்தர்நாத்! வல்லபன்! வல்லபனின் கை, நீண்டு சுட்டுகிறது."அந்தப் பொண்ணுதான் மீனா...""எங்க வந்தா அவ... ஒரு கை மொண்டு குடிக்கவா?"

"தெரியாது.முன்னோடி நடக்கற சாமி தான் சந்திரகாந்த சிவச்சாமி. அதோட தீட்சை வட்டம் நூறு அடிக்கு குறையாது. நாம நூறு அடிக்கு வெளிய இருக்கோம்.இல்லேன்னா நம்மளை உணர்ந்திருப்பாரு..."

"அவ விஷயத்தை பிறகு பேசிக்கலாம்.முதல்ல லிங்கம் இருக்கறதை கன்ஃபர்ம் பண்ணிக்கனும்." அவன் பரிதவிக்க ஆரம்பிக்கிறான்.

"அவசரப்படாதே... அவங்க கொஞ்சதூரம் போய்டட்டும்.எத்தனை வருஷம் பொறுத்தீங்க?"

"பொறுத்தது மட்டுமா? எவ்வளவோ திட்டங்கள்.இதுக்காகவே எனக்குத் தமிழ் கத்துக்க ஏற்பாடு செய்தார் பாபா.."

"ஹூம்! எங்க ஊர்லதான் திருட்டுப் பிள்ளையாருக்கு அலைவாங்க. நீங்க திருட்டு லிங்கத்துக்கு அலையறீங்க. அலையறதுலயும் அர்த்தமிருக்கு... லிங்கம் தங்கமாச்சே?"

"சத்தம் போட்டு சொல்லாதே... எத்தனை பேரால அதைக் கண்டு பிடிக்க முடிஞ்சது.பாபாவால மட்டும் தானே?"

"அப்ப, இங்க வந்துட்டுப் போன சந்திரகாந்தத்துக்கு தெரியாதா?"

"அவருக்குத் தெரிஞ்சா என்ன... தெரியலேன்னா என்ன? நமக்குக் காரியம் ஆகணும். இது பாபா கட்டின தாயத்து இருக்கு ஒரு தவறும் நடந்திடாது. வா, முதல்ல போய் குளத்துல இறங்குவோம்..."

"என்னால முடியாது. சந்தர். நான் எவ்வளவு முயற்சி செய்தும் அதனுடைய அடியாழம் போக முடியலை நீதான் போகணும்."

"இதுக்காகவே ஜல பந்தனம் சொல்லிக் கொடுத்தார் பாபா. கவலைப்படாதே விடமாட்டேன்..."

சங்நதர்நாத் விறுவிறுவென நடந்து குளத்து நீர்க்கரையினை அடைகிறான். சுற்றிலும் ஒரு பார்வை பார்த்துவிட்டுவேட்டியை எட்டாக மடித்துக் கட்டிக் கொள்கிறான். டிடெக்டரை ஒரு கயிறு போட்டுக் கட்டி கழுத்தில் மாலை போல் போட்டுக் கொண்டு அதை இடை வேட்டியிடை செருகிக் கொள்கிறான்.

இதைக் காண ஆதித்தனுக்கு பிடிக்க வில்லையோ என்னவோ... முழுவதுமாய் மேற்கு பாகம் இறங்கிவிட்டிருக்கிறான்.இருட்டு கூடு கட்டப் போகிறது.

"ஸ்ளக்க்..." நீரைத் திருகியபடி பாய்கிறது சந்தரின் உடல். குளப்பரப்பின் கரை ஓரமாய் அதன் காரணமாய் அலை ஓடிப் பாய்கிறது. மல்லாக்கப் படுத்தபடி நீந்தத் தொடங்குகிறான்.

*நீர் மேல் ஒரு முழு வட்டமும் போடுகிறான்.நடுநடுவே டிடெக்டரைப் பார்க்கிறான். இரும்பைக் கண்டறியும் கருவியி;ல் விஞ்ஞான சாதுர்யங்களைக் காட்டியதில், அது தங்கமிருந்தால் அதைக் கண்டறியும் ஒன்றாக மாறியிருக்கிறது. முடிந்த மட்டும் தன் கதிர்களை அனுப்பித் தேடுகிறது. எங்கும் விளக்கெரியவேயில்லை. சரியாக குளத்தின் நடுபாகத்தை அடைந்து ஒரு எம்பு, எம்பிவிட்டு உள்புகத் தொடங்குகிறான். வல்லபன் கரை மேல், ஒரு மரத்தின் பின்னால் நின்று கண் கொத்திப் பாம்பாய் கவனித்துக் கொண்டிருக்கிறான்.நீர்ப பரப்பின் மேல் இப்பொழுது சலனமேயில்லை இரவும், போர்வை போர்த்தத் தொடங்குகிறது. ,இது போன்ற விஷயத்திற்கு இதுவா தருணம்?' மனது பேதலிக்கிறது. அதே சமயம், ஒரு மிதவை போல மேல் வந்த மிதக்கத் தொடங்குகிறது சந்தர்நாத்தின் சடலம்!*

# 33

*'கேளப்பா...*

*கோள் பற்றிச் சொன்னேன் ... அதையே*

*கொள்ளும் மனம் என்றேன். சிவன்*

*தாள் பற்றி ஒன்று சொல்வேன் ... நாளும்*

*கோளும் நம் மனத்தே என்றாலும் ... மனம்*

*ஆதில் வீழாதிருக்கவும் வழி உண்டு ... சாக்த*

*மார்க்கம் காட்டிடும்படி நின்று, சக்தி*

*ஆராதனை புரிதல் சாக்தமாகும் சாக்தனுக்கே*

*இல்லை என்றும் திரேகாக்கம்!"*

*சொர்ணஜாலத் திரட்டுக் குறிப்பு*

*மிதக்கும் சந்தரைப் பார்த்து வல்லபன், முதலில் கலவரப்படவில்லை. மூச்செடுக்க வந்ததாகத்தான் நினைக்கிறான்.ஆனால் நெடுநேரம் அசையாது கிடக்கவும்தான் பதறத் தொடங்குகிறான்.*

*"சந்தர்... சந்தர்" மிருதுவாக முதலில் கூப்பிட்டு, பின் பதிலில்லாதுபோகவே மெல்ல நீரில் தானே இறங்குகிறான். அதிக அளம்பல் இன்றி நீந்திச் சென்று சந்தரைத் தொட்ட பிறகே அவன்*

பிணமானது உறைக்கிறது வல்லபனுக்கு.

முற்றிலும் இருண்டு கொண்டிருந்த பொழுது வேறு சங்கடப்படுத்த, சந்தரின் தலைமுடியைப் பற்றி கூரைவரை இழுத்து வந்து தட்டுத் தடுமாறி பிணத்தை இழுத்துப் போட்டுவிட்டு அப்படியே பெருமூச்சுடன் அமர்கிறான்.

,எப்படி ஆனது இப்படி... இம்மியளவு துன்பம் வராது என்றாரே பாபா?" மனதில் முதல் கேள்வியே அதுவாகத்தான் இருக்கிறது.

ஆனாலும் சித்த புருஷர்களைப் பார்த்துவிட்டு சாதாரணமாய் மலையைவிட்டு யாருமே வெளியேறுவதில்லை என்கிற நிஜமும் ஒரு கொத்து கொத்துகிறது.

திடும்மென்று ஏதோ அரவம்.

வட்ட வட்டமாக டார்ச் லைட் வெளிச்சம் ஆங்காங்கே விழுந்து உருள்கிறது. கூடவே, ,குளந்தங்கரையில யாரது உக்காந்துகிட்டு?'என்கிற சப்தம் வேறு...

"ஐயையோ!..."

வல்லபன் எழுந்து நழுவப் பார்க்கிறான். பரிச்சயப்பட்ட காட்டின் எந்த முனைக்குள் நுழைந்தாலும் வெளியேறிவிடலாம் என்கிற தைரியத்தோடு நழுவுபவன், வந்திருப்பது போலீஸ்தான் என்பதையும் புரிந்து கொள்கிறான்.

திபுதிபுவென்று ஓடி வரும் போலீஸ் கூட்டத்தில் ராகவனும் இருக்கிறார். அவர் காலடியில் தான் கிடக்கிறான் சந்தரும் பிணமாக. அடுத்த அடிக்காக காலை எடுக்கப்போய் மார்பு மிதிபட பதறிப் போகிறார் ராகவன்.

"ஏய்... இங்க ஒரு டெட் பாடி..." கத்துகிறார். மொத்த போலீஸ் கூட்டமும் ஓடி வருகிறது. அவர்களில் கருணாகரனும், ப்ரகாஷும் கூட இருக்கின்றனர்!

தாணிப்பாறை போலீஸ் ஜீப்பில் கிடத்தப்படுகிறது பிணம். ஈரம் காய்ந்துவிட்டிருக்கிறது. நல்ல வெளிச்சத்தில் பிணத்தை இப்பொழுது கருணாகரனும், ராகவனும் ஊன்றிப் பார்க்கின்றனர்.

கைப்பரப்பில் ஏதோ ஹிந்தியில் பச்சை குத்திய எழுத்துக்கள்.

ராகவன் அதைப் பார்த்துவிட்டு,"யாருக்காவது ஹிந்தி தெரியுமா?" என்று கேட்கிறார்.

ப்ரகாஷ் முன் வருகிறான். எழுத்தைப் பார்த்து, ,ராகவ சந்தர்'னு போட்ருக்கு சார்'' என்கிறார்.

''ராகவ சந்தர்னா...?''

''ஆமா!''

''அப்ப இவன் பேர் ராகவ சந்தரா?''

''மே பி. இவரைத் தெரியுமா உங்களுக்கு?''

''இவனைத் தெரியாது. ஆனா இந்தப் பேர்ல ஒருத்தன் இன்னிக்குச் சாவான்னு தெரியும்.மரணம் எனக்குதான்னு கூட நான் நினைச்சிருந்தேன்.ஆனா அது இவனுக்கா?''

''என்ன ராகவன் குழப்பறீங்க?''

''குழப்பலை கருணாகரன். இப்பத்தான் தெளியத் தொடங்கியிருக்கு. அந்த ,அமர நாடி' ரியலி கிரேட் தான்.''

''கொஞ்சம் புரியும்படி சொல்லுங்களேன்.''

''சொல்றேன்.கருணாகரன். கார்மேக ஆசாரி என்னைப் பார்த்துப் பேசினதுல கிடைச்சதுதான் அமர நாடி. அதுல, ,இன்னிக்கு ஒருத்தன் செத்துப் போவான் அவன் பேர் ராகவன்'னு போட்ருந்தது. கூடவே, ,அவன் காவலன்'னும் இருந்தது. சுரி நம்ம கதைதான் முடியப்போகுது போல, அதையும் எப்படின்னு பாத்துடுவோமேன்னுதான் தைரியமா நைட் ரைடுக்கு கிளம்பினேன்.ஆனா காலம் இவனுக்கு குறி வைச்சிருக்கு. நிச்சயமா சொல்றேன். இவன் ஒரு போலீஸா இருக்கணும். இவனை விட்டு ஓடினவனைப் பிடிச்சா உண்மை தெரியும்'' ராகவன் திடமாகக் கூறுகிறார்.

''சார், அது இருக்கட்டும்.. அந்த நாடியில வேற என்னென்ல்லாம் சார் சொல்லப்பட்டிருக்கு?''

''வாங்க பார்ப்போம்... அதுதான் இப்ப நமக்கு வழி காட்டப் போற ஒரு பெரிய பொக்கிஷம்.''

சொல்லிக் கொண்டே ஜீப்பில் உள்ள தன் லெதர் பேக்கை திறந்து, ஆசாரி தந்த நோட்டை எடுத்து விரிக்கத் தொடங்குகிறார்.

ரேடியம் கடிகாரத்தில் மணி எட்டைக காட்டுகிறது. மலைப்பாதை முழுக்கவும் தப்பித்த வல்லபனை துழாவியபடி கூடவே ஒரு கூட்டமும் முண்டியடித்துக் கொண்டு முன்னேறிக் கொண்டிருக்கிறது.

சம்மணமிட்டு அமர்ந்திருந்தார் சந்திரகாந்த சிவம் இருக்கும் ஏட்டுக் கட்டையெல்லாம் எடுத்து, எடுத்துப் பார்த்துக் கொண்டிருக்கிறாள் மீனா.

அசாத்ய அமைதி, எண்ணெய் விளக்கின் அடர்வில்லாத இதமான வெளிச்சம். ஞானமணி ஒரு ஓரமாக அமர்ந்து இதைப் பார்த்தபடி இருக்கிறான். அவன் முகத்தில் இனம் தெரியாத கவலை, கலக்கம் எல்லாம்...

மெல்ல எழுந்து மீனாவை நெருங்கிறான்.அவள் திரும்பிப் பார்க்கிறாள்.

"என்ன பண்ணிகிட்டிருக்கீங்க மீனா...?"

"பாத்தா தெரியலையா...? படிச்சுக்கிட்டிருக்கேன்..."

"போரடிக்கலையா?"

"இந்த நிமிஷம் அடிக்கலை."

"எப்படி இங்க இருக்க முடியுது?"

அவள் சிரிக்கிறாள்.அவன் சைகை காண்பித்து வெளிப்பக்கமாக அழைக்கிறான். சிரிப்பு கலையாது செல்கிறாள்.

"என்னால் நம்ப முடியலை மீனா..." என்கிறான் அவன்.

"எதை?"

"நீங்க இங்க இப்படி அடங்கிக் கிடக்கறதை. அப்பாவை பாக்கணும். வீட்டுக்குப் போகணும்னு தோணலை?"

"உம்... தோணுது."

"அப்புறம் எப்படி இங்க?"

"அது இருக்கட்டும், நீங்க எப்படி...?"

"எனக்கும் பிடிக்கலைதான்."

"அப்ப கிளம்பி போய்கிட்டே இருக்கவேண்டியது தானே?"

"அது... அது..."

"எது?"

"ஒரு நேரம்தான் அப்படியிருக்கு. இன்னொரு நேரம் இந்த இடம்தான் நம்ம

உலகம்னு தோணுது."

"எனக்கு அப்படித் தோணக்கூடாதா?"

"இல்ல.. இது எனக்காக சொல்ற மாதிரி இருக்கு."

"எப்படி வெணா வெச்சுக்குங்க."

"அது சரி... அற்புதமான சக்தியோட இங்க நீங்க இப்படி அடைஞ்சு கிடக்கறது எனக்குத் துளிகூட பிடிக்கலை. ஈசான்ய குளத்துலகூட குளிக்கலை போலிருக்கே?"

"அது எப்படி உங்களுக்குத் தெரியும்?"

"அது... அது... தங்கசாமி சொன்னார்."

"இன்னும் என்ன சொன்னார்?"

"நீங்க முரண்டு பிடிக்கறிங்களாம். ,இந்த மடத்தை எப்படிக் காப்பாத்தப் போறோமோ, தெரியலை'ன்னும் சொன்னார்."

"இவ்வளவு நாளா எப்படிக் காப்பாத்தினாங்களாம்?"

"அதுக்குதான் சோதனை வரப் போகுதாம்ல...?"

"வரட்டும்... பிறகு அதைப் பற்றி யோசிப்போம்."

"என்ன மீனா... ஏதோ வேண்டாதவன்கிட்ட பேசற மாதிரியே பேசறீங்களே!"

"இங்க வேற யார்கிட்ட நான் வேணுங்கற மாதிரி பேசியிருக்கேன்...?"

"வந்ததுல இருந்து ஒரே டிரஸ்... ரொம்ப அழுக்காயிடிச்சு. இவங்க கொடுத்த காவிப் புடவையைக்கூட தற்காலிகமாகத்தான் உடுத்திக்கிறீங்க..."

"பேச்சு மாத்தாதீங்க... என் கேள்விக்குப் பதிலைச் சொல்லுங்க."

,என்னத்த சொல்ல... எனக்குப் பொழுது போகலை. உளறிக்கிட்டிருக்கேன். போகட்டும். எல்டனும், தங்கசாமியும் இப்ப எங்க போயிருக்காங்கன்னு தெரியுமா?"

"எங்க...?"

"இன்னிக்கு ஏகாதசி திதியாமே.. காட்டுல சில விசேஷ மூலிகைகள்

கிடைக்குமாம். எடுத்துக்கிட்டு வரப் போயிருக்காங்க."

"அப்படியா?"

"என்னைக் கூப்பிட்டாங்க. ஆனா ,நான் வரலைன்'னு சொல்லிட்டேன்.

"என்னை அறுக்கணும்னு தீர்மானிச்சிட்டீங்க. அப்புறம் எங்க போகப் போறீங்க. சரி வேற எதாவது விஷயம்?"

"ஒண்ணுமில்லை..."

நான் போய் புத்தகம் பார்க்கறேன்."

"இந்தக் குளிருக்கும், இருட்டுக்கும் ஜம்முன்னு ஒரு கப் காஃபி குடிச்சா எப்படியிருக்கும்?"

"நல்லாதான் இருக்கும். கிடைக்கணுமே.."

"நான் போட்டுத் தரவா...?"

"என்ன... விளையாடறீங்களா? இங்க அடுப்பே கிடையாது."

"இங்க இல்லைன்னா என்ன... என்கிட்ட இருக்கே!"

மீனா முதல் முறையாக அவனை அதிகபட்ச ஆர்வத்துடன் பார்க்கிறாள்.

"நீங்க வாங்க... நான் போட்டுத் தரேன்." அவன் சொன்னபடி ஆஸ்ரம வாசல் கடக்கும் நீரோட்டத்தில் கால் பதிக்கிறான்.

அவள் சற்றுத் தயங்கிவிட்டு பின் தொடர்கிறாள். அவன் இருளில், பழகியவன் போல் நடக்கிறான். சட்டென்று ஒரு ஒளிவட்டம் விழுகிறது. அவன் கைகளில் இப்பொழுது பென் டார்ச்.

"ஏய்.. ஏது டார்ச்செல்லாம்?"

"எப்பவும் இடுப்புல வெச்சிருப்பேன். பாத்து வாங்க."

சிறிது தூரம் நடந்ததில் ஒரு பாறை இடுக்குத் தெரிகிறது. அதற்கு முன் சென்று நிற்பவன் அந்தப் பாறை இடுக்கில் கைவிட, ஒரு பெரிய பாலிதீன் பையே வருகிறது. ஆதை எடுத்துப் பிரிப்பவன்.. உள்ளிருந்து பால் பவுடர், காஃபி பவுடர், சர்க்கரை, ஒரு சிறிய பாத்திரம் என்று சகலத்தையும் எடுக்கிறான்!

மீனாவின் முகத்தில் ஆச்சரிய மின்வட்டம்.

சில நிமிடங்களில் அப்படியே ஓரமாக ஒடுங்கி சில சுள்ளிகளைப் பொறுக்கிப் போட்டு தீ மூட்டி, பாத்திரத்திலும் தண்ணீர் பிடித்துவந்து, பவுடர்களைக் கலந்து சுடச் சுட காபி தயாரிக்க ஆரம்பிக்கிறான்.

"பெரிய ஆள்தான் ஞானமணி நீங்க... இந்த காஃபியை ஆஸ்ரமத்துல போட்டு சாப்பிட்டா என்ன?"

"அவ்வளவுதான்... 'நீ லாய்க்கில்ல, கிளம்பு'ன்னு சொல்லிடுவாங்க. நாக்கைக் கட்டுப்படுத்தினாதான் இங்க இருக்கலாம்."

"இப்படி இருக்கறதுக்கு, கிளம்பிடலாமே?"

"கிளம்பலாம்தான்.. ஆனா பயமா இருக்கே."

"என்ன பயம்?"

"இவங்களைப் பாத்துட்டு, பேசிட்டு, இவங்க விருப்பமோ ஆசியோ இல்லாம யாரும் மலையை விட்டு வெளியே போக முடியாது."

"கவலைப்படாதீங்க.. நான் பாத்துக்கறேன். பாவம், நீங்க இந்த இடத்தை ஜெயிலாட்டம் ஃபீல் பண்றீங்க. இப்பவேகூட சந்திரகாந்தத்துகிட்ட சொல்லி அனுப்பி வைக்கறேன்."

"ஐயையோ... வேண்டாம்! நான் இன்னும் கொஞ்ச நாள் இருக்கணும்."

"கொஞ்ச நாள் இருக்கணுமா?"

"ஆமாம்... சில ஆசனங்கள் கத்துக்கணும். அப்புறமா ரசவாதம் பத்தித் தெரிஞ்சுக்கணும். தெரிஞ்சுகிட்டு அப்புறமா போறேன்..."

"அது சரி, இந்த ஐட்டமெல்லாம் எப்படிக் கிடைச்சது... முன்னையே வாங்கி ஸ்டாக் பண்ணிட்டீங்களா?"

"ஆங்... ஆங்... ஆமாம்!"

"ஓ.கே. நீங்க காஃபியை சாப்டுட்டு வாங்க. நான் கிளம்பறேன்."

"உங்களுக்கு..?"

"நோ தேங்கஸ்."

அவள் அங்கிருந்து விலகிச் செல்லத் தொடங்க, அடுத்த நொடி ஞானமணி முன் ஒரு புதரை விலக்கிய படி வெளிப்படுகிறான் வல்லபன்! அவனைப் பார்க்கும் ஞானமணியிடம் பதற்றம்.

"ஏய்... இந்த நேரத்துல எங்க இங்க?"

"செல்றேன்... சொல்றேன்... பாபாவோட வந்த சந்தர் செத்துட்டான், ஞானமணி. போலீஸ் வட்டம் கட்டி இருக்கு. அதான் அவங்க கண்ல மண்ணை தூவிட்டு இந்தப் பக்கம் வந்தேன்."

"என்னது சந்தர், சந்தர் செத்துட்டானா?"

"ஆமாம்... அந்தக் குளத்துல ஒரு முங்குதான் போட்ருப்பான். நல்லா தம் கட்றவன்தான்... எப்படிச் செத்தான்னே தெரியலை."

வல்லபன் மூச்சிரைக்க விவரிக்கும் அதே சமயம்... கைவசம் தீப்பந்தமுடன் தங்கசமாமியும் எல்டனும் அந்தப் பக்கமாய் வந்து கொண்டிருக்கின்றனர்!

# 34

'கேளுமுன் விடைதரும் குருவே...

சீடன் நான் சில விடையறியா கேள்விகள் கொண்டுள்ளேன்!

மாலுடை மருகன் போல் சுடும் கனியாய்

கேள்விகள் கொண்டதில்லை. ஆயினும்,

வேலுடைக் கரத்தவன் தொழும் வேதியரும் விவரணமாய்

வடை சொன்னதில்லை.

கூறுவேன் கேள்விகள் இனி ஒவ்வொன்றாய்...

தாரும் பதில்களை தகையுடனே!

"ஊனுக்குள் ஒடுங்குமுயிர் வானுக்கு போனபின்பு

ஊனது மண்ணாகும். உயிரது என்னாகும்?"

சொர்ணஜாலத் திரட்டுக் குறிப்பு

"இருவரின் வருகையும் ஞானமணியையும், வல்லபனையும் கிலி கொள்ளச் செய்கிறது.

"போச்சுடா... அந்த வெள்ளைக்காரனும் தங்கசாமியும் தானே வந்துக்கிட்டிக்கிறது" ... வல்லபன் கேட்கிறான்.

"ஆமா... நீ கிளம்பு. சீக்கிரம் போ! நானும் அப்படியே நழுவறேன். வர்ற வெள்ளிக்கிழமை நான் குளத்துக்கிட்டே இருக்கிற பால் வேம்பு மரத்துக்கிட்ட வரேன். மிச்சத்த அங்க பேசிக்கலாம்" சொல்லிவிட்டு ஞானமணி சிட்டாகப் பறக்க ஆரம்பிக்கிறான்.

ஆஸ்ரமம்!

தீப்பந்த ஒளிப்பிழம்பாய் மஞ்சள் ஒளி கூத்தாக கிடக்கிறது. உள்ளே சுவடிக் கட்டுகளை சுவாரஸ்யமாகப் பார்த்தபடி இருக்கிறாள் மீனா. சந்திரகாந்த சிவம் தியானத்தில் இருக்கிறார். மூச்சிரைக்க உள் ஓடி வருகிறான். ஞானமணி. நிமிர்ந்து பார்க்கும் மீனாவை ஒரு தினுசாய் பார்க்கிறான். பிறகு ஒன்றுமே தெரியாத மாதிரி அப்படியே ஒடுங்கி அமருகிறான்.

சில வினாடி கழிதலுக்குப் பின் ரங்கசாமியும், எல்டனும் வருகின்றனர். வருகின்றவர் முகங்களில் இனம்புரியாத கலவரம். மீனா இருவரையும் ஒரு தினுசாகப் பார்க்கிறாள்.

"சாமி எப்ப தியானத்துல உக்கார்ந்ததுன்னு தெரியுமா மீனா.."

"உம்.. மதியம் மூணு மணி இருக்கும்." கைகடிகாரத்தை பார்த்தபடி சொல்கிறாள். அதைக் கேட்டு பதிலேதும் பேசாமல் தங்கசாமி வாசல்புரம் செல்கிறார். எல்டனும் பின் தொடர்ந்து",டோண்ட் ஒர்ரி" என்கிறான் ஆங்கிலத்தில்.

"கவலைப்படாம இருக்க முடியல சாமி. மகாலிங்கம் என்ன நினைக்குதுன்னு தெரியலியே..."

அவர் அலுத்தக் கொள்ள மீனா அவரை எட்டிப் பிடிக்கிறாள்.

"எதுக்கு இந்த கவலைன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?"

"என்னம்மா பிரயோஜனம்?... நீ சுய சிந்தனைங்கற மாயையில் இருந்து இன்னும் விடுபடலையே!"

"சுய சிந்தனை ஒரு மாயையா?"

"நிச்சயமா... எண்ணங்கள்ல சுய சிந்தனைங்கறது கர்வம் சார்ந்தது. கர்வம்ங்கறது ஒரு வகை பாவம் சார்ந்த விஷயம். எந்த பாவம் உன்னை இப்படி கட்டிப்போட்டிருக்குன்னு தெரியலையே.."

"உங்க அபிப்பிராயமே தப்பு. ,சுய சிந்தனை மாயை,ங்கிற உங்க விளக்கமெல்லாமே தப்பு. அறிவை ஆண்டவன் கொடுத்திருக்கிறது

எதுக்கு? கண்மூடித்தனமான எல்லாத்தையும் ஒப்புக் கொள்ளவா?"

"இங்க எதெல்லாம்மா கண்மூடித்தனம்?"

"அற்புதமான மருத்துவ விஸயங்கள், பல ரகசியங்கள் இதையெல்லாம் ஏன் இந்த மலைக்காட்டுல யாருக்கும் தெரியாதபடி வெச்சிருக்கீங்க?"

"தங்கம் வைரத்தை பெடடியில பூட்டி வைக்கிறது தானேம்மா வழக்கம்?" பெருமூச்செறிந்து சொல்கிறார் தங்கசாமி.

"விளக்கம் நல்லா இருக்கு. ஆனா நீங்க.. உங்க ஒளிஞ்சு வாழற முறை... ஜனத் தொடர்போ விஞ்ஞானத் தொடர்போ இல்லாத உங்க தனிமை இதையெல்லாம் என்னால பெரிசா ஒப்புக்க முடியலை..."

"ஒளிஞ்சு வாழலைம்மா; ஒதுங்கி வாழறோம்! ஜனத் தொடர்பு இல்லைன்னு சொல்லாதே... இன்னிக்கும் உரியவங்க வருவதும் போவதும் நடக்கத்தான் செய்யுது. விஞ்ஞானத் தொடர்புன்னு ஒண்ணு சொன்னியே. அது நினைச்ச நிமிஷம் ஏற்படுத்திக்க முடிஞ்ச ஒண்ணுதான்.

தவத்துக்கு தனிமைதான் இனிமையானது. அதனால தான் தனிமைல இருக்கோம்."

"சரி, இதுக்கு குறுக்க யாராவது வந்தா அவங்க ஏன் இறந்து போறாங்க?"

"எங்க தவத்துக்கு குறுக்க வந்த யாரும் இறந்ததில்லைம்மா... வேறு சில விஷயத்துக்காக வந்தவங்கதான் இறந்து போறாங்க."

"அவங்களையும் ஏன் சாகடிக்கணும்? திருந்தி வாழ வைக்கலாமே.." மீனா கைகூப்பிக் கேட்கிறாள்.

"ஞானமணி மாதிரி சிலர் விஷயத்துல செய்யாமலா இருக்கோம்?"

"ஒரு ஞானமணிக்கு அதைச் செய்தா போதுமா?"

"எல்லார்க்கும் செய்ய விதி இடம் கொடுக்காதும்மா."

"கொடுத்தால்..."

"என்னாகும்னு பார்த்து தெரிஞ்சுக்கறியா?"

"அந்த அனுபவமும் நல்லதுக்குதானே?"

"அப்படின்னா நாளைக்கே உனக்கும் எனக்கும் அது ஏற்படட்டும், அப்புறம் பார்."

"எப்படி…?"

"நாளைக்குப் பாரேன்…"

தங்கசாமி பூடகமாக பேசி முடிக்கிறார்.

போலீஸ் கேம்ப்! இரவு பன்னிரட்டைக் கடந்தும் ஒருவருக்கும் தூக்கம் வந்தபாடில்லை.

ராகவன், ட்ராவலர்ஸ் பங்களா வெளியே மரத்தடியில் நாற்காலி போட்டு தீவிரமாகப் புகைபிடித்தபடி இருக்கிறார்.

"என்ன ராகவன்.... தூங்கலியா?" கேள்வியுடன் வருகிறார் கருணாகரன்.

"எபப்டி வரும் கருணாகரன்? வரமாட்டேங்குது. நடந்ததை எல்லாம் நினைச்சா மலைப்பாகவும் இருக்கு."

"அஃப் கோர்ஸ், ராகவன் சார். அந்த அமர நாடிய பார்த்தீங்க... படிச்சீங்க. ஒண்ணுமே சொல்லையே?..."ப்ரகாஷும் வந்து இணைந்து கொள்கிறான்.

"பொதுவுல நாடின்னாலே கப்சான்னு நினைச்சிக்கிட்டிருந்தேன்.ஆனா இப்ப நடக்கிறத நினைச்சா, ரொம்ப ஆச்சரியமா இருக்கு. ராகவன்கறவன் இன்னிக்கு இறந்தாகணும்னு அந்த கார்மேக ஆசாரி சொன்னப்போ, அது நான்தான்னு நினைச்சேன்.அதனாலதான் என் மகன்களுக்கு அவ்வளவு வேகமா கல்யாணப் பேச்சு பேசினேன். உமாநாத்தையும் இழுத்துப் போட்டேன்.

ஆனா அது, வேற ராகவன். நாடிப்படி அவன் போய் சேர்ந்துட்டான். அதே சமயம் இங்க உங்க சிஸ்டருக்கு மலைல இருக்கிற ஒரு சாமியார் சொன்னபடி எல்லா பெண்களுக்கும் கல்யாணம் முடிவாயிடுச்சு.

ஒரே கல்லுல இரண்டு மாங்கா விழுந்த மாதிரி, இதை இயல்பா நடந்த விஷயம்னு சொல்றதா? இல்லை..."

"இந்த மலை விஷயம் எதுவுமே இயல்பில்லை. ராகவன் சார் மீனா காணாம போவாங்கறததான் ஏற்கெனவே நாடி ஜோசியர் கிருஷ்ணமாச்சாரியார் சொல்லிட்டாரே?..."ப்ரகாஷ் பேச்சில் கிருஷ்ணமாச்சாரியாரை பிடிக்கிறார் பரபரவென்று எழுந்து நிற்கும் ராகவன்,"மிஸ்டர் ப்ரகாஷ்! உங்ககிட்டே ஒண்ணு கேட்கணும். உங்க ஃப்ரெண்டு சுகுமார் இப்ப எங்க இருக்கார் தெரியுமா?"

"இப்ப எதுக்கு சார் அவனைப் பத்தி?"

"நல்ல வேளை... இப்பவாவது எனக்கு ஞாபகம் வந்ததே. ப்ரகாஷ் அவன் ஒரு ஃப்ராடு. மீனாவுக்கு ராங்கா ஒரு மோடிவேஷன் டெவலப் பண்ணினவன் அவன். அந்த கிருஷ்ணமாச்சாரியார் இப்ப உயிரோடு இல்லை. தெரியுமா உங்களுக்கு?"

"நிஜமாவா?"

ராகவன் நடந்தது முழுவதையும் கூறி முடிக்கிறார். ப்ரகாஷ் வியர்த்துப் போகிறான்.

"அப்படின்னா இப்ப நடக்கிறதெல்லாம்?..."

"நம்ம அறிவுக்கும், யூகத்துக்கும் அப்பாற்றபட்ட விஷயங்கள். ஒரு பக்கம் போலீஸீக்கு கொம்பு சீவி விட்ற மாதிரி ஃபோன் கால்ஸ்... மறுபக்கம் மலைல வரிசையா மரணங்கள். இடையில் மீனாவை காணவில்லை... இதுதான் தற்போதைய நிலை..."

"மரணங்களுக்குக் காரணம்?"

"ஒரு மரணம் கூட கொலை கிடையாது. இயல்பான இயற்கை மரணம்தான். அல்லது தற்கொலை சாயலில் உள்ள மரணங்கள்.

"புரியல..."

"முதல் இரண்டு மரணங்கள் எப்படின்னு தெரியல. ஆனா, மூணாவது வடிவேலு மரணம், ஓரளவு தெரிய வந்திருக்கு. அவன் உடம்பை மிருகங்கள் சாப்பிட்டிருக்கு. நாலாவது மரணம் லாரன்ஸ். லாரன்ஸீக்கும் கிட்டத்தட்ட இதே கதிதான். அது ஒரு யானையால நேர்ந்த விபத்துன்னு சொல்றார் போஸ். அடுத்து இப்ப இன்னிக்கு கிடைச்சிருக்கிற சந்தர்ங்கற ராகவ சந்தர்... மூச்சுத் திணறி இறந்திருக்கான். கைல கோல்டு டிடெக்டர் வெச்சிருந்திருக்கான். அப்போ ,அந்தக் குளத்துல தங்கம் சம்பந்தமா ஏதாவது இருக்கணும்..."

"தங்கம் சம்பந்தமாவா?"

"ஆமாம். கார்மேக ஆசாரி கூட தங்கச் சாவிகளை காமிச்சார். மலைல ரசவாதம் தெரிஞ்ச சித்தர்கள் இருக்கிறதா சொன்னார். கூட்டிக் கழிச்சுப் பார்த்தா, தங்கம் அல்லது தங்கம் பண்ற ரகசியம் தேடி ஒரு கூட்டம் வந்திருக்கு. அதை சேர்ந்தவன்தான் இந்த ராகவ சந்தர் நாத்."

"அப்படி வந்தவங்க ஓசைப்படாம இல்ல காரியம் செய்யணும்? எதுக்கு ஒரு பக்கம் போலீஸை மோட்டிவேட் பண்ணணும்?"

"தெரியல... ஆனா அதை இரண்டு விதமா பார்க்கலாம். ஒரு பக்கம் மலைக்குள்ள மீனாவை தேடி போலீஸ் அதிரடியா நுழையறதன் மூலம், மலையமைதி கெடும். சித்த சன்னியாசிகள் அந்த இடத்தைவிட்டு வெளியேறலாம். அப்ப அவர்கள் இந்தக் கூட்டத்தவங்க பிடிச்சுக்கலாம். இல்லே இந்தத் திருட்டு கோஷ்டியிலேயே எவனாவது அவங்களுக்கு வேண்டாதவன் இருந்து இந்த விஷயங்களை நமக்குச் சொல்லி எச்சரிக்கை செய்யலாம்."

ராகவன் அற்புதமாக விவரிக்க... கருணாகரன் அமர நாடியை வருடுகிறார்.

"ராகவன் அந்த நாடியை பிரியுங்க. அது என்ன சொல்லுதுன்னு பார்த்திடுவோம்."

மூவரும் உடனடியாக மரத்தடிவிட்டு அறைக்குள் நுழைந்து கார்மேக ஆசாரி தந்த நோட்டை எடுத்து விரிக்கின்றனர். பழுப்பேறிய தாள்கள், தொடும்போதே பொடிந்து விடும் போலுள்ளது.

,சர்வம் சிவமயம்!' என்கிற முதல் குறிப்பு கண்ணில் படுகிறது. அதைத் தொடர்ந்து பாடல் வரிகள்...

"ஆழி சூழ் உலகெலாம் ஆதித்தன் காக்க, ஆதித்தன் முதலான இந்திரசந்திர தேவர்களை ஆதிசன் காக்க, ஊழி ஊழி உற்பாதம் உள்ள..." அந்தப் பக்கம் முடிய, மறுப்பக்கத்தைத் திருப்புகிறார் ராகவன். பகீரென்கிறது. அதிலிருந்து எழுதப்பட்ட மொத்த பக்கங்களும் மொத்தமாய் கிழிக்கப்பட்டிருக்கின்றன!

"மை குட்னஸ்... யாரோ இந்தக் குறிப்புகளை கிழிச்சு எடுத்திருக்காங்க."

"என்ன ராகவன் சொல்றீங்க?"

"பாருங்க" ராகவன் கைகள் நடுங்கக் காட்டுகிறார். அனைவர் முகத்திலும் அதிர்ச்சி.

"அப்ப நம்ப கூட்டத்திலேயும் ஒரு கருப்பு ஆடு இருக்கா?"

கருணாகரனின் ஈனஸ்வரம் ராகவனையும் தொற்றுகிறது.

"எதிரி நமக்குள்ளேயே இருக்கான் கருணாகரன்!"

கைகளைப் பிசைந்து கொண்டு சொல்பவர், சட்டென்று பார்வையைச் சுழலவிட்டு வெளியே வந்து பார்க்கிறார்.

ஒரு சென்ட்ரி மட்டும் விரைப்பில்லாமல் ரைஃபிளை சுவற்றில் சாய்த்து

வைத்த நிலையில் மூக்குக்குள் பொடி ஏற்றிக் கொண்டிருக்கிறான்.

"யோவ்... இங்க வாய்யா!" ராகவனின் அழைப்பைத் தொடர்ந்து அவன் ஓடி வருகிறான்.

"என் ரூமுக்குள்ள யாராவது வந்தாங்களா?"

"யாருமில்லையே சார்..."

"நல்லா ஞாபகப்படுத்திச் சொல்லு...."

"சத்தியமா சார்... நானறிய யாரும் வரலை."

ராகவன் அடுத்த கூஷணம் திரும்ப அறைக்குள் நுழைந்து ஜன்னல் வழியாக யாரும் வரமுடியுமா என்று பார்க்கிறார்.

தாராளமாக வரமுடிந்ததற்கு அடையாளமாக ஜன்னல் கம்பிகள் இடையே இடைவெளிகள். மறுபுறத்திலும் மேலிருந்து குதித்த கால் தடயங்கள்!

வேகமாகத் திரும்பி நெற்றியை தேய்த்துவிட்டுக் கொள்பவர் முன், ப்ரகாஷ் பேசுகிறான்.

"கவலைப்படாதீங்க சார்... இதை பாஸிட்டிவ்வா எடுத்துப்போம்."

"அற்புதமான ஒரு வழிகாட்டி இது, ப்ரகாஷ்."

"இருக்கலாம். நாம நம்மை நம்புவோம். நான் ஒண்ணு சொல்லட்டுமா?"

"என்ன?"

அவன் சொல்கிறான். அவர் முகத்தில் மலர்ச்சி.

தாஜ் ஹோட்டல்!

மதுரையை முழுவதுமாக மறைக்காமல் காட்டும் உயரத்தில், ஜன்னல் சாளரம் வரியாக அதைப் பார்த்தபடி நாராயண் பாபா. நடுவில் கதவு தட்டப்படும் சப்தம்.

நிதான நடை நடந்து கதவை திறக்கிறார் பாபா. கதவுக்கு அப்பால் வல்லபன். அவன் கையி;ல் அந்த கிழிந்த அமரநாடிக் காதிதங்கள்!

# 35

'வினவிய சீடா!

விடை இதுவே சீராய்...

ஊனைவிட்ட உயிர்க் கதிரும் வினைப்படிமம் கொண்டிடுமே

கொண்ட வினைக்கதிர்கள் வானில் தங்கள் இணை கண்டிடுமே

ஆவின் கதிர் வானமேக அந்தண கர்ப்பம் கொள்ளும்.

அந்தணன் கதிர் வானமேக அறவுலகம் கொள்ளும்.

ஊன் புவவு உடன் கள்ளும் கொண்டு வாழ்ந்த உயிர்களெல்லாம்

வீண் பிறப்பாய் போனதென்று மீண்டும் ஜனனம் கொள்ளும்

உன் கணக்கும், என் கணக்கும் கூடப் பொய்யாகும்.

வான் கணக்கில் அணுத் திகைவும் வாராதே அறிவாய் நீ!"

சொர்ணஜாலத் திரட்டுக் குறிப்பு

வல்லவனைப் பார்த்து தாடியை வருடிக் கொள்கிறார் பாபா. அவன் கையில் தெரியும் தாள்களைப் பார்த்து மேலும் வருடல் கூடுகிறது.

"பாபா... நடக்கக் கூடாதெல்லாம் நடந்து போச்சு. சந்தர் போய் சேர்ந்துட்டான் பாபா... போய் சேர்ந்துட்டான்" என்று படபடவென்று பொரிந்தபடி அவர் முன் மலங்க, மலங்க நிமிருகிறான்.

அவன் பார்வையில் எந்த மாற்றங்களும் இல்லை. ,அதுக்கென்ன இப்போ?' என்று கேட்கிற மாதிரிதான் இருக்கிறது.

"என்ன பாபா... நான் எவ்வளவு கஷ்டப்பட்டு அந்த மலையைக் கடந்து வந்துருக்கேன் தெரியுமா? என்ன நடந்ததுன்னு கேக்கமாட்டீங்களா?"

"எல்லாம் தெரியும் வல்லபா..."

"சந்தர் செத்தது... அப்புறம் இந்த அமரநாடி?"

"இது அமரநாடியா... யார் சொன்னது? இது என்னோடது!"

"என்ன சொல்றீங்க?"

"நான்தான் இதை ஆசாரிகிட்ட கொடுத்து போலீஸ்கிட்ட சேர்க்கச் சொன்னேன். இதுல சொன்னபடி சில விஷயங்கள் நடந்துட்டா போலீஸ் கூட்டம் இதன்படி நடந்துக்க ஆரமபி;க்கும். மறுபக்கம் நம்ம வேலையைப் பாத்துக்கலாம்னு முடிவு செஞ்சேன். கெடுத்துட்டியே..."

"நான் கெடுத்தேனா?"

"பின்ன... இதை எதுக்குக் கொண்டு வந்தே? நான் கொண்டு வரச் சொன்னேனா?"

"சந்தர் சாவு பத்தி எல்லாம் இதுல சொல்லியிருக்கிறதா போலீஸ் பேசிகிட்டது காதுல விழுந்தது. அப்ப என்னைப் பத்தியும் இந்த நாடில ஏதாவது இருக்கான்னு தெரிஞ்சுக்கிற ஆசை ஏற்பட்டது. அதான் துணிஞ்சு அந்த எஸ்.பி. தங்கியிருக்கிற அறைக்குள்ள நுழைஞ்சு இதைத் திருடினேன். இப்ப கேட்டா, ,இது என்னோடது'ன்னு சாதாரணமா சொல்றீங்களே...?"

"வல்லபா... நான் என்ன சொல்றேனோ, அதை மட்டும் தான் நீ செய்யணும். அதிகப் பிரசங்கித்தனம் கூடாது."

"அப்ப சந்தர் செத்துப் போனானே... அந்தக் குளத்துல இறங்கினா சாவுன்னு உங்களுக்கு தெரியுமா?"

"தெரிஞ்சுக்கத்தான் அவனை இறங்கித் தேடச் சொன்னேன். இப்ப தெரிஞ்சு போச்சு. அந்தக் குளத்துல தங்க லிங்கம் இருக்கறது உண்மை. ஆதை சந்தர் மாதிரி சராசரி மனுஷங்களால எடுக்க முடியாதுங்கறதும் உண்மை."

"அப்படின்னா உயிர் போகும்னு தெரிஞ்சே எங்களை வைச்சு பரீட்சை பண்ணிணீங்களா..?"

"எங்களை'ன்னு ஏன் உன்னை சேர்த்துக்கறே? சந்தர் பல காரணங்களுக்காகப் போய்ச் சேர வேண்டியவன். அவன் யாருன்னு உனக்குத் தெரியுமா?"

"யார்...?"

"அவன் ஒரு சி.பி.சி.ஐ.டி! என்னை வேவு பார்க்க அருணாச்சலப் பிரதேஷ் போலீஸால அனுப்பப்பட்டவன்!" பாபா நறுக்கென்று முடித்துக் கொண்டு,"இதுக்கு மேல எதையும் கேட்காதே வல்லபா. நான் சொல்றதை மட்டும் கேள். நீயும் என்னைப் போல கோடீஸ்வரனாகலாம்..." சொல்லிவிட்டு பாபா, சாளரம் வழியாக மதுரையைப் பார்க்கிறார்.

நான்மாடக் கூடலின் கோபுரம் பளிச்சென்று தெரிகின்றது. ஓங்கி உலகளக்கும் கட்டடங்கள்... வகிடு போட்ட சாலைகள்.. பேனாய் ஊறும் வாகனங்கள்!

வல்லபன் இதையெல்லாம் ரசிக்கும் மன நிலையில் இல்லை. அவனுக்கு தான் தப்பான ஒரு நபரிடம் வசமாக மாட்டிக்ககொண்டது போல்

உள்ளுணர்வு.

"என்ன வல்லபா யோசிக்கறே... ஆத்மஞானியார் நேத்து வரை தெரிஞ்ச பாபா இப்ப ஒரு வில்லன் போல தெரியறேனா?"

"......."

"இப்பவும் சொல்றேன். நான் ஆத்மஞானிதான்! சொர்ணாலயம் என் லட்சியம். உனக்குத் தெரியாது; ஆனா புராணத்துல சொல்லியிருக்கு... வானின் வடக்கு திசையில குபேரன் மாளிகை இருக்காம். அது முழுக்க முழுக்க தங்கமயமானதாம். அவ்வளவு ஏன்? இமயப் பனிமலையிலயும் அந்த ஈசனுக்கு தங்கக் கோயில் இருந்திருக்கு. எங்கேன்னே தெரியாதபடி அதைக் காலம் பனியால மூடிடிச்சு.

அப்படி ஒரு ஆலயத்தை நான் எழுப்பணும்.

அங்க எல்லாமே தங்கமா இருக்கும்.

அந்த ஆலயத்துல ஒரு மண்டல பூஜை நான் செய்தா போதும். நானும் வசிஷ்டர், விஸ்வாமித்திரர் வரிசைக்குப் போயிடுவேன். அதுக்கு எனக்கு தங்கம் வேணும். அதுக்காகத்தான் இந்தச் சதுரகிரிக்கு வந்திருக்கேன்.

இமயம் ஒரு பனிக்காடு. அங்கு திரிய ஞானிகளுக்கு உடம்போட உட்கூறுகள் பத்திதான் பிரதானமா தெரியும். ஆனா அந்த இமயத்துக்கு நிகரான இந்த மலைல திரியற ஞானிகளுக்குத்தான் மூலிகை ஞானம் அதிகம். அந்த ஞானம் மட்டும் என் வசப்படட்டும், அப்புறம் பார்..." அவர் பேச்சு அவனை சற்று மிருதுவாக்கினதுபோல் தோன்றுகிறது.

"சரி, அடுத்து நான் என்ன செய்யட்டும்?"

"இந்த நாடியை திரும்ப அவங்ககிட்டே சேர்க்கணும். இதுல இருக்கிறபடி நிச்சயம் போலீஸ் செயல்பட ஆரம்பிக்கும்."

,போலீஸை ஏன் நாம அவசியமில்லாம இழுக்கணும்?"

"இந்த விஷயத்துல நீயும் நானும் விரும்பினாலும், விரும்பலேன்னாலும் போலீஸ் வரத்தான் செய்யும், ஏன்னா, அந்த மீனா ஒரு போலீஸ் அதிகாரி மகள். அப்படி அங்க வரும் போலீஸ், நிச்சயம் இந்த மலைல உள்ள சன்யாசிகளுக்கு எதிரா ஒரு துரும்பைக்கூட எடுத்துப் போடாது. ஏன்னா அவங்களால நிஜத்துல யாருக்கும் எந்தக் கெடுதலும் இல்லை. இந்த நிலைல, மீனாவை கடத்தறதோ.... இல்லை, அந்த தங்க லிங்கத்தை எடுக்கிறதோ சாதாரணமில்லை வல்லபா."

"மீனாவை கடத்தி என்ன செய்யப் போறோம்?"

"அதை நீ பிறகு தெரிஞ்சுக்கலாம். முதல் காரியமா இந்த நாடியை அந்த எஸ்.பிக்கு திரும்பக் கிடைக்கிற மாதிரி செய். மிச்சத்தை நான் அப்புறம் சொல்றேன்."

,சரி என்கிற தலையசைப்போடு அங்கிருந்து கிளம்பி அறைக்கதவு வரை செல்லும் வல்லபன், திரும்பி வந்து பாபா எதிரில் நிற்கிறான்.

"என்ன வல்லபா?"

"ஒன்பது பேர் அந்த மலைல இறக்கணும். அதன் பிறகு தான் நாம நினைச்சதெல்லாம் நடக்கும்'னு சொன்னீங்களே... அது உண்மையா, இல்லை..."

"உண்மையில்லை...."

"அப்ப, நடந்த மரணங்களெல்லாம்?..."

"தற்செயலானவை."

"எதுக்கு அப்படிச் சொன்னீங்க?"

"பல காரணங்கள் இருக்கு. அதை நான் பிறகு சொல்றேன். நீ இப்ப ஞானமணியை என்கூட கொஞ்சம் பேசச் சொல்..."

"எப்படிப் பேசமுடியும் அவனால?"

"அவனுக்குத் தெரியும் வழி. உடனடியா அதை மட்டும் சொல்."

"அப்புறமா?"

"என்னை வந்து பார். அடுத்த வேலையைச் சொல்றேன்."

அவன் தலையாட்டிவிட்டுச் செல்கிறான். ஆனாலும், ஒரு முழு நம்பிக்கை வந்ததுபோல் தெரியவில்லை. அது பாபாவுக்கும் புரியத்தான் செய்கிறது.

வத்திராயிருப்புக்கான பஸ்ஸில் ஏறி அமர்கிறான் வல்லபன். அவ்வளவாகக் கூட்டம் இல்லை. பாபா பேசியது உள்ளே ஓடிக் கொண்டே இருப்பதால் முகம் முழுக்க சிந்தனை, கலக்கம்.... மார்புப்புறம் சட்டைக்குள் அடங்கிக் கிடக்கிறது ,அமரநாடி' என்னும் காகிதங்கள்.

டிக்கெட்டுக்காக பணத்தை எடுக்க கை போகும்போது நிரடுகிறது. அதில் என்ன எழுதியிருக்கும்? இந்த பாபா போலீஸை எப்படித் திசை

திருப்பிவிடப் போகிறார்.? கேள்விகளோடு நாளை எடுத்துப் பார்க்கிறான். ஏற்கெனவே அரதப் பழசான காகிதங்கள். வியர்வை ஈரத்தில் சில எழுத்துக்கள் கலைந்து போயிருக்க. தூய தமிழ் வாசகங்கள் அவன் கண் எதிரில் ஓடத் தொடங்குகின்றன...

"மலையதுவில் மங்கையவளும் திரிகூடம் சென்றிடுவாள். திரிகூடமதில் புலியருவிக் குகையொன்றே அவளிருப்பிடமாம்..."

"திருக்குளத்தில் இறங்குபவர் திருக்கயிலாயம் சேர்வர். நீர்லிங்கம் நீரதுவில் உள்ளதுவால் குளமே ஒரு கோயிலாம்."

வண்டி கிளம்பி, குலுங்கியபடி செல்ல.. வாசகங்களைத் தொடர்ந்து படிப்பது சிரமமாக இருக்கிறது. ஆனால் ஒன்று மட்டும் புரிந்தது.போலீஸை குளத்தில் இறங்க விடாமல் தடுப்பதற்காக, ,மீனா, திரிகூடம் என்றழைக்கப்படும் குற்றாலம் பக்கம் போய்விடுவாள்; அங்கேயுள்ள குகையில் இருப்பாள்' என்றெல்லாம் சொல்லிவிட்டதில் போலீஸ் அந்தப் பக்கமாக போகப் போகிறது.

தொடர்ந்து சிரமப்பட்டுப் படிக்கிறான்.

"மாமலை மேல் ஒரு மடம். அதில் மூவருக்கோர் இடம். மூவரில் ஒருவன் முத்தமிழறியாதவன். ஈங்கிவர் கள்வர், காவலரும் இவர்களைக் கைக்கொள்வர்."

புடித்துவிட்டு யோசிக்கிறான். ,மூவர்' என்று யாரை இதில் சொல்லியிருக்கிறது. சந்திரகாந்த சிவம், தங்கசாமி, எலடனையா? அவன்தான் முத்தமிழறியாதவன்...

இவர்களைப் போலீஸ் தவறாகக் கருத்தான் இந்த வரிகளா? புடித்தபடி யோசி;க்கத் தொடங்குகிறான். நடக்கக்கூடாத ஒன்று அடுத்து நடக்க ஆரமபிக்கிறது. அசுர பரிமாணக்காற்று ஒன்று, அந்தக் காகிதக் கற்றையைப் பறித்துச் செல்கிறது காகிதங்கள், ஓடும் பேருந்தின் வெளியே திசைக்கொன்றாய் பறக்கின்றன!

தட்டப்பட்ட கதவைத் திறந்தால் வெளியில் கருணாகரன், ப்ரகாஷ், ராகவன்.

"வாங்க... வாங்க..." அதிகபட்ச மரியாதையுடன் வரவேற்கிறார் கந்தசாமி. உள்ளே நுழைந்ததும் நுழையாததுமாக ராகவன் பூரணியைத் தான் தேடுகிறார்.

"யாரைத் தேடறீங்க. பூரணியையா? கடைத்தெருவுக்குப் போயிருக்கா."

"நல்லது...கந்தசாமி நீங்க ஒரு உதவி செய்யணுமே..."

"சொல்லுங்க.. என்ன செய்யணும்?"

"மலை இனிமே நாங்க ஒரு பெரிய கூட்டமா போய் தேடறதா இல்லை. அது நல்லதாவும் படலை. மீனாவைப் பாக்காமலும், கருணாகரனால இருக்கமுடியல. அதனால..."

"அதனால....?"

"இந்த ப்ரகாஷோட நீங்களாவது அல்லது உங்க மனைவியாவது மலைக்குப் போகணும். நீங்க போன எல்லா இடத்துக்கும் கூட்டிக்கிட்டுப் போகணும்."

கந்தசாமி உடனேயே சற்று தடுமாறத் தொடங்குகிறார்.

"என்ன பயம்... மீனா உங்க மருமகளும்தானே?"

"இல்லேங்கல. இருந்தாலும், ,தப்பு பண்றோமோ?'ன்னு பயமா இருக்கு."

"எது தப்பு? நம்ம பொண்ணை நாம தேடறதா?"

"அது தப்பில்லை. ஆனா, அவ காணாம போயிட்டதா நாம நினைக்கிறது தப்போன்னு தோணுது."

"அவ மலைல நல்லவிதமா இருக்கான்னே வெச்சுப்போமே. ஆவளை ஒருதடவை பார்த்துட்டா மனசுக்கு சந்தோஷமாயிடும்."

"அப்படின்னா ஆத்மார்த்தமா அந்த மகாலிங்கத்தை கும்பிட்டுக்கங்க. நிச்சயம் அவளே உங்களைப் பார்க்க வருவா..."

கந்தசாமியின் பதிலைக் கேட்டு ராகவன் சற்றுகெக்கலிப்பாகச் சிரிக்கிறார் சிரித்துவிட்டு,"கந்தசாமி... நாம இனட்டர்நெட் யுகத்துல இருக்கோம். புராண காலத்துல இல்லை. அதோட, மலைல மர்மமா சாவுங்க."எல்லாம் சாமி விஷயம்'னு போட்டு மூடி மறைக்க முடியாது போலீஸால... தங்கம் பண்ற ரகசியம், அது இதுன்னு ஏகப்பட்ட விஷயங்க இருக்கு. கொஞ்ச நாங்க சொல்றதக் கேளுங்க" என்கிறார்.

ராகவனின் பேச்சில் மெல்லக் கரைந்து ,சரி' என்று அரை மனதாகத் தலையை அசைக்கிறார். அப்படியே மாடப்பிறைணயில் இருக்கும் மகாலிங்க விபூதியையும் எடுத்து பூசிக் கொள்கிறார்.

"வாங்க... கிளம்புவோம்."

"கிளம்பலாமா?"

தங்கசாமியின் கேள்விக்கு முன்பு உடுப்பைச் சரி செய்து கொண்டு கிளம்பத் தயாராகிறாள் மீனா.

ஞானமணி நெருங்கி வந்து கேட்கிறான்."எங்க கிளம்பிட்டீங்க?"

"எங்க அத்தை வீட்டுக்கு..."

"சாமியும் வருதா கூட?"

"ஆமாம் ,சகஜமா அவங்க வெளிய வந்தா என்ன ஆகும்'னு தெரிஞ்சிக்க வேண்டாமா?"

"போய்ட்டு எப்ப வருவீங்க?"

"தெரியாது."

சொன்னபடி தங்கசாமியுடன் கிளம்புகிறாள் மீனா. சந்திரகாந்தசிவமும், எல்டனும்கூட அருவிக் குளியலுக்காகப் போய்விட, மடத்தில் இப்பொழுது யாருமே இல்லை.

ஞானமணி, இதுதான் சந்தர்ப்பம் என்று சந்திரகாந்தத்தின் தனியறைப் பக்கமாக ஒதுங்கி அங்குள்ள மூங்கில் பெட்டியைத் திறக்க ஆரம்பிக்கிறான்.

உள்ளே, விதம் விதமாய்...

# 36

கூர்மதிக் குருவே!

சரணம்... சரணம் கமல பாதம் சரணம்.

உயிர் வழி அறிந்தேன்.. உளமெலாம் நிறைந்தேன்

ஊனுக்குள் உயிர் வாழும் நாளில் ரோகத்தால் சக்தி குன்ற

வானுக்குள் வலம்வரும் கோட்கள்தான் காரணமா? ... அன்றேல்

காணுமிந்த வாழ்வில் செய்யும் கருமங்கள் காரணமா? ... உடல்

பேணும் நலவழிதனை நானுமறிய

*நுவில வேண்டும் ... நவில வேண்டும் நறுந்தமிழ்ச் சொல்லாலே.*

*சொர்ணஜாலத் திரட்டுக் குறிப்பு*

*மூங்கில் பெட்டியின் உள்ளே விதவிதமாக சுவடிக் கட்டுகள், மரக் குப்பிகள், மணக்கும் வேர்க் கூட்டங்கள் உருண்டும், திரண்டும் கிடக்கும் காய் மணிகள், புரியாத புதிராக நாக சர்ப்பம் ஒன்றின் தலை முதல் நுனி வரையிலான தோல்பாகம். இதில் சர்ப்பத்தின் முகப் பகுதி துளியும் கெட்டிராதபடி அது உயிரோடு இருப்பது போலவே தோற்றம் தர, அதன் தாடைப் பரப்பில் கல் போன்ற ஒன்றின் நெருடல்!*

*ஞானமணி அவ்வளவையும் அதிசயமாகப் பார்க்கிறான்.*

*சுவடிக் கட்டைப் பிரிக்கிறான். முதல் ஏட்டின் தலைபாகம், அந்தக் கட்டின் தலைப்பைக் கொண்டிருக்கிறது. ,ரசமணி வியோகம்' என்கிற அதைப் பிரித்துப் பார்க்கிறான். ரசமணி செய்யும் வழிமுறைகளைச் சொல்லும் பாடலாக உள்ளது அத. ,சொர்ணாலயப் பாமாலை' என்று இருக்கிறது.*

*அடுத்த நொடி மூளையை ஒரு ஞாபகச்செல் நிமிண்டுகிறது.*

*அந்த மலைல சொர்ணாலயம் இருக்கு. இருக்கணும். இருந்தே தீரணும். அந்த மலைல திரியற சித்தர்கள் ஒருமுறையாவது தரிசனம் செய்ய விரும்பற தங்க சிவக்கோயில்அது. அங்க தொட்டதெல்லாம் தங்கம். பாக்குமிடமெல்லாம் தங்கம்."*

*என்றோ, எப்பொழுதோ பாபா இப்படிச் சொன்னது, கச்சிதமாகக் கிளர்ந்தெழுகிறது. இந்தப் பாமாலை அந்தச் சிவனுக்காக உருவானதா? மனக் கேள்வியோடு அடுத்த ஏட்டக்கட்டை எடுக்கிறான். ,ஜென்ம சகடம்' என்று தலைப்பே அவனுக்கு ஒரு திமிறு திமிறுகிறது.*

*ஜென்ம சகடமென்றால்...? கேள்வியோடு அதன் அடுத்த பக்கங்களைப் பார்க்கிறான்.*

*"ஓர் மாந்தன் முன்னறிய நேர் காணும் பூர்வ புண்ய பாகத்தில் சதகோணம் தன்னோடு நிகழ்பாகம் தனில் சேரும்பாதை கண்டு அதன் கோணம் சேர்த்து கணிதங்கொள்ள நூறுடன் முப்பத்து கூட புல்லாயும் விலங்கவன்..."*

*போய்க் கொண்டேயிருக்கின்றன வரிகள். முந்தைய ஜென்மத்தில் நாம் யார் என்பதைக் காட்டும் கண்ணாடி அது என்பதும், அதற்கு ஜாதகம் இருத்தல் அவசியம் என்பதும் உரைக்கத் தொடங்க... அடேயப்பா! எத்தனை பெரிய*

விஷயம் இது.

படபடப்போடும், வியர்வை ஓட்டத்தோடும் ஜென்ம சகடத்தை எடுத்து வைத்துவிட்டு அடுத்த கட்டைப் பார்க்கிறான் ,ரசவாத ரகசியம்' என்று கண் சிமிட்டுகிறது அது.

இதுதான்...

இதுதான்..

இதேதான்..

பாபா வடபகுதி விட்டு தென்பாகம் வந்து மதுரையில் உட்கார்ந்து கொண்டிருப்பது இதற்குத்தான்!

உலகையே விலைக்கு வாங்க முடிந்த தங்கம் செய்யும் ரகசியம் இதுதான். மளமளவென்று மூங்கில் கூடைக்குள் அதைப் போட்டு மூடுபவன், ஒரு வினாடி நிமிர்ந்து தாடை வருட, யோசித்துவிட்டு அந்த பெட்டியையே அப்படியே தூக்கிக் கொள்கிறான்.

இனி ஒரு வினாடி இங்கிருக்கக் கூடாது!

வந்த வேலை முடிந்தது.

மலைப்புரம் முழுக்க மேகக் கொட்டாரம்! பஞ்சுக் கூட்டம் பறந்து விளையாடுற மாதிரியும் இருக்கிறது. ரசித்தபடி நடந்து கொண்டிருக்கிறாள் மீனா. கூடவே மௌனமாக கைகாட்டியபடி தங்கசாமி.

"இப்படி பேசாம வந்தா எப்படி? நமக்குள்ற என்ன சண்டையா?" மீனா அவரை சற்று உசுப்பிவிடுகிறாள்.

"ஏம்மா என்னை சோதிக்கிறே?" தங்கசாமி செல்லமாக அலுத்துக் கொள்கிறார்.

"நான் சோதிக்கிறேனா.. நல்லாயிருக்கு."

"இல்லையா பின்னே? காலக் கணக்கு பிசகாம இந்த இடத்துக்கு வந்தே... பூர்வ ஜென்ம ஞாபகங்களையும் திரும்ப அடைஞ்சே! ,மாதா சக்தி வந்துட்டா... இனி சிவன் சொத்துக்கு பங்கமில்லை'ன்னு நினைச்சேன். ஆனா விஞ்ஞானம் பேசறே... விபரீதத்துக்கு வழி பார்க்கறே."

"எது விபரீதம்?"

"இனி நடக்கப்போற எல்லாம்தான்."

"என்ன நடக்கப்போகுது?"

"அதைப் பார்த்து தெரிஞ்சுக்கோயன்..."

"இது சாமாத்தியமான பதில். இன்னது நடக்கும்னு முன்னாலேயே சொல்லுங்க.. நடக்குதான்னு பார்ப்போம்."

"நானும் நீயும் நடக்கற இந்த மலைப் பிராந்தியத்துக்குள்ளே தான் இப்ப உன் அப்பா, உன் காதலன் எல்லோரும் இருக்காங்க.'

"உம்.. அப்புறம்?"

"அதுல உன் அப்பா இன்னியோட உலக வாசத்தை முடிச்சுக்கப்போறார்..."

தங்கசாமி சற்று திணறித்தான் சொல்கிறது. மீனா முதலில் திடுக்கிட்டு பின் தங்கசாமியிடம் ஊன்றி,"உங்களுக்கு எப்படித் தெரியும்' என்று கேட்கிறாள்.

"சில கணக்கு போடத் தெரிஞ்சா உனக்குக் கூட இதெல்லாம் தெரிய வரும்."

"திரும்பவும் பூடகமாகவே பதில்.."

"எப்படிச் சொன்னா உனக்குப் புரியும் சொல். அப்படிச் சொல்றேன்."

"அப்பா மலைக்கு வந்தது எப்படித் தெரியும்? அவர் உயிர் போகப்றோது எப்படித் தெரியும்?"

"சிவ மடத்துல ,திருஷ்டி விலாசம்'னு ஒரு நூல் இருக்கு. அதைப் படிச்சு அதன்படி நடந்துக்கிட்டா நம்மைச் சுற்றி நடக்கப்போற நிகழ்ச்சிகளை நாம உணரலாம். அதன்படி திருஷ்டியை கூட்டி வெச்சிருக்கிற ஸ்தூலம் என் ஸ்தூலம். இதால நான் யாரைப் பத்தி நினைக்கிறேனோ அவங்களுடைய செயல்பாடு எனக்குள்ளாற ஒரு திரைப்படமாக ஓடும்னு வெச்சுக்கோயேன். அப்படித்தான் கொஞ்சம் முந்தி உன் அப்பா பத்தி நினைச்சேன். அவர் இந்த மலைக்காட்டு பக்கம் வந்தது தெரிய வந்தது."

மீனா நிஜமாகவே இம்முறை தீவிரத்துடன் அவர் சொல்வதைக் கேட்டுக் கொள்கிறாள்.

"சரி... அவர் மரணம் பற்றி எப்படி...?"

"யோகிகள் யார் ஒருவரைப் பற்றி நினைக்கும் போதும், பார்க்கும்போதும் அவர்கள் பின்னாலே கருப்பு நிறம் தெரியக் கூடாது. எவன் ஒருவனை

மரணம் நெருங்கி இருக்கோ அவங்க பின்னாலதான் அது தெரியும். அதை வெச்சுத்தான் சொன்னேன். அவர் மரணிப்பார்னு."

"நீங்க பொய் சொல்லலையே?"

"அந்தஅவசியம் எனக்கில்லேம்மா..."

மீனாவின் முகம் மாறிப் போய் ஒரு தினுசாகக் கருக்கிறது. சட்டென்று நிமிர்ந்து கேட்கிறாள்.

"இவ்வளவு சக்தி படைச்ச உங்களால அவர் உயிரைப் போக விடாம தடுக்க வழி சொல்லமுடியாதா?"

"அஞ்சையும் மூணையும் கூட்டினா என்ன வரும்னு கேட்டே? எட்டு வரும்னுகண்டறிஞ்சு சொன்னேன். கூடாது, எட்டு வரவே கூடாதுன்னா... அது சாத்யமாம்மா?"

"அப்படின்னா...?"

"திரும்ப என்னை சோதிக்கிறியே தாயே.. இந்த நிமிஷம் தர்க்கம் பண்ற புத்தி இல்லாம மடத்துப் பொறுப்பை ஏற்றிருந்தா, உன் அப்பா உயிரைக் காப்பாத்தற சக்தி உனக்கு கிடைச்சிருந்தாலும் கிடைச்சிருக்கலாம்."

"அது எப்படி..?"

"தீட்க்ஷை வாங்கியிருந்தா ஜீவமதுர ரசத்தை உனக்கு சந்திரகாந்த சிவம் கொடுத்திருப்பார். அது உன் உடல் சூட்டை தணிச்சு, உள்ளச் சூட்டை உருவாக்கியிருக்கும். ஏற்கெனவே உன்ககுள்ளாற ஒரு யோக மின்சாரம் இருக்கு. அதுதான் விஷம், பகை கருமங்களை நீ ஜெயிக்கக் காரணமோ இருக்கு. அதோட இந்த யோக ரசமும் சேர்ந்திருந்தா பல மடங்கு சக்தி உனக்குள்ளாற பெருகியிருக்கும். அது மழையை வரவைக்கும். புயல தடுத்து நிறுத்தும், இயற்கையை விரும்பின மாதிரி ஆட்டுவிக்க உதவி செய்திருக்கும்."

"கொஞ்ச கூட நம்ப முடியலை என்னால... நீங்க என்னென்னவோ சொல்றீங்க."

"ஈஸ்வரா.. என்னென்னமோ சொல்லலை தாயே! உள்ளதைச் சொல்றேன். ஒரு கைக்குள்ளாற அடங்கற அணுகுண்டால ஒரு தேசத்தையே அழிக்கமுடியும்னா அதையும் விட பல ஆயிரம் மடங்கு சக்தி வாய்ந்த மனித மூளையால எதுதான் சாத்யமாகாது? இந்த தேகத்தைப் பற்றி என்னம்மா நினைச்சே? இது ஒரு அற்புதமான கூடும்மா. யோகம்ங்கற வித்தையால

இதைக் கொண்டு நீ என்னென்னமோ செய்யலாம்மா. நீ மட்டுமல்ல... ஒரு குப்பன், சுப்பன் யோக வயப்பட்டாலும் இது சாத்தியம். இது மந்திரமில்லை. மாயமில்லை. இது ஒரு கணக்கு. அவ்வளவுதான்."

தங்கசாமி சொல்வது முதல் தடவையாக மிக லாஜிகலாக அவள் மூளையில் ஏறி அமருகிறது.

,தன் சுய சிந்தனை... தன் பிடிவாதம் இதெல்லாம் தவறோ...?" கேள்வி கொத்துகிறது.

இறுதி பதிலாக தங்கசாமி சொன்னது போல் நடக்கிறதா என்று பார்த்துவிடுவதில் அது முற்றுப் பெறுகிறது.

மலைப் பரப்பில் ஒரு முகட்டில் அவர்கள் திரும்புகின்றனர். மறுபுறத்தில் கந்தசாமியோடு கருணாகரன், ப்ரகாஷ், ராகவன்!

ஹோட்டலின்சாத்திய கதவுக்கு வெளியே நின்று கொண்டிருக்கிறான் வெயிட்டர். மின்சாரம் போய்விட்ட நிலை. எனவே கதவைத் தட்டித்தான் திறக்க வைக்கமுடியும்.

அதிலும் பாபா அறைக்குள் நுழைந்து இன்றுடன் கிட்டத்தட்ட நான்கு நாட்களாகப் போகிறது. உள்ளே யாரையும் விடவில்லை. சுத்தம் செய்யவோ படுக்கை விரிப்பு மாற்றவோ எதற்குமே சம்மதிக்கவில்லை.

இதனாலேயே துளி சந்தேகம் வந்து அறைக்குள் ஏதாவது விசித்திரமாக நடைபெறுகிறதா என்கிற கற்பனை தோன்றி, வெயிட்டரை கதவின் சாவித் துவாரம் வழியாகப் பார்ப்பவன் கண்கள், காதுவரை விரிகின்றன. உள்ளே பாபா முழு நிர்வாணத்தில் பத்மாசன கோலத்தில் தரைக்கு நான்கடி மேலே எந்தப் பிடிப்புமில்லாத அந்தரத்தில்! அந்தராசன யோகத்தில் அவர் இருப்பது அவனைத் திக்கு முக்காட வைக்கிறது. சாதாரணமாக நின்று கொண்டிருக்கும்போதே தடுமாறி விழும் மனிதர்கள் நடுவே, இவர் மட்டும் எப்படி இப்படி?

அவன் வியப்பு விரிந்து கொண்டே போக, உள்ளே தொலைபேசியின் சப்தம். அந்த ஓசை பாபாவை அப்படியே கீழிறக்கி தரைமேல் அமர்த்துகிறது. பின் காலிரண்டை விடுவித்துக் கொண்டு எழுந்து தொலைபேசியை நெருங்கி அதைப் பற்றி எடுக்கிறார்.

வெயிட்டர் இதற்குமேல் நின்றால் ஆபத்து என்று விலகிக் கொள்ள... உள்ளே..."என்ன பாபா.. என்ன ஆச்சு?"

"பொறுமையாக இரு பி.ஆர். காரியம் நடந்துக்கிட்டிருக்கு."

"சந்தர் போய்ட்டானாமே?"

"போகவேண்டியவன்தானே அவன்...!"

"அது எனக்குத் தெரியாது ஆனா எனக்கு உங்க மேலே நம்பிக்கை குறைஞ்சுக்கிட்டு வருது."

"நீ பூரி கோயிலுக்குப் போனதால வந்த குழப்பம் அது."

"ஏன் அது தெளிவா இருக்கக்கூடாது? கௌசிக் பண்டா நீங்க ஜெயிக்க முடியாதுன்னு சொல்றார்."

"அவர் மூஞ்சில நான் கரி பூசத்தான் போறேன். ரசவாத ரகசியம் மட்டுமில்லா... தங்கலிங்கம்... அந்த மீனா பொண்ணுன்னு மூணு விஷயங்களோட நான் உன்னைப் பார்ப்பேன். சிவத்தை விடவும், சக்தியை விடவும், மாந்தியோட ராட்சஸம்தான் பூமியிலே மேலானதுன்னு அவருக்கும் சரி, உனக்கும் சரி, புரிய வைப்பேன்."

"உங்க நம்பிக்கையைப் பாராட்டறேன். ஆனா, எந்தக் காரணம் கொண்டும் தோத்துப் போயிடக் கூடாது ஜெயிச்சுட்டா இந்த நாட்டு முக்கியப் புள்ளிங்க எல்லாரும் அடிமையா வாங்க. ஞாபகம் இருக்கட்டும்."

"ஜெயிப்பேன் பி.ஆர்! நிச்சயம் ஜெயிப்பேன்..."

சொல்லிவிட்டு தொலைபேசியை முடக்கும் பாபா, அப்படியே சில தப்படி போட்டு கண்ணாடிச் சாளரம் வழியே தாழ்வாய் தெரியும் நான்கு மாட கோபுரங்களும் அவர் கண்களில் சற்று மிரட்சியை உருவாக்குகின்றன.

,நீ ஜெயிக்கமாட்டாய் பாபா... உன்னால முடியாது என்று அவை சொல்வது போல ஒரு பயப்பரவல் கொள்கிறது முகம்.

"சித்தம் உனக்கு வசப்படாது. நாராயணா. உன் ஜாதகத்துல அதுக்கு இடமில்லை. யோகமும் கை வராது. அந்த முயற்சிகளில் உனக்கு பைத்தியம்தான் பிடிக்கும். ஆனால், ஒண்ணு... நீ மாந்திரீகத்தில் மகா உச்சம் போகலாம். அல்ப மந்திரவாதியாக வேணும்னா ஆகலாம். உனக்கு இங்க இடமில்லை போ... போ..."

கௌசிப் பண்டா என்னும் சன்யாசி அவரைச் சேர்த்துக் கொள்ளாமல் துரத்திவிட்டதும்,"நீ வா ராஜா. நான் உனக்கு வழி காட்டறேன். இந்த பண்டா ஒரு கர்வி. நான் சொல்றபடி செய். உனக்கு எல்லாம் வசப்படும்.

சர்வ யோகமும் உன் வசப்பட நீ பற்பல ஜென்மங்கள் தவம் கிடக்கணும்னு அவசியமில்லை. அப்படித் தவம் இருந்து பல சித்தனுங்க எழுதி வெச்ச பல விஷயங்கள் சதுரகிரி சிவமடத்துல இருக்கு. அங்க இரும்பையே தங்கமாக்குகிற ரகசியம் இருக்கு. திட்டம் போடு... அவற்றை கொள்ளையடிக்கத் திட்டம் போடு. ஒரு பொண்ணு கெடுக்கப் பார்ப்பா. விடாதே அவளையும் சேர்த்தே அபகரி. அப்புறம் பார் நீ யாருன்னு.." என்று சொல்லி வாஞ்சை ததும்ப குருநாதர் மாயாபைராகி இழுத்து அணைத்துக் கொண்டதும் நினைவில் எழுந்து அடங்குகிறது.

மாயா பைராகிக்கு மீனா வேண்டும்.

கணக்கோ யோக நூல்கள்... இத்தனைக்கும் பின்னால் நின்று சர்வ விஷயத்திலும் துணைபுரியும் பி.ஆர்க்கு தங்க ரகசியம் வேண்டும்.

இந்த மூன்று தேவைகள் பூர்த்தியாகிவிட்டால் கிட்டத்தட்ட பாரத தேசமே வசப்பட்டமாதிரிதான். அதன் பின், சட்டம் அங்கீகரிக்காவிட்டாலும் இந்திய தேசத்தின் ராஜகுரு நான் தான்!

அதன்பிறகு இந்த பாண்டாவிடம் போய் நிற்க வேண்டும்."அடேய், கிழட்டு சன்யாசி... என்னைப் பார்த்தாயா?" என்று மார்பு நிமிர்த்த வேண்டும்.

,பாரதத்தின் பொக்கிஷங்ளே என் கைகளில்!' என்று கொக்கரிக்க வேண்டும். அதற்கான திட்டங்கள்தான் துளி கூட இதுவரை பிசகவில்லையே... இனிதானா பிசகப்போகிறது?

நாராயண் பாபா மாநகர் கோபுரங்களை பார்த்தபடி இப்படி ஏகதூரத்திற்கு சிந்தனைப் புரவியை விரட்டியிருக்கு.. திரும்பவும் கலைக்கிறது தொலைபேசி சப்தம். காதைக் கொடுக்கத் திரும்புகிறார்.

# 37

வினவிய சீடா!

யோகமும், ரோகமும் என்றும் கருமத்தால் வருவது

கரும் சித்தமோ நவமர் பலத்தால் வருவது

நற்கரும சித்தம் சுபர்களாலும்

எதிர் கரும சித்தம் அசுபர்களாலுமே...

இருபால் வளைப்பிலும் சுழலும் மனம்.

சுழற்சியில் மீண்டு அறநெறி புரிந்திட யோகமும்

திரிந்திட ரோகமும் வினைவழி சேருமே.

பிறன் மனை விழைந்தவன் குன்மகுட்ட சிதைவும்

சிவன் மனை நுழைந்தவன் நன்மைபட்டு உயர்வும்

களவுடன் கொலையும், நாவினால் பொய்யும்

உரைப்பவர் என்னும் உறுப்பதில் நலிவும் கொள்வாரே...

சிதைந்தவர் உணர்ந்து வைத்தீசன் வழிசெல்ல

நலிவதை செல்வாரே.'

சொர்ணஜாலத் திரட்டுக் குறிப்பு

திரும்பவும் தொலைபேசி அழைப்பு என்றதும் பாபா முகத்திலும் மூர்க்கம். சலிப்புடன் ரிசீவரை எடுக்கிறார்.

"பாபா நான் சூரஜ் பேசறேன்." குரலே பாபாவை கூர்மையாக்குகிறது..."சூரஜ் எங்க இருந்து?"

"இப்ப நாங் கயாவுல இருக்கோம். பைராகிதான்உங்களோட பேசச் சொன்னார். காரியங்கள் நல்லபடி நடக்குதா?"

"நடந்தக்கிட்டிருக்கு... பைராகி எப்படி இருக்கார்?"

"ஏதோ இருக்கார். உடம்புத் தோலெல்லாம் உறிஞ்சு விகாரம் அதிகமாகிகிட்டு இருக்கு. இன்னும் நாற்பத்தியொரு நாள்தான் அவருக்குச் சாதகமான காலமாம். அதன் பிறகு அவருக்கு ஜாதகப்படி சூரிய புத்தி வருதாம். அது வந்துட்டா எந்த நல்லதும் நினைச்சபடி நடக்காதாம். உங்ககிட்டே சொல்லச் சொன்னார்..."

"நாற்பத்தோரு நாள் இருக்கா... அடேயப்பா! இன்னும் நாலு நாள்ல நான் மீனாவோட அங்க வந்துடுவேன். ,கவலைப்பட வேண்டாம்'னு சொல்லு..."

"போலீஸ் தொல்லை கொஞ்சம் இருக்கு போலத் தெரியுதே?"

"சமாளிச்சிடுவேன். கவலைப்பட வேண்டாம்."

"வரும்போது மறக்காம அந்த சொர்ணகுளத்து தண்ணீரும் கொண்டு

வாங்க. அது அவசியம் வேணுமாம்."

"பார்த்துக்கறேன். பி.ஆரும் ஃபோன் பண்ணினார். ரொம்ப அவசரப்படறார்..."

"பி.ஆர். விஷயத்தைவிட இது ரொம்ப முக்கியம். எவ்வளவு மருந்து சாப்பிட்டும் பைராகியோட குஷ்டம் கட்டுப்படவேயில்லை. மீனா வந்து மருந்தும் தந்து ஆலிங்கனமும் செய்தாதான் தீரும்கறது உறுதியாகிக்கிட்டே இருக்கு..."

"கவலைப்பட வேண்டாம். நான் பாத்துக்கறேன். சந்தர் போய் சேர்ந்துட்டான். ஆதனால அவன் மூலமா போலீஸீக்குப் போற தகவல் நின்னு போய் போலீஸ் வேற முயற்சிகள்ள இறங்கியிருப்பாங்க. எச்சரிக்கை."

"நல்லது. வெச்சுடட்டுமா?"

"உம்.."

முடங்கிப் போகிறது அந்தத் தொலைத் தொடர்பு சாதனம். முத்து முத்தாய் வியர்த்துப் போயிருக்கிறது.

பாபாவின் முகம். துடைத்துக் கொள்ளக்கூட அவகாசம் இன்றி கதவு தட்டப்படுகிறது.

திறக்கிறார் எதிரில் வல்லபன். கதவு திறந்த நேரத்தில் உள்ளே வந்து கதவைத் தாழிடுபவன் நீண்ட பெருமூச்சுவிடுகிறான்.

"என்ன வல்லபா... சீக்கிரம் திரும்பிட்டே? போன காரியம் அவ்வளவு சுலபமா முடிஞ்சிடுஞ்சா என்ன?"

வல்லபன் பேசாமல் அவரை சற்று கலக்கமாய் பார்க்கிறான்.

"வாயைத் திறந்து பதிலைச் சொல்..."

மன்னிக்கணும் பாபா. அந்த அமரநாடிக் காகிதங்கள் காத்துல பறந்து போயிடிச்சு." தயங்கிச் சொல்லி தயைக் குனிந்து கொள்கிறான்.

பாபா முகம் சற்று இருள்கிறது. முதல் தோல்வி!

"எப்படி?" என்று கேட்கிறார் சற்று இறுக்கமாக அவன் விவரித்து முடிக்கிறான்.

"அப்ப, ஞானமணியைப் பார்க்கலியா நீ...?"

"பார்க்க முடியலை. இத முதல்ல சொல்ல வந்தேன், நீங்க வேற வழி சொல்வீங்கன்னு..."

வல்லபன் மிகப் பயந்து போயிருக்கிறான் என்பது அவன் மென்று துப்பிப் பேசுவதிலிருந்து அவருக்குப் புரிகிறது. பாபா ஆவேச கதியில் திரளும் கோபத்தைக் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டு, சூரஜ் எனும் பைராகியின் அசிஸ்டெண்ட் பேசியதை ஒரு வினாடி நினைத்துப் பார்க்கிறார்.

"சொர்ணகுளத்து ஜலம் வேண்டும்' என்று கேட்டானே?

"போகட்டும் வல்லபா... ஒரு முக்கியமான காரியம் பண்ணு. இதையாவது ஒழுங்காய் செய். ஒரு ஐம்பொன் கூஜா வாங்கிக்கோ. அதுல அந்த மலைல உள்ள சொர்ணகுளத்து நீரை நிரப்பிக்கோ. அப்புறமா எப்படியாவது கஷ்டப்பட்டு ஞானமணியை என்னை வந்து பார்க்கச் சொல் அல்லது என்னோடு பேசச் சொல். இது ரொம்ப முக்கியம்."

பாபாவின் புதிய கட்டளையில் வல்லபன் சற்று இறுக்கம் தளர்கிறான்."இதை நான் நிச்சயமா நல்லவிதமா செய்து முடிப்பேன் பாபா.." என்று அவர் காலில் விழுகிறான்.

"போய்ட்டு வா..."

கிளம்புகிறான்.

சமாதியுள்ள அந்தக் குடிசைக்குள்நால்வரும் நுழைகின்றனர்.

"இங்கதான் பூரணி இருந்தா.. இது யாரோ ஒரு சித்தரோட சமாதியம்." கந்தசாமி கை காட்டியபடி விளக்க... கருணாகரன், ராகவன், ப்ரகாஷ் மூவரும் அதைப் பார்க்கின்றனர்.

சுமாதி விளக்கு அணைந்து போயிருக்கிறது. ப்ரகாஷ் அதைப் பார்த்துவிட்டு அருகே செல்பவன், அப்படியே மண்டியிட்டு அமர்கிறான். அந்த இடம்... அந்த விளக்கு... அந்தச் சமாதி... அவனுக்குள் பரிச்சயமானது போன்ற ஒரு தோற்றத்தை உருவாக்கி அவன் நெற்றியைக் கசங்கவிடுகிறது.

"ப்ரகாஷ் என்ன இது. எனி திங் ராங்?" ராகவனின் கேள்விக்கு திரும்பிப் பார்ப்பவன், எதுவும் சொல்லாமல் தலையை உசுப்பிவிட்டு;க் கொண்டு சுற்றிலும் பார்க்கிறான். கூரைச் சரிவு, உரிப்பானை கூடுகள், அங்கும், இங்குமாய் உள்ள பனை ஓலைத் துண்டுகள், ஒரு வகை வாசம்...

"என்ன ப்ரகாஷ்.. என்ன பண்ணுது?" கருணாகரனும் அவனைப் பார்த்துக் கேட்கிறார்.

"என்னன்னு தெரியலை சார்... இந்த இடம் புதுசாவே தெரியலை. இதுக்கு முந்திப் பலமுறை வந்த மாதிரி உள் உணர்வு."

ராகவன் அந்த இறுக்கமான வேளையிலும் வழக்கம் போல கேலியாகச் சிரித்துவைக்க.. அது ப்ரகாஷுக்குள் பயங்கர கோபத்தை உருவாக்கிறது.

"சிரிக்காதீங்க. ஏன் சிரிக்கிறீங்க?" பலமாகக் கண்டிக்கிறான்.

"சிரிக்காம... தமிழ் சினிமா ஹீரோ மாதிரி பேசறீங்க நீங்க?"

"சார்! எனக்கேற்பட்ட உணர்ச்சிகளைச் சொன்னேன்."

"என்ன உணர்ச்சியோ?... சரி நேரமாகிக்கிட்டு இருக்கு. இங்க யாரும் இல்லை. அடுத்த இடத்துக்குப் போவோம். மிஸ்டர் கந்தசாமி" என்று ராகவன் தொழில் வேகம் காட்ட.. கந்தசாமி அந்த சமாதியின் முன் விழுந்து வணங்கி எழுந்திருக்கிறார்.

திரும்பவும் ராகவனிடம் சிரிப்பு. சிரித்தபடி வெளியே வர, ப்ரகாஷ் வரமாட்டாமல் உள்ளேயே நிற்கிறான். சமாதியிடம் இருந்து பார்வையை விலக்கமுடியவில்லை. மனதில் எப்பொழுதும் இல்லாதபடி ஒரு சூன்ய உணர்வு பரவி, எல்லா எண்ணங்களும் மறைந்து விலகி, அநியாயத்துக்கு ஒரு நிசப்தத்தில் விழுந்துவிட்டது போலத் தோன்றுகிறது. அதில் ஒரு சில தோற்றங்கள் விரிகின்றன!

,ஒரு கிழட்டு மனிதரின் சடலத்தை சிலர் குழிக்குள் இறக்கி பத்மாசன கோலத்தில் அமர்த்திட, குழியைச் சுற்றிலும் சோகமாய் பலர். ஆதில தானும் ஒருவனாக வெறித்து, வெறித்துப் பார்த்துக் கொண்டு நிற்பது நினைவில் விரிகிறது.

அமர்ந்திருக்கும் அந்தச் சடல மனிதரின் தலையை ஒருவர் கத்தியால் வழிக்க, அந்தத் தலைமுடியை ஒரு மண்பாத்திரத்தில் வாங்கிக் கொள்கிறார் ஒருவர். தலை வழிக்கப்பட்டு மழுமழுவென்று தெரிய... இப்பொழுது அதன் மேல் நீர் விட்டு, சந்தன, குங்குமம் இட்டு ஒருவர் பூப்போட பின் அவரே ஒரு முற்றிய தேங்காயை எடுத்து, கைகூப்பி வணங்கிவிட்டு அந்தத் தலையின் உச்ச பாகத்தில் ஓங்கி அடித்திட அந்தச் சடலத்தின் நெற்றிக்கு மேல் உச்சிவரை தலைப்பாகம் சட்டென்று பிளக்கிறது. ஒரு துளியும் ரத்தத் திப்பிகள் இன்றி சீராக உடைபட்டிருக்கிறது அந்தத் தலைபாகம்.

உடைத்தவர் அதைப்பார்த்து நிமிர்ந்து வானம் பார்க்க, வானில்கூட கருடவட்டம் கூட்டம் மொத்தமாகக் கைகூப்பி வந்தனம் செய்கிறது. பின் கண்களையும் இறுக மூடிக் கொள்கிறது. ஆனாலும் தான் மூடாமல் அத்தனையையும் வேடிக்கை பார்க்க, பிளந்துகொண்ட அந்தத் தலைப்பாகம் மேல், அரைத்து வைத்திருக்கும் மூலிகை விழுதை எடுத்துப் பூசி விட்டு மேலேறுகிறார் இவற்றையெல்லாம் செய்தவர். பின், ஆளாளுக்கு மண்ணைப் போட்டு அந்த உருவை மூடத் தொடங்க..

ப்ரகாஷின் பிம்பப் போக்கு மெல்லத் கலைபடுகிறது. தோள் மேலும் கை விழுகிறது. ராகவன்தான்!

"போதும் வாங்க.. டயமாகுதுல்ல?"

ப்ரகாஷ் அரைமனதாகக் கிளம்புகிறான்.

நிமிர்நதுபார்க்கிறான் ஞானமணி. அந்த மலைத்தலத்தில் எங்கு நின்று கொண்டிருக்கிறோம் என்பதே புரியவில்லை. கண்ணுக்கெட்டிய தூரம் வரை ஒருவரையும் பார்க்க முடியவில்லை. காலடியில் இறக்கி வைத்திருக்கும் மூங்கில் மரப்பெட்டிச் சரக்குகள். அவற்றைத் தூக்கியடி ஒடுவது என்பது பெரிய சவாலாக இருக்கிறது. நடுநடுவே ,எவர் கண்ணிலும் படாமல் தப்பிக்க முடியுமா?" என்கிற பயத்தின் திருகல் வேறு.

இருந்தாலும் ,தப்பிவிட முடியும்' என்கிற நம்பிக்கை ஒரு பக்கம். உள்ளே ஒன்றும், வெளியே ஒன்றுமாகப் பேசி சந்திரகாந்தத்தையும், தங்கசமியையும் ஏமாற்ற முடிந்ததே...? அவர்களிடம் எவ்வளவோ சக்திகள் இருந்தும் தன் வேஷத்தை நம்பிவிட்டிருந்தார்களே...?

துவக்கத்தில் பேசாமல் அந்தச் சாமியார் கூட்டத்துடனேயே சேர்ந்து இருந்துவிடலாம்' என்று ஒரு நினைப்பு தோன்றத்தான் செய்தது. ஆனாலும் பின்னால் அது குறைந்து, நகர வாழ்வின் ஆசாபாசங்கள் பிடித்து இழுக்க ஆரமபித்துவிட்டன.

வெறுங்கையை வீசிக்கொண்டும் போக முடியாது. மலைக்குள் கால் வைத்த நோக்கத்தைப் பூர்த்தி செய்யாமல் போனால், அந்த அரசியல் தொடர்புடைய மனிதரின் ஆட்கள் எது வேண்டுமானாலும் செய்வார்கள். பணத்துக்கு ஆசைப்பட்டு அவர்கள் செய்யச் சொன்ன செயலுக்கு தலையாட்டிய பிறகு ஒதுங்குவதோ, தயங்குவதோ உதவவா போகிறது?

பலவிதமாக எண்ணியபடி சுற்றிச் சுற்றிப் பார்க்கிறான். பசி வேறு வயிற்றைக் கவ்வுகிறது. மடத்தில் இருந்த வரை பசியே தெரியவில்லை.

*நினைக்கவே ஆச்சரியமாக இருக்கும்போதுதான் தொலைதூரத்தில் ஒரு கூக்குரல் சப்தம் கேட்கிறது.*

*திடுக்கிட்டுப் போய் சப்தம் வந்த திக்கைப் பார்க்கவும், கருணாகரன் ஓடி வந்து கொண்டிருந்தர்.*

*அவர் மட்டும் தனியாக!*

*நெருங்க, நெருங்க அவர் யார் என்பது ஞானமணிக்கும் தெரிகிறது. போலீஸ் கிராப்பில், சிவந்த ஷீக்களோடு இறுக்கமான உடை, கைவசம் துப்பாக்கி சகிதம் யாரைப் பார்த்து இந்த ஓட்டம் எடுத்து வருகிறார் கருணாகரன்.*

*பக்கமாய் ஒரு பச்சிலைச் செடியின் அடர்ந்த பாகம் பின் சென்று அமர்ந்து கொள்ள.. பெருமூச்சுடன் கருணாகரன் அங்கேயே வந்து சேர்கிறார்.*

*சேருபவர் பார்வையில் அந்த மூங்கில் கூடை சரக்குகளின் மூட்டை!*

*ஆச்சரியமாகிப் போகிறது. இளைப்பெடுக்க குனிந்து அவற்றைத் தொட அவரது கரம் முனையும்போது புதரின் அசைவு சற்ற எச்சரிக்கை செய்ய.."யாரது?" கருணாகரன் பார்வை புதர்ப்பக்கம் செல்கிறது. ஞானமணி தயங்கியபடி நிமிர்கிறான். அவனைப் பர்க்கவும் அவரிடம் மின் வேக அதிர்ச்சி.*

*"நீ... நீ.. ஞானமணிதானே?"*

*அவன் மௌனமாக நிற்கிறான்.*

*"எப்ப நீ ஜெயில்ல இருந்து வந்தே? நீ ஜென்ம தண்டைனைக் கைதியாச்சே..?" என்று தாவாக்கட்டையை தடவுகிறார் அவர்.*

*அவன் இப்பொழுது அவருக்கு நேரே துப்பாக்கியை நீட்டுகிறான். அவர் சுதாரிப்பதற்கு முன் தோட்டாக்கள் சீறிப் பாய்கின்றன உயிரைப் போக்க உத்தரவாதமான பாகமான நெற்றிப் பொட்டில் துளையிடுகின்றன!*

# 38

*சீலமிகு குருவே!*

*சீடன் வணங்கி வேண்டுகிறேன்.*

*யோக சாரங்கள் கருமத்தால் என்றீர்.*

*கருமம் செய்தவர் வைத்தீசன் வழிசெல்ல*

வருமோ துயர் என்றும் வழிதனை உரைத்தீர்.

வைத்தீசன் வழியும் எதுவென்றே

மெய்த்தேச ஞானி நீர் நவின்றால்

உய்த்றே வழியும் உற்றவர்க்கே திகையும்.

உடன் ஒரு கேள்வி.

நவமணியிலும் மேலாம் ரசமணி குறித்தும்

தவமணி நீர் உரைக்க தாரிணியும் அறியட்டுமே!'

- சொர்ணஜாலத் திரட்டு;க் குறிப்பு

குண்டுத்தாக்கத்தோடு பொட்டென்று உயிர்போன சவமாக தரையில் சரிகிறது கருணாகரனின் உடல்.

இன்னமும் ஞானமணியின் துப்பாக்கிக் குழல் முகப்பில் குண்டு உமிழ்ந்த புகையின் கரைவு! வாயால் ஊதியபடி கருணாகரனை நெருங்குபவன் காலாலேயே அவரைப் புரட்டுகிறான்.

,நான் லாக்.. அப்ல இருந்தப்ப எத்தனை தடைவ நீ இப்படி காலால என்னை புரட்டிப் போட்டிருப்பே?" தனக்குத் தானே கேட்டுக் கொள்கிறான்.

சில விநாடிகள் அவரை உற்றுப் பார்ப்பவன், அவர் சட்டைப் பாக்கெட்டை சோதனையிடுகிறான். ஜடண்டிட்டிகார்டு முதல் கிரெடிட் கார்டு வரை பல சமாசாரங்கள் அகப்பட, அனைத்தையும் அள்ளிப்போட்டுக் கொள்கிறான். உடம்பை இழுத்து ஒரு பாறைச் சரிவில் உட்கார்த்தி வைத்து சற்று தூரம் சென்று நின்று பார்க்கிறான். அமர்ந்து தூங்குகிற மாதிரி ஒரு தோற்றம் அகப்படுகிறது.

தாடையை வழியாக்கிக் கொண்டு ஓடும் ரத்தம் மட்டும் சற்று என்னவோ செய்கிறது. அவசரத்தில் சட்டையின் கீழ் முகப்பால் அதை துடைத்து விட்டுவிட்டு மூங்கில் பெட்டியைத் தூக்கிக் கொண்டு மளமளவென்று நடக்க ஆரம்பிக்கிறான்.

பெருமூச்சுடன் ராகவனும், ப்ரகாஷும் ஒரு பாறைமேல் அமர்ந்திருக்கின்றனர். கந்தசாமியும், கருணாகரனும் காட்டு யானை துரத்தலில் பிரிந்து போனவர்கள்தான்... எங்க போனார்கள், என்ன ஆனார்கள் என்றே தெரியவில்லை.

இருவரிடமும் பார்வைத் தாக்கம் பின் சுய பச்சாதபாம்.

"இப்ப யாரைத் தேட்றதுன்னு தெரியலியே சார்..." ப்ரகாஷ் பொருமுகிறான்.

"ஆமாம் கந்தசாமி எங்கே. கருணாகரன் எங்கேன்னு தெரியல... மீனாவை பர்க்ணும்ங்கற நோக்கமும் ஈடேறாது போல இருக்கு. பயங்கரமா மிரட்டக் கூடிய மலையா இருக்கே இது.."

"இப்பத்தான் புரியுது, காடு எத்தனை கொடுமையானதுன்னு."

"சரி ப்ரகாஷ் கிளம்புவோம் ரெஸ்ட் எடுத்தது போதும். எப்படியாவது அவங்களைக் கண்டுபிடிச்சே தீரNணும்" தூசு தட்டிக் கொண்டு எழுந்திருக்கிறார் ராகவன். ப்ரகாஷ¨ம் எழுந்து கொள்கிறான். இருவரும் சருகுகளை மிதித்தபடி நடக்கின்றனர். சப்தம் பயங்கரமாகக் காதில் புகுதிறது. மரங்களின் கிளைச் சரங்கள் குறுக்கிட்டு தடுக்கின்றன.

அபூர்வமான ஒரு நாகலிங்க மரம் ப்ரகாஷை மறிக்கிறது. அதன் நீண்ட கிளைகள் ஆரத்தழுவ அழைப்பதைப் போலிருக்கின்றன. அதைப் பார்ப்பவன், தேங்கி நிற்கிறான். அந்த கிளைச் சரத்தில் விழுதை வெட்டி வந்து ஊஞ்சலாகக் கட்டி ஆடியதுபோல் ஒரு மின்னல் நினைப்பு.

"வாங்க ப்ரகாஷ்.. ஏன் நின்னுட்டீங்க?"

"இருங்க சார்... இந்த மரமும், கிளையும் ரொம்பப் பழகின மாதிரி தெரியுது...""ஆரம்பிச்சுட்டீங்களா?"

"இல்ல சார்... ரொம்ப ·பெமிலியரா இருக்கு இந்த சூழ்நிலை. இந்த மரத்துக்கு அந்தப் பக்கமா ஒரு குளமும் இருக்கணும்" சொல்லிக் கொண்டே செல்பவன், ஓரிடத்தில் நின்று எட்டிப் பார்த்துவிட்டு கத்துகிறான்.

"சார்... அதோ குளம்."

பச்சை நீர்த் தேக்கமாய் இலை, தழை ஊறிய நிலையில் சந்தர் பிணமாக மிதந்த குளம்தான் அது! குளத்தின் வேறு ஒரு திசையில் இருந்து எட்டிப் பார்கும் போது அதன் மொத்த வடிவும் ஒரு சிவ பீடம் போலத் தெரிகிறது. குளத்து நீரின் நடுவில் விழும் ஆளுயர நிழல், லிங்கம் நடுவில் முளைத்தெழுந்த மாதிரிஒரு தோற்றம் காட்டுகிறது.

கூடவே இன்னமும் சில கசிவுகள்.

"ஒரு கோடி மாந்தர்கள் ஒன்று கூடி ,ஓம் நமச்சிவாய' என்று உச்சரிக்கிற

மாதிரி ஒரு சப்தம். யாரென்று தெரியவில்லை. முகம் அகப்பட மறுக்கிறது. அவர் தன் சிரமம் மேல் தவிட்டுக் கூடை ஒன்றை வைத்து சுமந்தபடி வர, அந்தத் தவிட்டின் நடுவில் ஒரு அடி உயரத்துக்கும் விட்டத்துக்கும் குறையாதபடி சொர்ணலிங்கம் ஜொலிக்கிறது.

,ஓம் நமச்சிவாய…

ஓம் நமச்சிவாய..

சப்தம் எதிரொலிக்க கூட்டமாக நடந்து வருகின்றது. ஒரு சித்தர் கூட்டம். குளத்தின் கரைக்கு வரவும் தவிட்டுக் கூடையில் தங்க லிங்கத்தை வைத்து சுமக்கும் சித்த புருஷர் திருக்குளத்தை சுற்றி வருகிறார். கூடவே ஒரு தீப்பந்தம் ஏந்தியபடி தொடர்ந்து சென்றது யார்?

நானா?

நானேதான்…

சுற்றி வந்து ஓரிடத்தில் நிற்க… தங்க லிங்கம் வெளியே எடுக்கப்பட்டு அதை மார்பாடு அனைத்தபடி நீருக்குள் இறங்குகிறார் அவர். நடுக்குளம் வரை சென்று மூழங்குகிறார்.கரையோரக் கூட்டம் ,ஓம் நமச்சிவாய…' என்பதில் உச்சத்திற்குச் செல்கிறது. மூழ்கியவர் நெடுநேரம் வரை வெளியே வரவில்லை. பின் ஒரு ஓரமாக மௌ;ள தலை நிமிர்த்துகிறார்.

பின் ஒவ்வொருவராகக் குளத்து நீரில் மூழ்கி எழுகின்றனர். ஈரம் கலையாதபடி நடக்கின்றனர்…'

ப்ரகாஷிடம் மெல்ல நினைவுக் கசிவு அடங்குகின்றது.

"ப்ரகாஷ்… ப்ரகாஷ்…" உசுப்புகிறார் ராகவன்.

"என்ன ஏதாவது ஞாபகமா?"

"அமாம் சார்… இந்தக் குளம் சொர்ண குளம். இதுக்கு நடுவுல ,தங்க லிங்கம்' இருக்கு. எனக்கு நல்லா ஞாபகம் இருக்கு. அதைக் குளத்துக்குள்ள பிரதிஷ்டை பண்ணும் போது நானும் இருந்தேன்."

"பழைய நினைப்பா?"

"எனக்குச் சொல்லத் தெரியலை. ஆனா ஒண்ணு உறுதி எனக்கு இந்தக் குளம் புதுசு இல்லை. இதுல இறங்கிக் குளிக்கக் கொடுத்து வெச்சிருக்கணும். தங்க லிங்கத்தைப் பிரதிஷ்டை பண்ணின அன்னிக்கு நல்ல பௌர்ணமி. அது நல்லா ஞாபகம் இருக்கு."

"அப்ப இறங்கி லிங்கம் இருக்கான்னு பார்த்திடுங்க.."

"பார்த்து.."

"ஒரு கன்ஃபர்மேஷன்தான். இருக்கா இல்ல திருட்டுக் கூட்டம் சுருட்டிடுச்சான்னு தெரிஞ்சுக்கத்தான்."

"இல்ல சார்... இந்த மலை சிவன் மலை. அங்க இருந்து ஒரு துரும்பைக் கூட யாரும் கடத்த முடியாது ஐ ஆம் ஷ்யூர். அவங்களால மலையத் தாண்ட முடியாது."

"என்ன ப்ரகாஷ் இது.. நீங்களும் இந்த மகாலிங்கசாமி பக்தர் மாதிரி, லைக் கந்தசாமி போலவே பேசறீங்க..."

"எப்படி வேணா சொல்லுங்க. ஆனா நான் சொல்றது உறுதி."

"சரி இருக்கட்டும். ஆந்த லிங்கம் இருக்கான்னு பாருங்களேன்."

ப்ரகாஷ் அவர் சொன்னது கேட்டு சில நொடிகள் யோசிப்பவன், ,இறங்குவது' என்று தீர்மானிக்கிறான். சட்டையைக் கழற்றி ராகவன் கைகளில் கொடுத்துவிட்டு குளத்தின் முன், தரையில் விழுந்து வணங்குகிறான். பின், குளத்தைச் சுற்றி வரத் தொடங்குகிறான்.

கச்சிதமாக வல்லபனும் கைவசம் மண் பானையுடன் ஒரு பளிங்கனாட்டம் அங்கு வருபவன், இருவரையும் பார்த்துவிட்டு திடுக்கிட்டு ஒரு மரத்தின் பின் ஒளிந்தபடி நடப்பதைப் பார்க்கத் தொடங்க...

சிவ மடத்தில் சற்று கலங்கிய முகத்துடன் அமர்ந்திருக்கிறார் சந்திரகாந்தசிவம். உடன் எல்டன்.

குளிக்கச் சென்றவர்கள் திரும்பி வந்து பார்த்தால் மூங்கில் பெட்டி முதல் யாரையும் காணவில்லை. சராசரி மனுஷ ஜென்மமாக இருந்தால் ,எங்கே போயிற்றோ? யார் கொண்டு போனார்களோ?" என்று அரற்றிக் கொண்டிருப்பார்கள்.

ஆனால், சந்திரகாந்த சிவம் அது போலெல்லாம் செயல்படாமல் பத்மாசனமிட்டு அமர்ந்திருக்கிறார். முன்னே ஒரு கோலமிட்டு அதன் நடுவில் ஒரு விளக்கை எற்றி வைத்திருக்கிறது. எல்டன் என்கிற மேல்நாட்டு சிவச்சாமி.

சந்திரகாந்தம் விளக்கின் சேடரையே பார்த்தபடி யோகநிஷ்டை செய்ய ஆரம்பித்துவிட்டார். அந்த சுடர் அனைந்துவிடாதபடி பார்த்துக்

கொள்ளும் வேலை எல்டனுக்கு.

"நிச்சயமா மீனா திரும்ப வருவா... பொறுப்புகளை ஏத்துக்குவா. அப்பதான் நான் நிஷ்டையிலிருந்து மீளுவேன். அனைஞ்சா விதி ஜெயிச்சான்னு பொருள். ஆணையாம பாதுகாத்தா, இந்த மடம் இன்னும் பல தலைமுறைக்கு பயன்படப் போகுதுன்னு அர்த்தம்."

சந்திரகாந்தம் இப்படிச் சொல்லிவிட்டுதான் நிஷ்டைக்குள் அமர்ந்தார். எல்டன் அதை நினைத்துப் பார்த்தபடி விளக்குக்கு எண்ணெய் விட்டபடி இருக்க... சந்திரகாந்தமும் விரைப்பாக துளியும் கணக்கமின்றி, சிவநாம சமுத்திரத்தில் இறங்கிவிட்டிருக்க...

அடிவாரம் வந்தாகிவிட்டது. தங்கசாமியும், மீனாவும் தாணிப்பாறையிலிருந்து வத்திராயிருப்பு செல்லும் பாதையில் இப்பொழுது நின்று கொண்டிருக்கின்றனர்.

"சாமி... இங்க இருந்து பஸ் வரும், அதுல போவோம்" என்கிறாள் மீனா.

"உன் இஷ்டம்மா..." அவர் சொல்லி வாய்மூடிய நொடி... போலீஸ் ஜீப் ஒன்ற உரசி நிற்கிறது.

"ஹலோ மேடம்..." என்னும் குரல். பார்க்கிறாள்.

தன்னை ஜீப்பில் உட்கார வைத்துவிட்டுச் சென்ற அதே சென்ட்ரி டிரைவர். கூடவே சில போலீஸார்.

"ஹலோ..."

"எங்க போய்ட்டீங்க? இப்படியா தவிக்க விடுவீங்க?"

"தவிக்க விட்டுட்டேனா?"

"முதல்ல ஜீப்ல ஏறுங்க. உங்களைத் தேடித்தான் உங்கப்பா, ராகவன் சார், கந்தசாமி, ப்ரகாஷ் எல்லோரும் மேலே போயிருக்காங்க.."

அவள் எதுவும் பேசாமல் ஜீப்பில் ஏறுகிறாள். தங்கசாமியையும் பார்க்க, அவர் அரைமனதாக ஏறி அமருகிறார். ஜீப் கிளம்புகிறது.

"நேரா எங்க அத்தை வீட்டுக்குப் போங்க..." கித்தாப்பாக கட்டளையிடுகிறாள். ஆனால், ஜீப் வேறு பாதையில் செல்லத் தொடங்குகிறது.

"ஏய் என்ன இது... எங்க போறீங்க?"

"போகவவேண்டிய இடத்துக்கு தான் மேடம். கொஞ்சம் பேசாம வர்றீங்களா?" அச்சு அசல் வில்லன் போல டிரைவர் பேச, மீனாவின் முகம் மாறுகிறது. தங்கசாமி அரைச்சிரிப்பு சிரிக்கிறார்.

"எங்க போறீங்க இப்ப?" சிடுசிடுக்க பாய்பவளை, சிரித்தபடி சொல்லி அடக்குகிறார் ஒரு போலீஸ்காரர்.

"மதுரை தாஜ் ஓட்டலுக்கு."

மலை மேல்திருக்குளத்தில் ஒன்று... இரண்டு... மூன்றுமுறையாக மேலே வரும் ப்ரகாஷின் கையில் பாசித் தோல் டிய நிலையில் சொர்ணலிங்கம்.

ராகவனின் கண்கள் இதனால் காதுவரை விரிகிறது.

ஒளிந்திருந்து பார்த்தபடி இருக்கும் வல்லபனின் கண்களும் கிட்டத்தட்ட அதே நிலைக்கு உள்ளாக... ப்ரகாஷ், சிவலிங்கமுடன் நீந்தி கரை எறத் தொடங்குகிறான்.

# 39

"வினவிய சீடா!

வினாவதன் விடைகளை சுநாதமாய் தருகின்றேன்.

சுடலை மண்பூசி உடலை ஓர் பிடிக்குள் வைத்து மனத்

திடலை ஈசன் பெருக்கோயிலாக்கி வாழ்க்கைக்

கடலை கடப்பவர்க்கு கடலதும் மலர் மடலதாகும்!

உள்ளம் தூய்மை, நாவினால் நறுஞ்சொல்

கரங்களால் தொண்டு, கால்களால் யாத்திரை

என்றொருவர் செல்வதே வைத்தீசன் வழியதாம்.

எதுவது ராமணி என்றிட்டாய்?

விளம்புவேன், அது குறித்து இனி."

சொர்ணஜாலத் திரட்டுக் குறிப்பு

ந்தத் தங்கலிங்கம் நீரலை மேல் அசைந்தாடி கரை சேருகிறது. உற்சாகத் துள்ளலோடு ஈரம் சொட்ட நிமிருகிறான் ப்ரகாஷ.;

*அ* "சார்... என் கணிப்பும், நினைப்பும் பொய்யாகலை. பார்த்தீங்களா, தங்கலிங்கம்..." படபடக்க அதைப் புல்லும், காட்டுச் செடியும் பொசிந்து கிடக்கும் தரைமேல் வைத்துவிட்டு ராகவனை பார்க்கிறான்.

ராகவன் கண்களில் சிமிட்டல்

"நினைச்சா நிஜமா மலைப்பா இருக்கு ப்ரகாஷ். பரவாயில்லையே எப்படியோ எடுத்திட்டீங்களே.."

"சார் இது அபூர்வமான ஒரு விஷயம் என்க்கென்னமோ இதை நாம இப்பக் கொண்டு போறதைவிட இங்க குளத்துலேயே போட்டுடறதுதான் நல்லதுன்னு படுது... என்ன சொல்றீங்க?"

ப்ரகாஷ் அப்படி ஒரு முடிவுக்கு சட்டென்று வருவான் என்று ராகவன் எதிர்பார்க்கவில்லை.

"என்ன ப்ரகாஷ்... ,அபூர்வ சொத்து'ங்கறீங்க. கஷ்டப்பட்டு எடுத்ததை திரும்ப குளத்துல போட்டுடலம்கறீங்களே..." தனக்கு உடன்பாடு இல்லை என்பதை கேட்கும் விதத்திலேயே வலியுறுத்துகிறார் ராகவன்.

"ஆமாம் சார். இதை இந்த மலையை விட்டுக் கொண்டுபோகவே முடியாது. இதுக்கு அப்படி ஒரு சக்தி இ;ருக்கிறதோ நான் நினைக்கிறேன்."

"நோ... நோ.. சட்டப்படி இது புதையல் சொத்தாட்டம் கவர்மென்ட்டை சேரணும். அதான் சரி. இங்க உள்ள கிடந்து, வேற யாராவது எடுத்துட்டா?..."

"யாராலயும் எடுக்க முடியாது, சார் நீங்க ஏன் கவலைபட்டறீங்க?"

"இப்ப நீங்க எடுக்கலை?... யாராலயும் எடுக்க முடியாதுன்'னா என்ன அர்த்தம்?"

"சார்... நான் இதைப் பற்றி தெரிஞ்சவன். எனக்கு இதைக் கடத்தற ஆசையெல்லாம் இல்லை. அதனால தான் இது என் வசப்பட்டுது."

"நோ... நோ... ரொம்ப ஃபாண்டஸியா இருக்கு உங்க பேச்சு. அஸ் எ போலீஸ் ஆபீஸர் நான் நான் இதை அனுமதிக்க முடியாது."

"வேண்டாம் சார்... பல காரணங்களுக்காக இதை ஜலபாணேஸ்வர லிங்கமா இந்தக் குளத்துல போட்டு வெச்சிருக்காங்க, சித்தர்கள். இந்தப் பகுதி பசுமையா இருக்க இது உள்ள இருக்கணும். இது வெளியே இருந்தா

வெப்பம் பெருகும். இயற்கை நசிய ஆரம்பிக்கும்."

"உளர்றீங்க. சித்தர்கள் பக்கத்துல இ;ருந்து பார்த்தா மாதிரி பேசறீங்களே?"

ராகவனுக்கும், ப்ரகாஷுக்கும் வாக்குவாதம் வலுக்கும்போது, மறைந்திருக்கும் வல்லபனுக்கு துருதுரு என்றிருக்கிறது. ,ஓடிப் போய் இருவரையும் ஒரே போடாகப் போட்டுவிட்டு அதைத் தூக்கிச் சென்று விடலாமா…? ஏன்று கூட தோன்றுகிறது.

அவர்களிடமோ வாக்குவாதத்தின் அனல்.

"சார்… நாம இப்ப நம்மைவிட்டுப் பிரிஞ்சுபோன கருணாகரன் அங்க்கிளையும், கந்தசாமியையும் தேடணும். அதுதான் இப்ப முக்கியம். இதைப் பிறகு வந்துகூட எடுத்துக்கலாம்…"

"தேடுவோம். வேண்டாங்கல இதையும் எடுத்துப்போம்."

ராகவன் முரண்டு பிடித்தபடி அந்தத் தங்கலிங்கத்தைக் குனிந்து தொடுகிறார். பாசிக்கூட்டை விலக்கி வெளிறிப்போன மஞ்சள் உலோகப் பரப்பை நுனி விரலால் தேய்க்க ஆரம்பிக்கிறார். ப்ரகாஷ் அவசர் செயலால் சோர்ந்து போகிறான். அப்படியே களைப்போடு மண்டியிட்டும் அமர்கிறான்.

திடுமென்று காதை உரசுகிறது. அருகில் யாரோ வந்துவிட்டு போனற் இலை தழை உரசும் சப்தம். பம்மென்று காதைத் தாக்குகிறது யானையின் பிளிறல் ஒலி

"சார் யானை…" சரக்கென்று சுதாரித்து நிமிர குளத்தைச் சுற்றிய முனையில் மேட்டுப் பாகத்தில் சரசரவென்று யாரோ ஓட…

இருவரும் கத்தியபடி நிமிர்ந்து சப்தம் வந்த மேட்டில் ஏறுகிறார். ப்ரகாஷும் பின் தொடர்ந்து நாலாபுறமும் பார்க்கிறான்.

திடுமென்று பேரமைதியான ஒரு சூழல்!

"சார் யாரோ நம்மை பார்த்துட்டாங்க. அதான் போக்கு காட்றாங்க விடக்கூடாது!"

சொல்லி வாய் மூடும் முன், அவர்களுக்கு எதிர்த்திசையில் திரும்ப இலை, தழை, சருகுகளின் மேல் யாரோ ஓடும் சப்தம் கேட்க… காதில் ஒரு குயில் கூவல், அந்தப் பரபரப்பிலும் வந்து கேட்கிறது.

,கூவுளள… கூ ஊஊ ஊஊ…’

ராகவன் சட்டென்று தேங்கி நிற்கிறார்.

"சார் என்ன இது. குயில்பாட்ட ரசிக்கிற நேமா இது?"

"இல்ல ப்ரகாஷ் ரசிக்கலை... எந்தத் திசையில இருந்து வருதுன்னு பார்த்தேன். நீங்க அந்தப் பக்கம் போங்க; நான் யாரா இருந்தாலும் சரி, அவங்களை விடக் கூடாது" சொன்ன ஜோரோடு ஒரு சினிமா ஹீரோ போன்ற பாய்ச்சல்.

ஆனால், எத்தனை அலைந்தும் எவரும் கண்ணில் படவில்லை. சலிப்போடு குளத்தங்கரைக்கு வந்தபோது தங்கலிங்கம் அங்கு இல்லை!

ப்ரகாஷ் தலையில் கைவத்துக் கொண்டு தரையில் அமர்கிறான். அதற்கு மேல் சலிப்புடன் ராகவன்...!

காட்டுத்தனமான வேகம் ஜீப்பிடம்! உள்ளே கசங்கிப் போய் உட்கார்ந்திருக்கிறாள், மீனா தங்கசாமியைப் பார்க்கவே அவளுக்குச் சங்கடமாக இருக்கிறது.

அவர் சொன்னபடியே வெளியே வந்த மறு விநாடி, எல்லாமே மாறிவிட்டது. திட்டமிட்டபடி இயல்பாக எதுவுமே நடக்கவில்லை.

தங்கசாமி அதைப் பார்வையாலேயே கேள்வியாகக் கேட்கிறார். மீனாவும் அதைப் புரிந்து கொள்கிறாள். தன் அருகில் அமர்ந்தபடி ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு விதரணையின்றி புகைவிடும் போலீஸ்காரனைப் பார்த்து கோபமாகக் கத்துகிறாள்.

"எதுக்கு இவ்வளவு வேகம்? மதுரைக்குப் போறோம்?"போலீஸ்காரரிடம் பதிலேதும் இல்லை.

"உன்னைத்தான்... கேக்கறேன்ல?"

"அதை அங்க போய் தெரிஞ்சுக்குங்க. எங்ககிட்டே கேட்காதீங்க."

அவன் புகையோடு பதிலையும் தெனாவெட்டாக வெளியிடுகிறான்.

"மதுரைல தாஜ் ஓட்டலுக்கு'ன்னு சொன்னீங்களே... எதுக்கு?"

"அங்கதானே எங்க மேலதிகாரி இருக்கார்?"

"யார் டி.எஸ்.பி.யா? இல்லை ஐ.ஜியா?"

"போனா தெரிஞ்சுட்டுப் போவுது..."

"அதுக்கு எதுக்கு இத்தனை வேகம்?"

"எல்லாம் எங்களுக்குத் தெரியும்..."

இருவரின் உரசல்கள் தங்கசாமியை உசுப்புகிறது. மெல்ல அவள் தொடை மேல்கை வைப்பவர் திரும்பவும் அவள் முகத்தைப் பார்த்து,"இனியாவது நான் சொல்றதைக் கேப்பியா?" என்று கேட்கிறார்.

"சொல்லுங்க..." மீனா உதடு நடுங்க கேட்கிறாள்.

"நாமெல்லாம் எப்பவும் கைப்பாவைகள் தான். ஒத்துக்கறியா?"

"ஒத்துக்கறேன்... விஷயத்தைச் சொல்லுங்க." சொன்னபடி தலைகுனிகிறாள்.

"உன் அப்பா கதை முடிஞ்சு போச்சும்மா, அவரைத் தொடர்ந்து என் கதையும் முடியப் போகுது..."

மீனா முதல் முறையாக கண்களில் கண்ணீர் திரள அவர் முன் நிமிருகிறாள்.

"அப்பா... அப்பா..." உதட்டில் துடிப்பு.

"இதுவரை நம்பாம இருந்தோ. திடமா இருக்க முடிஞ்சது. நம்பிக்கை வர ஆரமபிச்ச உடனே அந்த திடம் கரைய ஆரம்பிச்சுடுச்சு, பார்த்தியா?"

"ஆமா... ஆமா... நீங்க சொல்றதுல மாற்றமில்லையே... ஒருவேளை..."

"ஒருவேளை, மறுவேளைக்கு இடமே இல்லை. தண்டவாளத்துல ரயில் போற மாதிரி விதி கோட்டுல எல்லாமே போய்க்கிட்டிருக்கு. நானும் இறந்துட்ட பிறகு உன் நம்பிக்கை மேலும் திடமாயிடும். அதன் பிறகாவது சிவ மடத்தை நம்பு அதன் பொக்கிஷங்களைக் காப்பாற்று."

மீனா ஒரு சிறு குழந்தை போல பெருகிய கண்ணீர் விழிகளுடன் அவர் கரத்தை தேடிப் பிடிக்கிறாள். பார்த்துக் கொண்டேயிருக்கிறார் அந்த போலீஸ்காரர்.

"அப்பா பத்தி சொன்னீங்களே... அவர் நிஜமா இப்ப உயிரோட...?"

முடிக்க முடியாதபடி விசும்பல் வெடிக்கிறது. தங்கசாமி அவள் தலையை வருடித் தந்தபடி சொல்கிறார்...."அந்த சிவம் தான் இனி உன் தாய், தந்தை எல்லாம்..."

இந்த முறை போலீஸ்காரர் வாய்விட்டே சிரித்துவிடுகிறார்.

ஜீப்பும் திருப்பரங்குன்றம் கடந்து பசுமலைக்குள் பிரவேசிக்கிறது.

"சார்! ஹோட்டல் வந்தாச்சு..." என்று சொன்னபடி டிரைவர் ஜீப்பை வளைத்து பசுமலை மீது ஜீப்பை ஏற்றுகிறார். வுளைவான சாலை. அதிலும் பேய்த்தன வேகம். நூறு, இருநூறு என்று அடிகள் மேலேற ஒரு வளைவில் ஜீப் திரும்பவும் போது பின் கதவு திறந்து கொள்ள... தங்கசாமியின் இடுப்பின் மேல் ஒரு உதை!

அடுத்த நொடி அவர் உடம்பு ஜீப்பிலிருந்து வெளியே பொட்டலமாக உதிர்ந்து விழுந்து,பாதையின் ஓரத்து சில நூறு அடிச்சரிவில் முட்சரிவில் கிழிசலோடு புரண்டு செல்லத் தொடங்குகிறது.

அதிர்ச்சியில் திகைக்கும் மீனாவின் வாயை போலீஸ்காரரின் கர்ச்சீப் கரங்கள் அழு;நதப் பற்றுகின்றன. அடுத்த நொடி, மயக்கத்தின் வளைப்பில் அவள் சிக்குகிறாள். இத்தனையோடும். வளைந்தபடி மேலேறும் ஜீப்பை புன்னகையோடு பார்த்துக்கொண்டு பால்கனியில் நின்று கொண்டிருக்கிறார் பாபா!

சந்திரகாந் சிவத்தின் தியானம் தொடர்ந்து கொண்டிருக்கிறது. எல்டன் விளக்குகளை அணையாமல் பார்த்துக் கொண்டு மண்டியிட்டு அமர்ந்திருக்கிறான்.

வெளியே வாசலைக் கடக்கும் நீரோடைப் போக்கில் யாரோ நடந்து வரும் சப்தம். எட்டிப் பார்த்தால் கந்தசாமி! தள்ளாடியபடி உள்ளே நுழைபவர், கைகூப்புகிறார் எல்டனைப் பார்த்து... எல்டனும் பதிலுக்கு கூப்ப,"சாமி இங்க யாரும் வரலையா?" என்று கேட்கிறார்.

"யார் வரணும்?"

"நானு, போலீஸ்காரரு, என் மச்சினன்னு ஒரு கூட்டம் மீனாவைப் பார்க்கணும்னு கிளம்பி வந்தோம். யானை துரத்தப் போய் ஆளுக்கொரு மூலைக்கு பிரிஞ்சிட்டோம். அதான் அவங்க இங்க வந்தாங்களான்னு..."

"யாரும் வரலை. மீனாவும் தங்கசாமியும் அனேகமா உங்க வீட்டுக்குதான் போயிருக்கணும்."

"என் வீட்டுக்கா? நாங்க அங்க இருந்துதானே வர்றோம். ஆமாம்.. ஏன் சாமி பேசமாட்டேங்கறார்?" கந்தசாமி, சந்திரகாந்த சிவத்தைக் காட்டி கேட்கிறார்.

"போகப் போக புரிஞ்சிப்பீங்க... இப்ப இங்க யாரும் இல்லை. வெளியே

போய் தேடிப் பாருங்க." என்கிறார் எல்டன்.

கந்தசாமி அரைமனதாக அங்கிருந்து கிளம்பத் காலெடுக்க, சந்திரகாந்த சிவம் கண்களைத் திறந்து பார்த்துச் சொல்கிறது:

"கந்தசாமி! தெற்குப் பக்கமா போங்க. உங்க மச்சினர் உடம்பு அங்க இருக்கு. எல்டனும் உங்களுக்குத் துணை வருவான்... போ எல்டா!"

கந்தசாமி தூக்கிவாரிப் போடுகிறது.

"மச்சினர் உடம்பு கிடக்குன்னா?..." பதறுகிறார்...

"எதுவும் கேட்காம சீக்கிரம் போங்... ஓநாய்கள் நெருங்கிடப் பாகுது..." கிலி மூட்டுகிறது சிவம்.

மலைச்சரிவில் இருந்து தங்கசாமியின் உடலை மேலே தூக்கி வருகின்றது போலீஸ்!

தாடியும் மீசையுமாக காவி வேட்டியோடு ரத்தச் சகதியில் தோய்த்தெழுந்த மாதிரி கிடக்கும் உடம்பை சுற்றிச் சுற்றி வந்து பார்க்கிறார் ஒரு க்ரைம் பிராஞ்ச் இன்ஸ்பெக்டர்.

"இவர் தான்... இவர் தான்... மேலே ரூம்ல வித்தையெல்லாம் பண்ணிக்கிட்டிருந்த சாமியார். சாவித்துவாரம் வழியா பார்த்துட்டு நான் அரண்டே போனேன். வெயிட்டர் வேறு சாட்சி சொல்லிக் கொண்டு நிற்கிறான்.

அவனுக்கு நாராயண் பாபாவுக்கும், தங்கசாமிக்கும் வித்தியாசம் தெரியவில்லை.

ஜீப்போடு வந்த போலீஸ்காரரும் இதுதான் சாக்க என்று ஒரு பொய்யை அவிழ்த்து விடுகிறார்.

"என்க்கொயரிக்கு இவரைக் கூட்டிக்கிட்டு கீழ இறங்கும்போது மனுஷர் ஒரே பாய்ச்சலா பாய்ஞ்சுட்டார்" சொல்லிவிட்டு நிமிர்ந்து அந்தக் கூட்டத்தில் ஒருவராக ஒன்றுமே தெரியாதபடி நின்று கொண்டிருக்கும் பாபாவைப் பார்க்கிறார். பாபாவும் தன் பங்குக்கு பற்ற வைக்கிறார்.

"நான் ராமேஸ்வரம் வந்திருக்கிற ஒரு வடநாட்டு சன்யாசி, என்னைப் பார்க்க வந்த இவர் யாருன்னெல்லாம் எனக்குத் தெரியாது. மெட்ராஸ் வரை ரயில்ல வரும்போது பழக்கமானார். மதுரை வரும்போது வந்து பார்க்கறேன்னார். வந்து பார்த்தவர் சில வித்தைகளையெல்லாம் செய்து

காட்டினார். அசந்துபோயிட்டேன். என்ன செஞ்சு, என்ன புண்ணியம்?... இப்படிப் போகணும்னு விதியிருக்கே?"

இன்ஸ்பெக்டர், பாபாவோடு ஒதுங்கிப் பேசுகிறார்:

"சாமி! யாரை நம்பறதுன்னே தெரியலை. ஒரு வடநாட்டு போலீஸ்காரர் இங்க வந்து செத்தப் போயிருக்கார். ராகவசந்தர்ங்கறுது அவர் பேர். ஒரு நரபலி சாமியார் கூட்டத்தை நோட்டம்போட போலீஸால அனுப்பட்டவர் அவர். அவரைப் போலவே இந்த சாமியாரும் இங்க வந்து செத்து வெச்சிருக்கார். ஒரே மர்மமா இருக்கு. எது எப்படியோ... நீங்க எங்களுடன் ஒத்துழைக்கணும். விசாரணைக்கு தேவைப்படும்போது நீங்க வரணும். ஆமாம்... ராமேஸ்வரம் போய்ட்டு வந்துட்டீங்களா?"

"இல்ல... இனி தான் போகணும்."

"போகும்போது சொல்லிட்டுப் போங்க. மொத்தமா சாமியர்களை கண்காணிக்கச் சொல்லி உத்தரவு..."

இன்ஸ்பெக்டர் சற்று இளிச்சவாய்த்தனமாகவே பேசுகிறார்.

"தாராளமா... உங்களுக்கு என்னைப் பத்தி தெரியணும்னா நான் அட்ரஸ் தரேன். கவர்மென்ட் லெவலிலேயே என்கொயரி பண்ணலாம் நீங்க உங்களுக்கு என் முழு ஒத்துழைப்பு உண்டு." பாபா பதற்றமே இல்லாம பதில் சொல்ல, இன்ஸ்பெக்டர் அதைக் கேட்டு தலையசைத்தபடி தங்கசாமியின் உடம்பை வேணில் ஏற்றிவிட்டு பின்தொடர ஆயத்தமாகிறார்.

மலையிலிருந்து மீனாவுடன் ஜீப்பை ஓட்டி வந்த இரண்டு போலீஸ்காரர்களும் தங்கள் ஜீப்பில் ஏறுமுன் பாபாவை நெருங்கி வணங்குவது போல் வணங்கிவிட்டு,"பி.ஆர். சொன்னபடி எல்லாத்தையும் கச்சிதமாக செய்துட்டோம். இனி உங்க பாடு..." என்று கிசுகிசுப்பாகக் கூறியபடி கிளம்புகின்றனர்.

பாபா சிரித்தபடி திரும்புகிறார். அறைக் கதவை திறந்து உள் நுழைய... அவரது படுக்கைக்கு கீழே, இன்னமும் மயக்கம் விலகியராத நிலையி;ல் மீனா!

கதவை அடைத்துவிட்டு மீனாவின் உடலைத் தொட்டு வெளியே இழுப்பவர், அவளை முழுமையாக ஒரு பார்வை பார்க்கிறார்.

"மூன்று விஷயங்களுக்காக வந்ததில் ஒன்று கணக்கச்சிதமாக

முடிந்துவிட்டது.'

,இன்னமும் இரண்டு? அவருக்குள் கேள்வி எழுந்தபோது தொலைபேசியின் அழைப்பு காதைக் கொடுப்பவர் முகம், மஞ்சள் பிரகாசமாகிறது.

"பாபா... நான் ஞானமணி பேசறேன். மடத்துல இருக்கிற எல்லாத்தையும் சப்ஜாடா பொட்டியேட அடிச்சுட்டேன். ஒரு டாக்ஸி பிடிச்சு வந்துடுவேன். இடைவழியில அந்த கருணாகரன் குறுக்க வந்தார். போட்டுத் தள்ளிட்டேன்."

"சபாஷ்!" உற்சாகமாக ரிஸீவரை வைக்க, மறுபடியம் அதனிடம் முணுமுணுப்பு. இந்தமுறை வல்லபன்.

பாபா... தங்கலிங்கம் மாட்டிக்கிச்சு, கும்பிடப் போன தெய்வம் தானா குறுக்க வந்த மாதிரி! மிச்சத்தை நேர்ல சொல்றேன். லொடக்.

பாபா தொலைபேசியை முடக்கிவிட்டு, இரண்டு கைகளையும் வானை நோக்கி உயர்த்தியபடி, கண்ணாடி ஜன்னல் வழியே மதுரையை... அதன் திலகமான கோபுரங்களைப் பார்த்து ஆரம்பிக்கிறார்.

# 40

வல்ல குருவே. ரசமணி எனும் நல்லது பற்றிக் கூறிவீர்!

அல்லவை எவை என்னும் அறிந்தோமால் காலம்

செல்ல அவை எமக்கு கை கொடுக்குமே...

சக்தி பெரிதென்றும், சிவம் பெரிதென்றும்

யுக்தி வழியென்றும், தந்திர வழியென்றும் உள்ள வழிதனில்

சுந்தர வழிகள் எவர்க்கு உரிது?

படைத்தலும் காத்தலும் இறைக்கெதற்கு?

பாவமும் புண்ணியமும் இதனாலன்றோ வந்த கணக்கு?"

சொர்ணஜாலத் திரட்டுக் குறிப்பு

பா பாவின் அந்த உற்சாகக் குரல் மீனாவை உசுப்புகிறது. வாய் பிளாஸ்திரி போடப்பட்டு, கைகள் கட்டப்பட்ட நிலையில் இருப்பவள், கண்களில் அதிர்ச்சியைக் காட்டியபடி படுத்த நிலையில்

நெளிகிறாள்.

பாபாவின் முகம் திரும்புகிறது. வெறிக்கும் மீனாவை பார்த்து மண்டியிட்டு அமர்கிறது.

"அபூர்வப் பெண்ணே! என்ன பார்க்கிறே?" என்று அகன்ற விழிகளோடு கேள்வி கேட்க வைக்கிறது. மீனாவின் முகத்தை தொடர்ந்து ரசிப்பவர்,"நா இன்னிக்கே கயாவுக்கு கிளம்பறோம். இனி நீ இந்தத் தமிழ் மண்ணை மறந்துட வேண்டியதுதான். உன்னால அங்க ஒருத்தர் குணப்பட வேண்டியிருக்கு. உன்னாலேயே நிறைய தங்கமும் செய்ய வேண்டியிருக்கு. உன்னாலதான் செய்யவும் முடியும். பஞ்ச மூலிகைல நீயே ஒரு மூலிகை எவ்வளவு செய்ய முடியுமோ அவ்வளவு செய்து தா! ,சொர்ணாலயம்' ,சொர்ண இமயம்'னு நான் நிறைய சாதிக்கணும். இந்தச் சதுரகிரி மலைல கூட இருக்காமே ஒரு தங்கக் கோயில் அது மாதிரி... அதே மாதிரி..."

பாபா கிட்டத்தட்ட வெற்றியின் முகட்டை எட்டிவிட்டு ஒரு பிசாசு மனிதராட்டம் பிதற்றத் தொடங்கிவிட்டார்.

மீனா முதன்முறையாக கலங்கிப் போய் கண்ணீர்விட ஆரம்பிக்கிறாள் அவர் அதை சட்டையே செய்யாமல் ஏதோ பொடியை எடுத்து உள்ளங்கையில் தூவி அந்த உள்ளங்கையை அவள் முகத்துக்கு நேரே நீட்டி வாயினால் ஏதோ ஒரு மந்திரத்தை முணுமுணுத்து அந்தப் பொடியை ஊத, அது அவளது சுவாசப் போக்கில் கலக்கிறது. ஆழ்ந்த மயக்கத்துக்கு அவளை அழைக்கிறது

வத்திராயிருப்பு!

கடைத்தெரு கையில் வயர் கூடையுடன் மளிகைப் பொருட்கள் வாங்கும் மும்முரத்தில் பூரணி. வழிய வழியப் பொட்டலங்களோடு கூடையை மார்பு முன் அழுந்தப் பிடித்தபடி நடப்பவள் கண்களில் இப்பொழுது ஞானமணி படுகிறான.;

மூங்கில் கூடையும் கையுமாக ஒரு டாக்ஸிகாரரிடம் பேசிக் கொண்டிருக்கிறான். அந்தக் கூடை அவளை என்னவோ செய்கிறது. எங்கேயே பார்த்த ஞாபகத்தை நிமிண்டுகிறது. ,அருகே வா அருகே வா...' என்று அழைப்பது போலவும் தோன்றுகிறது. கால்கள் தானாக அவனை நெருங்கும்போது, வல்லபனும் ஒரு சாக்கு மூட்டையுடன் ஞானமணி அருகில் மூச்சிரைபட வந்து நிற்கிறான்.

"ஏய் வல்லபா, நீ எப்படி இங்கே?"

"எல்லாம் பின்னால பேசிக்கலாம். மலைல இருந்து வர பட்டபாடு இருக்கே... சரி, சரி... கிளம்பு போகலாம்... ,ஏய் டாக்ஸி.. கிளப்பு... கிளப்பு..." அதட்டலோடு டோரைத் திறக்கிறான்.

"நில்லுய்யா... சாக்குல என்ன... கூடலை என்ன? அதை முதல்ல சொல்லுங்க" டாக்ஸி டிரைவர் கேட்க வேண்டிய கேள்வியைத்தான் கேட்கிறான்.

ஊடே"தம்பி" என்று கத்திரிக்கிறாள் பூரணி. திரும்பும் ஞானமணியை ஒரு மாதிரி பார்த்து"இந்த மூங்கில் பெட்டி, சாமியார் மடத்துதுதானே?"என்று சந்தேகமாகக் கேட்கிறாள்.

"சாமியார் மடமா.. எந்த மடம்? இது வெறும் பெட்டி எங்க வீட்டுப் பெட்டி ஞானமணி குரலில் தந்தி அடிக்க ஆரம்பிக்கறான்.

"என்ன தாயி சொல்றே சாமியார்ங்க சமாச்சாரமா இது?" டிரைவர் பூரணி பக்கம் திரும்ப. ஞானமணியும், வல்லபனும் அங்கிருந்து நழுவத் தொடங்குகின்றனர். அது அவர்கள் சந்தேகத்தை வலுப்படுத்த டிரைவர் சற்று உரத்த குரலில் கத்துகிறான்.

"டேய், வாங்கடா எல்லோரும்... மலைல இருந்து ,பொட்டி', ,சாக்குன்னு அடிச்சுக்கிட்டு வந்திருக்காங்க. உள்ளே என்னவோ இருக்கு..." டிரைவரின் கத்தலும், ஜனச் சேர்க்கையும் இருவரையும் பெட்டியையும், சாக்கு மூட்டையும் கீழே போட்டுவிட்டு ஓடச் செல்கிறது. சிலர் துரத்த, சிலர் வேடிக்கைப் பார்க்க.. பூரணி குனிந்து சாக்கு மூட்டையை பிரித்துப் பார்க்கிறாள். பார்த்த நொடி,"மகாலிங்கமே!" என்று கன்னத்தில் போட்டுக் கொள்கிறாள்.

"என்ன சப்தம்... என்ன கலாட்டா?" கச்சிதமாக உரசியபடி வந்து நிற்கும் போலீஸ் ஜீப்பில் இருந்து ஒரு காக்கிச் சட்டைக்காரர் கேட்க, பூரணி, நடுங்கியபடி மூட்டையைத் திறந்து தங்கலிங்கத்தை வெளியே எடுத்துக் காட்டுகிறாள். அப்படியே மூங்கில் பெட்டியையும் திறக்கிறாள்.

"இதெல்லாம் சாமியார் மடத்து சாமி சொத்து... யாரோ இரண்டு பேர் களவாண்டுட்டு வந்தாங்க போலிருக்கு. சந்தேகப்பட்டு பார்த்துக் கேட்டேன். போட்டுட்டு ஓடறாங்க."

"எங்கே... எங்கே...?"

"அதோ ராஜபாளையம் ரோட்டுப் பக்கம்."

அடுத்த நொடி காற்றைக் கிழிக்கிறது அந்த போலீஸ் ஜீப். அதிலிருந்து உதிர்ந்து இறங்கும் இரண்டு போலீஸ்காரர்கள், பயந்தபடியே மூட்டையையும், பெட்டியையும் எடுத்து பக்கத்துக்கடை டேபிள் மேல் வைக்க.... கடைக்காரர் சாஷ்டாங்கமாக அதன் முன் ,மகாலிங்கம், மகாலிங்கம்' என்று கன்னத்தில் போட்டபடி கீழே விழுந்து கும்பிடுகிறார்.

"சாமி! வந்துட்டியா... வந்துட்டியா?" என்று உருகுகிறார்.

"நூத்தி எட்டு மலை பார்த்தவன் நான். போன மலையப்ப அது சன்னதியில படுத்துக் கிடந்தப்ப, தங்கலிங்கம் ஒண்ணு என் கடைக்கு வர்ற மாதிரி கனவு கண்டேன். இ;ப்ப அது அப்படியே நடந்து போச்சு. என்னத்த சொல்ல! என்னத்த சொல்ல?"

அவரது கண்கள் பனிக்கும்போது அனைவர் காதுகளிலும் துப்பாக்கி குண்டுகளின் பயணச் சப்தம் காதில் விழுகிறது. ஒன்றுக்குப் பலவாக சப்தம்!

"களவாணிங்களை போலீஸ் சுட்டுச்சு போல இருக்கு..." கூட்டம் முணுமுணக்கிறது.

ஐந்து நிமிடம் தாமதமாகப் போயிருந்தாலும் தொலைந்தது, கருணாகரனின் உடம்பை ஓநாய்கள் கூறு போட்டிருக்கும். நல்லவேளையாக கிட்டே நெருங்கப் போகும்போது, வாய் வைக்கப் பார்த்த இரண்டு ஓநாய்கள் சிதறி ஓடி மறைகின்றன. ஓநாய்களைப் பார்த்து பெரிய கல்லாக எடுத்து எறிந்த கந்தசாமி, கருணாகரனின் சிதைந்த உடம்பைப் பார்த்து அப்படியே நின்ற நிலையில் விம்முகிறார். கை, கால்களெல்லாம் கடுங்குகின்றன அவருக்கு.

"இதுக்கா இந்த மலைக்கு வந்தீங்க நீங்க! ஐயோ! இ;ன்னும் நான், எத்தனைச் சாவுகள் இப்படிப் பார்க்கப் போறேனோ..." கதறுபவரைத் தேற்றும் எல்டன், உடம்பை சுமந்து செல்வதற்குத் தோதாக தூளி ஒன்றை உருவாக்கி, ஒரு மரக்கிளையை ஒடித்துப் போட்டு இ;ருவர் தோளிலும் ஏற்றியபடி செல்ல ஆயத்தமாகிறான்.

ஆஸ்பத்திரி! வல்லபனுக்கும், ஞானமணிக்கும் காலுக்குக் கீழ் பாய்ந்த குண்டின் உயிரைத் திருகும் வேதனைக்கு சிகிச்சை நடந்து கொண்டிருக்கிறது. ஊடே ஒரு ஐந்து நிமிடம் என்று நுழைந்திருக்கிறார் க்ரைம் பிராஞ்ச் போஸ்! கண்களில் அனல் பறக்கும் கோபம்.

டாக்டர் கமருகிறார்,"இப்ப என்கொயரியெல்லாம் வேண்டாமே?"

"இப்ப விட்டா எப்பவுமே இவங்களப் பிடிக்க முடியாது டர்கடர். ப்ளீஸ்..." அவரிடம் கெஞ்சல். அப்படியே வல்லபன் பக்கம் திரும்ப, ஆவேசமாக அது மாறுகிறது. ஞானமணி மயக்கத்தில் இருக்கிறான் ஆனால், வல்லபனோ முழிப்பில் முனங்கியபடி... அவன் நெற்றிப் பொட்டைத் தொட்டு நிற்கிறது போஸின் துப்பாக்கி முனை.

"உண்மையைப் பூரா சொல்லிடணும் இல்ல, சும்மா பூச்சாண்டி காட்டாம நிஜமா சுட்டுப்பிடுவேன். ,என்கவுன்ட்டர் டெத்'துன்னு கேஸ் ஃபைல் பண்ணிடுவேன்.உன்னைச்சுட்டதை வெச்சே உன் சகாவை மிரட்டி விஷயத்தை வாங்கிடுவேன்.சாகறியா... இல்லை, உண்மையைச் சொல்றியா?"

கச்சிதமான பிடி.. அவன் வசமாக மாட்டுகிறான். நாராயண் பாபா தாஜ் ஹோட்டலில் இருப்பதில் இருந்து மீனாவை போலீஸே கடத்திச் சென்றது வரை சொல்லி நிறுத்துகிறான்.

"எங்கக் கூட்டத்துல கருப்பு ஆடுகளா? யார் அது?" போஸின் ஆவேசம் முன்,"சத்யமா தெரியாது பாபாவுக்குதான் தெரியும்" என்று முனங்குகிறான். அவன் விளக்கத்தில் பி.ஆர். பற்றியும் தெரிய வருகிறது.

"யார் இந்த பி.ஆர்?"

"பி ஆர்னுதான் சொல்வாங்க. மத்தபடி அவர் பெரிய அதிகாரி. அவ்வளவுதான் தெரியும்!"

"இப்ப அந்த நபர் எங்கே?"

"இன்னைக்கு மதுரை வருவார். நாங்க போய்ச் சேர்ந்த உடனே ஒண்ணா கயாவுக்கு கிளம்பத் திட்டமிட்டிருந்தோம்."

"கயாவுல யார் இருக்கா?"

"பாபாவோட குரு பைராகி. அவருக்கு தொழு நோய் இருக்கு. மீனாவாலதான் அதைக் குணப்படுத்த முடியும்கிறதால மீனாவையும் கடத்த திட்டமிட்டோம்.

"இன்னும் என்னவெல்லாம் ப்ளான்?"

"தெரியாது. தங்கம் பண்றது தான் முக்கியமான திட்டம். ,அது மீனாவாலதான் முடியும்'னு பைராகி நாடி பார்த்து கண்டுபிடிச்சு சொல்லியிருந்தார். ஆகையால அதுவா இருக்கலாம். பைராகிக்கு மீனா வேண்டும்; பி. ஆர்க்கு அதனால தங்கம் கிடைக்கணும்."

போஸ் துப்பாக்கியை சற்றுப் பின்னுக்கு எடுத்து பெருமூச்சு விட்டு வல்லபன் சொன்னவற்றில் மூழ்கி எழும்போது, மின்னல் வினாடிகளில் அந்தச் சம்பவம் நடக்க ஆரம்பித்தது.

வல்லபன் சட்டென்று போஸின் கைத் துப்பாக்கியைப் பிடுங்கி, குண்டை தன் நெற்றிப் பொட்டுக்கு அனுப்பிக் கொள்ளப் பார்க்கிறான்.

அதே மின்னல் வேகத்தில் துப்பாக்கியைத் தட்டி விடுபவரைப் பார்த்து கத்துகிறான்.

"எங்களை சாகவிடுங்க. நாங்களா செத்தா ஒரு குண்டோட போயிடும். ஆனா எங்க கூட்டம் கைல அகப்பட்டா தொலைஞ்சோம். ப்ளீஸ்ஸ்ஸ்..."

"யூ ஸ்கௌண்ட்ரல்..." அப்படியே பாய்ந்து கழுத்தை நெறிக்க முனையும் போஸ் உடனேயே நிதானத்துக்கு வந்து அமைதிப் பட்டு, ,உங்க கூட்டத்தின் கையிலெல்லாம் நீ மாட்ட முடியாது தெரியுமா? என்னை மீறி இங்க ஈ, காக்கை நுழைய முடியாது" என்று உரக்கக் கத்துகிறார்.

எட்டிப் பார்த்தபடி நிற்கும் டாக்டர்களும், நர்ஸீகளும் அந்தச் சப்தம் கேட்டு மிரளும்போது அவன் சொல்கிறான்:

"உங்க கூட்டத்துல பாதிப்பேருக்கு மேல எங்க ஆட்கள் சார். ,தோலா, தோலாவா தங்கம் கிடைக்கும்'னு நம்பி போலீஸ் வேலைக்கே துரோகம் செய்துக்கிட்டிருக்காங்க... அதை முதல்ல புரிஞ்சுக்குங்க..."

அவன் பதில், போஸின் நெஞ்சில் ஈட்டியைச் செருகுகிறது.

"என்னய்யா சொல்றே?" போஸிடம் ஈனஸ்வரம்."நான் சத்தியம் சொல்றேன். சிவனைத் தொட்ட பாவத்துக்கு கால் போயிடுச்சு. ,மலைப்பகுதியை விட்டு அதை யாரும் கொண்டு போக முடியாது'ங்கறதும் ஊர்ஜிதமாயிடுச்சு... இனி நான் பொழைக்க நொண்டியா இருக்கிறதுக்கு செத்துப் போறேன் சார்... என்னை விட்ருங்க..." வல்லபன் அசுர வேகம் காட்டி பக்கத்தில் கண்ணுக்கு எட்டும் தூரத்தில் தெரியும் தையல் சாதனங்களில் ஒன்றான கத்திர்கோலை எடுக்க முனைகிறான்.

"நோ.." உருக்குக் கரத்தோடு கத்தித்தடுப்பவர், அந்த டென்ஷனிலும் ஒரு சரியான முடிவுக்கு வருகிறார்

தொலைபேசியின் அழைப்பு பாபாவை கூப்பிடுகிறது. எடுப்பவரை அழைப்பது வல்லபன்.

"என்ன வல்லபா, ஏன் இன்னும் வரலை? ஞானமணியும் இன்னும் வந்து

சேரலையே.."

"வரமுடியாது போல இருக்கு பாபா. அது மட்டுமில்லை. ,இந்த மலைல தங்கக் கோயில் இருக்கு'ன்னு சொல்வீங்களே... அதையும் நான் கண்டுபிடிச்சுட்டேன். பேசாம நீங்க மீனாவோட இங்க கிளம்பி வாங்க நாம மலைக்குப் பின்புறமா இறங்கி கேரளா வழியா தப்பிக்கலாம்."

"என்னடா... இல்லாத ஊருக்கு வழிகாட்டறே? பி.ஆர் வேற, இங்க இருந்து டிக்கெட் போட்டு வெச்சிருக்கார். யாரும் சந்தேகப்பட்டு தொலைப்பாங்கன்னு கூடவே அவரும் வர இருக்கார். இதுதான் பாதுகாப்பான பயணம். அதை விட்டுட்டு..."

"அதுக்கு என்னபண்றது? நமக்குப் பரிச்சயமில்லாத சிலருக்கு ஃபோன் போட்டு பேசறதே பெரிய காரியமா இருக்கு. ஞானமணியும் என்கூடதான் இருக்கான். பேசாம நீங்க மீனாவோடு மடத்துக்கு வாங்க. அவளோடு வந்தா போலீஸ் சந்தேகப்படாது. அடிவாரத்துல ,போஸ்னு நம்ம போலீஸ்காரர் ஒருத்தர் உங்களோட சேர்ந்தக்குவாரு. மத்ததை அவர் பார்த்துக்குவாரு! தங்கக் கோவில் தங்கங்களையும் அள்ளிக்கலாம்."

மறுமுனையில் வல்லபன் குரல் முடங்குகிறது. அதற்கு மேல் பேசி வளவளக்காமல் நறுக்கென்று முடித்துவிட்ட வல்லபனுக்குப் பின்னால் நேர்மையான போஸ் இருப்பதை நாராயண்பாபாவால் யூகிக்க முடிகிறதா?

அவர் குழம்புவதைப் பார்த்தால் சந்தேகமாக இருக்கிறது. கச்சிதமாக ,பி,ஆர்.' என்னும் முக்கிய நபரின் மிடுக்கான பிரவேசம் வேறு அங்கே...

"வாங்க பி.ஆர்..."

"என்ன பாபா? எதனால இந்தக் குழப்பம்?"

"வல்லபனும், ஞானமணியும் மலைல மாட்டிக்கிட்டிருக்காங்க. யாரோ ,போஸ்'ன்னு ஒரு போலீஸாம். அவர் மூலமா மலை ஏறி வரச் சொல்றான்.எல்லாத்தையும் அவர் பார்த்துப்பாரம். அந்த மலைல தங்கக் கோயில் இருக்கிற இடத்தையும் வல்லபன் கண்டு பிடிச்சுட்டானாம்."

"நிஜமாவா?"

"ஆமாம் வசதியாப் போச்சு... கிளம்புங்க, போவோம். மீனாவும் வரட்டும். ஆமா ஏன் இவ மயக்கமா இருக்கா...?"

"நான்தான் மயக்கத் தூளால மயக்கி வைச்சிருக்கேன். அவ முழிச்சிருக்கறது ஆபத்து. கத்திக் கூப்பாடு போட்டா என்ன பன்றது?"

"அட இன்னுமா இவளை நீங்க உங்க கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரலை?"

"இவள் வரைல அது அசாத்யம் பி.ஆர். முயற்சி செய்தேன். முடியலை... எந்த மந்திர, சுதந்திரமும் இவளைக் கட்டு;ப்படுத்தறது கஷ்டம்."

"நல்லது... அப்ப ஒண்ணு பண்ணுங்க. மயங்கின நிலைல இவளைக் கொண்டு போறது கஷ்டம். நீங்க கிளமபிப் போங்க. மயக்கம் தெளிஞ்ச நிலைல நான் இவளை சாமர்த்தியமா அழைச்சுகிட்டு வரேன்..."

"எங்க அழைச்சுகிட்டு வருவீங்க?"

"நீங்க போற அதே சிவ மடத்துக்கு..."

"அங்க இருந்து வெளியேறுவது சாத்யமா?"

"கவலைப்பட வேண்டாம். ஒரு பெரிய போலீஸ் அதிகாரியே நம்ம கைல. நல்ல போலீஸ்பந்தோபஸ்தோட நாம் ரயிலைப் பிடிச்சுடலாம். கவலைபடாதீங்க... பத்தாதத்துக்கு நான் ஒருகவர்மெண்ட் சர்வெண்ட் பெரிய பதவியில உள்ளவன், ஒருத்தரும் கிட்ட நெருங்க முடியாது!"

பயங்கர கித்தாய்ப்பு பி.ஆர். என்னும் அந்த மனிதரிடம் துவக்கத்தில நாடி ஜோசியர் கிருஷ்ணமாச்சாரியாரிடம் இருந்து இந்த வினாடி வரை மீனா விஷயத்தில ஓசைப்படாமல் துடுப்புப்போட்ட அந்தக் குள்ள நரித்தனம்... நடுநடுவே கருணாகரனுக்கு ஃபோன் செய்து கிலிமூட்டி அவரையும் மகளையும் மலைக்குத் துரத்திய சாதுர்யம்... ,செய்யுங்கள் என்றால் செய்யமாட்டர்; செய்யாதே என்றால் செய்வார்' என்னும் கருணாகரனின் குணத்தை உத்தேசித்து முடுக்கிவிட்ட முனைப்புகள்... எல்லாம் இன்று ஒரு புள்ளியில்.

பி.ஆரின் அந்த முடிவும், பேச்சும் பாபாவை யோசிக்க வைக்கிறது.

"என்ன பாபா... என்ன யோசனை? நமக்கு நேரம் இப்ப ரொம்ப முக்கியம்.கிளம்புங்க..."

"இல்ல பி.ஆர்... எனக்கு உபாசனைல இன்னிக்கு மனசு ஒன்றல். எதாவது கெடுதல் நடக்க இருந்தாத்தான் என் மனசு இப்படித் தடுமாறும். அதுவே நல்லது, கெட்டதக் காட்டிக் கொடுத்துடும்."

"அப்படின்னா,..?"

"நான் இப்ப மாந்தி ஜெபம் செய்யப் போறேன்.அதோட முடிவுல, எனக்கு

நல்லது கெட்டது தெளிவா தெரிய வரும். அதுவரை பொறுத்திருங்க..."

"அதுக்கு இப்ப நேரமிருக்கா? நான்தான் சொல்றேனே... எல்லாரும் என் கைல! நீங்க ஏன் கவலைப்படறீங்க! உங்க கணக்குப்படி சில மரணங்கள் நிகழ்ந்து அந்தப் பெட்டி, தங்கலிங்கம், எல்லாம் அந்த மலையைக் கடந்தாச்சு அதை மலைலேந்து கடத்தறதுதான் எனக்குச் சிரமம். தரைக்கு வந்ததைக் கடத்தறது விஷயமே இல்லை..."

பி.ஆர். சிறகு கட்டிப்பறக்கிறார் பாபா ,சரி' என்று அரை மனதாக ஆமோதிக்கிறார். அடுத்த பத்தாவது நிமிடம் அவரை மட்டும் சுமந்தபடி கார் பயணிக்கிறது.

பெருமூச்சுடன் திரும்பும் பி.ஆர். தொலைபேசியைத் தொட அதன் விளைவாக சில பேலீஸ்காரர்கள் அந்த அறை நோக்கி வர... முகத்தில் தண்ணீர் பட்டு கண் திறக்கிறாள் மீனா. எதிரில் பி.ஆர்.

"ஹலோ... நான் பி.ஆர்." என்று சொல்லி தன் பதவியைக் குறிப்பிடுகிறார். உங்க அப்பாவோட பெஸ்ட் ஃப்ரெண்ட்! சொல்லிவிட்டு கண்ணை கசக்குகிறார்.

"ஏன் அழறீங்க?"

"அழாம...? கிளம்பும்மா... இப்ப உன் அப்பா உடம்பு, மலைல உள்ள சிவமடத்துல இருக்கு."

"கை காட்! இங்க இருந்த தாடிக்காரன்லாம் எங்க?"

"அவனை என்கொயரிக்கு போலீஸ் பிடிச்சாச்சு. நீ கிளம்பு... மலைக்குப் போனா எல்லாம் க்ளியராகிவிடும்."

மீனா வாரிச்சுருட்டிக் கொண்டு எழுந்திருக்கிறாள். அதை ரசித்தபடி சிரிக்கிறார் பி.ஆர். என்னும் பாண்டுரங்கன்!

# 41

'பாங்குடன் பல கேள்வி கேட்ட சீடா!

படைத்தலும், காத்தலும் இறைக்கெதறக்கென்றாய்?

கிளைத்தலும், கேட்டலும் மனதிற்கெதுக்கு? இதைப்

பிளந்து நீ பார்த்திடு விடை அதனுள்ளிருக்கு!

*இல்லாது போவதே முக்தி, இதை உணரத் தேவை பக்தி!"*

*சொர்ணஜாலத் திரட்டுக் குறிப்பு*

*தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ளும் பாண்டுரங்கனை மீனா குழப்பத்துடனும், சந்தேகத்துடனும் பார்க்கிறாள். உடனே அவர் தனது ரயில்வே பாஸை எடுத்துக் காட்டுகிறார். சலுகைக்குரிய அதில் அவரது பதவியின் குறிப்பு. மெல்ல நம்பிக்கை வசப்படுபவளிடம்"இப்பக் கிளம்பலாமா?" என்று இதமாகக் கேட்கிறார்.*

*அவளிடம் ஆமோதிப்பு.*

*"இங்க என்னை மயக்கி ,கயா வரை கடத்தணும்'னென்ல்லாம் சொன்னானே ஒரு சாமியார், அவனை அரெஸ்ட் பண்ணிட்டீங்கதானே?"*

*"பண்ணிட்டோம். அந்த நபரையும் மலைக்குக் கூட்டிப் போயிருக்கு போலீஸ்."*

*"எதுக்கு?"*

*"எல்லாம் போகும்போது பேசுவோமே, இப்பக் கிளம்பலாம்."*

*வெளியே வரும் இருவரையும் டாக்ஸி சுமக்க ஆரம்பிக்கிறது.*

*சீறிப் பாய்ந்து கொண்டிருக்கிற மஞ்சள் அருவி சப்தம், வழி தெரியாதபடி தடுமாறும் ராகவனின் காதிலும், ப்ரகாஷின் காதிலும் விழுகின்றது.*

*சப்தம் வரும் திக்கு நோக்கி இருவரும் சற்று வேகமாக நடக்கத் தொடங்குகிறார்கள்.*

*"என்ன ஸார்... தங்க லிங்கம்கறது எவ்வளவு பெரிய விஷயம்...?ஆதை இழந்திருக்கோம். கொஞ்சம்கூட டென்ஷனே ஆகலையே நீங்க" என்று ராகவனிடம் ஆதங்கப்படுகிறான் ப்ரகாஷ்.*

*"என்ன பண்ணச் சொல்றீங்க? டென்ஷனாகறால பிரயோஜனம் உண்டா? ஆமாம், ,இந்த மலைல பல இடங்களுக்கு இதுக்கு முந்தியே வந்தது போல இருக்கு'ன்னு சொன்னீங்களே.. இங்க தங்கக் கோயில் இருக்காமே? அது எங்க இருக்குன்னு உங்களுக்குத் தோணலையா?"*

*" தங்க் கோயிலா? யார் சொன்னது?"*

*"அதான் ,சதுரகிரி மலைத்தலப் புராணம்'னு புத்தகமே போட்டிருக்காங்களே..."*

"நம்ப முடியலையே?"

"என்ன பார்ககிறீங்க... எதைப் பத்தியும் யோசிக்காம ,தங்கம்' ,கோயில்'னு பேசறேனேன்னா?"

ராகவன் முன்னால துள்ளியபடி அருவி நோக்கிச் செல்கிறார். ஏதோ சிந்தனையோடு அவரைத் தொடருகிறான் ப்ரகாஷ்.

அருவியருகே ஒரு சித்த சந்யாசி. ராகவன் அவரை நோக்கி ஓடுகிறார். ப்ரகாஷுூம்.

இருவரும் அவரிடம் அடிவாரம் போவதற்கு வழி காட்டச் சொல்லி பணிவு காட்டுகின்றனர். அவர் பார்வை ப்ரகாஷை கூர்ந்து பார்த்து அளக்கிறது. பின்னர் ஜாடையாலேயே அவனை அழைக்கிறது.

அடர்ந்த செடி, கொடிகள் ஊடே புகுந்தெல்லாம் அந்த சாமி செல்லத் தொடங்குகிறது. இருவரும் பின் தொடர்கின்றனர்.

சாமி இப்பொழுது ப்ரகாஷை மட்டும் அருகே அழைக்கிறது. செல்கிறான். ஒரு இடத்தில் குகை வாசல் போல உள்ள பரப்பை அது இலை, தழை விலக்கிக் காட்ட எட்டிப் பார்க்கிறான்.

"உள்ளே போ..." அது சைகை காட்டுகிறது. தயங்கி தயங்கி செல்லத் தொடங்குகிறான். குப்பென்று மூலிகை மருந்துக் கலவையின் வாசம்.

"சாமி நான்.." என்று ராகவனும் முன்னே கால் எடுத்து வைக்கிறார். சாமி அவரைத் தடுக்கிறது. ராகவன் முகம் மாறுகிறது.

உள்ளே நுழையத் தொடங்கினார் ப்ரகாஷ் கரடுமுரடான நுழைவுப் பாதை இப்பொழுது சமனாகி பூந்தோட்டம் போல ஒரு இடத்திற்கு அழைத்துச் செல்கிறது. ஆங்காங்கே சில சிவங்களின் நெடிய யோக நிஷ்டை பூக்களின் குபீர் வாசத்தை உணர்ந்தாற்போல ஒரு ஞாபகத்தை அது மூட்டுகிறது.

கிறங்கிப் போய் நிற்பவன் தோள்மேல் ஒரு கரம் விழ... திரும்புகின்றவனை,"வா சுந்தரம்! கொஞ்சம் தாமதமானாலும் வந்துட்டியே" என்கிறது ஒரு சிவம். அவன் அதைக் கேட்டு தவிப்பில் மூழ்க,"என்னைத் தெரியவில்லை...? நான்தான் உன் ஸ்னேகிதன் பரமன்" என்று சொன்னபடி அவன் முகத்தில் ஊதுகிறது அந்தச் சாமி. அதன் உதட்டுக் காற்று பட்ட நொடி, சுந்தரம் சிறுபிள்ளையாகிப் போகிறான்.

பரமனும் அவனும் சிறுபிராயத்தில் மரமேறி தேன் எடுத்ததில் இருந்து, மாணிக்க நாகம் பிடிக்க அலைந்தது வரை நினைவில் ஒரு கீற்றாய்

கிளர்ந்தெழுகிறது.

"இப்ப இது போதும். போ! கோயில்ல உச்சிக்கால பூஜை இருக்கு கலந்துக்கோ.." அது காட்ட, சில அடி நடந்து நிமிர்பவன் எதிரில் கண்ணைக் கூசும் ஒளியில் ஆளுயர நான்கு கால் மண்டபம், நடுவில் நடுநாயமாய் லிங்கம். மண்டபமும், லிங்கமும் ஒளிர்வதில் இருந்தே அதுதான் ,தங்கக் கோயில்' என்பது புரிந்து போகிறது. சிலிர்த்துப் போய் கை கூப்புகிறான் ப்ரகாஷ்.

திரும்பவும் அவன் தோள் மேல் ஒரு கரம் அருவியில் பார்த்த சிவம். ,கிளம்பு' என்கிற மாதிரி சைகை காட்டுகிறது. அவருடன் திரும்பத் தொடங்குகிறான்.

வெளியே எரிச்சலுடன் அமர்ந்து கொண்டிருக்கிறார் ராகவன். குகை வாசல் வழியே வெளிப்படும் ப்ரகாஷைப் பார்த்து"வாய்யா... என்னய்யா இப்படி விட்டுட்டுப் போயிட்டே?" என்று எரிந்து விழுகிறார்.

ப்ரகாஷ் பொருட்படுத்தாமல்,"வாங்க ஸார்! இனி எனக்கே வழி தெரியும்."

"தெரியுமா? அது சரி, உள்ளே எதைப் பார்த்தீங்க ப்ரகாஷ்?"

"ஒண்ணுமில்ல ஸார்... நிறைய சாமியார்ங்க படுத்திருந்தாங்க. ,கால் பிடிச்சுவிடச் சொன்னாங்க. பிடிச்சுவிட்டேன்." அவன் பொய் சொல்கிறான் என்பது ராகவனுக்கும் புரிகிறது.

"நல்லா பொய் சொலறீங்களே...? மடக்குகிறார் அவர்.

"சந்தேகேம்னா நீங்களே போய்ப் பாருங்க" அவனிடம் சீற்றமாய் பதில்.

"எங்க போய் பார்க்கிறது. ஒவ்வொரு பாறை மேலேயும் ஒரு நாகப் பாம்பு படுத்திருக்கு.." ராகவன் சொன்ன பதிலில் திகைப்பு வந்து அவனை முட்டுகிறது.

,நாகப்பாம்பு.. தன் கண்களுக்கு ஒன்றுகூட தெரியவில்லையே?' உள் கேள்வியோடு வேகம் கூட்டுகிறது நடை அரை மணி நடைக்குப் பிறகு எதிரில் கோயிலுக்குச் செல்லும் பொதுப்பாதை ஆறடி அகல வழித்தடமாகத் தெரியவர, ,ஸார்! ஒருவழியாகப் பாதையைக் கண்டுபிடிச்சிட்டோம்" என்று கத்துகிறான் ப்ரகாஷ் ராகவனும் பெருமூச்றிகிறார்!

தாணிப்பாறையைத் தொட்டு அடிவாரத்தை அடைந்த போது உற்சாகமாக முன்வந்து சல்யுட் செய்கிறார் போஸ்.

"என்ன போஸ்... இன்னிக்கு எதுவும் அசம்பாவிதங்கள் இல்லையே?" என்ற ராகவனை பெருமிதத்துடன் பார்க்கிறார் போஸ்.

"இல்ல ஸார்... மலைல நடந்த மரணங்கள், கடத்தல்களுக்கெல்லாம் காரணமான, பாபா'ங்கறவரை பிளான் பண்ணி அரெஸ்ட் பண்ணிட்டேன். ஞானமணியும் கொஞ்சம் முந்திதான் இறந்து போனாங்க. அதோட மலைல நம்ப கருணாகரன் ஸாரும் இறந்துட்டார்! மொத்தமா ஒன்பது மரணங்கள் ஸார்..."

போலீஸின் விளக்கம் ராகவனை விடவும் ப்ரகாஷின் பிடரியைதான் ஒரு பிடி பிடிக்கிறது.

"என்னது அங்க்கிள் இறந்துட்டாரா?"

"ஆமாம் ஸார்... ஞானமணிதான் அவரை சுட்டுக் கொன்னுருக்கான். இதை ஸ்டேட்மென்ட்லயும் சொல்லியிருக்கான்."

"இப்ப பாடி எங்க?'

"டிராவலர்ஸ் பங்களால இருக்கு ஸார்.."

"ஆமாம்... மீனா?"

"அங்கதான் இருக்காங்க. கூடவே ,பாண்டுரங்கன்'னு ஒருத்தர், ,கவர்னர் பி.ஏ,ன்னு சொல்லிக்கிட்டு வந்திருக்கார். உங்களை நல்லாத் தெரியுமாம்."

"எல்லாத்தையும் பங்களாவுக்குப் போய் பேசிக்கலாம்... கமான்" ராகவன் அசுர வேகம் எடுக்கிறார். புழுதியை புரட்டும் ஜீப்பில் ப்ரகாஷும் பாய்ச்சல் காட்டி ஏறுகிறான்.

டிராவலர்ஸ் பங்களா!

போலீஸ் கூட்டம் புடை சூழ நிற்கிறது. நடு மையத்தில் கருணாகரன் சடலமாகக் கிடக்கிறார். அருகில் அமர்ந்து அழுது கொண்டிருக்கிறாள் பூரணி. சற்று தள்ளி நிற்கும் மீனாவை, அகிலா தாங்கியிருக்கிறாள்.

ப்ரகாஷ் ஓடிவந்து மூச்சு முட்ட கருணாகரன் சடலத்தைப் பார்ப்பவன், மீனாவை நோக்கிச் செல்கிறான்.

"ப்ரகாஷ்... நான் இப்ப அனாதை!" என்று உச்சஸ்தாயியில் கத்தி அழுகிறாள் மீனா.

அங்கிருந்நத அறை ஒன்றின் உள்ளே பாபா! அங்கேயே பி.ஆர்;. என்னும்

பாண்டுரங்கனும்.

"ஹலோ ராகவன்.." பாண்டுரங்கனின் கரம் நீள்கிறது. ராகவனும் குறுஞ்சிரிப்போடு கைகளை நீட்டுகிறார்.

"என்ன பண்ணப் போறீங்க... இந்த பாபாவை...?"

"அதான் அரெஸ்ட் பண்ணிட்டாங்களே! இவர், அந்தப் பெட்டி, லிங்கம் எல்லாம் இனி கவர்ன்மெண்ட் பிராப்பர்ட்டி. ராஜபாளையம் எஸ்.பி. ஆபீஸ் போனாத்தான் அடுத்த ஸ்டெப் பத்தி சொல்ல முடியும்."

"எனக்கு ட்ரெயினைப் பிடிக்கணும். நாளைக்கு மும்பைல இருக்கணும். உங்களையும், கருணாகரனையும் பார்த்து நாளாச்சேன்னு வந்தேன். இங்க இப்படி ஒரு கூத்து!" என்றார் அந்த அழையாத விருந்தாளி.

கருணாகரனின் சடலம் ஒரு ஜீப்பில் ஏறுகிறது ராஜபாளையம் நோக்கிச் செல்ல ஆரம்பிக்கிறது. பின் தொடரத் தொடங்குகிறது. ஒரு ஜீப். அதில் பாபா, பிஆர் மூங்கில் பெட்டி, தங்கலிங்கம் இவற்றோடு மீனாவும்!

அதே ஜீப்பில் ஏற வந்த போலை கருணாகரனின் சடலத்தோடு வரும்படி சொல்லித் திருப்பி அனுப்புகிறார் ராகவன்.

"ஆமாம் ப்ரகாஷ் எங்கே?"

"எங்கேன்னு தெரியலை... ஒரு வேளை கருணாகரன் பாடி வர்ற ஜீப்ல இருக்கலாம்."

"உஸ்ஸ்... அப்பாடா! பி.ஆர். பெருமூச்சு விட, பாபாவும் அதுவரை இருந்த இறுக்கம் நீங்கிச் சிரிக்கிறார். மெல்ல அந்தச் சிரிப்பு ராகவனையும் தொற்றுகிறது.

மூவரும் இப்படிச் சேர்த்து சிரிப்பதும், ஜீப் பாதை மாறுவதும் மீனாவுக்குள் திகைப்பை உருவாக்குகிறது. பி.ஆர். ஒரு சிகரெட்டை பற்ற வைத்தபடி"கை கொடுங்க ராகவன்" என்று ராகவனை நோக்கி தன வலக்கரத்தை நீட்டுகிறார். மீனா விக்கித்துப் போகிறாள். ,அடப் பாவி... நீ இவர்கள் ஆளா?"

பாபா மந்தகாசமாகச் சிரிக்கிறார். சிட்டிகை போல ஒரு பொடியை எடுத்து பலவந்தமாக மீனாவை நுகர வைக்க அவள் மயக்கமடைகிறாள்.

"போகும்போது பி.ஆரையும் என்னையும் அடிச்சுப் போட்டுட்டுப் போங்கய்யா. அப்பதானே நாங்க திரும்ப கவர்ன்மெண்ட் சர்வண்டடா

காலம் தள்ளமுடியும்! ,சாமியார் பொடி தூவி மயக்கிட்டு தப்பிட்டான்’னு சொன்னேல்ல... நல்லவேளை குளத்துல தங்கலிங்கம் எடுத்தப்போ வல்லபன் வந்து குயில் மாதிரி கூவி சமிக்ஞை கொடுத்தான் அவன் லிங்கத்தை எடுத்துக்கிட்டுப் போக வசதியா எதிர் திசைல தேடற மாதிரி போனோம்.

ஆனா இந்த நிமிஷம் வரை எனக்கு உள்ளூர பயம் இருக்கு. சிவன் சொத்தோடு மலை எல்லையைத் தாண்டறது கஷ்டமோன்று நினைக்கிறேன். தாண்டின பிறகுதான் எனக்கு உயிரே வரும்" என்றார் அவர்.

பிறகு,"அது சரி... மீனாவை கொண்டு பைராகியை குணப்படுத்திட்டு, அப்புறம் இவளை என்னசெய்யப்போறீங்க?"

"இவ மூலமாதான் ரசவாதமே செய்யப்போறேன். இவளே ஒரு ரசவாத மூலிகைதான் ராகவன்" என்றார் பாபா.

பேச்சு, தங்கலிங்கத்தைப் பற்றி திரும்பியது.

"மலைல உள்ள சந்திரகாந்த சிவம் இவளைப் போலவே உடம்புல விசேஷ சக்தி உள்ள நபர். அவன்தான் தங்கலிங்கத்தைச் செய்திருக்கணும். அதனாலதான் அவனுக்கு பிறகு இவளை மாடதிபதியாக்க அவ்வளவு கஷ்டப்பட்டாங்க. அது தெரிஞ்ச நான் குறுக்கே புகுந்தேன்.

தனிமனித முயற்சியோட போலீஸ் உதவியும் வேணும்னு தீர்மானிச்சேன். அந்தத் தங்க கோயிலைப் பார்க்கணும்னு நினைச்சேன். ஆனா ஈடேறலை. ஆந்த இன்ஸ்பெக்டர் போஸ் கெடுத்துட்டான். கடைசியில என் தனிமனித முயற்சிகள் பலிக்கலை. ராகவனால தப்பி கரை சேரணும்னு இருக்கு. செய்யற தங்கத்துல ஒரு பங்கு, உங்களுக்கு உண்டு ராகவன்."

,இல்லை’ என்கிற மாதிரி ஜீப் கதறியபடி தேய்ந்து நிற்கிறது.

"வெளியே நடுச்சாலையில் ஏகமாய் போலீஸார்! நடுநாயகமாய் துப்பாக்கியை விரைப்பாக நீட்டியபடி ராஜபாளையம் எஸ்.பி. கூடவே குறுஞ்சிரிப்புடன் ப்ரகாஷ்! போஸ்! அருகிலேயே ,மகாலிங்கமலையின் எல்லை முடிவு’ என்கிற பெயர்ப்பலகை!

தேய்ந்து நிற்கும்ஜீப்பில் இருந்து உதிர்பவர்களில் ராகவனை நெருங்கும் ப்ரகாஷ்."கிரிமினல்களோட சிகரம் சார் நிங்க... உங்களை எப்படிக் கண்டுபிடிச்சேன்னு பார்க்கறீங்களா?" கேட்டுக் கொண்டே ஒரு கடிதத்தை எடுத்துக் காட்டுகிறான்!

ராகவனுக்கு பி.ஆர். எழுதிய கடிதம் அது.... ராகவனின் சட்டைப் பாக்கெட்டில் இருந்து மலையில் அலையும்போது கீழே விழுந்ததை அவரிடம் தரலாம் என ப்ரகாஷ் நினைத்தபோது அவர் இயற்கை உபாதைக்காக ஒதுங்கியிருந்தர்.. காப்பாற்றுபட்டு விரிந்து கொண்ட கடித எழுத்துக்கள் ,பார் என்னைப் பார்' என்று காட்டிக் கொடுத்திருந்தன.

,டியர் ராகவன்...

நான் இன்னும் இரண்டு நாளில் வந்துவிடுவேன். பாபாவோடு மலைக்கும் வருவேன். உங்கள் உதவியோடு எப்படியாவது தங்கக்கோயிலை பார்த்தாக வேண்டும். ஆதில் சந்தேகம் வேண்டாம். எப்படியோ கருணாகரனை அடிக்கடி தொலைபேசி மூலம் தூண்டிவிட்டு அவரோடு சாமர்த்தியமாக ஒட்டிக்கொண்டு மலைக்கும் வந்துவிட்டீர்கள். நமது ஆட்கள் சிக்கிக் கொண்டால் சாமர்த்தியமாக தப்பிக்கவிடுங்கள்.

இங்கே சுகுமார் உதவி செய்கிற மாதிரி அங்கே ஆசாரி உதவி செய்ததை அறிய மகிழ்ச்சி. சிவன் சொத்து குல நாசமாகிவிடும் என்று பயப்படவேண்டாம். தைரியமாக இருங்கள். தோலா, தோலாவாக தங்கம் கிடைக்கும் நான் தூரத்தில் இல்லை.

அன்புடன்

பி.ஆர்.

"கடிதத்தைப் படித்ததும் கொலைவெறிக் கோபம் எற்பட்டது. இருந்தாலும் விவேகம் அடக்கிக் கொள்ளச் சொன்னது. எதுவரை போகிறது பார்ப்போம் என்று நினைக்க வைத்தது. அப்படி நினைத்து பொறுமையாக இருந்ததும் வசதியாகப் போய்விட்டது" என்கிறான் ப்ரகாஷ்.

ராகவன் தலைகுனிகிறார். ப்ரகாஷ் ஜீப்பை நோக்கி ஓடி மீனாவைப் பார்க்கிறான். ஆழ்ந்த மயக்கத்தில் துவண்டு கிடக்கிறாள். தொட்டுத் தூக்குகிறான். தோள்மேல் போட்டுக் கொள்கிறான்.

எதிரில் புதிர்க்கோட்டமாக மகாலிங்க மலை. தங்கக்கோயிலை தரிசித்து திரும்பும்போது அந்த சாமி ராகவனைச் சுட்டிக்காட்டி ,நம்பாதே' என்று சொன்னது முதல் ,திரும்பி நீ கட்டாயம் வரவேண்டும்' என்று கூறியதெல்லாம் நினைவுக்கு வருகிறது.

சிவ மடம்!

சந்திரகாந்த சிவம். தியானம் கலையாமல் அமர்ந்திருக்கிறது. மடத்து

வாசலில் சிலர் நடந்து வரும் சப்தம் கேட்டு எல்டன் எட்டிப் பார்க்கிறான்.

மீனாவும், ப்ரகாஷுும் வருகின்றனர். எல்டன் பரவசப்பட்டு,"சாமி... மீனா வந்துட்டா, மீனா வந்துட்டா.." என்று கத்த சந்திரகாந்த சிவத்தின் தியானம் கலைகிறது. உள்ளே நுழைந்த மீனா முதல் காரியமாக சந்திரகாந்தம் முன் விழுந்து வணங்குகிறாள்.

"இனி நான் போகமாட்டேன் சாமி..." என்கிறாள்.

"நாங்க போகமாட்டோம்'னு சொல் மீனா" ப்ரகாஷ் எடுத்துத் தருகிறான். சந்திரகாந்தம் முகத்தில் மகிழ்ச்சி அலைகள்.

"இங்க இருந்து எடுத்துக்கிட்டுப் போன எல்லாத்தையும் இன்ஸ்பெக்டர் போஸ், கேஸ் முடிஞ்ச கையோட நம்மகிட்ட ஒப்படைச்சிடுவார். தங்கலிங்கத்தை இந்த ஜென்மத்துலயும் குளத்துல சேர்க்கப் போகும்போது நான் பார்க்கப் போறேன். எல்லா ஏட்டுக் குறிப்புகளையும் மீனா கம்ப்யூட்டர்க்கு மாத்தப் போறா! ஒரு மெய்ஞானத்தை விஞ்ஞானம்தான் இனி காப்பாத்தப் போகுது! இப்படி ஆகனணுங்கிறதுக்காகத்தான் நாமளே பிறந்திருக்கோமா?" ப்ரகாஷ் நிண்ட விளக்கத்தோடு ஒரு கேள்வியையும் எழுப்புகிறான்.

"அதுக்கு மட்டுமல்ல ப்ரகாஷ்! அத்தைப் பெண்கள் அகிலா, பார்வதி, தேவி, மங்களாக்கெல்லாம் கல்யாணம் பண்ணி வைக்கிற பொறுப்பும் நமக்கு இருக்கு... ,அப்பா பண்ணின தப்புக்கு எங்களை வெறுக்காதீங்க'னனு ராகவனோட பசங்க ஜெகனும், மோகனும் சொன்னதையும் கவனிக்கணும்..."

பொறுப்பு மறவாமல் பேசுகிறாள் மீனா! வெளியே மழை வருவதற்கான அறிகுறிகள். சந்திரகாந்த சிவம் எழுந்து மீனாவை நெருங்கி வருகிறார்."இனி நீ எதைத் தொட்டாலும் தங்கம்தான் மீனாட்சி. வெளியே பார்த்தியா, இயற்கையோட சந்தோஷத்தை?"

ஆமோதிப்பதோடு கைகூப்புகிறாள் இந்த நூற்றாண்டின் அதிசயப் பெண்!

முற்றும்